www.Padasalai.Net www.CBSEtips.in



SURYA® POWER TO SCORE

# இளமைத்தமிழே

# 8

2020-21 திருத்தப்பட்ட புதிய பதிப்பு

**2020-2021 புதிய பாடத்திட்டத்தின்படி**

- நூல் வெளி
- சொல்லும் பொருளும்
- மதிப்பீட்டு வினாக்கள்
- கலைச்சொல் அறிவோம்
- சிந்தனை வினா-விடை
- கூடுதல் வினாக்கள்
- கற்பவை கற்றபின்
- மனப்பாடப் பாடல்கள்
- அலகுத் தேர்வுகள்
- தொகுத்தறி மதிப்பீட்டு வினாத்தாள்கள்

தமிழ்

**உரையாசிரியர்கள்:**

**ச. சேட்டு மதார்சா,** M.A., M.A., M.Phil., B.Ed., TPT, PGDTR, UGC-NET, Ph.D., Dip.Folk, PGDCA

**கோ. பாக்கியநாதன்,** M.A., M.Phil., B.Ed.,

**SURYA PUBLICATIONS**®

(A UNIT OF **SHYAMALA** GROUP)

Chennai - Tirunelveli

Price ₹

தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

# www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

*Published By*
*B. ARUMUGAM*
**SRI GANGA PUBLICATIONS**
*(A unit of **Shyamala** Group)*

## BANK DETAILS

### TIRUNELVELI ACCOUNT

| | |
|---|---|
| Account Name | : **Surya Publications** |
| Account Number | : **446971431** |
| Bank Name | : **Indian Bank** |
| IFSC Code | : **IDIB000T034** |
| Branch Name | : **Tirunelveli Junction** |

| | |
|---|---|
| Account Name | : **Surya Publications** |
| Account Number | : **510909010051752** |
| Bank Name | : **City Union Bank** |
| IFSC Code | : **CIUB0000230** |
| Branch Name | : **Palayamkottai** |

### CHENNAI ACCOUNT

| | |
|---|---|
| Account Name | : **Sri Ganga Publication** |
| Account Number | : **928507483** |
| Bank Name | : **Indian Bank** |
| IFSC Code | : **IDIB000A031** |
| Branch Name | : **Ashok Nagar** |

| | |
|---|---|
| Account Name | : **Sri Ganga Publication** |
| Account Number | : **512020010022514** |
| Bank Name | : **City Union Bank** |
| IFSC Code | : **CIUB0000230** |
| Branch Name | : **Palayamkottai** |

**SURYA PUBLICATIONS**®
(A UNIT OF **SHYAMALA** GROUP)

**Corporate Office :**
No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam,
Madurai Road,
**Tirunelveli - 627001.**
Phone : 0462 - 233 8899 / 233 8484
Mobile : 94431 58484 / 95978 39822
Email : suryaguides@yahoo.com

**Registered Office :**
New No. 59, 4th Avenue,
Opp. to Govt. Boys Hr. Sec. School,
Ashok Nagar,
**Chennai - 600 083.**
Phone : 044 - 2474 4484
Mobile : 94421 58484 / 94425 58484
Email : srigangapublications5@gmail.com

**Website : www.suryapublications.in**

# முகவுரை ....

**"தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"**

என்று புரட்சிப்பண் பாடினான் பாரதிதாசன்.

தாய்மொழியான தமிழ்ப்பாடத்தில் உயர்மதிப்பெண் பெற்றிடவும், பிழையின்றி இலக்கிய, இலக்கண நடையுடன் எழுதிடவும் இந்த **சூர்யா**வின் **இளமைத்தமிழே** உங்களுக்கு உறுதுணை புரியும்.

***அன்பார்ந்த மாணவர்களே!***

தன்னம்பிக்கை, கடின உழைப்பு, விடாமுயற்சி எனும் மூன்றையும் உள்ளத்தில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். அன்றாடம் படிப்பதனைப் பழக்கமாக்கிக் கொண்டு, அதனை நிரந்தர வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். எளிய இனிய நடை, தெளிவான சொற்றொடர் அமைப்பு, **தமிழ்நாடு அரசின் 2020-21 புதிய பாடநூலைத் தழுவிய** அனைத்து வினாக்களுக்கும் பயிற்சிகளுக்கும் தெளிவான விடைகள் இவையே இந்நூலின் தனிச்சிறப்பு. இந்த **சூர்யா**வின் **இளமைத்தமிழே** துணைவனை வாங்கிப் பயன்படுத்தும் நீவிர் அரிய சாதனைகளைப் படைத்திட வாழ்த்துகிறோம்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ் உணர்வு!!

பதிப்பகத்தார்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

# பொருளடக்கம்

## இளமைத்தமிழே 8


| எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்கம் | மாதம் |
|---|---|---|---|---|
| ஒன்று | மொழி<br>தமிழ் இன்பம் | தமிழ்மொழி வாழ்த்து* | 1 | ஜூன் |
| | | தமிழ்மொழி மரபு | 7 | |
| | | தமிழ் வரிவடிவ வளர்ச்சி | 11 | |
| | | சொற்பூங்கா | 20 | |
| | | எழுத்துகளின் பிறப்பு | 22 | |
| | | **அலகுத் தேர்வு - 1** | 31 | |
| இரண்டு | இயற்கை<br>ஈடில்லா இயற்கை | ஓடை* | 32 | ஜூலை |
| | | கோணக்காத்துப் பாட்டு | 37 | |
| | | நிலம் பொது | 43 | |
| | | வெட்டுக்கிளியும் சருகுமானும் | 50 | |
| | | வினைமுற்று | 53 | |
| | | திருக்குறள்* | 61 | |
| | | **அலகுத் தேர்வு - 2** | 67 | |
| மூன்று | அறிவியல்,<br>தொழில்நுட்பம்<br>உடலை ஓம்புமின் | நோயும் மருந்தும்* | 69 | ஆகஸ்டு |
| | | வருமுன் காப்போம்* | 74 | |
| | | தமிழர் மருத்துவம் | 81 | |
| | | தலைக்குள் ஓர் உலகம் | 91 | |
| | | எச்சம் | 93 | |
| | | **அலகுத் தேர்வு - 3** | 102 | |


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்


| எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்கம் | மாதம் |
|---|---|---|---|---|
| நான்கு | கல்வி<br>கல்வி கரையில | கல்வி அழகே அழகு* | 103 | செப்டம்பர் |
| | | புத்தியைத் தீட்டு | 106 | |
| | | பல்துறைக் கல்வி | 109 | |
| | | ஆன்ற குடிப்பிறத்தல் | 115 | |
| | | வேற்றுமை | 117 | |
| | | **அலகுத் தேர்வு - 4** | 127 | |
| ஐந்து | கலை, அழகியல்,<br>பண்பாடு<br>குழலினிது<br>யாழினிது | திருக்கேதாரம் | 128 | அக்டோபர் |
| | | பாடறிந்து ஒழுகுதல்* | 132 | |
| | | நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் | 136 | |
| | | தமிழர் இசைக்கருவிகள் | 143 | |
| | | தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள் | 145 | |
| | | திருக்குறள்* | 156 | |
| | | **அலகுத் தேர்வு - 5** | 159 | |
| ஆறு | நாகரிகம், தொழில்,<br>வணிகம்<br>வையம்புகழ்<br>வணிகம் | வளம் பெருகுக | 160 | நவம்பர் |
| | | மழைச்சோறு | 163 | |
| | | கொங்குநாட்டு வணிகம் | 167 | |
| | | காலம் உடன் வரும் | 173 | |
| | | புணர்ச்சி | 175 | |
| | | **அலகுத் தேர்வு - 6** | 183 | |


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்


| எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்கம் | மாதம் |
|---|---|---|---|---|
| ஏழு | நாடு, சமூகம்<br>பாருக்குள்ளே நல்ல நாடு | படை வேழம்★ | 184 | நவம்பர் |
| | | விடுதலைத் திருநாள் | 188 | |
| | | பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன் | 192 | |
| | | அறிவுசால் ஔவையார் | 198 | |
| | | வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும் | 200 | |
| | | **அலகுத் தேர்வு - 7** | 205 | |
| எட்டு | அறம், தத்துவம், சிந்தனை<br>அறத்தால் வருவதே இன்பம் | ஒன்றே குலம்★ | 206 | டிசம்பர் |
| | | மெய்ஞ்ஞான ஒளி | 209 | |
| | | அயோத்திதாசர் சிந்தனைகள் | 212 | |
| | | மனித யந்திரம் | 218 | |
| | | யாப்பு இலக்கணம் | 220 | |
| | | திருக்குறள்★ | 227 | |
| | | **அலகுத் தேர்வு - 8** | 231 | |
| ஒன்பது | மனிதம், ஆளுமை<br>குன்றென நிமிர்ந்துநில் | உயிர்க்குணங்கள் | 232 | ஜனவரி |
| | | இளைய தோழனுக்கு★ | 236 | |
| | | சட்டமேதை அம்பேத்கர் | 240 | |
| | | பால் மனம் | 246 | |
| | | அணி இலக்கணம் | 247 | |
| | | **அலகுத் தேர்வு - 9** | 253 | |
| | | **தொகுத்தறி மதிப்பீடு - 1** | 260 | |
| | | **தொகுத்தறி மதிப்பீடு - 2** | 264 | |
| | | **தொகுத்தறி மதிப்பீடு - 3** | 268 | |


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

கவிதைப் பேழை

இயல் 1

# தமிழ்மொழி வாழ்த்து

*பாரதியார்*

## *பாரதியார்*

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | சுப்பையா (எ) சுப்பிரமணியன் |
| பிறப்பு | : | 11.12.1882 (எட்டயபுரம்) |
| பெற்றோர் | : | சின்னசாமி – இலக்குமி அம்மையார் |
| படைப்புகள் | : | பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாப்பா பாட்டு முதலியன. |
| புகழ்மொழி | : | ‘சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாடவந்த அறிஞன், மறம் பாடவந்த மறவன்’. |
| இறப்பு | : | 11.09.1921. |

## *மனப்பாடப் பாடல்*

**வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!**
**வாழிய வாழியவே!**
**வான மளந்தது அனைத்தும் அளந்திடு**
**வண்மொழி வாழியவே!**
**ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி**
**இசைகொண்டு வாழியவே!**
**எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!**
**என்றென்றும் வாழியவே!** *ஆசிரியர் : பாரதியார்*

## சொல்லும் பொருளும்

- நிரந்தரம் - காலம் முழுமையும்
- வைப்பு - நிலப்பகுதி
- சூழ்கலி - சூழ்ந்துள்ள அறியாமை இருள்
- வண்மொழி - வளமிக்க மொழி
- இசை - புகழ்
- தொல்லை - பழமை, துன்பம்

இயல் 1 தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ________.
அ) வைப்பு ஆ) கடல்
இ) பரவை ஈ) ஆழி **விடை: அ) வைப்பு**

2. 'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) என் + றென்றும் ஆ) என்று + என்றும்
இ) என்றும் + என்றும் ஈ) என் + என்றும் **விடை: ஆ) என்று+என்றும்**

3. 'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) வான + மளந்தது ஆ) வான் + அளந்தது
இ) வானம் + அளந்தது ஈ) வான் + மளந்தது
**விடை : இ) வானம் + அளந்தது**

4. 'அறிந்தது + அனைத்தும்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.
அ) அறிந்ததுஅனைத்தும் ஆ) அறிந்தனைத்தும்
இ) அறிந்ததனைத்தும் ஈ) அறிந்துனைத்தும்
**விடை : இ) அறிந்ததனைத்தும்**

5. 'வானம் + அறிந்த' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.
அ) வானம்அறிந்து ஆ) வான்அறிந்த
இ) வானமறிந்த ஈ) வான்மறிந்த **விடை : இ) வானமறிந்த**

**தமிழ்மொழி வாழ்த்து - இப்பாடலில் இடம் பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.**

**வாழ்க** - **வானமளந்த**
**வாழிய** - **வாழ்க**
**எங்கள்** - **என்றென்றும்**
**வண்மொழி** - **வளர்மொழி**

### குறுவினா

1. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ்கொண்டு வாழ்கிறது.

2. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?
வானம் வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருள்களையும் அறிந்து மேன்மேலும் வளர்கிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## சிறுவினா

**தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.**

- எல்லா காலத்திலும் நிலைபெற்று தமிழே! வாழ்க.
- எல்லாவற்றையும் அறிந்துரைக்கும் தமிழே! வாழ்க.
- ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலம் முழுவதும் புகழ்கொண்ட தமிழே! வாழ்க.
- உலகம் உள்ளவரையிலும் தமிழே! வாழ்க.
- எங்கும் உள்ள அறியாமை இருள் நீங்கட்டும்.
- தமிழ் உயர்வுற்று உலகம் முழுதும் சிறப்படைக!
- பொருந்தாத பழங்கருத்தால் உண்டாகும் துன்பங்கள் நீங்கி தமிழ்நாடு ஒளிரட்டும்.
- என்றென்றும் தமிழே! வாழ்க!
- வானம் வரையுள்ள எல்லாப் பொருட்களின் தன்மையை அறிந்து வளரும் தமிழே! வாழ்க.

## சிந்தனை வினா

**1. பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?**

- நமது தாய்மொழி தமிழ். இதன் சிறப்புகள் பல. இம்மொழி வரலாற்றுத் தொன்மை, பண்பாட்டு வளம், சொல்வளம், கருத்துவளம் ஆகியவற்றால் ஓங்கி உயர்ந்துள்ளது.
- அழியாத மொழியாக, சிதையாத மொழியாக, அன்று முதல் இன்றுவரை ஒரே நிலையில் உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரே மொழி நம் தமிழ் மொழிதான்.
- தமிழ் மொழி ஒன்றுதான், வாழ்வுக்கே இலக்கணம் அமைத்து சிறந்து மிளிரும் வளமான மொழியாகும். மானிட வாழ்க்கையையே ‘அகம்’, ‘புறம்’ என இருவகைப்படுத்தி இலக்கணங்கண்ட பெருமை தமிழ்மொழி ஒன்றுக்குத்தான் உண்டு.
- இத்தகைய வளமிக்க மொழியாக விளங்குவதனால் தான் பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கிறார்.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. ________ கருத்தை அறிவிக்கும் கருவி ஆகும்.**

அ) நாடு ஆ) மாநிலம்
இ) மொழி ஈ) ஊர் **விடை: இ) மொழி**

**2. தமிழர்கள் தம் தாய்மொழியாகிய தமிழை ________ ஆகக் கருதிப் போற்றி வந்துள்ளனர்.**

அ) அறிவு ஆ) புத்தி
இ) உயிர் ஈ) தலை **விடை: இ) உயிர்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. ________ அறிந்த தனைத்தும் அறிந்து வளர்மொழி வாழியவே.

அ) கடல் ஆ) பூமி

இ) வானம் ஈ) நாடு **விடை: இ) வானம்**

4. 'இசை' என்பதன் பொருள் ________.

அ) கருவி ஆ) புகழ்

இ) பொறுமை ஈ) சிறுமை **விடை: ஆ) புகழ்**

5. ________ நீங்கத் தமிழ்மொழி ஓங்கத் துலங்குக வையகமே.

அ) சூழ்கடல் ஆ) ஆர்கழி

இ) சூழ்கலி ஈ) விரிகடல் **விடை: இ) சூழ்கலி**

6. வானமளந்தது அனைத்தும் அளந்திடு ________ வாழியவே.

அ) வண்மொழி ஆ) பண்மொழி

இ) தன்மொழி ஈ) செம்மொழி **விடை: அ) வண்மொழி**

7. தொல்லை வினைதரு தொல்லை அகன்று சுடர்க ________.

அ) ஆந்திரா ஆ) கர்நாடகா

இ) கேரளம் ஈ) தமிழ்நாடு **விடை: ஈ) தமிழ்நாடு**

8. விஜயா, இந்தியா என்ற இதழ்களை நடத்தியவர் ________.

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்

இ) சுரதா ஈ) வாணிதாசன் **விடை: ஆ) பாரதியார்**

9. சந்திரிகையின் கதை நூலின் ஆசிரியர் ________.

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்

இ) தமிழண்ணல் ஈ) கு.பா.ரா. **விடை: அ) பாரதியார்**

10. 'சிந்துக்குத் தந்தை, புதிய அறம் பாட வந்த அறிஞர்' என்றெல்லாம் அழைக்கப்படுபவர் ________.

அ) சீட்டுக்கவி ஆ) பாரதிதாசன்

இ) குமரகுருபரர் ஈ) பாரதியார் **விடை: ஈ) பாரதியார்**

11. 'தமிழ்த்தேனீ' என்று பாரதியாரைப் புகழ்பவர் ________.

அ) சுரதா ஆ) பாரதிதாசன்

இ) காந்தி ஈ) வாணிதாசன் **விடை: ஆ) பாரதிதாசன்**

12. 'வண்மொழி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) வண் + மொழி ஆ) வண்மை + மொழி

இ) வளமை + மொழி ஈ) வாண் + மொழி **விடை: ஆ) வண்மை+மொழி**

13. 'ஏழ்கடல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) ஏழ் + கடல் ஆ) ஏழ்மை + கடல்

இ) ஏழு + கடல் ஈ) எளிமை + கடல் **விடை: இ) ஏழு + கடல்**

14. 'வளர் + மொழி' என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) வளர்மொழி ஆ) வளமைமொழி
இ) வளமொழி ஈ) வளர்ந்தமொழி **விடை: அ) வளர்மொழி**

15. 'சீட்டு + கவி' என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) சீட்டுகவி ஆ) சீட்டுக்கவி
இ) சீடைக்கவி ஈ) சீட்கவி **விடை: ஆ) சீட்டுக்கவி**

16. 'சிந்தனை + ஆளர்' என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) சிந்தனை ஆளர் ஆ) சிந்தனைஎளர்
இ) சிந்தனையாளர் ஈ) சிந்துஆளர் **விடை: இ) சிந்தனையாளர்**

## குறுவினா

1. **வளமான தமிழ்மொழி எதனை அறிந்து உரைக்கும்?**
ஆகாயத்தில் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான தமிழ்மொழி.

2. **தமிழ்மொழி எது உள்ள வரையிலும் வாழ வேண்டும்?**
எங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழி உலகம் உள்ள வரையிலும் வாழ்க!

3. **எந்த இருள் நீங்க வேண்டும்?**
எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருள் நீங்க வேண்டும்.

4. **தமிழ்மொழி எங்குச் சிறப்படைய வேண்டும்?**
தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுவதும் சிறப்படைய வேண்டும்.

5. **எந்தத் துன்பம் நீங்கி தமிழ்நாடு ஒளிர வேண்டும்?**
பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிர்க.

6. **பாரதியாரின் பன்முக ஆற்றல்கள் யாவை?**
கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர் பாரதியார்.

7. **பாரதியார் நடத்திய இதழ்கள் யாவை?**
இந்தியா, விஜயா இதழ்களை நடத்தினார்.

8. **பாரதியார் எழுதிய உரைநடை நூல்கள் யாவை?**
சந்திரிகையின் கதை, தராசு போன்றவை பாரதியார் எழுதிய உரைநடை நூல்களாகும்.

9. **பாரதிதாசன், பாரதியாரை எவ்வாறெல்லாம் புகழ்ந்துள்ளார்?**
சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் பாரதிதாசன், பாரதியாரைப் புகழ்ந்துள்ளார்.

இயல் 1

தமிழ்

## சிறுவினா

**1. பாரதியார் குறிப்பு எழுதுக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாரதியார் |
| இயற்பெயர் | : | சுப்பிரமணியன் |
| ஊர் | : | எட்டயபுரம் |
| பிறப்பு | : | 11.12.1882 |
| பெற்றோர் | : | சின்னசாமி - இலக்குமி அம்மையார் |
| சிறப்பு பெயர்கள் | : | பாரதி, ஷெல்லிதாசன், புதுக்கவிதைக்கு முன்னோடி, சரஸ்வதி பட்டம், காளிதாசன், தேசாபிமானி, நித்தியதீரர், மகாகவி. |
| இதழ்ப்பணி | : | சக்கரவர்த்தினி, கர்மயோகி, பாலபாரத், சுதேசமித்திரன், இந்தியா, விஜயா. |
| இயற்றியவை | : | கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், சந்திரிகையின் கதை, தராசு, புதுக்கவிதைகள், பாப்பா பாட்டு, பூலோக ரம்பை, திண்டி மசாஸ்திரி, சின்ன சங்கரன் கதை, நவதந்திரக் கதைகள். |
| இறப்பு | : | 11.09.1921 (39 ஆண்டுகள்) |

## கற்பவை கற்றபின்

**1. 'தமிழ்மொழி வாழ்த்து' - பாடலை இசையுடன் பாடி மகிழ்க.**

★வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!
வாழிய வாழியவே!

வான மளந்தது அனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!★

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே! - பாரதியார்

**2. படித்துச் சுவைக்க.**

செந்தமிழ் அந்தாதி
செந்தமிழே! செங்கரும்பே! செந்தமிழர் சீர்காக்கும்
நந்தா விளக்கனைய நாயகியே! - முந்தை
மொழிக்கெல்லாம் மூத்தவளே! மூவேந்தர் அன்பே!
எழில்மகவே! எந்தம் உயிர்.
உயிரும்நீ; மெய்யும்நீ; ஓங்கும் அறமாம்
பயிரும்நீ; இன்பம்நீ; அன்புத் தருவும்நீ;
வீரம்நீ; காதல்நீ; ஈசன் அடிக்குநல்
ஆரம்நீ; யாவும்நீ யே! - து. அரங்கன்

கவிதைப் பேழை

இயல் 1

# தமிழ்மொழி மரபு

தொல்காப்பியர்

## தொல்காப்பியர்

தொல்காப்பியத்தின் ஆசிரியர் தொல்காப்பியர். தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இந்நூல் எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது.

## சொல்லும் பொருளும்

- விசும்பு - வானம்
- மயக்கம் - கலவை
- இருதிணை - உயர்திணை, அஃறிணை
- வழாஅமை - தவறாமை
- ஐம்பால் - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்.
- மரபு - வழக்கம்
- திரிதல் - மாறுபடுதல்
- செய்யுள் - பாட்டு
- தழாஅல் - தழுவுதல் (பயன்படுத்துதல்)

| இளமைப் பெயர்கள் | | ஒலி மரபுகள் | |
|---|---|---|---|
| புலி | பறழ் | புலி | உறுமும் |
| சிங்கம் | குருளை | சிங்கம் | முழங்கும் |
| யானை | கன்று | யானை | பிளிறும் |
| பசு | கன்று | பசு | கதறும் |
| ஆடு | குட்டி | ஆடு | கத்தும் |

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பறவைகள் __________ பறந்து செல்கின்றன.

அ) நிலத்தில் ஆ) விசும்பில்

இ) மரத்தில் ஈ) நீரில் **விடை: ஆ) விசும்பில்**

இயல் 1 தமிழ்

2. **இயற்கையைப் போற்றுதல் தமிழர் __________.**

அ) மரபு ஆ) பொழுது

இ) வரவு ஈ) தகவு **விடை: அ) மரபு**

3. **'இருதிணை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.**

அ) இரண்டு + திணை ஆ) இரு + திணை

இ) இருவர் + திணை ஈ) இருந்து + திணை

**விடை: அ) இரண்டு + திணை**

4. **'ஐம்பால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.**

அ) ஐம் + பால் ஆ) ஐந்து + பால்

இ) ஐம்பது + பால் ஈ) ஐ + பால் **விடை: ஆ) ஐந்து + பால்**

### சிந்தனை வினா

1. **நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

மனிதன் தன் வாழ்நாளில் நல்ல முறையில் வாழ்ந்து, தான் வாழ்ந்ததற்கான அடிச்சுவட்டை விட்டுச் செல்கிறான். அவ்வகையில் பழந்தமிழர் தம் வாழ்வில் கடைப்பிடித்து தமக்கு விட்டுச் சென்ற பண்பாட்டை மரபுகளாகப் பின்பற்றுவது நமது கடமையாகும். அதனால்தான், நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றி வந்தனர். மரபு மாறினால் பொருள் மாறிவிடும் பண்பாடும் அர்த்தமற்று போய்விடும். எனவே, நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் இதுவாகத்தான் இருக்கும் என கருதுகிறேன்.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **வாழ்வுக்குரிய ஒழுங்குமுறைகள் __________ எனப்படும்.**

அ) அறிவு ஆ) செல்வம்

இ) ஒழுக்கம் ஈ) சிறப்பு **விடை: இ) ஒழுக்கம்**

2. **மொழிக்குரிய ஒழுங்குமுறைகள் __________ எனப்படும்.**

அ) மரபு ஆ) கலாச்சாரம்

இ) பண்பாடு ஈ) ஒழுக்கம் **விடை: அ) மரபு**

3. **திணை __________ வகைப்படும்.**

அ) மூன்று ஆ) இரண்டு

இ) நான்கு ஈ) ஐந்து **விடை: ஆ) இரண்டு**

4. **பால் __________ வகைப்படும்.**

அ) நான்கு ஆ) ஆறு

இ) ஐந்து ஈ) மூன்று **விடை: இ) ஐந்து**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

5. **செய்யுளுக்கும் மரபுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி __________ கூறுகிறது.**
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை
இ) சங்கநூல் ஈ) தொல்காப்பியம் **விடை: ஈ) தொல்காப்பியம்**

6. **இவ்வுலகம் __________ ஆல் ஆனவை.**
அ) காற்று ஆ) நீர்
இ) ஐம்பூதங்கள் ஈ) நெருப்பு **விடை: இ) ஐம்பூதங்கள்**

7. **எழுத்துகள் நீண்டு ஒலிப்பதை __________ என்பர்.**
அ) குறில் ஆ) ஆய்தம்
இ) அளபெடை ஈ) உயிர்மெய் **விடை: இ) அளபெடை**

8. **தொல்காப்பியத்தின் ஆசிரியர் __________.**
அ) தொல்காப்பியர் ஆ) பவணந்தி முனிவர்
இ) கம்பர் ஈ) பரணர் **விடை: அ) தொல்காப்பியர்**

9. **தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் __________ ஆகும்.**
அ) திருக்குறள் ஆ) தொல்காப்பியம்
இ) நன்னூல் ஈ) சிலப்பதிகாரம் **விடை: ஆ) தொல்காப்பியம்**

10. **தொல்காப்பியம் __________ அதிகாரங்களைக் கொண்டுள்ளது.**
அ) ஐந்து ஆ) ஆறு
இ) நான்கு ஈ) மூன்று **விடை: ஈ) மூன்று**

## குறுவினா

1. **"இரு திணைகள்" எவையெனச் சுட்டுக.**
உயர்திணை, அஃறிணை.

2. **"ஐம்பால்கள்" எவையெனச் சுட்டுக.**
1. ஆண்பால், 2. பெண்பால், 3. பலர்பால், 4. ஒன்றன்பால், 5. பலவின்பால்.

3. **உயிரளபெடை என்றால் என்ன?**
செய்யுளில் ஓசை குறையும்போது அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர்நெடில் எழுத்துகள் ஏழும் அளபெடுக்கும். இஃது உயிரளபெடை எனப்படும்.

4. **ஐம்பூதங்கள் யாவை?**
நிலம், தீ, நீர், காற்று, வானம் ஆகியன ஐம்பூங்களாகும்.

இயல் 1 தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## கற்பவை கற்றபின்

**1. பறவைகளின் ஒலி மரபுகளை எழுதி வருக.**

- காகம் கரையும்
- ஆந்தை அலறும்
- கிளி பேசும்
- குயில் கூவும்
- கூகை குழறும்
- கோழி கொக்கரிக்கும்
- சேவல் கூவும்
- புறா குனுகும்
- மயில் அகவும்
- வண்டு முரலும்

**2. ஐம்பூதங்கள் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்படும் வேறு பெயர்களை எழுதுக.**

- நிலம் - தரை, மண், இடம், பூவுலகு, பூமி, மனை, புவி.
- தீ - நெருப்பு, கொள்ளி, அக்கினி, கனல், அனல்.
- நீர் - தண்ணீர், வெள்ளம், புனல்.
- வளி - காற்று, வாயு, தென்றல், புயல்.
- விசும்பு - ஆகாயம், வானம், விண்.

**3. ஐம்பூதங்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.**

| | | |
|---|---|---|
|  |  |  |
| **நிலம்** | **தீ** | **நீர்** |

| | |
|---|---|
|  |  |
| **வளி** | **விசும்பு** |

1 இயல்

தமிழ்

உரைநடை உலகம்

இயல் 1

# தமிழ் வரிவடிவ வளர்ச்சி

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ________ காரணமாக அமைந்தது.**
   அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை
   இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை **விடை: இ) அச்சுக்கலை**

2. **வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து ________ என அழைக்கப்படுகிறது.**
   அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து
   இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து **விடை: ஆ) வட்டெழுத்து**

3. **தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ________.**
   அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்
   இ) வ.உ. சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்
   **விடை: ஆ) தந்தை பெரியார்**

### கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கடைச்சங்ககாலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ________ என அழைக்கப்பட்டன.
   **விடை: கண்ணெழுத்துகள்**
2. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ________.
   **விடை: வீரமாமுனிவர்**

### குறுவினா.

1. **ஓவிய எழுத்து என்றால் என்ன?**
   தொடக்க காலத்தில் எழுத்து என்பது பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்ததால் அதனை ஓவிய எழுத்து என்பர்.
2. **ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?**
   ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**3. ஓலைச்சுவடிகளில் நேர்க்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?**

♦ புள்ளியிட்டு எழுதினால் ஓலைச்சுவடி சிதைந்துவிடும்.

♦ நேர்க்கோடிட்டு எழுதினால் ஓலைச்சுவடி கிழிந்துவிடும்.

ஆகிய காரணங்களால் ஓலைச்சுவடிகளில் நேர்க்கோடுகள், புள்ளிகள் பயன்படுத்தாமல் விட்டுவிட்டனர்.

**4. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.**

♦ ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை வீரமாமுனிவர் போக்கினார்.

♦ 'எ' என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு 'ஏ' என்னும் எழுத்தை நெடிலாகவும் 'ஒ' என்னும் எழுத்திற்குச் சுழி இட்டு 'ஓ' என்னும் எழுத்தாக உருவாக்கினார்.

எ் – ஏ ஒ – ஒ்

## சிறு வினா.

**1. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.**

♦ ஓலைச்சுவடிகளிலும், கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.

♦ ஓலைச்சுவடிகளில் நிறுத்தற் குறிகளும், பத்தி பிரித்தலும் கிடையாது.

♦ புள்ளி இடப்பட்டு எழுதப்படும் இடங்களில் புள்ளிகள் தெளிவாகத் தெரியாத நிலையில் அவற்றின் இடம் நோக்கி மெய்யா உயிர்மெய்யா, குறிலா நெடிலா என உணர வேண்டிய நிலை இருந்தது. இதனால் படிப்பவர்கள் பெரிதும் துன்பம் அடைந்தனர். எனவே எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.

**2. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.**

♦ நெடிலைக் குறிக்க ஒற்றைப் புள்ளிகளுக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் (ா) பயன்படுகின்றது.

♦ ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப் புள்ளிகளுக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக்கொம்பு (ை) பயன்படுகின்றது.

♦ ஔகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்குப் பின் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் கொம்புக்கால் (ள) பயன்படுகின்றது.

♦ குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின்மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் வழக்கொழிந்துவிட்டது.

## நெடுவினா.

**எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.**

♦ மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும், பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினான்.

இயல் 1 தமிழ்

- அதற்காகப் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.
- தொடக்கக் காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ, வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.
- அடுத்ததாக ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது. அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் முதல் ஓசையைக் குறிப்பதாயிற்று.
- இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை 'ஒலி எழுத்து நிலை' என்பர். இன்று உள்ள எழுத்துகள் ஒரு காலத்தில் பொருள்களின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபுகளாகக் கருதப்படுகின்றன.

## சிந்தனை வினா.

**1. தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.**

- தமிழராய்ப் பிறந்தோர் அனைவரும் தமிழ் வழிக் கல்வியை ஆதரிப்பவர்களாக விளங்க வேண்டும்.
- தமிழ்மொழியில் தோன்றிய இலக்கண, இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள் போன்ற அனைத்தும் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் அனைவருக்கும் பயன்படும் வகையில் வெளிப்பட வேண்டும்.
- பழைமையைப் பேணுவதுடன், புதுமை காணும் நோக்கத்துடன் வெளிவரும் படைப்பிலக்கியங்களையும் அவற்றைப் படைப்போரையும் பேணும் நிலை வர வேண்டும்.
- பிறமொழி இலக்கியங்களை மொழிபெயர்த்து தமிழிலேயே வெளியிட வேண்டும். கலைச்சொற்கள் புதிதாகப் படைக்கப்பட வேண்டும்.

**2. தமிழை உரோமன் எழுத்துருவில் எழுதுவதால் தமிழுக்கு ஏற்படும் தீங்குகள் குறித்து விவாதிக்கவும்.**

அருள் : 'அம்மா இங்கே வா' என்பதை amma ingkee vaa என்று ஆங்கில எழுத்துகளில் தமிழை எழுதுவது மிகவும் தவறு.

செல்வி : நான் எப்போதும் கைபேசியில் யாருக்காவது வாழ்த்து சொல்வதை vallthukal என்று தான் சொல்வேன்.

செல்வனி : மலாய் மொழியில் எல்லாம் ஆங்கில எழுத்துருவில் தான் அனைவரும் எழுதுகிறார்கள். என் அத்தை கூட இதனை அடிக்கடி கூறுவார்கள்.

ஆனந்தி : இணையத்தில், முகநூலில், கட்செவி அஞ்சலில் எழுதும்போது சிறிதாக எழுதுவதற்கு ஆங்கில எழுத்துருவைப் பயன்படுத்துவதில் தவறில்லை என்று நினைக்கிறேன்.

ஆரிப் : எப்படித் தவறில்லை? என்று கூறலாம். உலகில் உள்ள அனைத்துக் கண்டுபிடிப்புகளுக்கும் தமிழில் பெயரிட்டுள்ளனர். இன்று இணையத்தில் அதிகம் தேடப்படும், பயன்படுத்தப்படும் எட்டு மொழிகளில் ஒன்றாகத் தமிழ் திகழ்ந்து வருகிறது. தமிழின் பெருமை கடல்கடந்தும் கோலோச்சி வருகிறது. தமிழை நாம் எழுதும்போது தமிழ் எழுத்துருவில் தான் எழுத வேண்டும். 'வாழ்த்துகள்' என்றும் 'அம்மா இங்கே வா வா' என்றும் தமிழில் எழுதுவதற்குப் பாமினி, இளங்கோ, ஸ்ரீலிபி, அமுதம், வானவில், அழகி போன்ற இணைய தமிழ் எழுத்துருக்களைப் பயன்படுத்தலாம்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!!

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **மனிதன் தன் கருத்தைப் பிறருக்கு அறிவிக்க _________ கண்டுபிடித்தான்.**

அ) அறிவை ஆ) நட்பை
இ) மொழியை ஈ) மாநிலத்தை **விடை: இ) மொழியை**

2. **மொழியை நிலைபெறச் செய்ய _________ உருவாக்கினான்.**

அ) கூட்டத்தை ஆ) எழுத்துகளை
இ) பாறைகளை ஈ) அறிவை **விடை: ஆ) எழுத்துகளை**

3. **மனிதன் தோன்றிய காலத்தில் தனது தேவைகளையும் கருத்துகளையும் மற்றவர்களுக்குத் தெரிவிக்க _________ பயன்படுத்தினான்.**

அ) ஒலியை ஆ) ஒளியை
இ) பொருளை ஈ) சைகைகளை **விடை: ஈ) சைகைகளை**

4. **மனிதன் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களை _________ ஆகப் பொறித்து வைத்தான்.**

அ) இசையாக ஆ) பாடலாக
இ) குறியீடுகளாக ஈ) செம்மொழியாக **விடை: இ) குறியீடுகளாக**

5. **தொடக்க காலத்தில் எழுத்து, பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரிவடிவத்தை _________ என்பர்.**

அ) கண்ணெழுத்து ஆ) வட்டெழுத்து
இ) ஒளிஎழுத்து ஈ) ஓவிய எழுத்து **விடை: ஈ) ஓவிய எழுத்து**

6. **ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை _________ நிலை என்பர்.**

அ) ஒலி எழுத்து ஆ) ஒளி எழுத்து
இ) வடிவ எழுத்து ஈ) பேச்சு எழுத்து **விடை: அ) ஒலி எழுத்து**

7. 'ஸ' என்பது ________ மொழி எழுத்து.

அ) தெலுங்கு ஆ) கன்னடம்
இ) வட ஈ) இந்தி **விடை: இ) வட**

8. தமிழ் எழுத்துகளின் பழைய வரிவடிவங்களைக் கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும் ________களிலும் காண முடிகிறது.

அ) திருமேனி ஆ) கல்வெட்டு
இ) செப்பேடு ஈ) குகைகள் **விடை: இ) செப்பேடு**

9. ________ கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.

அ) செப்பேடுகள் ஆ) ஓவியங்கள்
இ) கல்வெட்டுகள் ஈ) எழுத்துகள் **விடை: இ) கல்வெட்டுகள்**

10. ________ கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.

அ) செப்பேடுகள் ஆ) கல்வெட்டுகள்
இ) குடவோலை ஈ) ஓவியங்கள் **விடை: அ) செப்பேடுகள்**

11. கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை ________ வகையாகப் பிரிக்கலாம்.

அ) மூன்று ஆ) ஐந்து
இ) நான்கு ஈ) இரண்டு **விடை: ஈ) இரண்டு**

12. முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலமான ________ ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துகள் காணப்படுகின்றன.

அ) 10 ஆ) 11
இ) 12 ஈ) 13 **விடை: ஆ) 11**

13. கண்ணெழுத்துகள் பற்றிக் குறிப்பிடும் நூல் ________.

அ) திருக்குறள் ஆ) மணிமேகலை
இ) சீவகசிந்தாமணி ஈ) சிலப்பதிகாரம் **விடை: ஈ) சிலப்பதிகாரம்**

14. தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துகள் வழக்கிலிருந்தன என அறிய ________ கல்வெட்டே சான்றாகும்.

அ) ஆதிச்சநல்லூர் ஆ) கீழடி
இ) அரிக்கமேடு ஈ) அரச்சலூர் **விடை: ஈ) அரச்சலூர்**

15. எகர ஒகர குறில் எழுத்துகளைக் குறிக்க எழுத்துகளின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் ________ காலம் முதல் இருந்து வந்துள்ளது.

அ) வள்ளுவர் ஆ) தொல்காப்பியர்
இ) இளங்கோவடிகள் ஈ) சாத்தனார் **விடை: ஆ) தொல்காப்பியர்**

16. ________களில் நிறுத்தற் குறிகளும், பத்தி பிரித்தலும் கிடையாது.

அ) ஓலைச்சுவடி ஆ) பாறை
இ) கல்வெட்டு ஈ) ஓவியங்கள் **விடை: அ) ஓலைச்சுவடி**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

17. தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் ________.
அ) வீரமாமுனிவர் ஆ) பெரியார்
இ) பாரதியார் ஈ) கம்பர் **விடை: அ) வீரமாமுனிவர்**

18. 'எ' என்னும் எழுத்திற்கு கீழ்க்கோடிட்டு 'ஏ' என சீர்திருத்தம் செய்தவர் ________.
அ) பெரியார் ஆ) வீரமாமுனிவர்
இ) பாரதிதாசன் ஈ) கம்பர் **விடை: ஆ) வீரமாமுனிவர்**

19. இருபதாம் நூற்றாண்டில் எழுத்துச் சீர்திருத்தம் செய்தவர் ________.
அ) வீரமாமுனிவர் ஆ) பாரதியார்
இ) காந்தி ஈ) பெரியார் **விடை: ஈ) பெரியார்**

20. 'ணா' என்னும் எழுத்தை 'னா' எனச் சீர்திருத்தம் செய்தவர் ________.
அ) வீரமாமுனிவர் ஆ) பெரியார்
இ) பாரதியார் ஈ) இளங்கோவடிகள் **விடை: ஆ) பெரியார்**

21. தமிழ்மொழி ________ பயன்பாட்டிற்கு ஏற்றமொழியாகவும் ஆகியிருக்கிறது.
அ) செம்மொழி ஆ) கையெழுத்து
இ) கணினி ஈ) ஒலி **விடை: இ) கணினி**

## பிரித்து எழுதுக.

- காலந்தோறும் = காலம் + தோறும்
- கற்றுக்கொண்டான் = கற்று + கொண்டான்
- குறிப்பதாயிற்று = குறிப்பது + ஆயிற்று
- வந்துள்ளன = வந்து + உள்ளன
- இப்போதுள்ள = இப்போது + உள்ள
- பெற்றுள்ளன = பெற்று + உள்ளன
- நூற்றாண்டு = நூறு + ஆண்டு
- தமிழெழுத்து = தமிழ் + எழுத்து
- வட்டெழுத்து = வட்டம் + எழுத்து
- காலமான = காலம் + ஆன
- கண்ணெழுத்துகள் = கண் + எழுத்துகள்
- சிலப்பதிகாரம் = சிலம்பு + அதிகாரம்
- மொழியிலுள்ள = மொழியில் + உள்ள

## சேர்த்து எழுதுக.

- காலத்திற்கு + ஏற்ப = காலத்திற்கேற்ப
- அடைந்து + இருக்கின்றன = அடைந்திருக்கின்றன
- அழகு + உணர்ச்சி = அழகுணர்ச்சி
- சான்று + ஆகும் = சான்றாகும்



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- வழக்கில் + இருந்த = வழக்கிலிருந்த
- செப்பு + ஏடு = செப்பேடு
- நிலை + ஆன = நிலையான
- இடர் + உற்றனர் = இடருற்றனர்

## நிரப்புக.

1. பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, __________ போன்றவற்றில் எழுதினர்.
   **விடை: ஓலை**
2. அந்தந்தப் பொருள்களின் தன்மைக்கு ஏற்ப எழுத்துகளில் __________ அமைந்தன.
   **விடை: வடிவங்கள்**
3. பாறைகளில் செதுக்கும் போது வளைகோடுகளைப் பயன்படுத்த முடியாது என்பதால் __________ பயன்படுத்தப்பட்டன. **விடை: நேர்க்கோடுகள்**
4. ஓலைகளில் நேர்க்கோடுகளையும், புள்ளிகளையும் எழுதுவது கடினம் என்பதால் __________ அதிகமாகப் பயன்படுத்தினர். **விடை: வளைகோடுகளை**
5. சில எழுத்துகளை அழகுபடுத்துவதற்காக அவற்றின் மேற்பகுதியில் __________ இடப்பட்டது. **விடை: குறுக்குக்கோடு**

## குறுவினா

**1. மனிதன் எதற்காக எழுத்துகளை உருவாக்கினான்?**

- மனிதன் தன் கருத்தைப் பிறருக்கு அறிவிக்க மொழியைக் கண்டுபிடித்தான்.
- மொழியை நிலைபெறச் செய்ய எழுத்துகளை உருவாக்கினான்.

**2. மனிதன் ஏன் சைகைகளைப் பயன்படுத்தினான்?**

மனிதன் தோன்றிய காலத்தில் தனது தேவைகளையும் கருத்துகளையும் மற்றவர்களுக்குத் தெரிவிக்கச் சைகைகளைப் பயன்படுத்தினான்.

**3. எழுத்து வடிவத்தின் தொடக்க நிலைக் குறித்து எழுதுக.**

- ஆதிமனிதன் பாறைகளிலும், குகைச்சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான்.
- இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.

**4. தமிழ் எழுத்துகள் எவ்வாறு நிலையான வடிவத்தைப் பெற்றன?**

- காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரி வடிவங்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளன.
- அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.

**5. தமிழ் எழுத்துகளின் பழைய வரிவடிவங்களை எங்கெங்கு காணமுடிகிறது? எப்போதிலிருந்து கிடைக்கின்றன?**

- தமிழ் எழுத்துகளின் பழைய வடிவங்களைக் கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும், செப்பேடுகளிலும் காண முடிகிறது.





Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- கல்வெட்டுகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.
- செப்பேடுகள் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.

**6. பழைய வரிவடிவங்களை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்?**

கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிக்கலாம்.

**7. கண்ணெழுத்துகள் குறித்து எழுதுக.**

- கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்று அழைக்கப்பட்டன.
- இதனைச் சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் 'கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி' (சிலம்பு 5 : 12) என்னும் தொடரால் அறியலாம்.

## சிறுவினா

**1. பேச்சு மொழி எவ்வாறு உருவானது?**

- மனிதன் தோன்றிய காலத்தில் தனது தேவைகளையும் கருத்துகளையும் மற்றவர்களுக்குத் தெரிவிக்கச் சைகைகளைப் பயன்படுத்தினான். காலப்போக்கில் தனது குரலைப் பயன்படுத்தி ஒலிகள் மூலம் தனது கருத்துகளை வெளிப்படுத்த முற்பட்டான்.
- அடுத்துச் சிறிது சிறிதாகச் சொற்களைச் சொல்லக் கற்றுக் கொண்டான். அச்சொற்கள் மீண்டும் மீண்டும் பேசப்பட்டதால் செம்மைப்பட்டன. காலப்போக்கில் அவை பண்பட்டுப் பேச்சுமொழியாக உருவானது.

**2. தமிழ்மொழியில் இடம்பெற்ற புள்ளிகளும், எழுத்துகளும் குறித்து எழுதுக.**

- எகர ஒகர குறில் எழுத்துகளைக் குறிக்க எழுத்துகளின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் தொல்காப்பியர் காலம் முதல் இருந்து வந்துள்ளது. (எடுத்துக்காட்டாக எது என எழுதப்பட்டால் எது என்றும், ஏது என எழுதப்பட்டால் எது என்றும் ஒலித்தனர்.
- அகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்துப் பக்கப்புள்ளி இடப்பட்டால் அவை நெடிலாகக் கருதப்பட்டன. (க. = கா, த. = தா). ஐகார எழுத்துகளைக் குறிப்பிட எழுத்துகளின் முன் இரட்டைப் புள்ளி இட்டனர். (..க = கை). எகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்து இரு புள்ளிகள் இடப்பட்டால் அவை ஔகார வரிசை எழுத்துகளாகக் கருதப்பட்டன. (கெ.. = கௌ, தெ.. = தௌ). மகர எழுத்தைக் குறிப்பிட, பகர எழுத்தின் உள்ளே புள்ளி (ப்) இட்டனர். குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளைக் குறிக்க அவற்றின் மேலேயும் புள்ளி இட்டனர்.

**3. பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் குறித்து எழுதுக.**

- இருபதாம் நூற்றாண்டு வரை 'ணா, றா, னா' ஆகிய எழுத்துகளை 'ணா, றா, னா' என எழுதினர். அதே போல 'ணை, லை, ளை, னை' ஆகிய எழுத்துகளை 'ணை, லை, ளை, னை' என எழுதினர்.
- அச்சுக்கோப்பதற்காக இவ்வெழுத்துகளுக்குத் தனி அச்சுகள் உருவாக்கப்பட வேண்டியிருந்தது. இக்குறைகளை நீக்குவதற்காகத் தந்தை பெரியார் எழுத்துச்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

சீர்திருத்தம் செய்தார். அவரது எழுத்துச் சீர்திருத்தங்கள் சில ஏற்கப்பட்டுத் தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

**நெடுவினா.**

1. **எழுத்துகளின் வரிவடிவ வளர்ச்சி குறித்து எழுதுக.**

- பண்டைக்காலத்தில் தமிழ் மொழியிலுள்ள எல்லா எழுத்துகளும் நாம் இன்று எழுதுவது போன்ற வடிவத்தில் எழுதப்படவில்லை.
- அவை காலத்திற்கேற்பப் பல உருவமாற்றத்தைப் பெற்றுத்தான் இக்கால வடிவத்தை அடைந்திருக்கின்றன. இவ்வாறு எழுத்துகளில் மாற்றங்கள் ஏற்பட எழுதப்படும் பொருள்களின் தன்மை, அழகுணர்ச்சி போன்றவை காரணங்களாக அமைகின்றன.
- பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை போன்றவற்றில் எழுதினர். அந்தந்தப் பொருள்களின் தன்மைக்கு ஏற்ப எழுத்துகளின் வடிவங்கள் அமைந்தன.
- பாறைகளில் செதுக்கும்போது வளைகோடுகளைப் பயன்படுத்த முடியாது என்பதால் நேர்க்கோடுகள் பயன்படுத்தப்பட்டன. ஓலைகளில் நேர்க்கோடுகளையும், புள்ளிகளையும் எழுதுவது கடினம் என்பதால் வளைகோடுகளை அதிகமாகப் பயன்படுத்தினர்.
- சில எழுத்துகளை அழகுப்படுத்துவதற்காக அவற்றின் மேற்பகுதியில் குறுக்குக்கோடு இடப்பட்டது. பின்னர் அவையே நிலையான வடிவங்களாக அமைந்து விட்டன.

## கற்பவை கற்றபின்

1. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து, அதில் இடம்பெற்றுள்ள பழைய வரிவடிவச் சொற்களை எடுத்து எழுதி, அவற்றை இன்றைய வரிவடிவில் மாற்றி எழுதுக.**

- சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்சனைகள் பற்றிய இந்தியாவின் கவலை பல்லாண்டு காலமாக வளர்ந்தே வருகிறது.
- ‘மனிதன் ஏழ்மையிலே இருக்கும்போது சத்தற்ற உணவினாலும், நோயினாலும் அச்சுறுத்தப்படுகிறான். பலவீனனாக இருப்பவன் போருக்கு அஞ்சிகிறான். செல்வந்தனாக இருப்பவனோ தன் கொழுத்த செல்வத்தால் உண்டான அசுத்தத்திற்கு அஞ்கிறான்’ என்றெல்லாம் திருமதி. இந்திராகாந்தி அன்றைக்கு ஆற்றிய உரை நாம் நினைவு கூரத் தக்கது.

| | |
|---|---|
| **பழைய வரிவடிவம்** | சூழ்நிலேப், பிரச்னேகள், கவலே, உணவிஞலும், நோயிஞலும், அச்சுறுத்தப்படுகிருன், பலவீனஞக, அஞ்சுகிருன், செல்வந்தஞக, இருப்பவஞே. |
| **இன்றைய வரிவடிவம்** | சூழ்நிலைப், பிரச்சனைகள், கவலை, உணவினாலும், நோயினாலும், அச்சுறுத்தப்படுகிறான், பலவீனனாக, அஞ்சுகிறான், செல்வந்தனாக, இருப்பவனோ. |

விரிவானம்

இயல் 1

# சொற்பூங்கா

இரா. இளங்குமரனார்

## இரா. இளங்குமரனார்

- செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படும் இரா. இளங்குமரனார் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர்.
- நூலாசிரியர், இதழாசிரியர், உரையாசிரியர், தொகுப்பாசிரியர் எனப் பன்முகத்திறன் பெற்றவர்.
- இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், தேவநேயம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியும் தொகுத்தும் உள்ளார்.
- திருச்சிக்கு அருகில் அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலையும், பாவாணர் நூலகமும் அமைத்துள்ளார்.

## பாடநூல் வினாக்கள்

**1. தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

மொழி என்பதற்குச் சொல் என்பதும் ஒரு பொருள். மொழியை (சொல்லை) ஓர் எழுத்து மொழி, ஈரெழுத்து மொழி, இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகள் உடைய மொழி என மூன்று வகையாக்குவர்.

**ஓரெழுத்து ஒரு மொழி:**

உயிர் வரிசையில் ஆறு எழுத்துகளும், ம வரிசையில் ஆறு எழுத்துகளும், த, ப, ந என்னும் வரிசைகளில் ஐந்து ஐந்து எழுத்துகளும், க, ச, வ என்னும் வரிசையில் நான்கு நான்கு எழுத்துகளும், ய வரிசையில் ஒன்றும் ஆக நாற்பது நெடில்கள் ஓரெழுத்து ஒரு மொழியாக வரும் என்றார் நன்னூலார். நொ, து என்னும் குறில்களையும் சேர்த்து நாற்பத்து இரண்டு என்றார்.

**பூ–யா சொற்கள்:**

பூ என்பது ஓரெழுத்து ஒரு மொழி. கா என்பதும் ஓரெழுத்து ஒரு மொழி. இவை இரண்டையும் இணைத்துப் பூங்கா எனக் கலைச்சொல் ஆக்கி வைத்துள்ளனர். யா என்பது வினா. யாது, யாவர், யாவன், யாங்கு, யாண்டு, யார், யாவை என்றெல்லாம் வினாவுவதற்கு முன் வந்து நிற்கும் எழுத்து ‘யா’ தானே!



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**'மா' சொல்:**

மா என்பதும் ஓரெழுத்து ஒரு மொழிகளுள் ஒன்று. நாட்டிலுள்ள பெருமக்கள் பெரிதும் கூடும் அவையை மாநாடு என்கிறோம். பல குறு நிலங்களை உள்ளடக்கிய பெருநிலத்தை மாநிலம் என்கிறோம். மா என்பது விலங்கையும் குறிக்கும். அரிமா, பரிமா, நரிமா, வரிமா, கரிமா என்றெல்லாம் வந்து விலங்கினப் பெயராகி நிற்கின்றது.

**ஈ-காரச் சொல்:**

ஈ என்னும் பொதுப் பெயர் ஓயாது ஒலி செய்யும் ஒலிக்குறிப்பைக் காட்டி நிற்கிறது. மாட்டு ஈ, தேன் ஈ எனப் பகுத்து வழங்கும் வழக்கம் உள்ளது. ஈ என்பது ஈக என்னும் பொருளில் வழங்குதல் வெளிப்படை. ஈ என்று பல்லைக் காட்டாதே என்று அறிவுரை கூறுவதும் உண்டு.

**கால மாற்றத்தில் கரைந்தவை:**

இன்னொரு வகையாகவும் பார்க்கலாம். ஆன் என்பது ஆ ஆகியது; மான் என்பது மா ஆகியது; கோன் என்பது கோ ஆகியது; தேன் என்பது தே ஆகியது; பேய் என்பது பே ஆகியது இவையெல்லாம் கால வெள்ளத்தில் கரைந்து தேய்ந்தவை.

**ஏகாரச் சொல்:**

எட்டத்தில் போகிற ஒருவனை ஏய் என அழைத்தனர். ஏய் என்பது என்னோடு கூடு, பொருந்து, சேர் என்னும் பொருளை உடையது. ஏய் என்பது ஏ என வழக்கில் ஊன்றிவிட்டது. அம்பை ஏவு என்பர். ஏவுதல் என்பது 'அம்புவிடுதல்' ஏவும் அம்பு 'ஏ' என்றாகியது. அம்பு விரைந்து செல்வது போலச் சென்று உரிய கடமை புரிபவன் ஏவலன் எனப்பட்டான். அம்புவிடும் கலையை ஏகலை என்றது தமிழ். அதில் வல்லவனை ஏகலைவன் என்று பாராட்டியது.

**முடிவுரை:**

தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிச் சொற்களின் பெருக்கம் நம் மொழியின் பழமை, உயிரோட்டம், பெருவழக்கு என்பனவற்றைக் கையில் கனியாகக் காட்டும்.

## தெரிந்து கொள்வோம்.

**ஓரெழுத்து ஒரு மொழிகள்:**

| | | | |
|---|---|---|---|
| உயிர் எழுத்து | - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ | ககர வரிசை | - கா, கூ, கை, கோ |
| மகர வரிசை | - மா, மீ, மூ, மே, மை, மோ | சகர வரிசை | - சா, சீ, சே, சோ |
| தகர வரிசை | - தா, தீ, தூ, தே, தை | வகர வரிசை | - வா, வீ, வை, வௌ |
| பகர வரிசை | - பா, பூ, பே, பை, போ | யகர வரிசை | - யா |
| நகர வரிசை | - நா, நீ, நே, நை, நோ | குறில் எழுத்து | - நொ, து |

**ஓரெழுத்து ஒரு மொழிகள் இடம் பெறுமாறு ஐந்து தொடர்கள் எழுதுக.**

தை - தை பிறந்தால் வழி பிறக்கும்.
மை - மாலா எழுதும்போது தாளில் மை சிந்தியது.
பா - பா நான்கு வகைப்படும்.
மா - முக்கனிகளுள் ஒன்று மா.
கை - மாரிக்கு, விளையாடும் போது கை உடைந்தது.


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net
www.CBSEtips.in

கற்கண்டு

இயல் 1

# எழுத்துகளின் பிறப்பு

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் __________.**
   அ) இ, ஈ ஆ) உ, ஊ
   இ) எ, ஏ ஈ) அ, ஆ **விடை: ஆ) உ, ஊ**

2. **ஆய்த எழுத்து பிறக்கும் இடம் __________.**
   அ) மார்பு ஆ) கழுத்து
   இ) தலை ஈ) மூக்கு **விடை: இ) தலை**

3. **வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் __________.**
   அ) தலை ஆ) மார்பு
   இ) மூக்கு ஈ) கழுத்து **விடை: ஆ) மார்பு**

4. **நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருத்துவதால் பிறக்கும் எழுத்துகள் __________.**
   அ) க், ங் ஆ) ச், ஞ்
   இ) ட், ண் ஈ) ப், ம் **விடை: இ) ட், ண்**

5. **கீழ்இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து __________.**
   அ) ம் ஆ) ப்
   இ) ய் ஈ) வ் **விடை: ஈ) வ்**

### பொருத்துக.

1. க், ங் - அ) நாவின் இடை, அண்ணத்தின் இடை.
2. ச், ஞ் - ஆ) நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி.
3. ட், ண் - இ) நாவின் முதல், அண்ணத்தின் அடி.
4. த், ந் - ஈ) நாவின் நுனி, அண்ணத்தின் நுனி.

**விடை: 1.இ 2.அ 3.ஈ 4.ஆ**

### சிறுவினா.

1. **எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?**
   உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன. இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர்.

**2. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?**

- மெய்யெழுத்துகளில், வல்லின மெய் எழுத்துகள் ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- மெல்லின மெய் எழுத்துகள் ஆறும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- இடையின மெய் எழுத்துகள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

**3. ழகர, லகர, ளகர மெய்களின் முயற்சிப் பிறப்பு பற்றி எழுதுக.**

- ழகர மெய் மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கிறது.
- லகர மெய் மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.
- ளகர மெய் மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. எழுத்துகள் __________ இடங்களில் பிறக்கின்றன.**

அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **விடை: இ) நான்கு**

**2. உயிரெழுத்துகளின் பிறப்பிடம் __________.**

அ) மூக்கு ஆ) தலை
இ) மார்பு ஈ) கழுத்து **விடை: ஈ) கழுத்து**

**3. மெல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் __________.**

அ) மார்பு ஆ) தலை
இ) மூக்கு ஈ) கழுத்து **விடை: இ) மூக்கு**

**4. இடையின எழுத்துகள் பிறக்கும் இடம் __________.**

அ) தலை ஆ) மூக்கு
இ) கழுத்து ஈ) மார்பு **விடை: இ) கழுத்து**

**5. எழுத்துகளின் பிறப்பினை __________ வகையாகப் பிரிப்பர்.**

அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **விடை: அ) இரண்டு**

### குறுவினா.

**1. எழுத்துகளின் பிறப்பினை எத்தனை வகையாகப் பிரிப்பர்? அவை யாவை?**

- எழுத்துகளின் பிறப்பினை இரண்டு வகையாகப் பிரிப்பர்.
- அவை, இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு ஆகும்.

இயல் 1 தமிழ்



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**2. உயிரெழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?**

உயிர் எழுத்துகள் பன்னிரண்டும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

**3. ஆய்த எழுத்து எதை இடமாகக் கொண்டு பிறக்கிறது?**

ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது.

**4. உயிர் எழுத்துகளின் முயற்சிப் பிறப்பு குறித்து எழுதுக.**

- அ, ஆ, ஆகிய இரண்டும் வாய் திறத்தலாகிய முயற்சியால் பிறக்கின்றன. இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்தும் வாய் திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்றன.
- உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்தும் வாய் திறக்கும் முயற்சியுடன் இதழ்களைக் குவிப்பதால் பிறக்கின்றன.

**5. க், ங் – மெய்களின் முயற்சிப் பிறப்பு யாது?**

க், ங் – ஆகிய இருமெய்களும் நாவின் முதற்பகுதி, அண்ணத்தின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.

**6. ச், ஞ் – மெய்களின் முயற்சிப் பிறப்பு யாது?**

ச், ஞ் – ஆகிய இருமெய்களும் நாவின் இடைப்பகுதி, நடு அண்ணத்தின் இடைப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.

**7. ட், ண் – ஆகிய மெய்களின் முயற்சிப் பிறப்பு யாது?**

ட், ண் – ஆகிய இருமெய்களும் நாவின் நுனி, அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.

**8. த், ந் – மெய்களின் முயற்சிப் பிறப்பு யாது?**

த், ந் – ஆகிய இருமெய்களும் மேல்வாய்ப்பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துவதால் பிறக்கின்றன.

**9. ப், ம் – மெய்களின் முயற்சிப் பிறப்பு யாது?**

ப், ம் – ஆகிய இரு மெய்களும் மேல் இதழும் கீழ் இதழும் பொருந்துவதால் பிறக்கின்றன.

**10. ற், ன் – மெய்களின் முயற்சிப் பிறப்பு யாது?**

ற், ன் – ஆகிய இருமெய்களும் மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கின்றன.

**11. ய், ர், வ் – மெய்களின் முயற்சிப் பிறப்பு யாது?**

ய் – இது நாக்கின் அடிப்பகுதி, மேல் வாய் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கிறது.

ர் – இது மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கிறது.

வ் – இது மேல்வாய்ப்பல்லைக் கீழ் உதடு பொருந்துவதால் பிறக்கிறது.

**11. சார்பு எழுத்துகளின் பிறப்பு குறித்து எழுதுக.**

ஆய்த எழுத்து வாயைத் திறந்து ஒலிக்கும் முயற்சியால் பிறக்கிறது. பிற சார்பெழுத்துகள் யாவும் தத்தம் முதலெழுத்துகள் தோன்றும் இடங்களிலேயே அவை பிறப்பதற்கு உரிய முயற்சிகளைக் கொண்டு தாமும் பிறக்கின்றன.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## கற்பவை கற்றபின்

**'ஆய்தம்' - இச்சொல்லில் உள்ள ஒவ்வோர் எழுத்தின் வகையையும், அது பிறக்கும் இடத்தையும் பட்டியல் இடுக.**

| எழுத்துகள் | ஆ | ய் | த | ம் |
|---|---|---|---|---|
| வகை | உயிர் | மெய் | உயிர்மெய் | மெய் |
| பிறக்கும் இடம் | கழுத்து | கழுத்து | மார்பு, கழுத்து | மூக்கு |






## மொழியை ஆள்வோம்

**தமிழ்மொழியை வாழ்த்திப் பாடிய வேறு கவிஞர்களின் பாடல்களைக் கேட்டு மகிழ்க.**

அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்

பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது

கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக

எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே

அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்

இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்

– நாமக்கல் கவிஞர்

**கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

### தமிழ் எழுத்துகளின் தோற்றமும் வளர்ச்சியும்

தொல்காப்பியம் என்னும் தொன்மைத் தமிழ்நூலில் கூறப்படும் எழுத்துகள் வட்டெழுத்துகளைக் குறிப்பனவே ஆகும். இவ்வெழுத்தினைக் கோலெழுத்து, கண்ணெழுத்து எனப் பண்டைத் தமிழ் நூல்கள் குறிப்பிட்டுள்ளன. நாம் இன்று எழுதும் எழுத்துகள் ஆப்பு வடிவ எழுத்துகளிலிருந்தே தோன்றின என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். கோடுகள் மிகுதியாக இருக்கக் காரணம் இதுவே என்பர்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

எகர ஒகர எழுத்துகளைக் குறிக்க எழுத்துகளின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் தொல்காப்பியர் காலம் முதல் இருந்து வந்துள்ளது. ஓலைச் சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளி பெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர். மெய்யா? உயிர்மெய்யா? குறிலா? நெடிலா? என உணர வேண்டிய நிலை இருந்தது. இதனால் படிப்பவர்கள் பெரிதும் இடருற்றனர். இந்நிலையில் தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர். அதன் பிறகு தந்தை பெரியாரின் சீர்திருத்தமும் பெற்று தமிழ் இன்று எழுதும் தமிழாக மாறியது. தமிழ்மொழி கணினிப் பயன்பாட்டிற்கு ஏற்ற மொழியாகவும் ஆகியிருக்கிறது. நன்றி!

## அகரவரிசைப்படுத்துக.

**எழுத்து, ஒலிவடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், இரண்டல்ல, ஊழி, உரைநடை, ஔகாரம், ஓலைச்சுவடிகள், ஆரம்நீ, ஈசன், ஐயம்.**

**அகர வரிசைப்படுத்தியன:**

அழகுணர்ச்சி, ஆரம்நீ, இரண்டல்ல, ஈசன், உரைநடை, ஊழி, எழுத்து, ஏழ்கடல், ஐயம், ஒலிவடிவம், ஓலைச்சுவடிகள், ஔகாரம்.

## அறிந்து பயன்படுத்துவோம்.

### மரபுத் தொடர்கள்:

தமிழ் மொழிக்கெனச் சில சொல் மரபுகள் உள்ளன. அவை பழங்காலம் முதலே பின்பற்றப்படுகின்றன.

### பறவைகளின் ஒலிமரபு

- ஆந்தை அலறும்
- குயில் கூவும்
- மயில் அகவும்
- காகம் கரையும்
- கோழி கொக்கரிக்கும்
- கிளி பேசும்
- சேவல் கூவும்
- புறா குனுகும்
- கூகை குழறும்

### தொகை மரபு

- மக்கள் கூட்டம்
- ஆநிரை
- ஆட்டு மந்தை

### வினை மரபு

- சோறு உண்
- தண்ணீர் குடி
- பூக் கொய்
- முறுக்குத் தின்
- கூடை முடை
- இலை பறி
- சுவர் எழுப்பு
- பால் பருகு
- பானை வனை

## சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கோழி __________. (கூவும் / கொக்கரிக்கும்) **விடை: கொக்கரிக்கும்**
2. பால் __________. (குடி / பருகு) **விடை: பருகு**
3. சோறு __________. (தின் / உண்) **விடை: உண்**
4. பூ __________. (கொய் / பறி) **விடை: கொய்**
5. ஆ __________. (நிரை / மந்தை) **விடை: நிரை**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## மரபுப் பிழையை நீக்கி எழுதுக.

சேவல் கொக்கரிக்கும் சத்தம் கேட்டுக் கயல் கண் விழித்தாள். பூப்பறிக்க நேரமாகி விட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் கரைந்து கொண்டிருந்தது. பூவைப் பறித்ததுடன், தோரணம் கட்ட மாவிலையையும் கொய்து கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலைக் குடித்துவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்.

**விடை:**

சேவல் **கூவும்** சத்தம் கேட்டுக் கயல் கண் விழித்தாள். பூ**க்கொய்ய** நேரமாகி விட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் **கூவிக்** கொண்டிருந்தது. பூவைக் **கொய்ததுடன்**, தோரணம் கட்ட மாவிலையையும் **பறித்துக்**கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலைப் **பருகி**விட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்.

## 7. கட்டுரை எழுதுக.

### நான் விரும்பும் கவிஞர் – பாவேந்தர் பாரதிதாசன்

**முன்னுரை :**

‘எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!’ என முழங்கும் காலம் இக்காலம். இந்த முழக்கத்திற்கு மூலமாக இருந்த பெருமக்களுள் பாவேந்தர் பாரதிதாசனார் குறிப்பிடத்தக்கவர். இவரே நான் விரும்பும் கவிஞர் ஆவார்.

**பிறப்பும் இளமையும் :**

கனகசுப்புரத்தினம் என்னும் இயற்பெயர் கொண்ட பாரதிதாசனார் 29.04.1891-இல் கனகசபை – இலக்குமி அம்மையாருக்கு மகனாய்ப் புதுச்சேரியில் பிறந்தார். இளமையில் பிரெஞ்சு மொழியையும், தமிழையும் பயின்றார். 18-ஆம் வயதில் அரசினர் பள்ளியில் தமிழாசிரியராய் அமர்ந்தார். மகாகவி பாரதியாரிடம் கொண்ட அன்பால் தம் பெயரைப் பாரதிதாசன் என வைத்துக் கொண்டார்.

**தமிழ்ப்பற்று :**

**‘தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்’**

போன்ற கவிதை வரிகள் பாரதிதாசனின் தமிழ்ப்பற்றை வெளிப்படுத்துவன. ‘தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்’ என முழங்கினார். ‘தமிழகத்தின் தமிழ்த்தெருவில் தமிழ்தான் இல்லை’ என வருந்தினார்.

**கவிச்சுவை :**

இயற்கையில் ஈடுபாடு மிக்க பாவேந்தரின் கவிதைகள் கருத்தாழமும் கற்பனைச் சுவையும் கொண்டு கற்போரைக் களிப்புறச் செய்பவை. ‘நீலவான் ஆடைக்குள் உடல் மறைந்து நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை’ எத்தனை அழகான கற்பனை!. இது இவரின் கவிச்சுவைக்குச் சான்று.

இயல் 1 தமிழ்

**சமுதாயப் பார்வை:**

'சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே' எனச் சாதி வெறியைச் சாடினார்.

**'எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான**
**இடம் நோக்கி நடக்கின்ற திந்த வையம்'**

என்ற பொதுவுடைமைக் கருத்துக்குச் சொந்தக்காரர் பாவேந்தர்.

**முடிவுரை :**

உடல்வளமும், உளத்திடமும், உண்மை உரைக்கும் பண்பும், நேர்மையும், மொழிப்பற்றும், இனப்பற்றும் கொண்ட பாவேந்தரின் கனவுகளை நனவாக்குவதே நமது கடமை.

## மொழியோடு விளையாடு

### பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக.

**கல், பூ, மரம், புல், வாழ்த்து, சொல், மாதம், கிழமை, ஈ, பசு, படம், பல், கடல், கை, பக்கம், பா.**

| கள் | க்கள் | ங்கள் | ற்கள் |
|---|---|---|---|
| வாழ்த்துகள் | பூக்கள் | மரங்கள் | கற்கள் |
| கிழமைகள் | ஈக்கள் | மாதங்கள் | புற்கள் |
| கடல்கள் | பசுக்கள் | படங்கள் | சொற்கள் |
| கைகள் | பாக்கள் | பக்கங்கள் | பற்கள் |

### ஒருசொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.

**எ.கா: அணி – பல அணிகளை அணிந்த வீரர்கள், அணி அணியாய்ச் சென்றனர்.**

**படி, திங்கள், ஆறு.**

**படி** : படித்துக்கொண்டிருந்த மாலதி, மாடு கறந்த ஒரு படிப்பாலை எடுத்துக் கொண்டு, படியில் ஏறிச் சென்று தாயிடம் கொடுத்தாள்.

**திங்கள்** : சித்திரைத் திங்களில், முதல் திங்கள் அன்று, இரவில் திங்களைப் பார்ப்பது நல்லது.

**ஆறு** : ஆறுமுகம், காலையில் துவைப்பதற்காக ஆறு துணிகளை எடுத்துக்கொண்டு காவேரி ஆற்றுக்குச் சென்றான்.

### சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.

1. வட்டெழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து.
2. உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்.
3. வென்றதை பரணி பகைவரை ஆகும் பாடும் இலக்கியம்.

4. கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.
5. ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது.

**ஒழுங்குபடுத்திய தொடர் :**

1. வளைந்த கோடுகளால் அமைந்த தமிழ் எழுத்து வட்டெழுத்து எனப்படும்.
2. உலகம் உள்ளவரையிலும் தமிழ்மொழி வாழட்டும்.
3. பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம் பரணி ஆகும்.
4. உயிரெழுத்து பிறக்கும் இடம் கழுத்து ஆகும்.
5. தமிழ் அம்புவிடும் கலையை ஏகலை என்றது.

## நிற்க அதற்குத் தக....

### கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| ஒலிபிறப்பியல் | Articulatory phonetics | உயிரொலி | Vowel |
| மெய்யொலி | Consonant | அகராதியியல் | Lexicography |
| மூக்கொலி | Nasal consonant sound | ஒலியன் | Phoneme |
| கல்வெட்டு | Epigraph | சித்திர எழுத்து | Pictograph |

## இணையத்தில் காண்க

**தமிழ் வரிவடிவ எழுத்துகளில் காலந்தோறும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இணையத்தில் தேடித் தொகுத்து வருக.**

**1. ஓவிய எழுத்துகள் :**

மனிதன் ஓவியங்கள் மூலமாக தங்களுடைய எண்ணங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டான். தமிழகத்தில் மல்லப்பாடி, கீழ்வாலை, கோவை, மதுரை, நீலகிரி, தருமபுரி போன்ற மாவட்டங்களில் ஓவிய எழுத்தைக் கண்டு பிடித்துள்ளனர்.

**2. உருவ எழுத்து :**

பழந்தமிழகத்தில் உருவ எழுத்து உணர்வு எழுத்து, ஒலியெழுத்து, தன்மை எழுத்து என வரும் எழுத்துகள் ஒவ்வொன்றும் இருபாற்பட்டு எட்டு வகையாக விளங்கிய பாங்கும் அதில் உருவ எழுத்து ஓவியன் கைவினைத் திறன் போன்றது என்பதும் பெறப்படும். இதனால் குழுக்களாக இருந்த பழங்குடி மக்கள் பலவகைப்பட்ட எழுத்துருக்களைப் பயன்படுத்திய பாங்கும் புலப்படும்.

**3. தமிழி எழுத்து :**

சங்ககாலக் கல்வெட்டுகளில் காணும் எழுத்துகளை தமிழி என்பர். தமிழுக்கே உரிய வடிவத்தைத் தமிழி என்று கூறுவதுதான் சரி. இன்றுள்ள பழமையான எழுத்து வடிவம் தமிழியே என்பதும் அதுகாலந்தோறும் மாற்றம் பெற்றதையும் அறிஞர்கள் பட்டியல் இட்டுக் காட்டியுள்ளனர். இன்றுள்ள வடிவங்களுக்கு வித்தாக உள்ளது தமிழியே.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**4. கோல் எழுத்து :**

ஓவிய எழுத்தில் இருந்து கல்லில் பொறிக்கக் கோடுகளாக வரைந்த குறியீடுகளைக் கோல் எழுத்து என்றும் குறிப்பர்.

**5. வட்டெழுத்து :**

கல்லில் வெட்டப்பட்ட எழுத்துகளே வட்டெழுத்து எனப்பட்டது என்றும், ஓலைகளில் எழுதும்போது கோடுகள் ஓலைகளைக் கிழிக்கும் என்பதால் வட்டமாக எழுதியதால் இப்பெயர் பெற்றது என்றும் கூறுவர். பாண்டிய நாட்டில் வட்டெழுத்துகள் கி.பி. எட்டாம் நூற்றாண்டு வரை வழக்கில் இருந்ததைக் கல்வெட்டுகள் காட்டும்.

இமயமலை அடிவாரத்தில் உள்ள கோபலேசுவரர் ஆலயத்தில் வட்டெழுத்துக் கல்வெட்டு தமிழில் உள்ளது. இவ்வாறு தமிழ் வட்டெழுத்து இந்தியா முழுவதும் பரவிப் பல்வேறு எழுத்து வடிவங்கள் தோன்றக் காரணமாயின தன்மையும் அறியப்படும்.

**6. கிரந்த எழுத்து :**

தமிழகத்தில் பல்லவர் ஆட்சி ஏற்பட்டதும் வடமொழி ஆதிக்க மொழியாயிற்று. கிரந்த எழுத்துகள் வழக்கில் வந்தன. இதனைப் பல்லவ கிரந்தம் என்றே அழைப்பர். கிரந்தம் என்ற சொல்லிற்கு நூல் என்பது பொருள். இதுவே பின்னர் எழுத்தையும் குறித்தது. தமிழ்க் கல்வெட்டுகளில் வடமொழிப் பகுதியைக் குறிக்க இந்த எழுத்துகளையே பயன்படுத்தினர். தமிழ்நாட்டில் ஆனைமலை, அழகர்மலை, திருமயம், குடுமியான்மலை, தகடூர், பேரூர் போன்ற இடங்களில் உள்ள சோழர்காலக் கல்வெட்டுகளில் கிரந்த எழுத்துகளைக் காணலாம்.

**7. முதல் அச்சு எழுத்து :**

தமிழ்மொழியின் முதல் அச்சுப் புத்தகம் தம்பிரான் வணக்கம் என்னும் நூல் 1578 அக்டோபர் 20ஆம் நாள் கொல்லத்தில் அச்சிடப்பட்டது. அதில் கொல்லம் எழுத்து, மலபார் எழுத்து, கோவா எழுத்து என்பன போன்ற வேறு வேறு வகையான தமிழ் எழுத்துகள் அன்று வழக்கில் இருந்ததைக் குறித்துக் காணலாம். இவ்வாறு அச்சில் கூடப் பலவகைப்பட்ட எழுத்துகள் பழக்கத்தில் இருந்ததை நாம் அறிய முடியும்.

**8. வீரமாமுனிவர் செய்த மாற்றம் :**

‘எகரத்துக்கும், ஒகரத்துக்கும் உட்புள்ளியை நீக்கிக் கால் இட்டார். உயிர்மெய்களில் எகர, ஒகரங்கட்கு ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு அமைத்தார். அவரே சதுர வடிவான எழுத்துகளை அமைத்தார் என்றும் கூறுவர்.

**9. பெரியார் செய்த மாற்றம் :**

பெரியார் தமிழ் எழுத்துகள் சீர்மை பெற வேண்டும் என்று கருதினார். அதன் விளைவாக உயிர்மெய்க்கு, மெய்யுடன் கால் சேர்த்து வழங்கும் முறையைக் கொண்டார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## அலகுத் தேர்வு

### இயல் 1

நேரம்: 30 நிமிடம் மதிப்பெண்கள்: 20

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **8 × 1 = 8**

**அ) பொருள் எழுதுக.**

1. வைப்பு -
2. தழாஅல் -
3. விசும்பு -

**ஆ) உரிய விடையைத் தேர்வு செய்க.**

4. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ________

அ) வைப்பு ஆ) கடல்
இ) பரவை ஈ) ஆழி

5. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ________.

அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்
இ) வ.உ. சிதம்பரம் ஈ) பெருஞ்சித்திரனார்

**இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.**

6. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ________ என அழைக்கப்பட்டன.
7. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ________.
8. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ________.

**II. குறு விடை தருக.** **3 × 2 = 6**

9. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
10. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக் கூடாது?
11. ஓவிய எழுத்து என்றால் என்ன?

**III. சிறு விடை தருக.** **2 × 3 = 6**

12. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

**(அல்லது)**

நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?

13. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவமாற்றங்களை எழுதுக.

**(அல்லது)**

எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

கவிதைப் பேழை

இயல் 2

# ஓடை

வாணிதாசன்

## வாணிதாசன்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | எத்திராசலு |
| அறிந்த மொழிகள் | : | தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு. |
| சிறப்புப்பெயர் | : | கவிஞரேறு, பாவலர் மணி. |
| புகழ்மொழி | : | தமிழகத்தின் வேர்ட்ஸ் வொர்த் |
| படைப்புகள் | : | தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம் முதலியன. |
| விருது | : | பிரெஞ்சு அரசின் செவாலியர் விருது. |

## மனப்பாடப் பாடல்

**ஓடை ஆட உள்ளம் தூண்டுதே! – கல்லில்**
**உருண்டு தவழ்ந்து நெளிந்து பாயும் (ஓடைஆட)**

**பாட இந்த ஓடை எந்தப்**
**பள்ளி சென்று பயின்ற தோடி!**

**ஏடு போதா இதன்கவிக் கார்**
**ஈடு செய்யப் போரா ரோடி! (ஓடைஆட)**

**நன்செய் புன்செய்க்கு உணவை ஊட்டி**
**நாட்டு மக்கள் வறுமை ஓட்டிக்**

**கொஞ்சிக் குலவிக் கரையை வாட்டிக்**
**குளிர்ந்த புல்லுக்கு இன்பம் கூட்டி (ஓடைஆட)**

**நெஞ்சில் ஈரம் இல்லார் நாண**
**நீளுழைப்பைக் கொடையைக் காட்டிச்**

**செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்**
**சீருக்கு ஏற்ப முழவை மீட்டும் (ஓடைஆட)**

– *வாணிதாசன்*

## சொல்லும் பொருளும்

- தூண்டுதல் – ஆர்வம் கொள்ளுதல்
- ஈரம் – இரக்கம்

- முழவு - இசைக்கருவி
- நன்செய் - நிறைந்த நீர்வளத்தோடு பயிர்கள் விளையும் நிலம்
- புன்செய் - குறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம்
- வள்ளைப்பாட்டு - நெல் குத்தும்போது பாடப்படும் பாடல்
- பயிலுதல் - படித்தல்
- நாணம் - வெட்கம்
- செஞ்சொல் - திருந்திய சொல்

## பாடநூல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பள்ளிக்குச் சென்று கல்வி ________ சிறப்பு.

அ) பயிலுதல் ஆ) பார்த்தல்
இ) கேட்டல் ஈ) பாடுதல் **விடை: அ) பயிலுதல்**

2. செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது ________

அ) கடல் ஆ) ஓடை
இ) குளம் ஈ) கிணறு **விடை: ஆ) ஓடை**

3. ‘நன்செய்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) நன் + செய் ஆ) நன்று + செய்
இ) நன்மை + செய் ஈ) நல் + செய் **விடை: இ) நன்மை + செய்**

4. ‘நீளுழைப்பு’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) நீளு + உழைப்பு ஆ) நீண் + உழைப்பு
இ) நீள் + அழைப்பு ஈ) நீள் + உழைப்பு **விடை: ஈ) நீள் + உழைப்பு**

5. ‘சீருக்கு + ஏற்ப’ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) சீருக்குஏற்ப ஆ) சீருக்கேற்ப
இ) சீர்க்கேற்ப ஈ) சீருகேற்ப **விடை: ஆ) சீருக்கேற்ப**

6. ‘ஓடை + ஆட’ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) ஓடைஆட ஆ) ஓடையாட
இ) ஓடையோட ஈ) ஓடைவாட **விடை: ஆ) ஓடையாட**

**குறுவினா.**

1. ஓடை எவ்வாறு ஒலிப்பதாக வாணிதாசன் கூறுகிறார்?

ஓடை கற்களில் உருண்டும், தவழ்ந்தும், நெளிந்தும், சலசல என்று ஒலியெழுப்பியும் அலைகளால் கரையை மோதியும், இடையறாது ஓடுகிறது.


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**2. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் குறிப்பிடுகிறார்?**

ஓடை எழுப்பும் ஒலி, பெண்கள் பாடும் வள்ளைப்பாட்டின் சிறப்புக்கேற்ப முழவை முழக்குவதற்கு உவமையாக வாணிதாசன் கூறுகிறார்.

## சிறு வினா.

**ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?**

- நன்செய், புன்செய் நிலங்களுக்கு நீர்வளம் தந்து பயிர்களைச் செழிக்கச் செய்கிறது.
- விளைந்த பயிர்கள் மூலம் உணவு தந்து நாட்டின் வறுமையைப் போக்குகிறது. கொஞ்சி மகிழும் அலைகளால் கரையை மோதுகிறது. குளிர்ச்சியைத் தரும் புற்களுக்கு இன்பம் சேர்க்கிறது.
- நெஞ்சத்தில் இரக்கம் இல்லாதவர் வெட்கப்படுமாறு இடையறாது ஓடித் தன் உழைப்பைக் கொடையாகத் தருகிறது.

## சிந்தனை வினா

**வள்ளைப்பாட்டு என்பது நெல் குத்தும் பொழுது பாடப்படும் பாடலாகும். இதுபோல் வேறு எந்தெந்தச் சூழல்களில் என்னென்ன பாடல்கள் பாடப்படுகின்றன?**

| | |
|---|---|
| குழந்தையை உறங்க வைக்கப்பாடப்படுவது | தாலாட்டுப் பாடல் |
| **சிறுவர்கள் விளையாடும் போது பாடுவது** | விளையாட்டுப் பாடல் |
| **திருமணத்தின் போது பாடுவது** | திருமணப் பாடல் |
| **களையெடுக்கும் போது பாடுவது** | களையெடுப்புப் பாடல் |
| **கதிர் அறுக்கும் போது பாடுவது** | கதிரறுப்புப் பாடல் |
| **பூத்தொடுப்போர், பூப்பறிப்போர் பாடுவது** | திருப்பூவல்லி |
| **தோழியர் இருவர் விளையாட்டாகப் பாடுவது** | திருச்சாழல் |
| **இறந்தவர்களுக்காகப் பாடுவது** | ஒப்பாரிப் பாடல் |
| **பயணம் செய்யும் போது பாடுவது** | தெம்மாங்குப் பாடல் |
| **எண்ணிக்கையுடன் பாடுவது** | ஏற்றப்பாட்டு |
| **இரவில் வரும் நிலவை ஆண்பாலாகப் பாவித்துப் பெண்கள் பாடும் பாட்டு** | இராவண்டை |
| **ஆண்கள் மட்டும் அடிக்கும் கும்மி பாட்டு** | ஒயிற்கும்மிப் பாடல் |
| **பெண்கள் இணைந்து கும்மி அடித்துப் பாடுவது** | கும்மிப்பாடல் |
| **மீனவர்கள் பாடுவது** | அம்பா பாடல் |
| **கோயில் விழாக்களில் பாடுவது** | வில்லுப்பாடல் |
| **குறவர் பாடுவது** | குறத்திப்பாடல் |

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **மனிதர் வாழ்வு ________யோடு இயைந்தது.**
   அ) செயற்கை ஆ) இயற்கை
   இ) அறிவியல் ஈ) விளையாட்டு **விடை: ஆ) இயற்கை**

2. **நெல் குத்தும்போது பாடப்படும் பாட்டு ________.**
   அ) வள்ளை ஆ) கும்மி
   இ) ஒயில் ஈ) தெம்மாங்கு **விடை: அ) வள்ளை**

3. **நிறைந்த நீர்வளத்தோடு பயிர்கள் விளையும் நிலம் ________.**
   அ) புன்செய் ஆ) நன்செய்
   இ) செம்மண் நிலம் ஈ) பாலைநிலம் **விடை: ஆ) நன்செய்**

4. **குறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம் ________.**
   அ) புன்செய் ஆ) வண்டல் நிலம்
   இ) நன்செய் ஈ) செழிந்த நிலம் **விடை: அ) புன்செய்**

5. **'தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த்' என்று புகழப்படுபவர் ________.**
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
   இ) வாணிதாசன் ஈ) வண்ணதாசன் **விடை: இ) வாணிதாசன்**

6. **அரங்கசாமி என்ற எத்திராசலு என்பது யாருடைய இயற்பெயர் ________.**
   அ) கண்ணதாசன் ஆ) வண்ணதாசன்
   இ) செல்லிதாசன் ஈ) வாணிதாசன் **விடை: அ) வாணிதாசன்**

7. **பாவலர்மணி என்று அழைக்கப்படுபவர் ________.**
   அ) வாணிதாசன் ஆ) சுரதா
   இ) கண்ணதாசன் ஈ) பாரதியார் **விடை: ஈ) வாணிதாசன்**

8. **வாணிதாசனுக்குச் செவாலியர் விருது வழங்கிய அரசு ________.**
   அ) இந்தியா ஆ) சீனா
   இ) பிரெஞ்சு ஈ) தமிழ்நாடு **விடை: இ) பிரெஞ்சு**

9. **தமிழச்சி என்னும் நூலை எழுதியவர் ________.**
   அ) பாரதியார் ஆ) வாணிதாசன்
   இ) பாரதிதாசன் ஈ) கவிமணி **விடை: ஆ) வாணிதாசன்**

10. **தொடுவானம் என்னும் நூலின் ஆசிரியர் ________.**
   அ) கம்பன் ஆ) மீரா
   இ) வைரமுத்து ஈ) வாணிதாசன் **விடை: ஈ) வாணிதாசன்**

## குறுவினா.

1. **வாணிதாசன் அறிந்த மொழிகள் யாவை?**
   வாணிதாசன் அறிந்த மொழிகள் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகும்.

2. **வாணிதாசன் இயற்றிய நூல்கள் யாவை?**
   வாணிதாசன் இயற்றிய நூல்கள் தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம் என்பனவாகும்.

3. **வள்ளைப் பாட்டு என்றால் என்ன?**
   பெண்கள் நெல்குத்தும்போது பாடும் பாட்டு வள்ளைப் பாட்டு ஆகும்.

4. **நன்செய், புன்செய் நிலம் குறித்து எழுதுக.**
   - நன்செய்: நிறைந்த நீர்வளத்தோடு பயிர்கள் விளையும் நிலம்.
   - புன்செய் : குறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம்.

## சிறுவினா.

1. **வாணிதாசன் குறிப்பு எழுதுக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | வாணிதாசன் |
| இயற்பெயர் | : | அரங்கசாமி என்ற எத்திராசலு |
| ஊர் | : | புதுவையை அடுத்த வில்லியனூர் |
| பெற்றோர் | : | அரங்க. திருக்காமு – துளசியம்மாள் |
| சிறப்பு | : | ‘கவிஞரேறு’, ‘பாவலர்மணி’ என்னும் பட்டங்கள் பெற்றுள்ளார். தமிழகத்தின் ‘வேர்ட்ஸ் வொர்த்’ என இவரைத் தமிழுலகம் புகழ்கிறது. உருசியம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் இவர்தம் பாடல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. |
| நூல்கள் | : | தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம் முதலியன. |
| காலம் | : | 22.07.1915 - 07.08.1974 |

## கற்பவை கற்றபின்

**மலை, அருவி, ஓடை, மரங்கள், வயல்கள் ஆகியன இடம்பெறுமாறு ஓர் இயற்கைக் காட்சியை வரைந்து வண்ணம் தீட்டி மகிழ்க.**





Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

கவிதைப் பேழை

இயல் 2

# கோணக்காத்துப் பாட்டு

வெங்கம்பூர் சாமிநாதன்

## நூல் வெளி

- நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில், மக்கள் பட்ட துயரங்களை, அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் கும்மிப் பாடல்களாகப் பாடினர்.
- பேச்சுத்தமிழில் அமைந்த இவை பஞ்சக் கும்மிகள் என்று அழைக்கப்பட்டன.
- புலவர் செ. இராசு தொகுத்த 'பஞ்சக் கும்மிகள்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ள 'வெங்கம்பூர் சாமிநாதன்' இயற்றிய கோணகாத்துப் பாட்டு என்னும் காத்து நொண்டிச் சிந்து என்னும் நூலில் இருந்து சில பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

## சொல்லும் பொருளும்

- முகில் - மேகம்
- கெடிகலங்கி - மிக வருந்தி
- சம்பிரமுடன் - முறையாக
- சேகரம் - கூட்டம்
- காங்கேய நாடு - கொங்கு மண்டலத்தின் 24 நாடுகளுள் ஒன்று
- வின்னம் - சேதம்
- வாகு - சரியாக
- காலன் - எமன்
- மெத்த - மிகவும்

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வானில் கரு ________ தோன்றினால் மழை பொழியும் என்பர்.

அ) முகில் ஆ) துகில்
இ) வெயில் ஈ) கயல் **விடை: அ) முகில்**

2. முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் ________ யும் ஓட்டிவிடும்.

அ) பாலனை ஆ) காலனை
இ) ஆற்றலை ஈ) நலத்தை **விடை: ஆ) காலனை**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. **'விழுந்ததங்கே' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.**

அ) விழுந்த + அங்கே ஆ) விழுந்த + ஆங்கே
இ) விழுந்தது + அங்கே ஈ) விழுந்தது + ஆங்கே

**விடை: இ) விழுந்தது + அங்கே**

4. **'செத்திறந்த' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.**

அ) செ + திறந்த ஆ) செத்து + திறந்த
இ) செ + இறந்த ஈ) செத்து + இறந்த **விடை: ஈ) செத்து + இறந்த**

5. **பருத்தி + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.**

அ) பருத்தி எல்லாம் ஆ) பருத்தியெல்லாம்
இ) பருத்தெல்லாம் ஈ) பருத்திதெல்லாம் **விடை: ஆ) பருத்தியெல்லாம்**

## குறுவினா.

1. **கப்பல் கவிழ்ந்ததற்குக் காரணமாகக் கோணக்காத்துப் பாட்டு கூறுவது யாது?**

எமனைப் போல வந்த பெருமழையும், சூழல் காற்றும் கப்பல் கவிழ்ந்ததன் காரணமாகும்.

2. **புயல்காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?**

தொண்டைமான் நாட்டில் சிறப்பாக வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் சின்னாபின்னமாகப் புயல்காற்றால் ஒடிந்து விழுந்தன.

3. **கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?**

சித்தர்கள் வாழும் மலை கொல்லிமலை. அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் புயல் அடித்தது.

## சிறுவினா.

1. **புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?**

வாங்கல் என்னும் ஊரில் அழகாக வைக்கப்பட்ட தென்னம்பிள்ளைகள் எல்லாம் வீணாயின. தொண்டைமான் நாட்டில் சிறப்பாக வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் சின்னாபின்னமாக ஒடிந்து விழுந்தன.

2. **கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?**

திரண்டு எழுந்த மேகங்களால் உருவான காற்று வேகமாக அடித்ததால் பெரிய வீடுகளின் கூரைகள் எல்லாம் மொத்தமாகப் பிரிந்து சரிந்தன. அழகிய சுவர்களை உடைய மாடி வீடுகள் அடியோடு விழுந்தன.

## சிந்தனை வினா.

**இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?**

- வெள்ளப் பெருக்குக் காலங்களில் ஆற்றோரமோ, நீர்நிலைகள் அருகிலோ வசிப்போர்கள் மேட்டுப் பகுதிக்குச் சென்று தங்குதல் வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- எரிமலை வெடிக்கும் சூழலில், மலைக்கு அருகில் வசிப்போர், பாதுகாப்பான இடத்திற்குச் சென்று தங்குதல் வேண்டும்.
- காட்டுத் தீ ஏற்படும் சூழலில், காட்டிற்கு அருகில் வசிப்போர் நகர்ப்புறத்தில் வந்து தங்குதல் வேண்டும்.
- சுனாமி ஏற்படும் போது கடற்கரையில் வசிப்போர், கடலை விட்டு பல கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் சென்று தங்குதல் வேண்டும்.
- நிலநடுக்கம் ஏற்படும் சூழலில், கட்டடத்தை விட்டு வெளியேறி வெட்ட வெளியில் தங்குதல் வேண்டும்.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இயற்கை ________ கொண்டு பொங்கி எழுந்தால் பெரும் அழிவை ஏற்படுத்திவிடும்.
அ) ஆசை ஆ) அன்பு
இ) சீற்றம் ஈ) நாற்றம் **விடை: இ) சீற்றம்**

2. ________ அடிக்கடி புயலால் பாதிக்கப்படும் பகுதி ஆகும்.
அ) டெல்லி ஆ) பஞ்சாப்
இ) அஸ்ஸாம் ஈ) தமிழ்நாடு **விடை: ஈ) தமிழ்நாடு**

3. திரண்டு எழுந்த ________ ஆல் உருவான காற்று வேகமாக அடித்தது.
அ) மேகங்கள் ஆ) காற்றுகள்
இ) கூட்டங்கள் ஈ) ஓசைகள் **விடை: அ) மேகங்கள்**

4. ________ என்னும் ஊரில் அழகாக வைக்கப்பட்ட தென்னம்பிள்ளைகள் எல்லாம் வீணாயின.
அ) தொண்டை நாட்டில் ஆ) ஆர்க்காடு
இ) மைசூர் ஈ) வாங்கல் **விடை: ஈ) வாங்கல்**

5. பருத்திச் செடிகள் எல்லாம் சிதைவு அடைந்த நாடு ________.
அ) தொண்டைமான் நாடு ஆ) ஆர்க்காடு
இ) காங்கேய நாடு ஈ) தெத்துக்காடு **விடை: இ) காங்கேய நாடு**

6. கோணக்காத்துப் பாட்டு பாடலில் கவிஞர் வேண்டும் தெய்வம் ________.
அ) சிவன் ஆ) திருமால்
இ) முருகன் ஈ) பெருமாள் **விடை: இ) முருகன்**

7. நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில், மக்கள் பட்ட துயரங்களை, அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் ________ பாடல்களாகப் பாடினர்.
அ) ஒப்பாரி ஆ) கும்மி
இ) வள்ளை ஈ) சடங்கு **விடை: ஆ) கும்மி**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

8. புலவர் __________ தொகுத்தது பஞ்சக் கும்மிகள் என்னும் நூல்.

அ) மீரா ஆ) வீரா

இ) முரசு ஈ) செ. இராசு **விடை: ஈ) செ. இராசு**

9. __________ இயற்றிய காத்து நொண்டிச் சிந்திலிருந்து சில பாடல்கள் பாடமாக அமைந்துள்ளது.

அ) அரங்கநாதன் ஆ) வெங்கம்பூர் சாமிநாதன்

இ) கோதை நாயகி ஈ) சி.சு. செல்லப்பா

**விடை: ஆ) வெங்கம்பூர் சாமிநாதன்**

10. 'மார்க்கம் + ஆன' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________.

அ) மார்க்கம் ஆன ஆ) மார்க்கமென

இ) மார்க்கமான ஈ) மார்க்கம்மேன **விடை: இ) மார்க்கமான**

10. 'வேகம் + உடன்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________.

அ) வேகவுடன் ஆ) வேகம்உடன்

இ) வேகம்வுடன் ஈ) வேகமுடன் **விடை: ஈ) வேகமுடன்**

## குறுவினா.

1. **இயற்கை எவ்வாறு அழிவை ஏற்படுத்தும்?**

இயற்கைச் சீற்றம் கொண்டு பொங்கி எழுந்தால் பெரும் அழிவை ஏற்படுத்திவிடும்.

2. **புயலால் அடிக்கடி தாக்கப்படும் பகுதி எது?**

தமிழ்நாடு புயலால் அடிக்கடி தாக்கப்படும் பகுதியாகும்.

3. **வீடுகளின் கூரைகள் ஏன் சரிந்தன?**

திரண்டு எழுந்த மேகங்களால் உருவான காற்று வேகமாக அடித்ததால் பெரிய வீடுகளின் கூரைகள் எல்லாம் மொத்தமாகப் பிரிந்து சரிந்தன.

4. **எந்த ஊரில் தென்னை மரங்கள் வீணாயின?**

வாங்கல் என்னும் ஊரில் அழகாக வைக்கப்பட்ட தென்னம்பிள்ளைகள் எல்லாம் வீணாயின.

5. **எந்த நாட்டில் பருத்திச் செடிகள் சிதைந்தன?**

அழிவில்லாத காங்கேய நாட்டின் மேட்டுப் பகுதிகளில் வளர்ந்திருந்த பருத்திச் செடிகள் எல்லாம் சிதைவு அடைந்து வெறும் குச்சிகளாக மாறின.

6. **மாடி வீடுகள் எப்படி விழுந்தன?**

அழகிய சுவர்களை உடைய மாடி வீடுகள் அடியோடு விழுந்தன.

7. **யாரெல்லாம் எப்படி அலறியபடி ஓடினர்?**

ஆடவர்கள் மனைவி பிள்ளைகளுடன் 'கூ கூ' என்று அலறியபடி ஓடினர்.

இயல் 2 தமிழ்

www.Padasalai.Net www.CBSEtips.in


8. **எப்பகுதிகளில் சென்ற மக்கள் தடுமாறித் தவித்தனர்?**

ஆர்க்காடு முதல் மைசூர் வரை வீசிய புயலால் சாலைகளில் சென்ற மக்கள் தடுமாறித் தவித்தனர்.

9. **எந்தெந்த பகுதிகளில் ஆடுமாடுகள் இறந்தன?**

தெத்துக்காடு, காளப்பநாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில் ஏராளமான ஆடுமாடுகள் இறந்தன.

10. **கவிஞர் தெய்வத்திடம் எவ்வாறு வேண்டினார்?**

முருகப் பெருமானே! இத்தகைய அழிவுகளை நாங்கள் எவ்வாறு தாங்குவோம்? எங்களுக்கு வருகின்ற இடர்களை எல்லாம் தடுத்து எங்களைக் காப்பாயாக! என்று வேண்டினார்.

11. **பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் புலவர்கள் எத்தகையப் பாடல்களைப் பாடினர்?**

- நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில், மக்கள் பட்ட துயரங்களை, அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் கும்மிப்பாடல்களாகப் பாடினர்.
- பேச்சுத் தமிழில் அமைந்த இவை பஞ்சக் கும்மிகள் என்று அழைக்கப்பட்டன.

## சிறு வினா.

1. **புயலால், உயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?**

- வாங்கல் என்னும் ஊரில் அழகாக வைக்கப்பட்ட தென்னம்பிள்ளைகள் எல்லாம் வீணாயின.
- அழிவில்லாத காங்கேய நாட்டின் மேட்டுப் பகுதிகளில் வளர்ந்திருந்த பருத்திச் செடிகள் எல்லாம் சிதைவு அடைந்து வெறும் குச்சிகளாக மாறின.
- ஆடவர்கள் மனைவி, பிள்ளைகளுடன் 'கூ கூ' என்று அலறியபடி ஓடினர்.
- தொண்டைமான் நாட்டில் சிறப்பாக வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் சின்னாபின்னமாக ஒடிந்து விழுந்தன.
- ஆர்க்காடு முதல் மைசூர் வரை வீசிய புயலால் சாலைகளில் சென்ற மக்கள் தடுமாறித் தவித்தனர்.
- தெத்துக்காடு, காளப்பநாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில் ஏராளமான ஆடுமாடுகள் இறந்தன.
- சித்தர்கள் வாழும் கொல்லி மலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் புயல் அடித்தது.

## கற்பவை கற்றபின்

1. **மக்களைப் பாதிக்கும் இயற்கைச் சீற்றங்களைப் பற்றி எழுதுக.**

**நில நடுக்கங்கள் :**

நில நடுக்கங்கள் ஏற்படும் பொழுது மக்களையோ அல்லது விலங்குகளையோ அது பாதிப்பதில்லை. நில நடுக்கத்தின் காரணமாக, இரண்டாம் பட்ச நிகழ்வுகளான

இயல் 2 தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

கட்டிடங்கள் பாழடைந்து சரிதல், சுனாமி உருவாகுதல், எரிமலை வெடித்தல் போன்ற நிகழ்வுகளின் பின்னணியில் மக்களுக்குப் பேரழிவுகளுடன் பேரிழப்பும் ஏற்படுகிறது.

**எரிமலை வெடித்துச் சிதறுதல் :**

ஒரு எரிமலை, வெடித்துப் பேரழிவாக சிதறும் போது 'லார்வா' தீக்குழம்பு வெளிப்படும். அதில் மிகையான வெப்பத்துடன் கூடிய உள்ளிருக்கும் பாறைகள் இருக்கும். அதனுள் பல்வேறு வேறுபட்ட வடிவங்கள் மென்மைத் துகளாகவும், பிசு பிசுப்பாகவும் இருக்கும். இது எரிமலையில் இருந்து சிதறும் போது எதிரில் காணும் கட்டடங்கள் மற்றும் தாவரங்கள் எல்லாவற்றையும் பொசுக்கி அழித்துவிடும்.

**வெள்ளப் பெருக்கு :**

நீரோட்டத்தின் வலிமையானது மிகவும் அதிகரிக்கின்ற போது ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படும். அது ஆற்றின் பாதையைத் தாண்டி பெருக்கெடுத்து ஓடி கரையோரம் ஒட்டி அமைந்துள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்குச் சேதம் உண்டாக்குகிறது.

**சுனாமி :**

சுனாமி என்பது கடல் அல்லது பெரிய ஏரி போன்ற பெரிய நீர்ப்பரப்புகளில் மிகுதியாகப் பெருமளவு நீர் இடம் பெயர்க்கப்படும் போது ஏற்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அலைத் தொடர்களைக் குறிக்கும். நிலநடுக்கம், மண்சரிவுகள், எரிமலை வெடிப்பு, விண்பொருட்களின் மோதுகை போன்றவை சுனாமி அலைகளை ஏற்படுத்தக் கூடிய மூல காரணிகளாகும். இவற்றால் ஏற்படும் பாதிப்புகள் அதிகமாகும்.

**சூறாவளி, புயல் :**

இந்தியா, ஆஸ்திரேலியா, தென்கிழக்கு ஆசியப்பகுதிகளில் அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றன. சூறாவளியின் போது உருவாகும் மழை மேகங்கள் குறுகிய காலகட்டத்தில் அதிக அளவு மழையையும் பலத்த காற்றையும் கொண்டு வரும். இதனால் பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் அதிகமாக ஏற்படும்.

**காட்டுத் தீ :**

காட்டுத் தீ என்பது, எரியக் கூடிய தாவரங்களைக் கொண்ட காட்டுப் பகுதிகளில் அல்லது நாட்டுப்புறப் பகுதிகளில் கட்டுக்கு அடங்காமல் எரியும் தீயைக் குறிக்கும். இதன் பெரிய அளவு தொடங்கிய இடத்திலிருந்து பரவிச் செல்லும் வேகம் எதிர்பாராமல் திசை மாறக்கூடிய தன்மை; சாலைகள், ஆறுகள் போன்ற இடைவெளிகளைக் கடந்து செல்லும் திறன் என்பவை காட்டுத்தீயைப் பிற தீ வகைகளில் இருந்து வேறுபடுத்துகின்றன. இதனால் பல உயிர்கள் எரிந்து சாம்பலாகின்றன. கடந்த ஆண்டு குரங்கனி காட்டுத்தீ பாதிப்பு நாம் அறிந்ததே.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. இயற்கைச் சீற்றங்கள் பற்றிய புகைப்படங்களை நாளேடுகளிலிருந்து திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.



உரைநடை உலகம்

இயல் 2

# நிலம் பொது

பக்தவத்சல பாரதி

*பாரதியார்*

| | | |
|---|---|---|
| பிறப்பு | : | 07.06.1957 |
| ஊர் | : | புதுச்சேரி |
| பணி | : | மானுடவியல் பேராசிரியர் |
| படைப்புகள் | : | மானுடவியல் கோட்பாடுகள் தமிழர் மானுடவியல், தமிழகப் பழங்குடிகள். |

## பாடநூல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ________ மதிக்கின்றனர்.

அ) தாயாக ஆ) தந்தையாக

இ) தெய்வமாக ஈ) தூய்மையாக **விடை: அ) தாயாக**

2. 'இன்னோசை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) இன் + ஓசை ஆ) இனி + ஓசை

இ) இனிமை + ஓசை ஈ) இன் + னோசை **விடை: இ) இனிமை+ஓசை**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. **'பால் + ஊறும்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.**

அ) பால்ஊறும் ஆ) பாலூறும்

இ) பால்லூறும் ஈ) பாஊறும் **விடை: ஆ) பாலூறும்**

**தொடரில் அமைத்து எழுதுக.**

1. **வேடிக்கை :**

தெனாலிராமன் கதைகள் **வேடிக்கை**யாக இருக்கும்.

2. **உடன்பிறந்தார் :**

வள்ளலார், அனைத்து உயிரினங்களையும் தன் **உடன்பிறந்தார்** போல் எண்ணினார்.

## குறுவினா.

1. **விலைகொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?**
   - இந்தப் பூமிக்கு அணுக்கமாக உள்ள வானம், காற்றின் தூய்மை, நீரின் உயர்வு யாருக்கும் சொந்தமானவை அல்ல.
   - அப்படி இருக்கையில், அவற்றை எவ்வாறு விலைகொடுத்து வாங்க முடியும் என்று சியாட்டல் கூறுகின்றார்.

2. **நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?**
   - இந்தப் பூமியின் ஒவ்வொரு துகளும் செவ்விந்தியர்களுக்குப் புனிதமாகும்.
   - இந்தப் பூமியை எப்பொழுதும் செவ்விந்தியர்கள் மறப்பதேயில்லை. ஏனெனில் பூமியே அவர்களுக்குத் தாயாகும்.
   - அவர்கள் அந்த மண்ணுக்கு உரியவர்கள்; அந்த மண்ணும் அவர்களுக்குரியதாகும்.

3. **எதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்?**
   - செவ்விந்தியர்கள் வாழும் பகுதியில் உள்ள எருமைகள் கொல்லப்படுவதையும்,
   - எங்குப் பார்த்தாலும் மக்கள் நடமாட்டம் அதிகரிப்பதையும்,
   - தொன்மையான மலைகளை மறைத்துத் தொலைபேசிக் கம்பிகள் பெருகி வருவதையும்

   தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்.

## சிறுவினா.

1. **நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.**
   - ஏரிகளில் பிரதிபலிக்கும் நினைவு எச்சங்கள், எம்மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை நினைவு கூர்பவை.
   - இந்த நீரின் முணுமுணுப்புகள் எம்பாட்டன்மார்களின் குரல்களேயாகும்.
   - இந்த ஆறுகள் யாவும் எம் உடன் பிறந்தவர்கள். இவர்கள் தாம் எமது தாகத்தைத் தீர்க்கிறார்கள்.

2 இயல் தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- எம்மக்களின் தோணிகளையும் இவர்களே சுமந்து செல்கின்றனர் குழந்தைகளுக்கு உணவளிக்கின்றனர்.
- இங்குள்ள ஓடைகளிலும் ஆறுகளிலும் ஓடும் வனப்புமிகு நீரானது வெறும் தண்ணீரன்று; எமது மூதாதையரின் குருதியாகும் என நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளார்.

**2. எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?**

- இங்குள்ள நறுமணம் மிகுந்த மலர்கள் யாவும் எமது சகோதரிகள்.
- மான்கள், குதிரைகள், கழுகுகள் போன்ற அனைத்தும் எமது சகோதரர்கள்.
- மலை முகடுகள், பசும்புல்வெளிகளின் பனித்துளிகள், மட்டக் குதிரைகளின் உடல்சூட்டின் இதமான கதகதப்பு போன்றவையும்
- இங்குள்ள மனிதர்கள் எல்லாமும் ஒரே குடும்பம் என்று சியாட்டல் கூறுகிறார்.

## நெடுவினா.

**1. தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

- இந்தப் பூமியின் ஒவ்வொரு துகளும் எம் மக்களுக்குப் புனிதமானதாகும். எமது மக்கள், இந்தப் பூமியை எப்போதும் மறப்பதேயில்லை. ஏனெனில் இதுவே எமக்குத் தாயாகும்.
- நாங்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள் இந்த மண்ணும் எமக்குரியதாகும். இந்நிலமானது எங்களுக்கு மிகவும் புனிதமானது என்பதால் இந்நிலத்தை விற்க சம்மதிப்பது என்பது மிகவும் இயலாத ஒன்றாகும்.
- நாங்கள் பூமியைத் தாயாகவும், வானத்தைத் தந்தையாகவும் கருதக்கூடியவர்கள். எங்கள் கால்களைத் தாங்கி நிற்கும் இந்த நிலமானது எம்முடைய பாட்டன்மார்கள் எரிந்த சாம்பலால் ஆனதாகும்.
- நீங்கள் இதனை உங்கள் குழந்தைகளுக்குக் கண்டிப்பாகச் சொல்லித்தர வேண்டும். அப்போதுதான் அவர்கள் இந்நிலத்தை மதிப்பார்கள்.
- இந்நிலமே எங்கள் தாயாகும்; எமது உறவுமுறையாரின் வளமான வாழ்வால் ஆனதே இந்நிலமாகும். இதனை நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது போல் உங்கள் குழந்தைகளுக்கும் நீங்கள் சொல்லிக் கொடுங்கள்.
- இப்பூமியின் மீது வந்து விழுந்தாலும் அவையெல்லாம் பூமித்தாயின் மீது வந்து விழுவனவே யாகும். மேலும், இப்பூமியின் மீது மக்கள் துப்பக் கூடுமானால் அது அவர்கள் தம் தாய் மீது துப்புவதற்கு ஒப்பானதாகும்.
- இந்நிலமானது கடவுளும் மதிக்கக்கூடிய ஒன்றாகும். ஆகவே, இதற்குக் கெடுதல் செய்வதென்பது அதனைப் படைத்த இறைவனை அவமதிக்கும் செயலாகிவிடும்.
- நீங்கள் மற்றப் பழங்குடியினரைக் காட்டிலும் முன்கூட்டியே இந்நிலத்தை விட்டுச் செல்லக்கூடும்.


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net
www.CBSEtips.in

- நீங்கள் படுத்துறங்கிய இடத்தை நீங்களே அசுத்தப்படுத்தினால் ஒருநாள் இரவு நீங்கள் உங்கள் குப்பைகளுக்குள்ளேயே மூச்சு முட்டி இறந்து போகக்கூடும்.
- நாங்கள் எங்கள் நிலத்தை விற்பதாக இருந்தால் எங்கள் நிலத்தை நாங்கள் நேசிப்பது போலவே நீங்களும் நேசியுங்கள்.
- நாங்கள் எப்படிக் காப்பாற்றி வைத்திருந்தோமோ அப்படியே காப்பாற்றுங்கள். முழுமையான விருப்பத்தோடு உங்கள் குழந்தைகளுக்காக இந்நிலத்தைப் போற்றிக் காப்பாற்றுங்கள்.
- நிலத்தை நேசியுங்கள். இயற்கை நம் எல்லோரையும் நேசிப்பது போல என்று சியாட்டல் கூறுகின்றார்.

### சிந்தனை வினா.

**நில வளத்தினைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல்களாக நீங்கள் கருதுவன யாவை?**

- துணிகள், நெகிழி, மரத்துண்டுகள், கண்ணாடி, பேப்பர், போன்ற வீடு மற்றும் நகர்ப்புறக் கழிவுகள் நேரடியாக நிலத்தில் கொட்டப்படுகின்றன. இவற்றில் சில மக்கும் தன்மை உடையவை; பல மக்காத தன்மை உடையவை.
- மட்காதப் பொருட்கள் குழிதோண்டி நிலத்தில் புதைக்கப்படுகின்றன. இந்நிகழ்வு நிலச் சீர்க்கேட்டினை ஏற்படுத்துகிறது. இதனைத் தடுத்து நிறுத்தல்.
- நாளும் பெருகி வரும் தொழிற்சாலைகளால் அவற்றிலிருந்து வெளியேற்றப்படும் வேதியியல் கழிவுகள், உலோகக் கழிவுகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் போன்றவை எளிதில் மக்காதவை. இவை நில மாசுபாட்டை ஏற்படுத்துகிறது. அதனால் அவைகளை நிலத்தில் கலக்காதவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- கழிவுநீரினைச் சுத்திகரிக்கும்போது திடக்கழிவுகள் அதிகளவு ஏற்படுகின்றன. இவை நிலத்தில் புதைக்கப்படுகின்றன. அல்லது எரிக்கப்படுகின்றன. புதைக்கப்படும்போது அவை நிலமாசுபாட்டினை ஏற்படுத்துகின்றன. அவைகளை முறையாகச் செயல்படுத்தினால் நிலவளத்தைக் காப்பாற்றலாம்.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **அமெரிக்காவில் 'பூஜேசவுண்ட்' என்னுமிடத்தைச் சுற்றி வாழ்ந்தவர்கள் ________ பழங்குடியினர்.**

அ) மக்காய்ஸ் ஆ) சுகுவாமிய்
இ) மங்கோலிய ஈ) செனட்டில் **விடை: ஆ) சுகுவாமிய்**

2. **சுகுவாமிய் பழங்குடியினரின் தலைவராக விளங்கியவர் ________.**

அ) சிடாட்டல் ஆ) சியாட்டஸ்
இ) சியாட்டல் ஈ) செங்கிஸ்கான் **விடை: இ) சியாட்டல்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. ________ பெருந்தலைவர் செவ்விந்தியர்களின் நிலங்களை வாங்க விருப்பம் தெரிவித்து இருந்தார்.

அ) நியூயார்க்கின் ஆ) சிகாகோவின்
இ) வாஷிங்டனின் ஈ) சிட்னியின் **விடை: இ) வாஷிங்டனின்**

4. ________களில் பிரதிபலிக்கும் நினைவு எச்சங்கள்.

அ) ஆறு ஆ) ஏரி
இ) குளம் ஈ) ஊற்று **விடை: ஆ) ஏரி**

5. நீங்கள் ________ நிலத்திலிருந்து தேவையானவற்றை எடுத்துச் செல்லவே இங்கு வருகின்றீர்கள்.

அ) நண்பர்கள் ஆ) உறவினர்கள்
இ) அயலவர்கள் ஈ) பொறுப்பாளர் **விடை: இ) அயலவர்கள்**

6. உங்களுடைய கோரப்பசியானது இப்பூமியைக் கொன்றழித்துப் பாழாக்கி அதனைப் ________ ஆக்கிவிடும்.

அ) சோலைவனம் ஆ) பாலைவனம்
இ) நந்தவனம் ஈ) பூங்காவனம் **விடை: ஆ) பாலைவனம்**

7. இக்கட்டுரை ________ எழுதிய தமிழகப் பழங்குடிகள் எனும் நூலில் இருந்து எடுத்துத்தரப்பட்டுள்ளது.

அ) தாராபாரதி ஆ) சுப்பிரமணிய பாரதி
இ) பக்தவச்சல பாரதி ஈ) கவிப்பாரதி **விடை : இ) பக்தவத்சல பாரதி**

8. 'ஊசியிலை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) ஊ + இலை ஆ) ஊசி + யிலை
இ) ஊசி + இலை ஈ) ஊசி + சிலை **விடை: இ) ஊசி + இலை**

9. 'மறப்பதேயில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) மறப்பதே + யில்லை ஆ) மறப்பதே + இல்லை
இ) மறப்பது + இல்லை ஈ) மறப்பது + யில்லை
**விடை: ஆ) மறப்பதே + இல்லை**

10. 'உணவளிக்கின்றனர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) உணவு + அளிக்கின்றனர் ஆ) உண + வளிக்கின்றனர்
இ) உணவளி + கின்றனர் ஈ) உணவு + யளிக்கின்றனர்
**விடை: அ) உணவு + அளிக்கின்றனர்**

11. 'நீரானது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) நீ + ரானது ஆ) நீர் + அனது
இ) நீர் + ஆனது ஈ) நீரா + னது **விடை: இ) நீர் + ஆனது**

12. 'நிலத்திலிருந்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) நில + இருந்து ஆ) நிலத்தில் + இருந்து

இ) நிலத்தில் + யிருந்து ஈ) நிலத்தி + லிருந்து

**விடை: ஆ) நிலத்தில் + இருந்து**

13. 'உங்கள் + உடைய' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) உங்களுடைய ஆ) உங்களுடைய

இ) உன்னுடைய ஈ) தங்களுடைய **விடை: அ) உங்களுடைய**

14. 'பாழ் + ஆக்கி' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) பாலாக்கி ஆ) பாழ்ஆக்கி

இ) பாழாக்கி இ) பாழ்ஊக்கி **விடை: இ) பாழாக்கி**

15. 'முறையில் + இருந்து' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) முறையிருந்து ஆ) முறையிலிருந்து

இ) முறையாய்இருந்து ஈ) முறையில்இருந்து

**விடை: ஆ) முறையிலிருந்து**

16. 'காட்சிகள் + எல்லாம்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) காட்சிகள் எல்லாம் ஆ) காட்சிகளெல்லாம்

இ) காட்சியெலாம் ஈ) காட்சியெல்லாம்

**விடை: ஆ) காட்சிகளெல்லாம்**

17. 'ஒன்று + ஆகும்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) ஒன்றுஆகும் ஆ) ஒன்றேயாகும்

இ) ஒன்றாகும் ஈ) ஒவ்வொன்றாகும் **விடை: இ) ஒன்றாகும்**

## குறுவினா.

1. **'சுகுவாமியப்' பழங்குடியினர் எங்கு வாழ்ந்தனர்?**

அமெரிக்காவில் 'பூஜேசவுண்ட்' என்னுமிடத்தைச் சுற்றி வாழ்ந்தவர்கள் 'சுகுவாமிய்' பழங்குடியினர்.

2. **சுகுவாமிய் பழங்குடியினரின் தலைவர் யார்?**

சுகுவாமிய் பழங்குடியினரின் தலைவர் சியாட்டல் ஆவார்.

3. **சியாட்டல் யாருக்கு, எதற்காகக் கடிதம் எழுதினார்?**

சுகுவாமிய் பழங்குடியினர் வாழும் பகுதியிலுள்ள இயற்கை வளங்கள் சிதையாமல் காக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி சியாட்டல், அமெரிக்கக் குடியரசுத் தலைவருக்குக் கடிதம் ஒன்று எழுதினார்.

இயல் 2 தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

4. **நிலத்தை எவ்வாறு நேசிக்க வேண்டும் என்று சியாட்டல் அமெரிக்கர்களுக்குக் கூறுகிறார்?**

நாங்கள் எங்கள் நிலத்தை விற்பதாக இருந்தால், எங்கள் நிலத்தை நாங்கள் நேசிப்பது போலவே நீங்களும் நேசியுங்கள். நிலத்தை நேசியுங்கள்; இயற்கை நம் எல்லோரையும் நேசிப்பது போல என்று கூறுகிறார்.

## சிறுவினா.

1. **அமெரிக்கர்களின் வாழ்வையும், செவ்விந்தியர்களின் வாழ்வையும் ஒப்பிட்டுச் சியாட்டல் கூறுவது யாவை?**

- உங்கள் நகரங்களில் அமைதியான இடம் எதுவுமில்லை. நீங்கள் வாழும் எந்த ஓர் இடத்திலும் அசைந்தாடும் இலைகளின் ஓசைகளையோ பூச்சி இனங்களின் ரீங்காரங்களையோ கேட்க முடிவதில்லை. மாறாக, சடசடவொலிகள் காதைப் பிளக்கின்றன.
- மகிழ்வூட்டும் இராக்கூவற் பறவைகளின் ஒலிகளையோ, குளத்தைச் சுற்றிக் கேட்கும் தவளையின் கூச்சல்களையோ கேட்காத வாழ்வென்ன வாழ்வு?
- நான் ஒரு செவ்விந்தியன் என்பதால் இதனை எவ்வாறு புரிந்து கொள்வதெனத் தெரியவில்லை.
- எம் மக்கள் யாவரும் அமைதியான குளத்தின் முகத்தை முகந்து வரும் தென்றலின் இன்னோசையையும், நடுப்பகலில் பெய்யும் மழையால் எழும் மண்வாசனையையும், தேவதாரு மரத்திலிருந்து பறக்கும் இலைகளின் மணத்தையும் நுகர்வதை விரும்புபவர்கள்.
- நாங்கள் காற்றை மிகவும் மதித்துப் போற்றுபவர்கள். நீங்கள் சுவாசிக்கும் காற்றைப் பற்றிச் சிந்தித்ததில்லை என்று சியாட்டல் ஒப்பிட்டுக் கூறுகிறார்.

2. **காற்று குறித்து சியாட்டல் கூறுவன யாவை?**

- நாங்கள் காற்றை மிகவும் மதித்துப் போற்றுபவர்கள். விலங்குகள், மரங்கள், மனிதர்கள் உள்ளிட்ட யாவற்றுக்கும் சுவாசித்தல் பொதுவானது.
- பொதுவான ஒரு காற்றையே இவையாவும் சுவாசிக்கின்றன. நீங்கள் சுவாசிக்கும் காற்றைப் பற்றிச் சிந்தித்ததில்லை. இந்தக் காற்றானது அனைத்துப் புது உயிர்களையும் காக்கிறது.
- இவ்வுணர்வுகளைச் சுமந்து நிற்கும் காற்றின் இன்றியமையாமையை, நாங்கள் நிலத்தை விற்றுவிட நேர்ந்த பின்னரும் நீங்கள் மறக்கவே கூடாது என்கிறார்.

## கற்பவை கற்றபின்

1. **நில வளத்தைப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய இன்றியமையாப் பணிகளைத் தொகுத்து எழுதுக.**

பார்க்க: சிந்தனை வினாவுக்கான விடை – பக்கம் எண்: 46



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**2. தமிழ்நாட்டின் இயற்கை வளங்கள் குறித்த படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.**



விரிவானம்

இயல் 2

# வெட்டுக்கிளியும் சருகுமானும்

*தொகுப்பு : மனிஷ் சாண்டி, மாதுரி ரமேஷ்.*
*தமிழாக்கம் : வ.கீதா*

- மனிஷ் சாண்டி, மாதுரி ரமேஷ் ஆகியோர் காடர்களின் கதைகள் சிலவற்றைத் தொகுத்துள்ளனர்.
- அவற்றை யானையோடு பேசுதல் என்னும் தலைப்பில் வ.கீதா தமிழாக்கம் செய்துள்ளார்.

## பாடநூல் வினாக்கள்

**'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை:**

காடர்கள், பழங்குடியின மக்கள், காடுகள், செடிகொடிகள், விலங்குகள் தொடர்பான கதைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கும் பேரன் பேத்திகளுக்கும் சொல்லி வந்தனர். அத்தகைய கதைகளுள் ஒன்று தான் 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' ஆகும்.

**வெட்டுக்கிளியும் சருகுமானும் :**

குறிஞ்சிப் புதரின் தாழப் படர்ந்திருந்த கிளையில் பச்சை வெட்டுக்கிளி ஒன்று வசித்து வந்தது. அது ஒரு வாயாடி.

ஒரு மாலை நேரம் கூரன் என்ற பெண் சருகுமானை வெட்டுக்கிளி பார்த்தது. 'என்ன கூரன், பார்த்து வெகுநாள் ஆயிற்று! இவ்வளவு நாட்கள் எங்கே போயிருந்தாய்? ஏன் இங்கும் அங்குமாய் வேகமாக ஓடுகிறாய்?' அதற்கு சருகுமான், 'காட்டின் அந்தக் கோடியில் இருந்தேன். இப்பொழுது உன்னிடம் பேச எனக்கு நேரமில்லை. பித்தக்கண்ணு என்னைத் துரத்திக்கொண்டு வருகிறது.'

விழுந்து கிடந்த மரத்தைப் பார்த்ததும் அதன் அடியில் கூரன் ஒளிந்து கொண்டது. தலையை மட்டும் தூக்கி வெட்டுக்கிளியை எச்சரித்தது. பித்தக்கண்ணு உன்னிடம் என்னைப் பற்றிக் கேட்டால் வாயைத் திறந்து எதையும் சொல்லிவிடாதே என்றது.

**வெட்டுக்கிளியும் பித்தக்கண்ணும் :**

கூரனைத் தேடிக் கொண்டு பித்தக்கண்ணும் ஓடைப் பக்கம் வந்தது. வெட்டுக்கிளி அதன் கண்ணில் பட்டதும் அதைப் பார்த்து உறுமியது. 'கூரன் இங்கு வந்தாளா?' என்றது. வெட்டுக்கிளிக்கு உற்சாகம் தலைக்கு ஏறியது. பித்தக்கண்ணுவை இவ்வளவு பக்கத்தில் பார்ப்பது இதுதான் முதல்முறை. பித்தக்கண்ணுவைப் பார்த்ததால் ஏற்பட்ட பரவசத்தை அடக்க இயலாமல் தன்னை அறியாமல் கூரன் ஒளிந்திருந்த இடத்தருகே குதித்துக் குதித்துச் சென்றது.

அதைக்கண்ட பித்தக்கண்ணு, கூரன் பதுங்கி இருந்த மரத்தடிப்பக்கம் சென்று மோப்பமிட்டது. அங்கு புனுகுப் பூனையின் துர்நாற்றமே எட்டியது. அதனால் உறுமிக் கொண்டே அந்த இடத்தை விட்டுக் கிளம்பி வேறு பக்கம் சென்றது.

**உயிர்பிழைத்த கூரன் :**

கூரன் வெளியே வந்தது. தன் மறைவிடத்தை ஏறக்குறையக் காட்டிக் கொடுத்ததற்காக வெட்டுக்கிளி மீது அதற்குக் கோபமான கோபம். அதற்கு ஒரு பாடம் கற்பித்தாக வேண்டும் என்று எண்ணியது. 'இனி இப்படிச் செய்தால், திரும்பி வந்து உன்னை என் கால்களால் மிதித்து நசுக்கிவிடுவேன்' என்று கூறிக் காட்டுக்குள் ஓடியது.

**முடிவுரை :**

அன்றிலிருந்து கூரனின் கூர்ப்பாதங்கள் எங்கே தன்மீது பட்டுவிடுமோ என்ற அச்சத்திலேயே வெட்டுக்கிளி வாழ்ந்து வருகிறது. இதனால் தான் இன்றும்கூட வெட்டுக் கிளிகள் ஓர் இடத்தில் நிலைத்து இருக்க முடியாமல் குதித்த வண்ணமுள்ளன.

## கற்பவை கற்றபின்

**'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையை நாடகமாக நடித்துக் காட்டுக.**

**காட்சி : 1**

**கதைமாந்தர்கள்: வெட்டுக்கிளி, சருகுமான் என்னும் கூரன், சிறுத்தை (பித்தக்கண்ணு).**
**மலையின் காட்சி, அருவி விழும் ஓசை, நீரோடையின் சலசல சத்தம்.**

**வெட்டுக்கிளி** : என்ன கூரன் பார்த்து வெகுநாள் ஆயிற்று! இவ்வளவு நாட்கள் எங்கே போயிருந்தாய்? ஏன் இங்கும் அங்குமாக பதற்றத்துடன் வேகமாக ஓடுகிறாய்?

இயல் 2 தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| **கூரன்** (பெண் சருகுமான்) | : | காட்டின் அந்தக் கோடியில் இருந்தேன். இப்போதைக்கு உன்னிடம் பேச எனக்கு நேரமில்லை. பித்தக்கண்ணு சிறுத்தை என்னைத் துரத்திக் கொண்டு வருகிறது. நான் எங்காவது ஒளிய வேண்டும். பல மணி நேரமாக ஓடிட்டே இருக்கேன். சோர்வாக இருக்கிறது. |
| **வெட்டுக்கிளி** | : | ம்,ம்,ம்.... மஞ்சள் கண்ணுடைய சிறுத்தை தானே... ம்ம்ம்ம்.. |
| **கூரன்** | : | இதோ விழுந்து கிடக்கும் மரத்தின் அடியில் ஒளியலாம். |
| **வெட்டுக்கிளி** | : | சரியான முடிவு தான்... |
| **கூரன்** | : | வெட்டுக்கிளியே! நீ வளவளவென்று பேசிக்கொண்டிருக்காதே! நான் ஒளிந்து கொள்கிறேன். பித்தக்கண்ணு சிறுத்தை உன்னிடம் என்னைப் பற்றிக் கேட்டால் வாயைத் திறந்து எதையும் சொல்லி விடாதே! அது என்னைப் பார்த்துவிட்டால் பிடித்து ஒரே வாயில் விழுங்கி விடும். |
| **வெட்டுக்கிளி** | : | சரி! சரி! ஒளிந்து கொள். |
| **பித்தக்கண்ணு சிறுத்தை** | : | (உறுமியவாறே.... அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு நிற்றல் வெட்டுக்கிளியைப் பார்த்தல்)<br>கூரன் இங்கு வந்தாளா? அவள் எங்குச் சென்றாள் என்று தெரியுமா?<br>(வெட்டுக்கிளி மகிழ்ச்சியுடன் குதித்தல். கூரன் இருக்கும் மரத்தடிப் பக்கம் செல்லுதல்)<br>(சிறுத்தை முகர்தல்... பூனையின் துர்நாற்றம் மட்டும் அடித்தல். அந்த இடத்தை விட்டு அகலுதல்) |

**காட்சி 2:**

**கதைமாந்தர்கள்: வெட்டுக்கிளி, சருகுமான் என்னும் கூரன்.**

| | | |
|---|---|---|
| **சருகுமான்** | : | முட்டாள் வெட்டுக்கிளியே! பித்தக்கண்ணு முன் அப்படிக் குதியாட்டம் போடாவிட்டால் என்ன? நான் இன்று செத்துப் பிழைத்திருக்கிறேன். அது என்னைத் தன் பெரிய வாய்க்குள் திங்காமல் விட்டது அதிசயம் தான். |
| **வெட்டுக்கிளி** | : | மன்னிச்சுக்கோ! மன்னிச்சுக்கோ! |
| **கூரன்** | : | இனி இப்படிச் செய்தால் திரும்ப வந்து உன்னை என் தங்கக் கால்களால் மிதித்து நசுக்கி விடுவேன்.<br>(தன் கூர்மையான பாதங்களை கூரன் மண்மீது அழுத்துதல்)<br>(வெட்டுக்கிளி கிளையில் இருந்து கீழே விழப் போதல்) |
| **வெட்டுக்கிளி** | : | கூரனின் கூர்ப்பாதங்கள் பட்டுவிடுமோ?<br>ஐயோ! ஐயோ!<br>சரி. சரி... குதித்துக் கொண்டே இருப்போம். |



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

கற்கண்டு

இயல் 2

# வினைமுற்று

## பாடநூல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **மாடு வயலில் புல்லை மேய்ந்தது - இத்தொடரிலுள்ள வினைமுற்று ________.**

அ) மாடு ஆ) வயல்
இ) புல் ஈ) மேய்ந்தது **விடை: ஈ) மேய்ந்தது**

2. **பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று ________.**

அ) படித்தான் ஆ) நடக்கிறான்
இ) உண்பான் ஈ) ஓடாது **விடை: அ) படித்தான்**

3. **பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் ________.**

அ) செல்க ஆ) ஓடு
இ) வாழ்க ஈ) வாழிய **விடை: ஆ) ஓடு**

**சிறுவினா.**

1. **வினைமுற்று என்றால் என்ன?**

ஒரு வினை, எச்சப் பொருளில் அமையாமல், முழுமை பெற்று விளங்குவது. இவ்வாறு பொருள் முற்றுப் பெற்ற வினைச் சொற்களை முற்றுவினை அல்லது வினைமுற்று என்பர்.

2. **தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?**

தெரிநிலை வினைமுற்று செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகியவற்றைக் காட்டும்.

3. **வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?**

க, இய, இயர், அல் என்பன வியங்கோள் வினைமுற்று விகுதிகள் ஆகும்.

4. **ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?**

| ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| முன்னிலையில் வரும். | இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும். |

| | |
|---|---|
| ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு. | ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை. |
| கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும். | வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும். |
| விகுதி பெற்றும் பெறாமலும் வரும். | விகுதி பெற்றே வரும். |

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **ஒன்றன் செயலைக் குறிக்கும் சொல் ________ எனப்படும்.**
அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல்
இ) உரிச்சொல் ஈ) இடைச்சொல் **விடை: ஆ) வினைச்சொல்**

2. **செயலை ________ என்றும் குறிப்பர்.**
அ) பனை ஆ) தினை
இ) வினை ஈ) சுனை **விடை: இ) வினை**

3. **பொருள் முற்றுப்பெற்ற வினைச் சொற்களை ________ என்பர்.**
அ) பெயர்முற்று ஆ) இடைமுற்று
இ) வினைமுற்று ஈ) வினையெச்சம் **விடை: இ) வினைமுற்று**

4. **ஒரு செயல் நடைபெறுவதற்கான ________ வெளிப்படுமாறு அமைவது தெரிநிலை வினைமுற்று எனப்படும்.**
அ) ஆறும் ஆ) ஏழும்
இ) நான்கும் ஈ) ஐந்தும் **விடை: அ) ஆறும்**

5. **ஐம்பால், முக்காலம், மூவிடம் ஆகிய அனைத்திலும் ________ வரும்.**
அ) பெயர்முற்றுகள் ஆ) முற்றுகள்
இ) எழுவாய் ஈ) வினைமுற்றுகள் **விடை: ஈ) வினைமுற்றுகள்**

6. **________ல் செய்பவர், செயல், காலம் ஆகியவற்றை வெளிப்படையாக அறியலாம்.**
அ) குறிப்பு வினைமுற்று ஆ) முற்றெச்சம்
இ) தெரிநிலை வினைமுற்று ஈ) ஏவல் வினைமுற்று
**விடை: இ) தெரிநிலை வினைமுற்று**

7. **காலத்தை வெளிப்படையாகக் காட்டாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று ________ எனப்படும்.**
அ) குறிப்பு வினைமுற்று ஆ) தெரிநிலை வினைமுற்று
இ) ஏவல் வினைமுற்று ஈ) வியங்கோள் வினைமுற்று
**விடை: அ) குறிப்பு வினைமுற்று**


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

8. **ஒரு செயலைச் செய்யுமாறு கட்டளையிடும் வினைமுற்று, __________ வினைமுற்று.**
அ) குறிப்பு ஆ) தெரிநிலை
இ) ஏவல் ஈ) வியங்கோள் **விடை: இ) ஏவல்**

9. **க, இய, இயர், அல் என விகுதிகள் பெற்றுவரும் வினைமுற்று __________.**
அ) ஏவல் வினைமுற்று ஆ) வியங்கோள் வினைமுற்று
இ) தெரிநிலை வினைமுற்று ஈ) குறிப்பு வினைமுற்று
**விடை: ஆ) வியங்கோள் வினைமுற்று**

10. **வினைமுற்று __________ வகைப்படும்.**
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஆறு **விடை: அ) இரண்டு**

## சிறுவினா.

1. **வினைச்சொல் என்றால் என்ன?**
ஒரு செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும். ஒன்றன் தொழிலை உணர்த்தி காலத்தைக் காட்டி நிற்கும் சொல் வினைச்சொல் எனப்படும். இது முற்றுவினை, எச்சவினை என்று இரு வகைப்படும்.

2. **வினைமுற்றுகள் எத்தனை வகைப்படும்?**
தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என வினைமுற்று இருவகைப்படும்.

3. **தெரிநிலை வினைமுற்று என்றால் என்ன?**
ஒரு செயல் நடைபெறுவதற்குச் செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் முதன்மையானவை ஆகும். இவை ஆறும் வெளிப்படுமாறு அமைவது தெரிநிலை வினைமுற்று எனப்படும். **எ.கா:** உழுதான்.

4. **குறிப்பு வினைமுற்று என்றால் என்ன?**
பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுள் ஒன்றனை அடிப்படையாகக் கொண்டு காலத்தை வெளிப்படையாகக் காட்டாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும். **எ.கா:** ஆதிரையான்.

5. **ஏவல் வினைமுற்று என்றால் என்ன?**
தன்முன் உள்ள ஒருவரை ஒரு செயலைச் செய்யுமாறு ஏவும் வினைமுற்று, ஏவல் வினைமுற்று எனப்படும். ஏவல் வினைமுற்று ஒருமை, பன்மை ஆகிய இருவகைகளில் வரும்.

6. **வியங்கோள் வினைமுற்று என்றால் என்ன?**
- வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும்.
- இவ்வினைமுற்று இரு திணைகளையும், ஐந்து பால்களையும், மூன்று இடங்களையும் காட்டும்.
- இதன் விகுதிகள் க, இய, இயர், அல் என வரும். **எ.கா:** வாழ்க.

இயல் 2 தமிழ்

**7. பால் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- பால் ஐந்து வகைப்படும்.
- அவை, ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின் பால் ஆகும்.

## கற்பவை கற்றபின்

**'வாழ்க' என்னும் சொல்லை ஐந்து பால்களிலும், மூன்று இடங்களிலும் இடம் பெறுமாறு தொடர்களை எழுதுக.**

**எ.கா: அவன் வாழ்க. (ஆண்பால்) நாம் வாழ்க. (தன்மை)**

**பால்கள்**

- அவள் வாழ்க (பெண்பால்)
- அவர்கள் வாழ்க (பலர்பால்)
- அது வாழ்க (ஒன்றன் பால்)
- அவைகள் வாழ்க (பலவின்பால்)

**இடங்கள்**

- நீ வாழ்க (முன்னிலை)
- அவர்கள் வாழ்க (படர்க்கை)

## மொழியை ஆள்வோம்

**கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

**இயற்கையைப் பாதுகாப்போம்.**

- வணக்கம்.
- உயிர்கள் படைக்கப்பட்டபோதே, அவற்றின் வாழ்வுக்காக இயற்கை வளங்களும் சேர்த்தே படைக்கப்பட்டுள்ளன. இயற்கை வளங்களோடு அத்தனை உயிரினங்களின் வாழ்க்கையும் சிறப்பாக நடைபெற்று வந்தது.
- அறிவியலின் ஆதிக்கம் பெருகியது. விளைவு, மனிதருக்கு மட்டுமே பூமி என்ற நிலை உருவானது. அதுவும் மாறி அறிவியல் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மட்டுமே இயற்கை வளம் யாவும் சொந்தம் என்ற நிலை உருவாகியுள்ளது.
- மனிதர்களின் பேராசையால் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு, பிற உயிரினங்கள் யாவும் பாதிப்படைந்து வருகின்றன. நீர், நிலம், ஆகாயம், வாயு என நான்கு பூதங்களும் மாசடைந்து விட்டன. சீக்கிரமே, வாழ முடியாத இடமாகப் பூமி ஆகிவிடுமோ என்ற நிலை உருவாகி வருகிறது.
- உயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லாவற்றையும் இயற்கை தருகிறது. காடுகள், நுண்ணுயிரிகள், ஆறுகள், ஏரிகள், கடற்பகுதிகள், மலைகள், மண்வளம், மேகங்கள், ஏன் ஒவ்வொரு மழைத்துளியும் கூட இயற்கையின் கொடைதான். இதில் ஒன்றை இழந்துகூட மனிதர்கள் வாழவே முடியாது.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- உங்கள் தலைமுறைக்குச் சொத்து சேர்ப்பதைப்போல, இயற்கையையும் பாதுகாத்து சேர்த்து வையுங்கள்.
- இயற்கை வளங்களின் இன்றியமையாமை குறித்து மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்க, ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 28ம் நாள் உலக இயற்கை வளப்பாதுகாப்பு நாள் கடைபிடிக்கப்படுகிறது.
- இந்த நாளில், இயற்கையைப் பாதுகாக்க நம்மால் ஆனதைச் செய்வோம். அதுவே, அந்த நாளுக்கான நமது மரியாதை என்று சொல்லலாம்.
- என்ன செய்யப்போகிறோம் என்பதை நாம் தான் சிந்தித்து செயல்பட வேண்டும் என்று சொல்லி என்னுரையை நிறைவு செய்கின்றேன். நன்றி.

## சொல்லக்கேட்டு எழுதுக.

இயற்கையை விரும்புவது மட்டுமன்றி, அதைப் பாதுகாப்பதும் இன்றியமையாதது. அது நமது கடமை மட்டுமன்று பொறுப்பும் ஆகும். நாம் விரும்பிக் கண்டுகளித்த இயற்கைச் செல்வங்களை, வரும் தலைமுறையினருக்காகச் சேர்த்தும் பாதுகாத்தும் வைக்கவேண்டும். இயற்கை வளங்களின் இன்றியமையாமை குறித்து விழிப்புணர்வு உண்டாக்க ஒவ்வோர் ஆண்டும் சூலை 28 ஆம் நாள் உலக இயற்கைவளப் பாதுகாப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

## தமிழ் எண்கள் அறிவோம்.

**விடுபட்ட கட்டங்களை நிரப்புக.**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ரு | சூ | எ | அ | கூ | ய |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| கக | கஉ | கங | கச | கரு | கசூ | கஎ | கஅ | ககூ | உ0 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| உக | உஉ | உங | உச | உரு | உசூ | உஎ | உஅ | உகூ | ங0 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| ஙக | ஙஉ | ஙங | ஙச | ஙரு | ஙசூ | ஙஎ | ஙஅ | ஙகூ | ச0 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| சக | சஉ | சங | சச | சரு | சசூ | சஎ | சஅ | சகூ | ரு0 |

## வண்ணமிடப்பட்டுள்ள எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக.

1. உலக ஈர நில நாள் பிப்ரவரி **2.** உ
2. உலக ஓசோன் நாள் செப்டம்பர் **16.** கசூ
3. உலக இயற்கை நாள் அக்டோபர் **3.** ங

4. உலக வனவிலங்கு நாள் அக்டோபர் 6. ச
5. உலக இயற்கைச் சீரழிவுத் தடுப்பு நாள் அக்டோபர் 5. ரு

**கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக.**

1. முக்காலமும் உணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள். **விடை: செய்தித்தொடர்**
2. கடமையைச் செய். **விடை: விழைவுத்தொடர்**
3. பாரதியார் பாடல்களின் இனிமைதான் என்னே! **விடை: உணர்ச்சித் தொடர்**
4. நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்? **விடை: வினாத்தொடர்**

**தொடர்களை மாற்றுக.**

எ.கா: நேற்று நம் ஊரில் மழை பெய்தது. (வினாத் தொடராக மாற்றுக)
நேற்று நம் ஊரில் மழை பெய்ததா?

1. **காடு மிகவும் அழகானது. (உணர்ச்சித் தொடராக மாற்றுக)**
என்னே, காட்டின் அழகு!
2. **ஆ! பூனையின் காலில் அடிபட்டுவிட்டதே! (செய்தித் தொடராக மாற்றுக)**
பூனையின் காலில் அடிபட்டுவிட்டது.
3. **அதிகாலையில் துயில் எழுவது நல்லது. (விழைவுத் தொடராக மாற்றுக)**
அதிகாலையில் துயில் எழு.
4. **முகில்கள் திரண்டால் மழை பெய்யும் அல்லவா? (செய்தித்தொடராக மாற்றுக)**
முகில்கள் திரண்டால் மழை பெய்யும்.
5. **காட்டில் புலி நடமாட்டம் உள்ளது. (வினாத் தொடராக மாற்றுக)**
காட்டில் புலி நடமாட்டம் உள்ளதா?

**கடிதம் எழுதுக.**

**விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.**

30, சாந்திநகர்,
திருப்பூர் - 2.
நாள்: 01.07.2020.

இனிய நண்பா,

வணக்கம். நலம். நலம் அறிய ஆவலாய் உள்ளேன்.

இவ்வாண்டு உன் பள்ளியின் 50ஆம் ஆண்டு விளையாட்டு விழா 25.06.2020 அன்று நடைபெற்றதாய் மடல் எழுதியிருக்கின்றாய். இளைஞர்களுக்கான ஓட்டப்பந்தயத்தில் நீயும் கலந்து கொண்டதாகவும், முதலிடம் பெற்றுள்ளதாகவும் அதில் குறிப்பிட்டுள்ளாய். வெற்றி பெற்ற செய்தி அறிந்து அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இயல் 2 தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

என் அன்பு நிறைந்த பாராட்டினை உனக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். உன்னை நண்பனாய் அடைந்தமையை எண்ணிப் பெருமைப்படுகின்றேன்.

படிப்பில் நீ காட்டி வருகின்ற ஆர்வமும், விடாமுயற்சியும், கடும் உழைப்பும் ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மாணவனாய் வர உதவுகின்றன. அதேபோல் விளையாட்டிலும் வெற்றி பெற்றுள்ளமை நீ படிப்பு, விளையாட்டு ஆகிய இரண்டிலும் கெட்டிக்காரன் என்பதைப் பறைசாற்றுகின்றன. மாநில, தேசியப் போட்டிகளிலும் தடகளத்தில் முத்திரை பதித்து பெருமை சேர்த்திடவும் வாழ்த்துகிறேன்.

உன் அன்பிற்குரிய நண்பன்,
அ. ராசா.

உறைமேல் முகவரி:

பெறுநர்
செல்வன். ந. கண்ணன்,
16, பாரதியார் தெரு,
காந்தி நகர்,
மதுரை - 16.

## மொழியோடு விளையாடு

**உரிய வினைமுற்றுகளைக் கொண்டு கட்டங்களை நிரப்புக.**

| | நட | உண் | உறங்கு |
|---|---|---|---|
| **ஆண்பால்** | நடக்கிறான் | உண்கிறான் | உறங்கினான் |
| **பெண்பால்** | நடக்கிறாள் | உண்கிறாள் | உறங்கினாள் |
| **பலர்பால்** | நடக்கிறார் | உண்டார் | உறங்கினார் |
| **ஒன்றன்பால்** | நடந்தது | உண்டது | உறங்கியது |
| **பலவின்பால்** | நடந்தான் | உண்டன | உறங்கின |
| **தன்மை** | நடந்தேன் | உண்கிறேன் | உறங்கினேன் |
| **முன்னிலை** | நடந்தீர் | உண்டீர் | உறங்குவீர் |
| **படர்க்கை** | அவன் நடந்தான் | அவன் உண்பான் | அவள் உறங்கினாள் |
| **இறந்தகாலம்** | நடந்தான் | உண்டான் | உறங்கினான் |
| **நிகழ்காலம்** | நடக்கிறான் | உண்கிறான் | உறங்குகிறான் |
| **எதிர்காலம்** | நடப்பான் | உண்பான் | உறங்குவான் |

**வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.**

1. நடக்கிறது - நட
2. போனான் - **போ**
3. சென்றனர் - **செல்**
4. உறங்கினாள் - **உறங்கு**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| 5. வாழிய | - **வாழ்** | 8. தருகின்றனர் | - **தா** |
| 6. பேசினாள் | - **பேசு** | 9. பயின்றாள் | - **பயில்** |
| 7. வருக | - **வா** | 10. கேட்டார் | - **கேள்** |

## நிற்க அதற்குத் தக.

**என் பொறுப்புகள்:**

1. நீர்நிலைகளைத் தூய்மையாக வைக்க உதவுவேன்.
2. மரம் நட வாய்ப்புள்ள இடங்களில் மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பேன்.

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. பழங்குடியினர் | - Tribes | 5. மலைமுகடு | - Ridge |
| 2. சமவெளி | - Plain | 6. வெட்டுக்கிளி | - Locust |
| 3. பள்ளத்தாக்கு | - Valley | 7. சிறுத்தை | - Leopard |
| 4. புதர் | - Thicker | 8. மொட்டு | - Bud |

## இணையத்தில் காண்க

**பழங்குடி மக்களின் வாழ்க்கை முறைகளை இணையத்தில் கண்டு அறிக.**

பழங்குடிகள் என்போர் தொன்றுதொட்டு பன்னெடுங்காலமாகவோ (10,000 ஆண்டுகளுக்கும் மேலாக) ஒரு நிலப்பகுதியில் வாழ்ந்து வருபவர்கள். இவர்கள் தங்களுக்கென தனி பழக்க வழக்கங்களும், மொழியும், நிலமும் கொண்டு அதனைச் சார்ந்த செடி, கொடி, மரம், விலங்குகளைக் கொண்டு தங்கள் வாழ்க்கையைத் தன்னிறைவோடு வாழ்பவர்கள். இவர்கள் தங்களுக்கென தனி கலைகளும் கடவுள், சமயம் மற்றும் உலகம் பற்றிய கொள்கைகளும் கொண்டிருப்பர். தனிமனித வாழ்க்கையிலும் உறவு முறைகளிலும், சமூகமாக வாழ்வதிலும் தங்களுக்கென தனியான முறைகள் கொண்டவர்கள். தற்கால மக்களிடம் அதிகம் பழகாமலும், பணத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் இல்லாமலும், தற்கால தொழில் வளர்ச்சி வழி பெற்ற புதிய பொருட்கள், வசதிகள் எதையும் பெரிதாக ஏற்றுக் கொள்ளாதவர்களுமாக இருக்கிறார்கள்.

ஆஸ்திரேலியா, வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், பசிபிக் தீவுகள் என்று உலகின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு பழங்குடி இனங்கள் வாழ்ந்து வருகின்றனர். பல பழங்குடியின மக்கள் பல இடங்களில் கடலிலேயே வாழ்கிறார்கள். மலேசியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கு அருகில் அமைந்துள்ள பப்புவா நியூ கினியா தீவை அடுத்த கடல் பகுதியில் பஜாவு என்ற பழங்குடி மக்கள் நாடோடிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

வாழ்வியல்

இயல் 2

# திருக்குறள்

திருவள்ளுவர்

## திருவள்ளுவர்

பெருநாவலர், முதற்பாவலர், நாயனார் முதலிய பல சிறப்புப் பெயர்களால் குறிக்கப்படும் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பர்.

## மனப்பாடப் பாடல்

**தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.**

**கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்.**

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.**

**தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.** - திருவள்ளுவர்

## பாடநூல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. புகழாலும் பழியாலும் அறியப்படுவது ________.
அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை
இ) நடுவுநிலைமை ஈ) பொருளுடைமை **விடை: இ) நடுவுநிலைமை**

2. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ________.
அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர்
இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர் **விடை: ஆ) கல்லாதவர்**

3. 'வல்லுருவம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) வல் + உருவம் ஆ) வன்மை + உருவம்
இ) வல்ல + உருவம் ஈ) வ + உருவம் **விடை: ஆ) வன்மை + உருவம்**

இயல் 2 தமிழ்

4. **நெடுமை + தேர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.**

அ) நெடுதேர் ஆ) நெடுத்தேர்
இ) நெடுந்தேர் ஈ) நெடுமைதேர் **விடை: இ) நெடுந்தேர்**

5. **'வருமுன்னர்' எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி ________.**

அ) தற்குறிப்பேற்ற அணி ஆ) எடுத்துக்காட்டு உவமை அணி
இ) உவமை அணி ஈ) உருவக அணி **விடை: இ) உவமை அணி**

## குறுவினா

1. **சான்றோர்க்கு அழகாவது எது?**
துலாக்கோல் போல நடுவுநிலைமையுடன் சரியாகச் செயல்படுவதே சான்றோர்க்கு அழகாகும்.

2. **பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?**
தலைவன் முதலில் தன்குற்றத்தைக் கண்டு நீக்கி, அதன்பின் பிறருடைய குற்றத்தை ஆராய்ந்தால், அவனுக்கு எந்தப் பழியும் ஏற்படாது.

3. **'புலித்தோல் போர்த்திய பசு' என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?**
மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்திக் கொண்ட பசு பயிரை மேய்ந்ததைப் போன்றது.

**திருக்குறளைச் சீர் பிரித்து எழுதுக.**

1. தக்கார் தகவிலரெ ன்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்.
2. தொடங்கற்க எவ்வினையு மெள்ளற்க முற்று மிடங்கண்ட பின் அல்லது.

**சீர்பிரித்தது**

1. தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.
2. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்அல் லது.

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. வலியில் நிலைமையான் வல்லுருவம் ________.
புலியின்தோல் ________மேய்ந் தற்று. **விடை: பெற்றம், போர்த்து**
2. விலங்கொடு ________ அனையர் ________
கற்றாரோடு ஏனை யவர். **விடை: மக்கள், இலங்குநூல்**

## சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

யாழ்கோடு அன்ன கொளல் கணைகொடிது
வினைபடு பாலால் செவ்விதுஆங்கு.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**முறைப்படுத்தியது**
கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்.

**படங்களுக்குப் பொருத்தமான திருக்குறள்களை எழுதுக.**

| | |
|---|---|
|  | 1. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம் புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. |
|  | 2. கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும் நாவாயும் ஓடா நிலத்து. |

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **எல்லா மக்களுக்கும் பொருந்தும் அறக்கருத்துகளைக் கொண்ட நூல் ________.**
அ) பரிபாடல் ஆ) குறுந்தொகை
இ) திருக்குறள் ஈ) நற்றிணை **விடை: இ) திருக்குறள்**

2. **திருக்குறளின் பெருமையை விளக்கும் நூல் ________.**
அ) ஆத்திசூடி ஆ) புறநானூறு
இ) கலித்தொகை ஈ) திருவள்ளுவமாலை
**விடை: ஈ) திருவள்ளுவமாலை**

3. **நடுவுநிலைமையுடன் செயல்படுவதே ________ அழகாகும்.**
அ) கயவர்க்கு ஆ) சான்றோர்க்கு
இ) கல்லாதார்க்கு ஈ) மூடர்க்கு **விடை: ஆ) சான்றோர்க்கு**

5. **'வலியில்' எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி ________.**
அ) உவமையணி ஆ) எடுத்துக்காட்டு உவமையணி
இ) உருவக அணி ஈ) இல்பொருள் உவமை அணி
**விடை: ஈ) இல்பொருள் உவமை அணி**

6. **மக்களின் பண்புகளை அவரவர் தோற்றத்தால் அல்லாமல் ________ வகையால் உணர்ந்து கொள்ள வேண்டும்.**
அ) அன்பு ஆ) செயல்
இ) நட்பு ஈ) பாசம் **விடை: ஆ) செயல்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

7. **கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் இடையே உள்ள வேறுபாடு மக்களுக்கும் ________ இடையே உள்ள வேறுபாட்டிற்கு இணையானது.**
அ) பறவைகளுக்கும் ஆ) கயவர்களுக்கும்
இ) விலங்குகளுக்கும் ஈ) மரங்களுக்கும் **விடை: இ) விலங்குகளுக்கும்**

8. **________ வருமுன்னே சிந்தித்து நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும்.**
அ) வலி ஆ) பழி
இ) சளி ஈ) உளி **விடை: ஆ) பழி**

9. **பழிவருமுன்னே காக்காதவர் வாழ்க்கை, நெருப்பின் அருகில் வைக்கப்பட்ட ________ போல அழிந்துவிடும்.**
அ) வைக்கோல்போர் ஆ) பஞ்சு
இ) தாள் ஈ) மரம் **விடை: அ) வைக்கோல்போர்**

10. **'கடல் ஓடா' எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி ________.**
அ) பிறிதுமொழிதல் அணி ஆ) தற்குறிப்பேற்ற அணி
இ) உருவகஅணி ஈ) உவமையணி
**விடை: அ) பிறிது மொழிதல் அணி**

11. **முதற்பாவலர் என்று அழைக்கப்படுபவர் ________.**
அ) நக்கீரர் ஆ) கம்பர்
இ) வள்ளுவர் ஈ) கபிலர் **விடை: இ) வள்ளுவர்**

12. **திருவள்ளுவர் ________ ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பர்.**
அ) 1000 ஆ) 500
இ) 1500 ஈ) 2000 **விடை: ஈ) 2000**

13. **________ உலகின் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட சிறந்த நூல் ஆகும்.**
அ) பெரியபுராணம் ஆ) திருக்குறள்
இ) தேவாரம் ஈ) நற்றிணை **விடை: ஆ) திருக்குறள்**

14. **திருக்குறள் ________ பகுப்புக் கொண்டது.**
அ) ஐம்பால் ஆ) எண்பால்
இ) முப்பால் ஈ) ஒன்பால் **விடை: இ) முப்பால்**

15. **அறத்துப்பால் ________ இயல்களைக் கொண்டது.**
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **விடை: இ) நான்கு**

16. **பொருட்பால் ________ இயல்களைக் கொண்டது.**
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **விடை: ஆ) மூன்று**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

17. இன்பத்துப்பால் ________ இயல்களைக் கொண்டது.
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **விடை: அ) இரண்டு**

18. 'அவரவர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) அவர + வர் ஆ) அவர + அவர்
இ) அ + அவர் ஈ) அவர் + அவர் **விடை: ஈ) அவர் + அவர்**

19. 'தகவிலர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) தக + விலர் ஆ) தக + இலர்
இ) தகவு + இலர் ஈ) தகவு + பலர் **விடை: இ) தகவு + இலர்**

20. 'நிலைமையான்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) நிலை + யான் ஆ) நிலைமை + ஆன்
இ) நிலைமை + யான் ஈ) நிலைமை + ஏன்
**விடை: ஆ) நிலைமை + ஆன்**

21. 'மேய்ந்தற்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) மேய் + அற்று ஆ) மேய்ந் + தற்று
இ) மேயும் + அற்று ஈ) மேய்ந்து + அற்று **விடை: ஈ) மேய்ந்து+அற்று**

22. 'பாலால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) பா + ஆல் ஆ) பால் + ஆல்
இ) பாலு + ஆல் ஈ) பா + லால் **விடை: ஆ) பால் + ஆல்**

23. 'கல்லாதவர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) க + அவர் ஆ) கல் + லாதவர்
இ) கல்லாது + அவர் ஈ) கல்லா + அவர் **விடை: இ) கல்லாது + அவர்**

24. 'விலங்கொடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) விலங் + கொடு ஆ) விலங்கு + ஒடு
இ) விலங்க + கொடு ஈ) விலங்கு + ஓடு **விடை : ஆ) விலங்கு + ஒடு**

25. 'கற்றாரோடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) கற்றார் + ஒடு ஆ) கற்றார் + ஓடு
இ) கற்றா + ரோடு ஈ) கற் + றாரோடு **விடை: அ) கற்றார் + ஒடு**

26. 'வைத்து + ஊறு' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.
அ) வைத்து ஊறு ஆ) வைத்தாறு
இ) வைத்தூறு ஈ) வைத்துறு **விடை: இ) வைத்தூறு**

27. 'இடம் + கண்ட' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.
அ) இடம்கண்ட ஆ) இடகண்ட
இ) இடத்தைக்கண்ட ஈ) இடங்கண்ட **விடை: ஈ) இடங்கண்ட**

இயல் 2

28. **‘நாவாய் + உம்’ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.**

அ) நாவாய்உம் ஆ) நாவாயும்

இ) நாவாஉம் ஈ) நாவாஊம் **விடை: ஆ) நாவாயும்**

## அணிகள்.

### 1. இல்பொருள் உவமை அணி

**அணி விளக்கம் :**

உலகத்தில் இல்லாத பொருளை உவமையாக்கிக் கூறுவது இல்பொருள் உவமை அணி ஆகும்.

**எ.கா:**

‘வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.’

**அணிப்பொருத்தம் :**

பசுவானது புலியின்தோலைப் போர்த்திக் கொண்டு பயிரை மேய்ந்தல் உலகில் இல்லாத செயலாகும். எனவே அதனை உவமையாக்கிக் கூறியுள்ளமையால், இது இல்பொருள் உவமை அணி ஆயிற்று.

### 2. உவமை அணி :

**அணி விளக்கம் :**

உவமை, பொருள், உவம உருபு ஆகியவை வெளிப்படையாக தோன்றுமாறு அமைவது உவமை அணி ஆகும்.

**எ.கா – 1:**

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

**அணிப்பொருத்தம் :**

இப்பாடலில் துலாக்கோலை உவமையாகக் கூறி, சான்றோர்களின் நடுவுநிலைமையை உவமிக்கப்படும் பொருளாக்கி, போல என்ற உவம உருபு வெளிப்படையாகத் தோன்றுமாறு அமைக்கப்பட்டுள்ளதால் அது உவமை அணி ஆயிற்று.

**எ.கா – 2:**

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**அணிப்பொருத்தம் :**

நெருப்பின் அருகில் வைக்கப்பட்ட வைக்கோல் போரை உவமையாகக் கூறி, பழிவருமுன்னே சிந்தித்து செயல்படுபவன் வாழ்க்கை என்பதை உவமிக்கப்படும் பொருளாக்கி, போல என்ற உவம உருபு பெற்று, வெளிப்படையாய் அமைந்துள்ளதால் இது உவமை அணி ஆயிற்று.

**3. பிறிது மொழிதல் அணி :**

**அணி விளக்கம் :**

உவமையை மட்டும் கூறிப் பொருளினைப் பெற வைப்பது பிறிது மொழிதல் அணி.

**எ.கா:**

கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து.

**அணிப்பொருத்தம் :**

அவரவர் தமக்குரிய இடங்களிலேயே சிறப்பாகச் செயல்பட முடியும் என்பதே புலவர் கூற விரும்பிய கருத்து. ஆனால் அதனைக் கூறாமல் பெரியதேர் கடலில் ஓடாது. கடலில் ஓடும் கப்பல் தரையில் ஓடாது என உவமையாக வேறொன்றைக் கூறியுள்ளார். ஆகவே இது பிறிது மொழிதல் அணி ஆயிற்று.

## அலகுத் தேர்வு

### இயல் 2

நேரம்: 30 நிமிடம் மதிப்பெண்கள்: 20

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** $8 \times 1 = 8$

**அ) பொருள் எழுதுக.**

1. முழவு -
2. சேகரம் -
3. வாகு -

**ஆ) உரிய விடையைத் தேர்வு செய்க.**

4. வானில் கரு ________ தோன்றினால் மழை பொழியும் என்பர்.
   அ) முகில் ஆ) துகில்
   இ) வெயில் ஈ) கயல்
5. பள்ளிக்குச் சென்று கல்வி ________ சிறப்பு.
   அ) பயிலுதல் ஆ) பார்த்தல்
   இ) கேட்டல் ஈ) பாடுதல்

இயல் 2 தமிழ்

**இ) கோடிட்ட இடத்தை நிரப்புக.**

6. செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது ________.
7. முறையான உடற்பயிற்சியும், சரிவிகித உணவும் ________ ஓட்டிவிடும்.
8. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ________ மதிக்கின்றனர்.

**II. குறு விடை தருக.** **3 × 2 = 6**

9. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் கூறுகிறார்?
10. கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?
11. சான்றோர்க்கு அழகாவது எது?

**III. சிறு விடை தருக.** **2 × 3 = 6**

12. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?

**(அல்லது)**

கோணக் காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

13. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.

**(அல்லது)**

தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

இயல் 2 தமிழ்

இயல் 3

## கவிதைப் பேழை

# நோயும் மருந்தும்

- நீலகேசி ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று.
- இந்நூல் சமணசமயக் கருத்துகளைத் தருக்கங்களாக (விவாதங்களாக) விளக்குகிறது.
- கடவுள் வாழ்த்து நீங்கலாகப் பத்துச் சருக்கங்களைக் கொண்டது.
- இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

*மனப்பாடப் பாடல்*

**பேர்தற்கு அரும்பிணி தாம்இவை அப்பிணி**
**தீர்தற்கு உரிய திரியோக மருந்துஇவை**
**ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார்**
**பேர்த்த பிணியுள் பிறவார் பெரி தின்பமுற்றே**

### சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| தீர்வன | - நீங்குபவை | திறத்தன | - தன்மையுடையன |
| உவசமம் | - அடங்கி இருத்தல் | கூற்றவா | - பிரிவுகளாக |
| நிழல்இகழும் | - ஒளிபொருந்திய | பூணாய் | - அணிகலன்களை அணிந்தவளே |
| பேர்தற்கு | - அகற்றுவதற்கு | பிணி | - துன்பம் |
| திரியோகமருந்து | - மூன்று யோகமருந்து | ஓர்தல் | - நல்லறிவு |
| தெளிவு | - நற்காட்சி | பிறவார் | - பிறக்கமாட்டார் |

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **உடல்நலம் என்பது __________ இல்லாமல் வாழ்தல் ஆகும்.**

அ) அணி ஆ) பணி
இ) பிணி ஈ) மணி **விடை: இ) பிணி**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. நீலகேசி கூறும் நோயின் வகைகள் ________.

அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **விடை: ஆ) மூன்று**

3. 'இவையுண்டார்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) இ + யுண்டார் ஆ) இவ் + உண்டார்
இ) இவை + உண்டார் ஈ) இவை + யுண்டார்

**விடை: இ) இவை + உண்டார்**

4. தாம் + இனி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) தாம்இனி ஆ) தாம்மினி
இ) தாமினி ஈ) தாமனி **விடை: இ) தாமினி**

## குறுவினா.

1. நோயின் மூன்று வகைகள் யாவை?
   - மருந்தினால் நீங்கும் நோய்.
   - எதனாலும் தீராத தன்மையுடைய நோய் மற்றொரு வகை.
   - வெளியில் ஆறி உள்ளுக்குள் இருந்து துன்பம் தரும் நோய்.

2. நீலகேசியில் பிறவித் துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?

   நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் என்பவையே பிறவித் துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாக நீலகேசி கூறுகின்றது.

## சிறு வினா.

1. நோயின் வகைகள் அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?
   - ஒளிபொருந்திய அணிகலன்களை அணிந்த பெண்ணே! நோயின் தன்மை பற்றி யார் வினவினாலும் அது மூன்று வகைப்படும் என அறிவாயாக.
   - மருந்தினால் நீங்கும் நோய்.
   - எதனாலும் தீராத தன்மையுடைய நோய் மற்றொரு வகை.
   - வெளியில் ஆறி உள்ளுக்குள் இருந்து துன்பம் தரும் நோய்.
   - அகற்றுவதற்கு அரியவை பிறவித் துன்பங்கள் ஆகும்.
   - இவற்றைத் தீர்க்கும் மருந்துகள் மூன்று. நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் என்பவையே அம்மருந்துகள்.
   - இவற்றை ஏற்றோர் பிறவித்துன்பத்திலிருந்து நீங்கி உயரிய இன்பத்தை அடைவர்.

## சிந்தனை வினா

1. துன்பமின்றி வாழ நாம் கைக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் யாவை?

   தருமம் செய்தல், கோபத்தைத் தணித்தல், முயற்சி செய்தல், கல்வி கற்றல், உலக நடையை அறிந்து நடத்தல், நல்ல நூல்களைப் படித்தல், பொறாமை படாமல்


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இருத்தல், பொய்சாட்சி சொல்லாமல் இருத்தல், இனிமையாகப் பேசுதல், பேராசையைத் தவிர்த்தல், நட்புடன் பழகுதல், பெரியோர்களை மதித்தல், ஒழுக்கம் தவறாமல் இருத்தல், நன்றியை மறவாமல் இருத்தல், காலத்தைக் கடைபிடித்தல், களவு செய்யாதிருத்தல், இழிவானதைச் செய்யாதிருத்தல், இரக்கம் கொள்ளுதல், பொய் சொல்லாதிருத்தல், ஆணவம் கொள்ளாதிருத்தல், சுறுசுறுப்புடன் இருத்தல், உடற்பயிற்சி செய்தல், அதிகாலையில் எழுந்திருத்தல் போன்றவை கைக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் ஆகும்.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மக்களின் உடலுக்கும் உள்ளத்திற்கும் துன்பம் தருவன ________.**

அ) நாய்கள் ஆ) நோய்கள்
இ) பேய்கள் ஈ) மனிதர்கள் **விடை: ஆ) நோய்கள்**

**2. உள்ளத்தில் தோன்றும் தீய எண்ணங்களால் ஏற்படும் துன்பங்களையும் ________ என்றே நம் முன்னோர்கள் குறிப்பிட்டனர்.**

அ) கவலை ஆ) துன்பம்
இ) நோய்கள் ஈ) பொறுமை **விடை: இ) நோய்கள்**

**3. நோய்களை நீக்கும் மருந்துகளாக விளங்கும் அறக்கருத்துகளை விளக்குபவை ________.**

அ) இலக்கியங்கள் ஆ) இலக்கணங்கள்
இ) படைப்புகள் ஈ) முன்னோர்கள் **விடை: அ) இலக்கியங்கள்**

**4. நோயைத் தீர்க்கும் மருந்துகள் ________.**

அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **விடை: ஆ) மூன்று**

**5. ________ ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று.**

அ) சிலப்பதிகாரம் ஆ) நீலகேசி
இ) குண்டலகேசி ஈ) வளையாபதி **விடை: ஆ) நீலகேசி**

**6. நீலகேசி ________ சமயக் கருத்துகளைக் கூறுகிறது.**

அ) சமணம் ஆ) புத்தம்
இ) கிறித்தவம் ஈ) இந்து **விடை: அ) சமணம்**

**7. நீலகேசி, கடவுள் வாழ்த்து நீங்கலாக ________ சருக்கங்களைக் கொண்டது.**

அ) எட்டு ஆ) ஒன்பது
இ) ஏழு ஈ) பத்து **விடை: ஈ) பத்து**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

8. 'போலாதும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) போ + தும் ஆ) போல் + ஆதும்

இ) போல் + அனதும் ஈ) போலா + தும் **விடை: ஆ) போல்+ஆதும்**

9. 'உய்ப்பனவும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) உய் + பனவும் ஆ) உய்ப் + பனவும்

இ) உய்ப்பன + உம் ஈ) உய்ப்பன + அம் **விடை: இ) உய்ப்பன+உம்**

10. 'கூற்றவா' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) கூ + அவா ஆ) கூற்று + அவா

இ) கூற் + அவா ஈ) கூற்று + ஆவா **விடை: ஆ) கூற்று+அவா**

11. 'ஐம்பெருங்காப்பியம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) ஐந்து + காப்பியம் ஆ) ஐந்து + பெரு + காப்பியம்

இ) ஐம்பெருங் + காப்பியம் ஈ) ஐந்து + பெருமை + காப்பியம்

**விடை: ஈ) ஐந்து + பெருமை + காப்பியம்**

12. 'அரும்பிணி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) அரும் + பிணி ஆ) அரு + பிணி

இ) அருமை + பிணி ஈ) அரும் + பணி **விடை: இ) அருமை + பிணி**

13. 'அ + பிணி' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) அபிணி ஆ) அம்பிணி

இ) அப்பிணி ஈ) அதுபிணி **விடை: இ) அப்பிணி**

14. 'தெளிவு + ஒடு' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) தெளிவுவூடு ஆ) தெளிவோடு

இ) தெளிவுஒடு ஈ) தெளிவாடு **விடை: ஆ) தெளிவோடு**

15. 'பிணி + உள்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) பிணியுள் ஆ) பிணினள்

இ) பிணியாள் ஈ) பிணிபுள் **விடை: அ) பிணியுள்**

16. 'இன்பம் + உற்றே' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) இன்பமுற்று ஆ) இன்பமற்றே

இ) இன்பம்உற்றோ ஈ) இன்பமுற்றே **விடை: ஈ) இன்பமுற்றே**

## குறுவினா.

1. **நோய்கள் எவற்றிற்கெல்லாம் துன்பம் தருவன?**

மக்களின் உடலுக்கும் உள்ளத்திற்கும் துன்பம் தருவன நோய்கள்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**2. நம் முன்னோர்கள் எவற்றையும் நோய்கள் என்று கூறினர்?**

உள்ளத்தில் தோன்றும் தீய எண்ணங்களால் ஏற்படும் துன்பங்களையும் நோய்கள் என்றே நம் முன்னோர் கூறினர்.

**3. இலக்கியங்கள் விளக்குவன யாவை?**

நோய்களை நீக்கும் மருந்துகளாக விளங்கும் அறக்கருத்துகளை இலக்கியங்கள் விளக்குகின்றன.

**4. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?**

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

**5. ஐஞ்சிறுகாப்பியங்கள் யாவை?**

சூளாமணி, நீலகேசி, உதயண குமார காவியம், யசோதர காவியம், நாககுமார காவியம்.

**சிறுவினா.**

**1. நீலகேசி குறித்து எழுதுக.**

- நீலகேசி என்றால் கருத்த கூந்தலை உடையவள் என்று பொருள்.
- ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.
- கடவுள் வாழ்த்து நீங்கலாகப் பத்துச் சருக்கங்களைக் கொண்டது.
- 894 பாடல்களைக் கொண்டது.
- நீலகேசி தெருட்டு என்ற வேறு பெயரும் உண்டு.

## கற்பவை கற்றபின்

**ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள் ஆகியவற்றின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

| ஐம்பெருங் காப்பியங்கள் | ஐஞ்சிறு காப்பியங்கள் |
|---|---|
| சிலப்பதிகாரம் | சூளாமணி |
| மணிமேகலை | நீலகேசி |
| சீவகசிந்தாமணி | உதயண குமார காவியம் |
| வளையாபதி | யசோதர காவியம் |
| குண்டலகேசி | நாககுமார காவியம் |



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

கவிதைப் பேழை

இயல் 3

# வருமுன் காப்போம்

கவிமணி தேசிக விநாயகனார்

## கவிமணி

- கவிமணி எனப் போற்றப்படும் தேசிக விநாயகனார், குமரி மாவட்டம் தேரூரில் பிறந்தவர் முப்பத்தாறு ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியவர்.
- இவர், ஆசியஜோதி, மருமக்கள் வழி மான்மியம், கதர் பிறந்த கதை ஆகிய கவிதை நூல்களையும் உமர்கய்யாம் பாடல்கள் என்னும் மொழிபெயர்ப்பு நூலையும் படைத்துள்ளார்.

## மனப்பாடப் பாடல்

**உடலின் உறுதி உடையவரே**
**உலகில் இன்பம் உடையவராம்;**
**இடமும் பொருளும் நோயாளிக்கு**
**இனிய வாழ்வு தந்திடுமோ?**

**சுத்தம் உள்ள இடமெங்கும்**
**சுகமும் உண்டு நீயதனை**
**நித்தம் நித்தம் பேணுவையேல்**
**நீண்ட ஆயுள் பெறுவாயே!**

**காலை மாலை உலாவிநிதம்**
**காற்று வாங்கி வருவோரின்**
**காலைத் தொட்டுக் கும்பிட்டுக்**
**காலன் ஓடிப் போவானே!**

*ஆசிரியர் : கவிமணி தேசிக விநாயகனார்*

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| நித்தம் நித்தம் | நாள்தோறும் | வையம் | உலகம் |
| மட்டு | அளவு | பேணுவையேல் | பாதுகாத்தால் |
| சுண்ட | நன்கு | திட்டுமுட்டு | தடுமாற்றம் |

இயல் 3 தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **காந்தியடிகள் __________ போற்ற வாழ்ந்தார்.**

அ) நிலம் ஆ) வையம்
இ) கனம் ஈ) வானம் **விடை: ஆ) வையம்**

2. **'நலமெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.**

அ) நலம் + எல்லாம் ஆ) நலன் + எல்லாம்
இ) நலம் + எலாம் ஈ) நலன் + எலாம் **விடை: அ) நலம் + எல்லாம்**

3. **இடம் + எங்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________.**

அ) இடவெங்கும் ஆ) இடம்எங்கும்
இ) இடமெங்கும் ஈ) இடம்மெங்கும் **விடை: இ) இடமெங்கும்**

**வருமுன்காப்போம் - இப்பாடலில் இடம்பெற்றுள்ள மோனை, எதுகை, இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.**

| மோனை | | எதுகை | | இயைபு | |
|---|---|---|---|---|---|
| முதல் எழுத்து ஒன்றாக வருவது. | | இரண்டாவது எழுத்து ஒன்றாக வருவது. | | இறுதி எழுத்து ஒன்றாக வருவது. | |
| வருமுன் | வையம் | உடலின் | கூழை | உடையவரே | பட்டிடுவாய் |
| உடலின் | காலை | இடமும் | ஏழை | உடையவராம் | விழுந்திடுவாய் |
| உலகில் | காற்று | சுத்தமுள்ள | மட்டு | பெறுவாயே | அப்பா |
| இடமும் | காலை | நித்தம் | திட்டு | போவானே | அப்பா |
| இனிய | காலன் | காலை | தூய | குடியப்பா | அறிவாயே |
| சுத்தமுள்ள | கூழை | காலன் | நோயை | உறங்கப்பா | காப்பாயே |
| சுகமும் | குளித்த | | அருமை | | வாழ்வாயே |
| நித்த | திட்டு | | வருமுன் | | |
| நீண்ட | தினமும் | | | | |
| அருமை | நோயை | | | | |
| அடையும் | நூறு | | | | |

### குறுவினா.

1. **நம்மை நோய் அணுகாமல் காப்பவை யாவை?**

நடைப்பயிற்சியும், நல்ல காற்றும் நம்மை நோய் அணுகாமல் காப்பவை ஆகும்.

2. **அதிகமாக உண்பதால் ஏற்படும் தீமைகளாகக் கவிமணி குறிப்பிடுவன யாவை?**

அதிகமாக உண்பதால் செரிமானம் தடுமாறி நாள்தோறும் நோய்வாய்ப்பட்டு பாயில் விழுவீர்கள் என கவிமணி குறிப்பிடுகிறார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**சிறுவினா.**

**1. உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

- உடலில் உறுதி கொண்டவரே, உலகில் மகிழ்ச்சி உடையவராவார். உடல் உறுதியற்ற நோயாளர்க்கு வாழும் இடமும் செல்வமும் இனிய வாழ்வு தராது. சுத்தம் நிறைந்துள்ள எல்லா இடங்களிலும் சுகம் உண்டு. நாள்தோறும் நீங்கள் தூய்மையைப் போற்றிப் பாதுகாத்தால் நீடித்த வாழ்நாளைப் பெறலாம்.
- காலையும் மாலையும் நடைப்பயிற்சி மேற்கொண்டு, நல்ல காற்றைச் சுவாசித்து வருவோரை நோய் அணுகாது. அவர் உயிரைக் கவர எமனும் அணுகமாட்டான். எனவே, நீங்கள் கூழைக் குடித்தாலும் குளித்தபிறகே குடித்தல் வேண்டும்! நீங்கள் வறுமையில் வாழ்ந்தாலும் இரவில் நன்றாக உறங்குதல் வேண்டும்.
- அளவாக உண்ணாமல் அதிகமாக உண்டால் செரிமானம் தடுமாறி நாள்தோறும் நோய்வாய்ப்பட்டுப் பாயில் விழுவீர்கள். தூய்மையான காற்றும், நல்ல குடிநீரும், நன்கு பசித்த பிறகு உண்பதும் நம்மை நோய் அணுகாமல் காப்பாற்றும்! நூறாண்டு வாழ வைக்கும். அரிய நம் உடல் நலமோடு இருப்பதற்கான வழிகள் இவை என்பதை அறிவீர்களாக! ஆகவே நோய் வருமுன் காப்போம்! உலகம் புகழ வாழ்வோம்!

**சிந்தனை வினா.**

**நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளாக நீங்கள் கருதுவன யாவை?**

- உடலின் வலிமைக்கும், நோய் வராமல் தடுப்பதற்கும் உடற்பயிற்சி அவசியமானது. உடற்பயிற்சியால் இரத்தவோட்டம் சீராகும்.
- உடலின் கழிவுப் பொருள்கள் வெளியேறும். துணிவும், தெம்பும், சுறுசுறுப்பும் ஏற்படும், அதனால் விளையாட்டு, தண்டால், நீச்சல், உலாவுதல் போன்ற உடற்பயிற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும்.
- நாம் வாழும் வீடும், சுற்றுப்புறமும் தூய்மையாய் இருக்க வேண்டும். காற்றும் கதிரொளியும் தாராளமாக உள்ளே புகும் வகையில் வீடும், உறங்கும் இடமும் அமைய வேண்டும்.
- உணவே மருந்து மருந்தே உணவு என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே, அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

**1. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது ________.**

அ) புதுமொழி ஆ) பழமொழி
இ) சிறுமொழி ஈ) அறிவுமொழி **விடை: ஆ) பழமொழி**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. நோய் வந்த பின் தீர்க்க முயல்வதை விட வருமுன் காப்பதே ________.

அ) பொதுவுடைமை ஆ) தன்னுடைமை
இ) அறிவுடைமை ஈ) அன்புடைமை **விடை: இ) அறிவுடைமை**

3. நல்ல உணவு, உடல் தூய்மை, உடற்பயிற்சி ஆகியவையே ________ நலத்திற்கு அடிப்படை.

அ) நல்ல உடல் ஆ) அறிவு உடல்
இ) அன்புடல் ஈ) துன்ப உடல் **விடை: அ) நல்ல உடல்**

4. 'வருமுன் காப்போம்' பாடலைப் பாடியவர் ________.

அ) பாரதியார் ஆ) திருமூலர்
இ) ஔவையார் ஈ) கவிமணி **விடை: ஈ) கவிமணி**

5. உடலில் உறுதி கொண்டவரே, உலகில் ________ உடையவராவார்.

அ) அன்பு ஆ) வீரம்
இ) பரிவு ஈ) மகிழ்ச்சி **விடை: ஈ) மகிழ்ச்சி**

6. நடைப்பயிற்சி மேற்கொண்டு, நல்ல காற்றைச் சுவாசித்து வருவோர் உயிரைக் கவர ________ அணுகமாட்டான்.

அ) வீரன் ஆ) எமன்
இ) கள்வன் ஈ) வேலன் **விடை: ஆ) எமன்**

7. கவிமணி எனப் போற்றப்படுபவர் ________.

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) தேசிக விநாயகனார் ஈ) கம்பர் **விடை: இ) தேசிக விநாயகனார்**

8. கவிமணி பிறந்த ஊர் ________.

அ) நெல்லை ஆ) செங்கை
இ) திருவாரூர் ஈ) தேரூர் **விடை: ஈ) தேரூர்**

9. கவிமணி ________ ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்.

அ) 36 ஆ) 35
இ) 34 ஈ) 26 **விடை: அ) 36**

10. ஆசியஜோதி நூலின் ஆசிரியர் ________.

அ) கம்பர் ஆ) பாரதியார்
இ) அறிவழகன் ஈ) கவிமணி **விடை: ஈ) கவிமணி**

11. கதர் பிறந்த கதையின் ஆசிரியர் ________.

அ) கவிமணி ஆ) காந்தி
இ) நேரு ஈ) பகத்சிங் **விடை: அ) கவிமணி**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

12. கவிமணி மொழிபெயர்ப்பு செய்த நூல் ________.

அ) ஆசியஜோதி ஆ) மலரும் மாலையும்

இ) உமர்கய்யாம் பாடல்கள் ஈ) கதர் பிறந்த கதை

**விடை: இ) உமர்கய்யாம் பாடல்கள்**

13. மலரும் மாலையும் நூலின் ஆசிரியர் ________.

அ) சுரதா ஆ) கவிமணி

இ) வாணிதாசன் ஈ) பாரதியார் **விடை: ஆ) கவிமணி**

14. 'உடையவராம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) உடை + யவராம் ஆ) உடையவர் + ராம்

இ) உடையவர் + யாம் ஈ) உடையவர் + ஆம்

**விடை: ஈ) உடையவர் + ஆம்**

15. 'சுத்தமுள்ள' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) சுத்தம் + உள்ள ஆ) சத்தம் + அள்ள

இ) சுத்த + முள்ள ஈ) சுத்தம் + இள்ள **விடை: அ) சுத்தம் + உள்ள**

16. 'குடியப்பா' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) குடி + யப்பா ஆ) குடி + அப்பா

இ) குடி + உப்பா ஈ) குடிய + ப்பா **விடை: ஆ) குடி + அப்பா**

17. 'உறங்கப்பா' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) உறங் + கப்பா ஆ) உற + அப்பா

இ) உறங்கு + அப்பா ஈ) உ + அறங்கப்பா

**விடை: இ) உறங்கு + அப்பா**

18. 'நன்மை + நீர்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) நன்மைநீர் ஆ) நல்லநீர்

இ) நன்நீர் ஈ) நன்னீர் **விடை: ஈ) நன்னீர்**

19. 'தினம் + உம்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) தினம்உம் ஆ) தின்னம்

இ) தினமும் ஈ) தின்னமும் **விடை: இ) தினமும்**

## குறுவினா.

1. எது அறிவுடைமை?

நோய் வந்த பின் தீர்க்க முயல்வதை விட வருமுன் காப்பதே அறிவுடைமை.

2. நல்ல உடல் நலத்திற்கு அடிப்படைகள் யாவை?

நல்ல உணவு, உடல் தூய்மை, உடற்பயிற்சி ஆகியவையே நல்ல உடல் நலத்திற்கு அடிப்படைகள்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**3. உலகில் மகிழ்ச்சி உடையவர் யார்?**

உடலில் உறுதி கொண்டவரே, உலகில் மகிழ்ச்சி உடையவராவார்.

**4. எவை இனிய வாழ்வு தராது?**

உடல் உறுதியற்ற நோயாளர்க்கு வாழும் இடமும் செல்வமும் இனிய வாழ்வு தராது.

**5. நீடித்த வாழ்நாளை எவ்வாறு பெறலாம்?**

நாள்தோறும் தூய்மையைப் போற்றிப் பாதுகாத்தால் நீடித்த வாழ்நாளைப் பெறலாம்.

**6. எமன் யாரை அணுக மாட்டான்?**

காலையும் மாலையும் நடைப்பயிற்சி மேற்கொண்டு, நல்ல காற்றைச் சுவாசித்து வருவோரை எமனும் அணுகமாட்டான்.

**7. கூழை எவ்வாறு குடித்தல் வேண்டும்?**

கூழைக் குடித்தாலும் குளித்த பிறகே குடித்தல் வேண்டும்.

**8. எப்பொழுது நன்றாக உறங்குதல் வேண்டும்?**

வறுமையில் வாழ்ந்தாலும் இரவில் நன்றாக உறங்குதல் வேண்டும்.

**9. கவிமணி இயற்றிய நூல்கள் யாவை?**

ஆசியஜோதி, மருமக்கள் வழி மான்மியம், கதர் பிறந்த கதை, மலரும் மாலையும், மொழிபெயர்ப்பு நூலான உமர்கய்யாம் பாடல்கள் போன்றவை கவிமணி இயற்றிய நூல்கள் ஆகும்.

## சிறுவினா

**கவிமணி குறிப்பு எழுதுக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | தேசிக விநாயகம் |
| ஊர் | : | குமரிமாவட்டம் தேரூர் |
| பெற்றோர் | : | சிவதாணு பிள்ளை - ஆதிலட்சுமி |
| பிறப்பு | : | 27.08.1876 |
| பணி | : | பள்ளி ஆசிரியர், கல்லூரிப் பேராசிரியர், எழுத்துப்பணி. |
| இயற்றியவை | : | மலரும் மாலையும், ஆசிய ஜோதி, மருமக்கள் வழி மான்மியம், காந்தளூர் சாலை, தேவியின் கீர்த்தனைகள், உமர்கய்யாம் பாடல்கள், கதர் பிறந்த கதை. |
| சிறப்பு | : | 1940இல் 'கவிமணி' பட்டம் பெற்றார். |
| இறப்பு | : | 26.09.1954 (78 வயது) |

இயல் 3

தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## கற்பவை கற்றபின்

1. 'தன் சுத்தம்' என்னும் தலைப்பில் படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.



2. சுகாதாரம் பற்றிய பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.

**எ.கா: சுத்தம் சோறு போடும்.**

- நோய்க்கிடங் கொடேல்.
- கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
- ஆறின கஞ்சி பழங் கஞ்சி.
- காற்றுக்கு எதிரே துப்பினால் முகத்தில் விழும்.
- காயம்படுமுன் கதறி அழாதே.
- சோம்பேறி பருவத்தில் உழுது பயிர் செய்யமாட்டான்.
- ஆரோக்கியமான உடலில் ஆரோக்கியமான மனம் இருக்கும்.
- ஆள்பாதி ஆடை பாதி.
- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
- தீங்குகளின் உறைவிடம் சோம்பல்.
- வருமுன் காப்பதே நலம்.
- கூழானாலும் குளித்துக் குடி.
- வீட்டின் சுத்தமே! நாட்டின் சுத்தம்!
- சுத்தமிருந்தால் சுகம் உண்டு.
- சுத்தமான காற்று சுகாதாரமான காற்று.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

உரைநடை உலகம்

இயல் 3

# தமிழர் மருத்துவம்

நேர்காணல்

## பாடநூல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **தொடக்க காலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்கு ________ பயன்படுத்தினர்.**

அ) தாவரங்களை ஆ) விலங்குகளை

இ) உலோகங்களை ஈ) மருந்துகளை **விடை: அ) தாவரங்களை**

2. **தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ________ நீட்சியாகவே உள்ளது.**

அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின்

இ) உணவின் ஈ) வாழ்வின் **விடை: இ) உணவின்**

3. **உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று ________.**

அ) தலைவலி ஆ) காய்ச்சல்

இ) புற்றுநோய் ஈ) இரத்தக்கொதிப்பு

**விடை: ஈ) இரத்தக்கொதிப்பு**

4. **சமையலறையில் செலவிடும் நேரம் ________ செலவிடும் நேரமாகும்.**

அ) சுவைக்காக ஆ) சிக்கனத்திற்காக

இ) நல்வாழ்வுக்காக ஈ) உணவுக்காக **விடை: இ) நல்வாழ்வுக்காக**

**குறுவினா.**

1. **மருத்துவம் எப்போது தொடங்கியது?**

தொடக்க காலத்தில் மனிதனுக்கு நோய் வந்தபோது இயற்கையாக வளர்ந்த தாவரங்களைக் கொண்டும், அவனுக்கு அருகில் கிடைத்த தாவர, கனிம, சீவப் பொருள்களைக் கொண்டும் நோயைத் தீர்க்க முயன்றிருப்பான். அப்போதே மருத்துவம் தொடங்கியது.

2. **நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?**

- 45 நிமிடத்தில் 3 கி.மீ. நடைப்பயணம்.
- 15 நிமிடம் யோகா, தியானம், மூச்சுப்பயிற்சி.
- 7 மணி நேர தூக்கம்.
- 3 லிட்டர் தண்ணீர் அருந்துதல்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. **தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?**

மூலிகை, தாவர இலை, தாவர வேர், உலோகங்கள், பாஷாணங்கள், தாதுப்பொருட்கள் ஆகியன தமிழர் மருத்துவத்தில் மருந்துப்பொருட்களாகப் பயன்படுகின்றனவாகும்.

## சிறுவினா.

1. **நோய்கள் பெருகக் காரணம் என்ன?**

- மனிதன் இயற்கையை விட்டு விலகி வந்ததுதான் முதன்மைக் காரணம்.
- மாறிப்போன உணவு, மாசு நிறைந்த சுற்றுச்சூழல், மன அழுத்தம் இவை மூன்றும் குறிப்பிடத்தக்க காரணங்கள்.
- தன் உணவுக்காக வேறு எதைப்பற்றியும் கவலை கொள்ளாமல், நிலத்தை உரங்களாலும், பூச்சிக்கொல்லிகளாலும் நச்சுப்படுத்தலாம் என்ற அலட்சியமான எண்ணம், மன அழுத்தம், எது கேளிக்கை? எது குதூகலம்? எது படிப்பு? எது சிந்தனை? என்ற புரிதல் இல்லாமை ஆகியவற்றைக் கூடுதல் காரணங்களாகச் சொல்லலாம்.
- நம்முடைய வாழ்வியலைச் செம்மைப்படுத்துவதற்காக நாம் அறிவியல் அறிவை, மேம்பட்ட அறிவை வளர்த்தோம். ஆனால் நுண்ணறிவைத் தொலைத்துவிட்டோம்.
- இயற்கையோடு இயைந்து வாழலாம் என்கிற அறிவை நாம் மறந்துவிட்டோம். இதுவே இன்றைக்குப் பல நோய்கள் பெருக மிக முக்கியமான காரணம் ஆகும்.

2. **பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறம் அறிவுரைகள் யாவை?**

- நோய் வந்த பின்பு மருத்துவமனைக்குச் செல்வதை விட வருமுன் காக்கும் வாழ்க்கையை வாழக் கற்றுக் கொள்ளுங்கள்.
- சரியான உணவு, சரியான உடற்பயிற்சி, சரியான தூக்கம் ஆகிய மூன்றும் உங்களை நலமாக வாழவைக்கும்.
- விலை உயர்ந்த உணவுதான் சரியான உணவு என்று எண்ணாதீர்கள்.
- எளிமையாகக் கிடைக்கக் கூடிய காய்கறிகள், கீரைகள், பழங்கள், சிறு தானியங்களை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- கணினித் திரையிலும், கைபேசியிலும் விளையாடுவதைத் தவிர்த்து நாள்தோறும் ஓடியாடி விளையாடுங்கள்.
- இரவுத் தூக்கம் மிகவும் இன்றியமையாதது. உரிய நேரத்தில் உறங்கச் செல்லுங்கள். அதிகாலையில் விழித்தெழுங்கள் உங்களை எந்த நோயும் அண்டாது.

## நெடுவினா.

1. **தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

- ‘வேர்பாரு; தழைபாரு மிஞ்சினக்கால் பற்பசெந்தூரம் பாரே’ என்றனர் சித்தர்கள்.
- வேர், தழையால் குணம் அடையாதபோது சில நாட்பட்ட நோய்களுக்கு, தாவரங்கள் மட்டும் அல்லாமல் உலோகங்களையும் பாஷாணங்களையும் சித்த மருந்துகளாக நம் முன்னோர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- அந்தக் காலத்தில் எப்படி மூலிகைகளை மருந்தாகப் பார்த்தார்களோ அப்படியே தாதுப்பொருட்களையும், உலோகத்தையும் பார்த்தார்கள்.
- அவற்றை மருந்துகளாக மாற்றும் வல்லமை சித்தமருத்துவத்தில் இருந்திருக்கிறது.
- ஒரு மருந்தை எடுத்துக்கொண்டால் அதற்கு விளைவும் இருக்கும்; பக்கவிளைவும் இருக்கும். ஆனால் தமிழர் மருத்துவத்தில் பக்க விளைவுகள் இல்லை. அதற்குக் காரணம் மருந்து என்பதே உணவின் நீட்சியாக இருக்கிறது.
- ஒரு கவளம் சோற்றை உடல் எப்படி எடுத்துக்கொள்கிறதோ, அப்படியே தான் சித்த மருத்துவத்தின் லேகியத்தையும், சூரணத்தையும் உடல் எடுத்துக்கொள்ளும்.
- அதனால் உணவு எப்படி பக்கவிளைவுகளைத் தருவதில்லையோ அதே போலச் சித்த மருந்துகளும் பக்கவிளைவுகளை ஏற்படுத்துவதில்லை.
- தமிழர் மருத்துவத்தின் சிறப்பு என்னவென்றால், தனித்துவமான பார்வை இதன் முதல் சிறப்பு; இரண்டாவது சூழலுக்கு இசைந்த மருத்துவம் இது. இந்த மருத்துவத்தின் பயன்பாடோ, மூலக்கூறுகளோ, மருந்துகளோ சுற்றுச்சூழலைச் சிதைக்காது.
- மிக முக்கியமான சிறப்பு என்னவென்றால், நோய்க்கான சிகிச்சையை மட்டும் சொல்லாமல், நோய் மீண்டும் வராமலிருப்பதற்கான வாழ்வியலையும் சொல்கிறது.
- அதாவது 'நோய்நாடி நோய் முதல்நாடி' என்ற திருக்குறளின்படி நோயை மட்டுமன்றி, அதன் காரணிகளையும் கண்டறிந்து ஒருவரை நோயில்லாத மனிதராக்குகிறது.

### சிந்தனை வினா.

**நோயின்றி வாழ நாம் என்னென்ன வழிகளைக் கையாளலாம்?**

**இயற்கையோடு இணைந்து உண்ணல்:**

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது உணவு. மக்கள் உண்ணும் உணவும் உணவுப் பழக்கவழக்கங்களுமே அவர்களது உடல் நலத்தையும் உள நலத்தையும் தீர்மானிக்கின்றன. தமிழர் மருத்துவத்தில் உணவு என்பது அனைத்து நோய்களையும் தீர்க்கக் கூடிய சஞ்சீவி மருந்தாகக் கருதப்படுகிறது.

**உண்ணும் முறை :**

எளிதில் செரிக்கக் கூடிய பழம், காய், பருப்பு, அரிசி, கோதுமை, பால் இவற்றையே குடல் ஏற்றுக் கொள்கிறது. நாச்சுவை கருதி உண்ணாமல், உடல் நலங்கருதி உண்ணுதலே நல்லது. உணவை விரைவாக விழுங்கக்கூடாது; நன்றாக மென்று விழுங்குதல் வேண்டும்.

**பயிற்சிகள் :**

தினமும் நாற்பத்தைந்து நிமிடத்தில் மூன்று கி.மீ. நடைப்பயணம், பதினைந்து நிமிடம் யோகா, தியானம், மூச்சுப்பயிற்சி, ஏழு மணிநேர தூக்கம், மூன்று லிட்டர் தண்ணீர் அருந்துவது அவசியம்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**தவிர்க்க வேண்டியன:**

நோய்க்கு முதல் காரணம் உப்பு. இதனைக் குறைவாக சேர்த்தல் நன்று. உப்பு நிறைந்த பொருள்களான ஊறுகாய், அப்பளம், வடகம், கருவாடு, வறுத்த முந்திரிபருப்பு, வறுத்த உருளைச் சீவல், வாழைக்காய்ச் சீவல், புளித்த மோர் முதலியனவற்றை முழுவதுமாகத் தவிர்த்தல் வேண்டும். கொழுப்பு நிறைந்த இறைச்சிகள், முட்டையின் மஞ்சள் கரு, தயிர், நெய், வெண்ணெய், பாலாடை, பனிக்கூழ், இனிப்புக்கட்டி ஆகியவற்றை நீக்குதல் வேண்டும்.

**சமச்சீர் உணவு :**

'உணவே மருந்து மருந்தே உணவு' என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே, அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **அருந்தும் உணவே அருமருந்தென அறிந்தவர் __________ மக்கள்.**
   அ) கேரள ஆ) தெலுங்கு
   இ) தமிழ் ஈ) கர்நாடகம் **விடை: இ) தமிழ்**

2. **__________ மக்கள் உடற்கூறு பற்றிய அறிவிலும், மருத்துவம் பற்றிய புரிதலிலும் சிறந்து விளங்கினர்.**
   அ) தமிழ் ஆ) சீனா
   இ) ஆங்கிலேயர் ஈ) கேரளம் **விடை: அ) தமிழ்**

3. **தமிழர் மருத்துவம் __________ என்று அழைக்கப்படுகிறது.**
   அ) ஹோமியோபதி ஆ) அலோபதி
   இ) அக்குபஞ்சர் ஈ) சித்த மருத்துவம் **விடை: ஈ) சித்த மருத்துவம்**

4. **உடலை வளப்படுத்தி உள்ளத்தைச் சீராக்குவது __________ கலை.**
   அ) நாட்டியம் ஆ) ஓவியம்
   இ) உடற்பயிற்சி ஈ) யோகனம் **விடை: ஈ) யோகனம்**

5. **தமிழர் __________ சாங்கியம், ஆசீவகம் ஆகும்.**
   அ) மெய்யியல் ஆ) வரலாறு
   இ) அறிவியல் ஈ) தத்துவங்கள் **விடை: ஈ) தத்துவங்கள்**

6. **__________ மற்றும் __________ காலத்தில் அந்தந்த மதங்களின் கூறுகள் நம் மருத்துவத்தில் இருந்தன.**
   அ) இந்து, முஸ்லிம் ஆ) சைவம், வைணவம்
   இ) இந்து, சமணம் ஈ) சமணம், பௌத்தம்
   **விடை: ஈ) சமணம், பௌத்தம்**

3 இயல் தமிழ்

7. __________களுடைய நவீன அறிவியல் பார்வை நம்மீது தாக்கத்தை ஏற்படுத்தியது.
அ) பாரசீகர்கள் ஆ) ஆங்கிலேயர்கள்
இ) ஆரியர்கள் ஈ) முகலாயர்கள் **விடை: ஆ) ஆங்கிலேயர்கள்**

8. 'வேர்பாரு; தழைபாரு மிஞ்சினக்கால் பற்பசெந்தூரம் பாரே' என்றனர் __________.
அ) தமிழர்கள் ஆ) சித்தர்கள்
இ) சைவர்கள் ஈ) முன்னோர்கள் **விடை: ஆ) சித்தர்கள்**

9. நாட்பட்ட நோய்களுக்கு, தாவரங்கள் மட்டும் அல்லாமல் __________களையும் பயன்படுத்தினர்.
அ) உலோகங்கள் ஆ) அலோகங்கள்
இ) சாயங்கள் ஈ) வேதியல் **விடை: அ) உலோகங்கள்**

10. தாதுப்பொருட்களையும், உலோகத்தையும் மருந்துகளாக மாற்றும் வல்லமை __________ மருத்துவத்தில் இருந்திருக்கிறது.
அ) நவீன ஆ) மூலிகை
இ) சித்த ஈ) சீன **விடை: இ) சித்த**

11. 'நோய்நாடி நோய் முதல்நாடி' என்று கூறியவர் __________.
அ) கம்பர் ஆ) வள்ளுவர்
இ) ஔவையார் ஈ) திருமூலர் **விடை: ஆ) வள்ளுவர்**

12. தினமும் __________ நிமிடத்தில் மூன்று கி.மீ. நடைப்பயணம் மேற்கொள்ள வேண்டும்.
அ) 25 ஆ) 30
இ) 40 ஈ) 45 **விடை: ஈ) 45**

13. தினமும் __________ நிமிடம் யோகா செய்ய வேண்டும்.
அ) 10 ஆ) 15
இ) 20 ஈ) 25 **விடை: ஆ) 15**

14. தினமும் __________ மணிநேரம் தூங்குவது அவசியம்.
அ) 7 ஆ) 8
இ) 6 ஈ) 5 **விடை: அ) 7**

15. தினமும் __________ லிட்டர் தண்ணீர் அருந்துவது அவசியம்.
அ) 5 ஆ) 4
இ) 2 ஈ) 3 **விடை: ஈ) 3**

16. கணினித்திரையிலும் கைபேசியிலும் விளையாடுவதைத் தவிர்த்து நாள்தோறும் __________ விளையாடுங்கள்.
அ) கபடி ஆ) நொண்டி
இ) ஓடியாடி ஈ) செஸ் **விடை: இ) ஓடியாடி**

## பிரித்து எழுதுக .

| | | | | |
|---|---|---|---|---|
| மருந்தென | = | மருந்து | + | என |
| உடற்கூறுகள் | = | உடல் | + | கூறுகள் |
| தங்களுக்கென | = | தங்களுக்கு | + | என |
| வந்துள்ளோம் | = | வந்து | + | உள்ளோம் |
| முயன்றிருப்பான் | = | முயன்று | + | இருப்பான் |
| அறிந்திருப்பர் | = | அறிந்து | + | இருப்பர் |
| பழந்தமிழர் | = | பழமை | + | தமிழர் |
| வளப்படுத்தி | = | வளம் | + | படுத்தி |
| மருந்தில்லா | = | மருந்து | + | இல்லா |
| இவற்றுக்கெல்லாம் | = | இவற்றுக்கு | + | எல்லாம் |
| கண்டறிந்து | = | கண்டு | + | அறிந்து |
| வாழ்வியலுடன் | = | வாழ்வியல் | + | உடன் |
| துரிதமாக | = | துரிதம் | + | ஆக |
| மாறிப்போனது | = | மாறி | + | போனது |
| ஒளிந்திருக்கும் | = | ஒளிந்து | + | இருக்கும் |

## சேர்த்தெழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| இரத்தம் | + | கொதிப்பு | = | இரத்தக்கொதிப்பு |
| உடல் | + | பயிற்சி | = | உடற்பயிற்சி |
| அவசியம் | + | ஆயிற்று | = | அவசியமாயிற்று |
| நாள் | + | பட்ட | = | நாட்பட்ட |
| மீண்டு | + | எழுந்து | = | மீண்டெழுந்து |
| என்று | + | எல்லாம் | = | என்றெல்லாம் |
| பட்டியல் | + | இட்டு | = | பட்டியலிட்டு |
| சுற்று | + | சூழல் | = | சுற்றுச்சூழல் |
| மட்டும் | + | அன்றி | = | மட்டுமன்றி |
| மற்று | + | ஒரு | = | மற்றொரு |
| உணவுக்கு | + | ஆக | = | உணவுக்காக |
| நுண் | + | அறிவு | = | நுண்ணறிவு |
| சரி | + | அன்று | = | சரியன்று |
| சமையல் | + | அறை | = | சமையலறை |
| விழித்து | + | எழுங்கள் | = | விழித்தெழுங்கள் |

## குறுவினா.

1. **பாடப்பகுதியில் வள்ளுவர் மருந்து பற்றிய குறளாக குறிப்பிடுவது எது?**

‘மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்’ என்கிறார் வள்ளுவர்.

3 இயல் தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**2. பாரம்பரிய மருத்துவ முறையில் தமிழ் மக்கள் எவ்வாறு சிறந்திருந்தனர்?**

- தமிழ்மக்கள் உடற்கூறுகள் பற்றிய அறிவிலும், மருத்துவம் பற்றிய புரிதலிலும் சிறந்து விளங்கினர்.
- உலகில் பல்வேறு மருத்துவ முறைகள் இருந்தாலும் தங்களுக்கெனப் பாரம்பரிய மருத்துவ முறைகளையும் உருவாக்கிப் பின்பற்றி வந்தனர்.

**3. பழந்தமிழரின் மருத்துவம் பற்றிய குறிப்புகள் எவற்றில் கிடைக்கின்றன?**

பழந்தமிழர்கள் மருத்துவத்தை அறிந்தது மட்டுமன்றி மருத்துவத்தில் சிறந்தும் விளங்கினார்கள் என்பதற்கான குறிப்புகள் பழந்தமிழ் இலக்கியங்களில் கிடைக்கின்றன.

**4. பழந்தமிழர்கள் அறிந்திருந்த மருத்துவ முறைகள் யாவை?**

பழந்தமிழர்கள், மூலிகை மருத்துவம், அறுவை மருத்துவம், மருந்தில்லா மருத்துவம் போன்றவற்றையும் உடலை வளப்படுத்தி உள்ளத்தைச் சீராக்கும் யோகம் முதலிய கலைகளையும் அறிந்திருந்தார்கள்.

**5. தமிழர் எவ்வுண்மையை விளக்கினர்?**

நோயை இயற்கையில் கிடைக்கும் பொருட்கள், அப்பொருளின் தன்மை அதன் சுவை இவற்றைக் கொண்டே குணப்படுத்த முடியும் என்ற உண்மையை மிகத்தெளிவாக விளக்கினர்.

**6. தமிழர் மருத்துவத்தின் முக்கியச் சிறப்பு என்ன?**

- தமிழர் மருத்துவத்தின் மிக முக்கியமான சிறப்பு என்னவென்றால், நோய்க்கான சிகிச்சையை மட்டும் சொல்லாமல், நோய் மீண்டும் வராமலிருப்பதற்கான வாழ்வியலையும் சொல்கிறது.
- அதாவது ‘நோய்நாடி நோய் முதல்நாடி’ என்ற குறளின்படி நோயை மட்டுமன்றி அதன் காரணிகளையும் கண்டறிந்து ஒருவரை நோயில்லாத மனிதராக்குகிறது.

**7. இன்று நோய்கள் பெருகுவதற்கான மூன்று காரணங்கள் யாவை?**

- மனிதன் இயற்கையை விட்டு விலகி வந்ததுதான் முதன்மைக் காரணம்.
- மாறிப்போன உணவு, மாசு நிறைந்த சுற்றுச்சூழல், மன அழுத்தம் இவை மூன்றும் குறிப்பிடத்தக்க காரணங்கள்.

### சிறுவினா.

**1. தமிழர் மருத்துவ முறைகள் எவ்வாறு பரிணாம வளர்ச்சி அடைந்தது?**

- தமிழரது நிலம், நிறைந்த பண்பாடுகளும் தத்துவங்களும் அடங்கியது.
- நோய்கள் எல்லாம் பேய், பிசாசுகளால் வருகின்றன; பாவ, புண்ணியத்தால் வருகின்றன என்று உலகத்தின் பல பகுதிகளில் சொல்லிக் கொண்டிருந்த காலத்தில், தமிழர் தத்துவங்களான சாங்கியம், ஆசீவகம் போன்றவை உடலுக்கும் பிரபஞ்சத்துக்கும் உள்ள ஒற்றுமையைக் கண்டறிந்து, உடலில் பஞ்சபூதங்களினால் ஏற்படும் மாற்றங்களை விளங்கின.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- நோயை இயற்கையில் கிடைக்கும் பொருட்கள், அப்பொருள்களின் தன்மை அதன் சுவை இவற்றைக் கொண்டே குணப்படுத்த முடியும் என்ற உண்மையை மிகத் தெளிவாக விளக்கினர்.
- தமிழர் மருத்துவம் பண்பாட்டுக் கூறாக ஆகும்போது நாட்டு வைத்தியமாகவும், பாட்டி வைத்தியமாகவும் மரபு சார்ந்த சித்த வைத்தியமாகவும், உணவு சார்ந்த மருத்துவமாகவும், பண்பாடு சார்ந்த மருத்துவமாகவும் விரிந்திருக்கிறது.

**2. உயர்வாக இருந்த தமிழர் மருத்துவமுறை பிறகு பின்தங்கிப் போனதற்குக் காரணம் என்ன?**

- நம்மீது நிகழ்ந்த படையெடுப்புகள் தாக்கத்தை ஏற்படுத்தின.
- தமிழர் மருத்துவம் அவரவர் வாழ்வியலுடனும், தத்துவங்களுடனும் பிணைந்துதான் வந்து கொண்டிருந்தது.
- சமணர் மற்றும் பௌத்தர் காலத்தில் அந்தந்த மதங்களின் கூறுகள் நம் மருத்துவத்தில் இருந்தன. பிறகு சைவம் ஓங்கிய போது சைவ சித்தாந்தத்தின் கூறுகள் கலந்தன.
- இறுதியில் ஆங்கிலேயர்கள் வந்தனர். அவர்களுடைய நவீன அறிவியல் பார்வை நம்மீது தாக்கத்தை ஏற்படுத்தியது.
- சித்த மருத்துவம் என்பது மரபுவழி மருத்துவமாகவும், நாட்டு மருத்துவமாகவும் சுருங்கியது. இறுதியில் கிராமம் சார்ந்த மருத்துவமாக மாறிப்போனது.
- நவீன மருத்துவத்தில், துரிதமாகச் சிலநோய்களுக்குக் கிடைத்த தீர்வுகள் பெரும்பயனையும் வரவேற்பையும் கொடுத்தன.

**3. தமிழர் மருத்துவம் மறுமலர்ச்சி அடைவதற்கான காரணங்கள் யாவை?**

- பல ஆண்டுகளுக்குப் பின்னால் தான் பாரம்பரிய மருத்துவம் மிகப்பெரிய அனுபவத்தின் நீட்சி என்பதும் மிகப்பெரிய பட்டறிவில் ஒரு பெரிய அறிவியல் கண்டிப்பாக ஒளிந்திருக்கும் என்பதும் புரியத் தொடங்கின. குறிப்பாகச் சர்க்கரை, இரத்தக்கொதிப்பு, புற்றுநோய், மாரடைப்பு முதலிய வாழ்வியல் நோய்கள் பெருகிய நிலையைச் சொல்லலாம்.
- இவற்றைத் தீர்க்க வெறும் இரசாயன மருந்துகள் போதா. கூடவே உணவு, வாழ்வியல், உடற்பயிற்சி, யோகம் இவையும் கூட்டாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
- தொடர் சிகிச்சைக்குப் பிற பக்க விளைவுகள் இல்லா மருந்துகளின் தேவை அவசியமாயிற்று. அதன் பிறகுதான் எல்லா நாடுகளிலும் இருக்கும் பாரம்பரிய மருத்துவ முறைகளின் மீது, நவீன அறிவியல் பார்வை விழத் தொடங்கியது.
- அதனால் சித்த மருத்துவத்தின் தொன்மையும், தமிழர்களின் தொன்மையும் புரிய ஆரம்பித்தன் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
- நாட்பட்ட நோய்களுக்கு மட்டுமல்லாது புதிய தொற்றுநோய் மாதிரியான சவால்களுக்கும் இது சிறந்த மாற்றாக இருப்பது தெரிய வந்தது.
- இன்றைக்குப் பெருவாரியாக இது மீண்டெழுந்து வந்து கொண்டிருக்கிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**4. மருத்துவத்தில் பக்கவிளைவுகள் பற்றி மருத்துவர் கூறிய கருத்துகள் யாவை?**

- ஒரு மருந்தை எடுத்துக்கொண்டால் அதற்கு விளைவும் இருக்கும்; பக்க விளைவும் இருக்கும். ஆனால், தமிழர் மருத்துவத்தில் பக்க விளைவுகள் இல்லை. அதற்குக் காரணம் மருந்து என்பதே உணவின் நீட்சியாக இருக்கிறது.
- ஒரு கவளம் சோற்றை உடல் எப்படி எடுத்துக்கொள்கிறதோ, அப்படியே தான் சித்த மருத்துவத்தின் இலேகியத்தையும், சூரணத்தையும் உடல் எடுத்துக்கொள்ளும்.
- அதனால், உணவு எப்படிப் பக்க விளைவுகளைத் தருவதில்லையோ அதே போலச் சித்த மருந்துகளும் பக்கவிளைவுகளை ஏற்படுத்துவதில்லை.
- இருந்த போதிலும் சித்த மருத்துவத்தின் மீது தற்போது நடக்கும் பல அறிவியல் ஆய்வுகள் மூலம் அவற்றைத் தர நிர்ணயம் செய்து யாருக்கு எந்த மருந்து, எந்த அளவில், எந்தத் துணை மருந்து கொடுத்தால் பக்க விளைவு இருக்காது என்று பட்டியலிட்டுள்ளனர்.

**5. உணவைக் குறைப்பதுதான் எடையைக் குறைக்கும் வழியா விளக்குக.**

- இன்றைக்குப் பல உணவுக் கட்டுப்பாட்டு முறைகள் உள்ளன. எல்லாம் நல்ல முயற்சிகள் தாம். ஆனால், அவற்றைப் பின்பற்றுவதற்குத் தம் உடல் ஏற்றதாக இருக்கிறதா என்பதைக் குடும்ப மருத்துவரிடம் கேட்டு முடிவெடுக்க வேண்டும்.
- ஏனென்றால், இன்றைக்குப் பலரும் இணையத்தைப் பார்த்து அம்முறைகளுக்குச் செல்கிறார்கள்.
- சிலருக்கு அவை கேடு விளைவிக்கக்கூடும். தடாலடியாக எடையைக் குறைப்பது சரியன்று.
- ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஒன்று, ஒன்றரை ஆண்டுகளில் எடையைக் கட்டுக்குள் கொண்டு வர முயற்சிக்க வேண்டும்.
- அவசர யுகம் என்றாலும் உணவு உண்பதில், சில ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தாக வேண்டும்.
- உணவுக்காக சமையலறையில் செலவிடும் நேரத்தை, நல்வாழ்விற்காகச் செலவிடும் நேரம் என நினைக்க வேண்டும்.

## நெடுவினா.

**1. மருத்துவத்தின் தொடக்கம் குறித்தும், நாள்தோறும் நாம் செய்ய வேண்டியன குறித்தும், மாணவர்கள் கடைப்பிடிப்பன குறித்தும் எழுதுக.**

**மருத்துவத்தின் தொடக்கம் :**

தொடக்க காலத்தில் மனிதனுக்கு நோய் வந்தபோது இயற்கையாக வளர்ந்த தாவரங்களைக் கொண்டும் அவனுக்கு அருகில் கிடைத்தத் தாவர, கனிம, சீவப் பொருள்களைக் கொண்டும் நோயைத் தீர்க்க முயன்றிருப்பான். தாவரங்களின் வேர், பட்டை, இலை, பூ, கனி முதலியவற்றை மருந்தாகப் பயன்படுத்தியிருப்பான். இவ்வாறுதான் மனிதர்களுக்கும் மருத்துவத்திற்குமான தொடர்பு தொடங்கியது.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**நாள்தோறும் செய்ய வேண்டியன :**

தினமும் நாற்பத்தைந்து நிமிடத்தில் மூன்று கி.மீ. நடைப்பயணம், பதினைந்து நிமிடம் யோகா, தியானம், மூச்சுப்பயிற்சி, ஏழுமணி நேர தூக்கம், மூன்று லிட்டர் தண்ணீர் அருந்துவது அவசியம். எங்கோ விளையும் ஆப்பிளைச் சாப்பிடுவதை விட, நமது ஊரில் விளையும் கொய்யா, இலந்தை, நாவல், பப்பாளி, நெல்லி, வாழைப்பழங்கள் ஆகியவற்றைக் காலை உணவுக்கு முன்பு சாப்பிடலாம்.

**மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டியன:**

நோய் வந்த பின்பு மருத்துவமனைக்குச் செல்வதை விட வருமுன் காக்கும் வாழ்க்கையை வாழக் கற்றுக் கொள்ளுங்கள். சரியான உணவு, சரியான உடற்பயிற்சி, சரியான தூக்கம் ஆகிய மூன்றும் உங்களை நலமாக வாழ வைக்கும். விலை உயர்ந்த உணவுதான் சரியான உணவு என்று எண்ணாதீர்கள். எளிமையாகக் கிடைக்கக்கூடிய காய்கறிகள், கீரைகள், பழங்கள், சிறுதானியங்களை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். கணினித்திரையிலும் கைபேசியிலும் விளையாடுவதைத் தவிர்த்து நாள்தோறும் ஓடியாடி விளையாடுங்கள். இரவுத்தூக்கம் இன்றியமையாதது. உரிய நேரத்தில் உறங்கச் செல்லுங்கள்; அதிகாலையில் விழித்தெழுங்கள் உங்களை எந்த நோயும் அண்டாது.

## கற்பவை கற்றபின்

1. **நீங்கள் மருத்துவரிடம் கேட்க விரும்பும் ஐந்து வினாக்களை எழுதுக.**

- பல மருந்துகளின் பெயர்களை மருத்துவ நூல்களில் படிக்கின்றோம். ஆனால், அந்த மருந்துகளைப் பார்த்ததே இல்லை. மற்றவர்களுக்கும் தெரிவது இல்லை. அதைத் தெரிந்து கொண்டால் அந்த மருந்துகளின் பயன்பாட்டை நாங்கள் பயன்படுத்த வழி உண்டு. அதற்கு மருத்துவராக விளங்கும் நீங்கள் வழிவகை செய்ய முடியுமா?
- வேதிக்கலப்பு இல்லாத உணவு இன்று குறைவு. அப்படி இருக்கும்போது நோய்கள் விரைவாகவே வந்து விடுகின்றன. இதிலிருந்து மீண்டுவர தாங்கள் கூறும் அறிவுரை யாது?
- பழைய மருத்துவ தாவரங்களை மீட்டுருவாக்கம் செய்ய வழிவகை உள்ளதா?
- நவீன மருத்துவத்தைத் தவிர்த்து நாட்டு மருத்துவத்திற்கு நுழைய அரசு மருத்துவமனையில் பழைய மருத்துவமுறைக்கு வழி உள்ளதா?
- தமிழர் மருத்துவத்தைப் பெரும்பாலான தமிழர்களே ஏற்றுக்கொள்ளாத போது, தமிழர் மருத்துவத்தை உலக அளவில் பறைசாற்றுவது எப்படி?

2. **உங்கள் பகுதிகளில் கிடைக்கும் மூலிகைகளின் மாதிரிகளைத் திரட்டி அவற்றின் பயன்களை எழுதிக் காட்சிப்படுத்துக.**

மாணவர் செயல்பாடு.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

விரிவானம்

இயல் 3

# தலைக்குள் ஓர் உலகம்

சுஜாதா

**சுஜாதா**

- சுஜாதாவின் இயற்பெயர் ரங்கராஜன் என்பதாகும்.
- இவர் சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், அறிவியல் புனைவுக்கதைகள், திரைப்படக் கதை வசனங்கள் எனப் பலதுறைகளில் பணியாற்றியுள்ளார்.
- மின்னணு வாக்கு எந்திரம் தயாரிக்கும் பணியில் இவர் முக்கியப் பங்கு ஆற்றியுள்ளார்.
- என் இனிய எந்திரா, மீண்டும் ஜீனோ, ஸ்ரீரங்கத்துத் தேவதைகள், தூண்டில் கதைகள் உள்ளிட்ட பலநூல்களை எழுதியுள்ளார்.

## பாடநூல் வினாக்கள்

**1. மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை :**

உலகத்திலேயே மிகமிக வியப்பானது மனித மூளைதான். அதன் செயல்பாடுகள் விந்தையானவை; புதிரானவை. அவற்றைப் பற்றிக் காண்போம்.

**இடப்பாகச் செயல்:**

மூளைக்குச் செல்லும் நரம்புகளில் இட-வல மாற்றம் நிகழ்கிறது. அதாவது வலப்பக்கச் செய்திகள் மூளையின் இடப்பக்கப் பகுதிக்கும், இடப்பக்கச் செய்திகள் வலப்பக்கப் பகுதிக்கும் செல்கின்றன. நம்மில் பெரும்பாலானவர்கள் வலது கைக்காரர்களாக இருப்பதற்குக் காரணம் நம் மூளையின் இடது பகுதியின் அதிகப்படியான பாதிப்பினால்தான் என்று கூறுவார்கள். இடது பாதிதான் பேச, எழுத, கணக்கிட தர்க்கரீதியில் சிந்திக்க உதவுகிறது. அறிவாற்றல், பிரச்சினைகளை அலசுதல், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளில் சிறப்பது இவற்றையெல்லாம் இடதுபகுதி பார்த்துக் கொள்கிறது. நம் மொழி அறிவும் இடது பகுதியைச் சார்ந்ததே.

**வலப்பாகச் செயல்:**

இடது பாதி அண்ணன் என்றால் வலதுபாதி தம்பி போன்றது. இந்தப் பாதியால்தான் நாம் வடிவங்களை உணர்கிறோம். கவிதை எழுதுவது, படம் போடுவது, நடனம் ஆடுவது, நடிப்பது போன்ற கலை தொடர்பானவை எல்லாம் வலது பாதியில்தான். வலது பாதி சரியில்லையெனில் வீட்டுக்குப் போக வழி தெரியாமல் திண்டாடுவோம். வலது பகுதி ஆக்கிரமிப்பு அதிகமாக இருப்பவர்கள் நடிகர்களாக, பாடகர்களாக,

நடனக் கலைஞர்களாக, இசைக்கருவிகளைக் கையாளுபவர்களாக, கலைத் திறன்கள் பெற்றவர்களாகத் திகழ்வர். இடது பகுதி ஆக்கிரமிப்பு அதிகம் இருப்பவர்கள் பட்டயக் கணக்கர்களாக, கணக்கு ஆசிரியர்களாக, இந்திய ஆட்சிப் பணிக்குப் படித்தவர்களாகத் திகழ்வர்.

**முடிவுரை:**

இடதும் வலதும் கலந்து இருப்பவர்களும் உண்டு. நன்முறையில் கல்வி கற்றால் உடலியக்கம் மற்றும் மன இயக்கத்திற்குக் காரணமான மூளை, நம் செயல்பாடுகளைத் தூண்டி நம்மை உயர்வடையச் செய்யும்.

## கற்பவை கற்றபின்

**மூளையின் செயல்கள் குறித்துப் பிற நூல்களிலிருந்து தகவல்களைத் திரட்டி எழுதுக.**

மூளை நாம் பார்க்கும், கேட்கும், உணரும் செயல்களைச் சேமித்து கொள்கிறது.

**பதிய வைத்தல் :**

இதுவே நிகழ்வுகளை நமது நினைவகத்தில் சேமிக்கும் தலம் ஆகும். அதாவது, நமது புலங்களான கண், காது, மூக்கு, நாக்கு மற்றும் தோல் ஆகியவை நமது சுற்றுப் புறத்திலிருந்து தகவல்களை சேகரித்து மூளைக்கு அனுப்புகின்றன. உதாரணம் : நமது கண் ஒரு நபரை முதல் முறையாக காணும்பொழுது அவரின் நிறம், உருவம், உயரம் போன்ற தகவல்களை மூளைக்கு அனுப்பும். இந்தத் தகவல்கள் நமது மூளையில் நியூரோன்கள் எனும் நரம்பு செல்கள் வழியாகக் கடத்தப்படும். இந்தத் தகவல்கள் ஒரு நரம்பு செல்லில் இருந்து மற்றொரு நரம்பு செல் வழியாக பாயும். அதாவது இரு செல்களின் இடைவெளியைக் கடக்கும் பொழுது ஒரு வகை வேதியியல் மூலக்கூறு வெளிப்பட்டு இரு நரம்பு செல்களிடையே ஒரு இணைப்பை ஏற்படுத்தும். இந்த இணைப்பிற்கு சினப்சே என்று பெயர்.

இந்த இணைப்பு உறுதியாகும் பொழுது அந்த நபரைப் பற்றிய நினைவு உங்கள் மூளையிலிருந்து அகலாது. இந்த இணைப்பு உறுதியாவது ஒரு முறை பார்த்தவுடன் நிகழ்ந்துவிடாது. ஒரு நபரை மீண்டும் மீண்டும் பார்க்கும் பொழுது அவரைப் பற்றிய தகவல் நம் நரம்பு செல்களில் உறுதியான இணைப்பாக பதிய வைக்கப்படும். இந்த இணைப்பு எந்த அளவுக்கு உறுதி ஆகிறதோ அந்த அளவுக்கு அந்த நபரைப் பற்றிய நினைவையும் நாம் மறக்காமல் இருப்போம்.

இது அனைத்து விதமான நினைவுகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நினைவுகளுக்கும் ஓர் தனி இணைப்பு நம் மூளையில் உருவாகும். இவ்வாறு தான் நாம் படிக்கும் பாடம், கேட்கும் விஷயம், பார்க்கும் படம் அனைத்துமே நம் மூளையில் பதிய வைக்கப்படும். மீண்டும் மீண்டும் படிப்பதன் மூலம் நாம் படித்த பாடமானது ஒரு உறுதியான நரம்பு செல் இணைப்பாக மாறி மறக்காமல் இருக்கிறது.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

கற்கண்டு

இயல் 3

# எச்சம்

## பாடநூல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் __________ எனப்படும்.**
   அ) முற்று ஆ) எச்சம்
   இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம் **விடை: ஆ) எச்சம்**

2. **கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் __________.**
   அ) படித்து ஆ) எழுதி
   இ) வந்து ஈ) பார்த்த **விடை: ஈ) பார்த்த**

3. **குறிப்பு வினையெச்சம் __________ வெளிப்படையாகக் காட்டாது.**
   அ) காலத்தை ஆ) வினையை
   இ) பண்பினை ஈ) பெயரை **விடை: அ) காலத்தை**

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. நடந்து | - | அ) முற்றெச்சம் |
| 2. பேசிய | - | ஆ) குறிப்புப் பெயரெச்சம் |
| 3. எடுத்தனன் உண்டான் | - | இ) பெயரெச்சம் |
| 4. பெரிய | - | ஈ) வினையெச்சம் |

**விடை: 1.ஈ 2.இ 3.அ 4.ஆ**

**கீழ்க்காணும் சொற்களைப் பெயரெச்சம், வினையெச்சம் என வகைப்படுத்துக.**

நல்ல, படுத்து, பாய்ந்து, எறிந்த, கடந்து, வீழ்ந்த, மாட்டிய, பிடித்து, அழைத்த, பார்த்து.

**பெயரெச்சம்** : நல்ல, எறிந்த, வீழ்ந்த, மாட்டிய, அழைத்த.

**வினையெச்சம்** : படுத்து, பாய்ந்து, கடந்து, பிடித்து, பார்த்து.

**சிறுவினா.**

1. **எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?**
   ♦ பொருள் முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் எச்சம் எனப்படும்.
   ♦ இது பெயரெச்சம், வினையெச்சம் என்று இருவகைப்படும்.

3 இயல் தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**2. 'அழகிய மரம்' – எச்ச வகையை விளக்குக.**

- அழகிய மரம் – இத்தொடரில் உள்ள அழகிய என்னும் சொல்லின் செயலையோ, காலத்தையோ அறிய முடியவில்லை. பண்பினை மட்டும் குறிப்பாக அறிய முடிகிறது.
- இவ்வாறு செயலையோ காலத்தையோ தெளிவாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாகக் காட்டும் பெயரெச்சம் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

**3. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.**

- **சான்று:** வள்ளி படித்தனள் மகிழ்ந்தாள்.
- இத்தொடரில் படித்தனள் என்னும் சொல் படித்து என்னும் வினையெச்சப் பொருளைத் தருகிறது. இவ்வாறு ஒரு வினைமுற்று எச்சப்பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் எனப்படும்.

**4. வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.**

- வினையெச்சம் இரண்டு வகைப்படும்.
- அவை: தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் ஆகும்.

**தெரிநிலை வினையெச்சம்:**

எழுதி வந்தான் – இத்தொடரில் உள்ள எழுதி என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும், இறந்த காலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு செயலையும் காலத்தையும் தெரியுமாறு காட்டும் வினையெச்சம் தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

**குறிப்பு வினையெச்சம்:**

மெல்ல வந்தான் – இத்தொடரில் உள்ள மெல்ல என்னும் சொல் காலத்தை வெளிப்படையாகக் காட்டவில்லை. மெதுவாக என்னும் பண்பை மட்டும் உணர்த்துகிறது. இவ்வாறு காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாக உணர்த்திவரும் வினையெச்சம் குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. எச்சம் ________ வகைப்படும்.**

அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **விடை: அ) இரண்டு**

**2. 'படித்த' என்பது ________.**

அ) முற்றெச்சம் ஆ) வினையெச்சம்
இ) பெயரெச்சம் ஈ) வினைமுற்று **விடை: இ) பெயரெச்சம்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. **பெயரைக் கொண்டு முடியும் எச்சம் ________.**

அ) வினையெச்சம் ஆ) பெயரெச்சம்

இ) முற்றெச்சம் ஈ) குறிப்பு வினையெச்சம்

**விடை: ஆ) பெயரெச்சம்**

4. **செயலையும் காலத்தையும் தெரியுமாறு காட்டும் பெயரெச்சம் ________ எனப்படும்.**

அ) குறிப்புப் பெயரெச்சம் ஆ) முற்றெச்சம்

இ) தெரிநிலைப் பெயரெச்சம் ஈ) முற்று

**விடை: இ) தெரிநிலைப் பெயரெச்சம்**

5. **செயலையோ காலத்தையோ தெளிவாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாகக் காட்டும் பெயரெச்சம் ________ எனப்படும்.**

அ) முற்றெச்சம் ஆ) குறிப்புப் பெயரெச்சம்

இ) தெரிநிலைப் பெயரெச்சம் ஈ) வினையெச்சம்

**விடை : ஈ) குறிப்புப் பெயரெச்சம்**

6. **வினையைக் கொண்டு முடியும் எச்சம் ________ எனப்படும்.**

அ) பெயரெச்சம் ஆ) குறிப்புப் பெயரெச்சம்

இ) தெரிநிலைப் பெயரெச்சம் ஈ) வினையெச்சம் **விடை: ஈ) வினையெச்சம்**

7. **வினையெச்சம் ________ வகைப்படும்.**

அ) இரண்டு ஆ) மூன்று

இ) நான்கு ஈ) ஐந்து **விடை: அ) இரண்டு**

8. **செயலையும் காலத்தையும் தெரியுமாறு காட்டும் வினையெச்சம் ________ எனப்படும்.**

அ) முற்றெச்சம் ஆ) குறிப்புப் பெயரெச்சம்

இ) தெரிநிலை வினையெச்சம் ஈ) குறிப்பு வினையெச்சம்

**விடை: இ) தெரிநிலை வினையெச்சம்**

9. **மெல்ல வந்தான் என்பது ________.**

அ) பெயரெச்சம் ஆ) குறிப்பு வினையெச்சம்

இ) தெரிநிலைப் பெயரெச்சம் ஈ) முற்றெச்சம்

**விடை: ஈ) குறிப்பு வினையெச்சம்**

10. **ஒரு வினைமுற்று எச்சப்பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது**

அ) குறிப்பு ஆ) முற்றெச்சம்

இ) பெயரெச்சம் ஈ) தெரிநிலை **விடை: ஆ) முற்றெச்சம்**

## சிறுவினா.

1. **பெயரெச்சம் என்றால் என்ன?**

- பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் ஆகும்.
- பெயரெச்சம் மூன்று காலத்திலும் வரும்.
- குறிப்பு, தெரிநிலை என இருவகைப்படும்.

இயல் 3 தமிழ்

**2. தெரிநிலைப் பெயரெச்சம் என்றால் என்ன?**

- எழுதிய கடிதம் - இத்தொடரில் உள்ள எழுதிய என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும் இறந்தகாலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது.
- இவ்வாறு செயலையும் காலத்தையும் தெரியுமாறு காட்டும் பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும்.

**3. வினையெச்சம் என்றால் என்ன?**

- வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும்.
- வினையெச்சம் தெரிநிலை, குறிப்பு என இருவகைப்படும்.

## கற்பவை கற்றபின்

**1. 'வந்த' - என்னும் சொல்லைப் பயன்படுத்தி வெவ்வேறு தொடர்களை எழுதுக.**

எ.கா: **வந்த மாணவன்**
**வந்த மாடு**

- வந்த கபிலன்
- வந்த கோகிலா
- வந்த மக்கள்
- வந்த கிளி
- வந்த குதிரைகள்
- வந்த தண்ணீர்
- வந்த கற்கள்
- வந்த நான்
- வந்த நீ
- வந்த அவர்கள்

**2. 'வரைந்து' - என்னும் சொல்லைப் பயன்படுத்தி வெவ்வேறு தொடர்களை எழுதுக.**

எ.கா: **வரைந்து வந்தான்**
**வரைந்து முடித்தான்**

- வரைந்து போனாள்
- வரைந்து நடித்தான்
- வரைந்து சென்றனர்
- வரைந்து ஓடியது
- வரைந்து விளக்கினேன்
- வரைந்து கூறினாய்
- வரைந்து போற்றினர்

## மொழியை ஆள்வோம்

**1. கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

வணக்கம்!

'உணவே மருந்து' என்ற தலைப்பில் சில நிமிடம் பேசுகின்றேன்.

உயிர், உடலோடு கூடிய நிலையில் எப்போதும் புறச்சூழலோடு போராடி வருகிறது. அதில் வெற்றியடைவதே உடல் நலமாகும்; தோல்வி அடைந்தால் நோயில் முடியும். அந்நோயைத் தீர்த்து இன்பமளிப்பதே மருந்து.

தமிழகத்து உணவு, தொன்றுதொட்டு மருத்துவமுறையில் சமைக்கப்படுகிறது. வெப்ப நாடான நமது நாட்டுச் சமையலுக்குப் புழுங்கலரிசியே ஏற்றது. அன்றாடச்


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

சமையலில் கூட்டுவனவற்றுள் மஞ்சள், நெஞ்சிலுள்ள சளியை நீக்கும். கொத்துமல்லி, பித்தத்தைப் போக்கும். சீரகம், வயிற்றுச் சூட்டைத் தணிக்கும். மிளகு, தொண்டைக் கட்டைத் தொலைக்கும். பூண்டு, வளியகற்றி வயிற்றுப் பொருமலை நீக்கிப் பசியை மிகுக்கும். வெங்காயம் குளிர்ச்சி உண்டாக்கிக் குருதியைத் தூய்மைப்படுத்தும். பெருங்காயம், வளியை வெளியேற்றும். இஞ்சி, பித்தத்தை ஒடுக்கிக் காய்ச்சலைக் கண்டிக்கும். தேங்காய், நீர்க்கோவையை நீக்கும். கறிவேப்பிலை, மணமூட்டி உணவு விருப்பை உண்டாகும். நல்லெண்ணெய் கண் குளிர்ச்சியும் அறிவுத்தெளிவும் உண்டாக்கும். சீரகம், பூண்டு கலந்த மிளகு நீர், சூட்டைத் தணித்துச் செரிமான ஆற்றலை அதிகரிக்கும். உடலுக்கு வலுவூட்டவும் கழிவு அகலவும் கீரை நல்லது.

இறுதியாக ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாவுச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே அளவறிந்து உண்ண வேண்டும். வயிறு புடைக்க உண்ணுதல் நோய்க்கு இடமளிக்கும். உடல் நலனை விரும்புவோர் முறையான உணவுப் பழக்கத்தை மேற்கொண்டால் நெடுநாள் நலமாக வாழலாம் என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன், நன்றி.

**பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல | - அ) | ஒற்றுமையின்மை |
| 2. | கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல | - ஆ) | பயனற்ற செயல் |
| 3. | பசுமரத்து ஆணி போல | - இ) | தற்செயல் நிகழ்வு |
| 4. | விழலுக்கு இறைத்த நீர் போல | - ஈ) | எதிர்பாரா நிகழ்வு |
| 5. | நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற் போல | - உ) | எளிதில் மனதில் பதிதல் |

**விடை: 1.இ 2.ஈ 3.உ 4.ஆ 5.அ**

## உவமைத் தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.

**1. குன்றின் மேலிட்ட விளக்கைப் போல :**

குன்றின் மேலிட்ட விளக்கைப்போல திருக்குறளின் புகழ் உலகெங்கும் பரவியுள்ளது.

**2. வேலியே பயிரை மேய்ந்தது போல :**

வேலியே பயிரை மேய்ந்தது போல நாட்டைக் காப்பாற்ற வேண்டிய தலைவர்களே மக்களைத் துன்புறுத்துகின்றனர்.

**3. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல :**

பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல பரிசுத் தொகையாக இலட்சம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தவனுக்குக் கோடி கிடைத்தது.

**4. உடலும் உயிரும் போல :**

உடலும் உயிரும் போல கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் நட்புடன் திகழ்ந்தனர்.

**5. கிணற்றுத் தவளை போல :**

கிணற்றுத் தவளை போல மூடர்கள் தம் பேச்சினாலேயே தம் அறியாமையை வெளிப்படுத்தி விடுவர்.

**கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**

முன்னுரை – நோய் வரக் காரணங்கள் – நோய் தீர்க்கும் வழிமுறைகள் – வருமுன் காத்தல் – உணவும் மருந்தும் – உடற்பயிற்சியின் தேவை – முடிவுரை

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**

**முன்னுரை:**

உடல்நலம் போனால் உயிர்ப்பறவை போய்விடும். அதனால் தான் 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பார் திருமூலர். இவ்வுலகில் நீண்ட நாள் வாழ உடல் நலம் பேணல் வேண்டும்.

**நோய் வரக் காரணங்கள்:**

மனிதன் இயற்கையை விட்டு விலகி வந்ததுதான் முதன்மைக் காரணம். மாறிப்போன உணவு முறை, மாசு நிறைந்த சுற்றுச்சூழல், மன அழுத்தம் இவை மூன்றும் குறிப்பிடத்தக்க காரணங்கள். இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றம், உடற்பயிற்சியின்மை உள்ளிட்டவையே பல்வேறு உடல்நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாகின்றன.

**நோய் தீர்க்கும் வழிமுறைகள் :**

நம் உடலில் ஏற்படும் அனைத்து நோய்களுக்கும் நமது தவறான வாழ்க்கை முறைதான் காரணம் என்பதே ஆராய்ச்சியின் முடிவாகும். எனவே நமது வாழ்க்கை முறையில் சில எளிய மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலமாகவே இத்தகைய நோய்களை நிரந்தரமாகக் குணப்படுத்த முடியும்.

**வருமுன் காத்தல் :**

நோய் வந்த பின்பு மருத்துவமனைக்குச் செல்வதைவிட வருமுன் காக்கும் வாழ்க்கையை வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். சரியான உணவு, சரியான உடற்பயிற்சி, சரியான தூக்கம் ஆகிய மூன்றும் நம்மை நலமாக வாழவைக்கும். எளிமையாகக் கிடைக்கக் கூடிய காய்கறிகள், கீரைகள், பழங்கள், சிறுதானியங்களை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**உணவும் மருந்தும் :**

ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாவுச்சத்து, கனிமங்கள் நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே, அளவறிந்து உண்ண வேண்டும். சோறு காய்கறியும் அரைவயிறு; பால், மோர், நீர் கால் வயிறு; கால் வயிறு வெற்றிடமாக இருத்தல் வேண்டும். உணவை நன்றாக மென்று விழுங்குதல் வேண்டும். அப்போது தான் வாயிலுள்ள உமிழ்நீர் வேண்டிய அளவு சுரந்து உணவுடன் கலக்கும். உமிழ்நீர் கலக்காத உணவு உள்ளே சென்றாலும், அது செரிக்காது; குடலும் தன் செரிமான ஆற்றலை இழந்துவிடும். உணவின் சத்துகள் வீணாகாமல் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். காய்களை முக்கால் வேக்காட்டில் வேகவைத்து உண்ணல் வேண்டும். இப்படி உண்டால் உணவே மருந்தாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**உடற்பயிற்சியின் தேவை:**

'ஓடி விளையாடு', 'மாலை முழுவதும் விளையாட்டு' என்பன உடலினை உறுதி செய்ய பாரதி கூறும் வழிமுறைகள். உடலின் கழிப்பொருள்கள் வெளியேறும். துணிவும், தெம்பும், சுறுசுறுப்பும் ஏற்படும். அதனால் விளையாட்டு, தண்டால், நீச்சல், உலாவுதல் போன்ற உடற்பயிற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**முடிவுரை:**

இறைவன் வழங்கிய அருட்கொடையே நமது உடல். அதனைக் காப்பதே முதற்கடமை. சுவரை வைத்தே சித்திரம் வரைய வேண்டும். உடலை வைத்துதான் உயிரைப் பேண வேண்டும். உடலைப் பேணுவோம் உயிரைக் காப்போம். நோயற்ற வாழ்வு வாழ்வோம்.

## மொழியோடு விளையாடு

### கீழ்க்காணும் படம் சார்ந்த சொற்களை எழுதுக.



உரல், உலக்கை, எண்ணெய், சுக்கு, மிளகு, கருஞ்சீரகம், சீரகம், பட்டை, கிராம்பு, அண்ணாச்சி பூ, வத்தல், வெற்றிலை, கடுகு, கொத்துமல்லி, வெந்தையம், ஏலக்காய், கசகசா, புதினா, மல்லி, சோம்பு, பூண்டு.

### வட்டத்திலுள்ள பழமொழிகளைக் கண்டுபிடித்து எழுதுக.




முயற்சி திருவினை ஆக்கும்.
அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு.
சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும்.
அறிவே ஆற்றல்.
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
வருமுன் காப்போம்.
சுத்தம் சோறு போடும்.
பருவத்தே பயிர் செய்.
பசித்து புசி.

3 இயல்
தமிழ்

## நிற்க அதற்குத் தக

### கலைச்சொல் அறிவோம்.

- நோய் - Disease
- மூலிகை - Herbs
- சிறுதானியங்கள் - Millets
- பட்டயக் கணக்கர் - Auditor
- பக்கவிளைவு - Side Effect
- நுண்ணுயிர் முறி - Antibiotic
- மரபணு - Gene
- ஒவ்வாமை - Allergy

## இணையத்தில் காண்க

**நாம் நாள்தோறும் உண்ணும் காய்கறிகளின் மருத்துவப் பயன்கள் பற்றித் தகவல்களைத் தேடித் திரட்டுக.**

| காய்கறிகள் | மருத்துவப் பயன்கள் |
|---|---|
| **சுரைக்காய்** | உடல் சூட்டைத் தணித்தல், மலச்சிக்கலை போக்குதல், சிறுநீர் நன்கு வெளியேற்றல், இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தல், மூலநோயைப் போக்குதல். |
| **வெங்காயம்** | சளியைப் போக்குதல், இருமல் போக்குதல், இரத்தம் சுத்தமாக்குதல், உடல் சூட்டைத் தணித்தல். |
| **வாழை** | கல்லடைப்பு நீக்கல், மூலநோய் நீக்குதல், குடல்புண் ஆற்றுதல். |
| **வெண்டை** | மூளை வளர்ச்சிக்கு உதவுதல், ஞாபக சக்தி கொடுத்தல். |
| **பூசணி** | நீர் வெளியேற்றுதல், மலச்சிக்கலைத் தீர்த்தல், பசியை ஏற்படுத்துதல். |
| **தக்காளி** | கல்லடைப்பு நீக்கல், செரிமானம் அளித்தல், குடல்புண் ஆற்றுதல். |
| **கேரட்** | கண்பார்வையைக் கூட்டல், எலும்புக்கு பலன் கொடுத்தல். |
| **பீட்ரூட்** | இரத்தம் அதிகரித்தல், கண்பார்வைக் கூட்டல், இரும்புச் சத்து அளித்தல், மலச்சிக்கல் நீக்கல். |
| **முள்ளங்கி** | சிறுநீர் வெளியேற்றல், குடல்புண் ஆற்றல், உடல் பருமனைக் குறைத்தல். |
| **சௌசௌ** | சிறுநீர் வெளியேற்றல், எலும்பு வலுவடைதல். |
| **முட்டைக்கோஸ்** | இதயத் துடிப்பு மற்றும் இரத்தத்தைச் சீராக்கல். |
| **காலிஃப்ளவர்** | உடல் நச்சுக்களை வெளியேற்றல், தசைக்கு வளர்ச்சியளித்தல், நினைவாற்றல் அதிகரித்தல், எலும்புக்கு உறுதி அளித்தல். |

| | |
|---|---|
| **பாகற்காய்** | சர்க்கரையைக் குறைத்தல், கல்லீரலைப் பலப்படுத்துதல், இளநரை தடுத்தல், கொழுப்பை நீக்கல் புற்றுநோயைத் தடுத்தல், இரத்த அழுத்தத்தைக் குறைத்தல். |
| **கத்தரிக்காய்** | எலும்புக்கு உறுதி கொடுத்தல், ஜீரண சக்தி அளித்தல். |
| **எலுமிச்சை** | கண்பார்வை அளித்தல், சர்க்கரையைக் குறைத்தல், இரத்த அழுத்தத்தைக் குறைத்தல், எலும்புக்கு உறுதி கொடுத்தல், உடல் பருமனைக் குறைத்தல், இரத்தத்தைச் சுத்திகரித்தல். |
| **பீன்ஸ்** | உடல் வளர்ச்சிக்கு உதவுதல், இரும்புச்சத்தை அளித்தல். |
| **கொத்தவரங்காய்** | எலும்புக்கு உறுதி கொடுத்தல், இரும்புச்சத்தை அளித்தல். |
| **இஞ்சி** | செரிமானம் அளித்தல், குடல்புண் ஆற்றுதல், உடல் பருமனைக் குறைத்தல், அசதியைப் போக்கல். |
| **மிளகாய்** | இரத்தத்தை சுத்திகரித்தல், இரத்த அழுத்தத்தைக் குறைத்தல், ஜீரண சக்தி அளித்தல். |
| **அவரை** | இரும்புச்சத்து அளித்தல், கண்பார்வை அளித்தல். |
| **உருளை** | மலச்சிக்கலைப் போக்கல், மாவு சத்தளித்தல். |
| **பீர்க்கங்காய்** | குடல்புண் ஆற்றுதல், கண்பார்வை அளித்தல். |
| **புடலை** | மலச்சிக்கல் நீக்கல், நோய் எதிர்ப்பு சக்தி அளித்தல். |



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## அலகுத் தேர்வு

### இயல் 3

நேரம்: 30 நிமிடம் மதிப்பெண்கள்: 20

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 6 × 1 = 6

**அ) உரிய விடையைத் தேர்வு செய்க.**

1. உடல் நலம் என்பது ________ இல்லாமல் வாழ்தல் ஆகும்.
   அ) அணி ஆ) பணி
   இ) பிணி ஈ) மணி
2. காந்தியடிகள் ________ போற்ற வாழ்ந்தார்.
   அ) நிலம் ஆ) வையம்
   இ) களம் ஈ) வானம்

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.**

3. நீலகேசி கூறும் நோயின் வகைகள் ________.
4. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ________ நீட்சியாகவே உள்ளது.
5. சமையலறையில் செலவிடும் நேரம் ________ செலவிடும் நேரமாகும்.

**இ) உவமைத் தொடர்களைப் பயன்படுத்தி தொடரமைக்க.**

6. கிணற்றுத் தவளை போல

**II. குறு விடை தருக.** 4× 2 = 8

7. நோயின் மூன்று வகைகள் யாவை?
8. நம்மை நோய் அணுகாமல் காப்பவை யாவை?
9. மருத்துவம் எப்போது தொடங்கியது?
10. நோய்கள் பெருகக் காரணம் என்ன?

**III. சிறு விடை தருக.** 2 × 3 = 6

11. நோயின் வகைகளாகவும் அவற்றைத் தீர்க்கும் வழிகளாகவும் நீலகேசி கூறுவன யாவை?

**(அல்லது)**

உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

12. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

கவிதைப் பேழை

இயல் 4

# கல்வி அழகே அழகு

குமரகுருபரர்

## குமரகுருபரர்

| | | |
|---|---|---|
| பிறந்த ஊர் | : | ஸ்ரீவைகுண்டம் |
| பெற்றோர் | : | சண்முக சிகாமணி – சிவகாமசுந்தரி |
| காலம் | : | கி.பி. 17 |
| இயற்றிய நூல்கள் | : | திருவாரூர் நான்மணிமாலை, கந்தர்கலிவெண்பா, கயிலைக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் முதலியன. |

## மனப்பாடப் பாடல்

**கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்**
**மற்றோர் அணிகலம் வேண்டாவாம் – முற்ற**
**முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே**
**அழகுக்கு அழகுசெய் வார்.**

*நூல் : நீதிநெறி விளக்கம்* *ஆசிரியர் : குமரகுருபரர்*

## சொல்லும் பொருளும்

- கலன் – அணிகலன்
- முற்ற – ஒளிர
- வேண்டாவாம் – தேவையில்லை

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கற்றவருக்கு அழகு தருவது ________.

அ) தங்கம் ஆ) வெள்ளி

இ) வைரம் ஈ) கல்வி **விடை: ஈ) கல்வி**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. ‘கலனல்லால்‘ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) கலன் + லல்லால் ஆ) கலம் + அல்லால்

இ) கலன் + அல்லால் ஈ) கலன் + னல்லால்

**விடை: இ) கலன் + அல்லால்**

### சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. அழகு - கல்வியே உண்மையானஅழகு.
2. கற்றவர் - கல்வி கற்றவரே உலகில் உயர்ந்தவர்.
3. அணிகலன் - மனிதனுக்கு உண்மையான அணிகலன் கல்வி ஆகும்.

### குறுவினா

1. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

கல்வி கற்றவருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை.

### சிறுவினா

1. நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

- ஒளிவீசும் மணிகளால் செய்யப்பட்ட அணிகலன்களுக்கு மேலும் அழகுபடுத்த வேறு அணிகலன்கள் தேவையில்லை.
- அதுபோலக் கல்வி கற்றவருக்கு அக்கல்வியே அழகு தரும்.
- அதனால் அழகுபடுத்தும் அணிகலன்கள் கற்றவருக்குத் தேவையில்லை.

### சிந்தனை வினா

1. கல்வியின் பயன்களாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.

- நம்முள் புதைந்து கிடக்கும் ஆற்றலை வெளிக்கொண்டு வரும்.
- பகுத்து அறியும் அறிவைத் தரும்.
- துன்பம் வரும் முன் தடுத்து நிறுத்தும் அறிவைத் தரும்.
- மெய்ப்பொருள் காணும் அறிவினைத் தரும்.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. குமரகுருபரரின் காலம் ________.

அ) கி.பி. 15 ஆ) கி.பி. 17

இ) கி.பி. 18 ஈ) கி.பி. 16 **விடை: ஆ) கி.பி. 17**

2. நீதிநெறி விளக்கத்தில் உள்ள வெண்பாக்கள் ________.

அ) 100 ஆ) 102

இ) 103 ஈ) 104 **விடை: ஆ) 102**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**குறுவினா**

1. **நீதிநெறி விளக்கம் – பெயர்க்காரணம் கூறுக.**

மக்களின் வாழ்வுக்குத் தேவையான நீதிகளைச் சுட்டிக்காட்டுவதால், இந்நூல் நீதிநெறி விளக்கம் எனப் பெயர்பெற்றது.

2. **குமரகுருபரர் இயற்றிய நூல்கள் யாவை?**

- கந்தர் கலிவெண்பா
- கயிலைக் கலம்பகம்
- சகலகலாவல்லி மாலை
- மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
- முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

**சிறுவினா**

1. **குமரகுருபரர் பற்றி நீவிர் அறிந்தவற்றை எழுதுக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | குமரகுருபரர் |
| பிறந்த ஊர் | : | ஸ்ரீவைகுண்டம் |
| பெற்றோர் | : | சண்முக சிகாமணி – சிவகாமசுந்தரி |
| காலம் | : | கி.பி. 17 |
| இயற்றிய நூல்கள் | : | திருவாரூர் நான்மணிமாலை, கந்தர்கலிவெண்பா, கயிலைக் கலம்பகம், சகலகலாவல்லிமாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் முதலியன. |

## கற்பவை கற்றபின்

1. **கல்வி குறித்து வழங்கப்படும் பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.**

- கல்வி கரையில கற்பவர் நாள் சில.
- கல்வி அழகே அழகு.
- கத்த(கற்ற) வித்த(வித்தை) காலத்துக்கு உதவும்.
- நூறு நாள் கத்தது(கற்றது), ஆறு நாள் விடப்போகும்.
- கற்க கசடற.
- இளமையில் கல்.
- நூல் பல கல்.

4 இயல்

தமிழ்

**2. கற்றோரின் சிறப்புகளைப் பற்றிப் பிற நூல்களில் இடம் பெற்ற பாடல்களைத் தொகுத்து எழுதுக.**

♦ கண்ணுடையோர் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு
புண்ணுடையார் கல்லா தவர். – *திருக்குறள்*

♦ நிறைகுடம் நீர்தளும்பல் இல். – *பழமொழி*

♦ மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கில்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் – மன்னர்க்கு
தன்தேச மல்லால் சிறப்பில்லை
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. – *மூதுரை*

கவிதைப் பேழை

இயல் 4

# புத்தியைத் தீட்டு

ஆலங்குடி சோமு

**ஆலங்குடி சோமு**

- திரைப்படப் பாடல் ஆசிரியர்.
- சிவகங்கை, ஆலங்குடியில் பிறந்தவர்.
- தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றவர்.

## சொல்லும் பொருளும்

♦ தடம் – அடையாளம்
♦ அகம்பாவம் – செருக்கு
♦ புத்தி – அறிவு
♦ பாதை – வழி
♦ உள்ளம் – மனம்
♦ லாபம் – பலன்
♦ எண்ணி – நினை

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **என் நண்பர் பெரும் புலவராக இருந்தபோதும் ________ இன்றி வாழ்ந்தார் .**

அ) சோம்பல் ஆ) அகம்பாவம்
இ) வருத்தம் ஈ) வெகுளி **விடை: ஆ) அகம்பாவம்**

2. **'கோயிலப்பா ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.**

அ) கோ + அப்பா ஆ) கோயில் + லப்பா
இ) கோயில் + அப்பா ஈ) கோ + இல்லப்பா

**விடை: இ) கோயில் + அப்பா**

3. **பகைவன் + என்றாலும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.**

அ) பகைவென்றாலும் ஆ) பகைவனென்றாலும்
இ) பகைவன்வென்றாலும் ஈ) பகைவனின்றாலும்

**விடை: ஆ) பகைவனென்றாலும**

### குறுவினா

1. **யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?**

மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது ஆகும்.

2. **பகைவர்களிடம் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை யாது?**

பகைவர்களிடம் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறை அன்பு காட்டுவது ஆகும்.

### சிறுவினா

1. **புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?**

- கண்ணியம் தவறாமல் எடுத்த செயலில் தன்னுடைய திறமையைக் காட்ட வேண்டும்.
- ஆத்திரம் கண்ணை மறைத்து விடும் என்பதால் அறிவுக்கு வேலை கொடுத்து அமைதி காக்க வேண்டும்.
- பகைவன் அடிக்க வந்தாலும், அவரிடம் அன்பு காட்டி அரவணைக்க வேண்டும்.
- மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்கக் கல் போன்றது.
- இதனை மறந்து வாழ்ந்தவன் வாழ்க்கை, தடம் தெரியாமல் மறைந்து போய்விடும்.
- வாழும் வாழ்க்கை சில காலமே! அதற்குள் ஏன் அகம்பாவம்? இதனால் எந்த இலாபமும் கிடைக்காது. எனவே, அகம்பாவத்தைக் காட்டாமல் வாழ வேண்டும்.
- இவற்றை எண்ணிப்பார்த்தால் வாழ்க்கை தெளிவாகும்.




Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

### சிந்தனை வினா

1. **உங்கள் மீது பிறர் வெறுப்புக் காட்டினால் அவர்களை எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?**
    - முதலில் வெறுப்புக்குக் காரணம் என்ன? என்பதைப் பற்றி ஆராய்வேன்.
    - அவரிடம் சென்று அன்பாக, என் மீது நீங்கள் வெறுப்பு காட்ட, நான் செய்துள்ள பிழையை மன்னித்து, என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்.
    - நான் மனம் புண்படும்படியாகப் பேசியிருந்தால், அதனைப் பொறுத்துக் கொண்டு எனக்கு நல்வழி காட்டுங்கள் என்று கூறுவேன்.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **புத்தியைத் தீட்டு என்னும் கவிதைப்பேழை பகுதியை எழுதியவர் _________.**
   அ) ஆலங்குடி சோமு ஆ) ஆலங்குடி வங்கனார்
   இ) வாணிதாசன் ஈ) குமரகுருபரர் **விடை: அ) ஆலங்குடி சோமு**

2. **"தீட்ட வேண்டியது எது?" என்று ஆலங்குடி சோமு குறிப்பிடுகிறார்?**
   அ) கத்தி ஆ) புத்தி
   இ) கண்ணியம் ஈ) ஆத்திரம் **விடை: ஆ) புத்தி**

3. **_________க்கு அன்பு பாதை விட வேண்டும்.**
   அ) பகைவன் ஆ) நண்பன்
   இ) மன்னிக்க தெரிந்தவன் ஈ) மறந்தவன் **விடை: அ) பகைவன்**

4. **தடம் என்னும் சொல்லின் பொருள் _________.**
   அ) சினம் ஆ) செருக்கு
   இ) ஆணவம் ஈ) அடையாளம் **விடை: ஈ) அடையாளம்**

5. **ஆலங்குடி சோமு அவர்கள் பெற்ற விருது _________.**
   அ) பத்மபூஷன் ஆ) கலைமாமணி
   இ) பாரத ரத்னா ஈ) பத்மவிபூஷன் **விடை: ஆ) கலைமாமணி**

### குறுவினா

1. **எப்போது அறிவுக்கு வேலை கொடுக்க வேண்டும்?**
   ஆத்திரம் கண்ணை மறைக்கும் போது அறிவுக்கு வேலை கொடுக்க வேண்டும்.

2. **ஆலங்குடி சோமு எவற்றை எண்ணிப் பார்க்கச் சொல்கிறார்?**
   பூமியில் வாழ்வது சில காலம். அதற்குள் அகம்பாவம் ஏன்? அகம்பாவத்தால் ஒரு பயனும் கிடையாது. இதனை எண்ணிப் பார்த்து, மனிதர்களே தெளிவடையுங்கள் என்கிறார் ஆலங்குடி சோமு.


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## கற்பவை கற்றபின்

**அறிவின் பெருமையை விளக்கும் பழமொழிகளைத் திரட்டுக.**

- அறிவே ஆற்றல்
- அறிவே ஆயுதம்
- அறிவே பலம்
- பேரறிவு பெருமை தரும்
- அறிவுடையார் எல்லாம் உடையார்
- மெய்ப்பொருள் காண்பது அறிவு
- அறிவே ஆனந்தம்

உரைநடை உலகம்

இயல் 4

# பல்துறைக் கல்வி

திரு.வி.க.

## பாடநூல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது ________.**
   அ) விளக்கு ஆ) கல்வி
   இ) விளையாட்டு ஈ) பாட்டு **விடை: ஆ) கல்வி**

2. **கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ________.**
   அ) இளமை ஆ) முதுமை
   இ) நேர்மை ஈ) வாய்மை **விடை: அ) இளமை**

3. **இன்றைய கல்வி ________ நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.**
   அ) வீட்டில் ஆ) நாட்டில்
   இ) பள்ளியில் ஈ) தொழிலில் **விடை: ஈ) தொழிலில்**

**நிரப்புக.**

1. கலப்பில் ________ உண்டென்பது இயற்கை நுட்பம். **விடை: வளர்ச்சி**
2. புற உலக ஆராய்ச்சிக்கு ________ கொழுகொம்பு போன்றது. **விடை: அறிவியல்**
3. வாழ்விற்குரிய இன்பத் துறைகளில் தலையாயது ________ இன்பம் ஆகும். **விடை: காவிய**

**பொருத்துக.**

1. இயற்கை ஓவியம் - அ) சிந்தாமணி
2. இயற்கை தவம் - ஆ) பெரியபுராணம்
3. இயற்கைப் பரிணாமம் - இ) பத்துப்பாட்டு
4. இயற்கை அன்பு - ஈ) கம்பராமாயணம்

**விடை: 1.இ 2.அ 3.ஈ 4.ஆ**

**குறுவினா.**

**1. இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு.வி.க கூறுவன யாவை?**

- இன்றைய கல்வி குறிப்பிட்ட பாடங்களை நெட்டுறு (மனப்பாடம்) செய்து தேர்வில் தேறி, பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்கு ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.
- நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பு இல்லாமல் போகிறது என்று திரு.வி.க. கூறுகிறார்.

**2. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?**

தாய்நாடு என்னும் பெயர் தாய்மொழியைக் கொண்டே பிறக்கிறது.

**3. திரு. வி. க., சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.**

- இளங்கோவடிகள்
- திருத்தக்கத்தேவர்
- திருஞானசம்பந்தர்
- ஆண்டாள்
- சேக்கிழார்
- கம்பர்
- பரஞ்சோதி

**சிறு வினா.**

**1. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவனவற்றை எழுதுக.**

- கலப்பில் வளர்ச்சி உண்டு என்பது இயற்கை நுட்பம்.
- தமிழை வளர்க்கும் முறையிலும் அளவிலும் கலப்பைக் கொள்வது சிறப்பு.
- ஆகவே, தமிழ்மொழியில் அறிவுக்கலைகள் இல்லை என்னும் பழம்பாட்டை நிறுத்தி, அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கம் தேடுவோம் என்னும் புதுப்பாட்டு பாடுமாறு சகோதரர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.
- கலைகள் யாவும் தாய்மொழி வழி மாணாக்கர்களுக்கு அறிவுறுத்தப்படும் காலமே தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறும் காலமாகும் என்று திரு.வி.க. கூறுகின்றார்.

**2. அறிவியல் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவன யாவை?**

- உலக வாழ்விற்கு மிக இன்றியமையாதது அறிவியல்.
- உடற்கூறு, உடலோம்பு முறை, பூதபௌதிகம், மின்சாரம், நம்மைச் சூழ்ந்துள்ள செடி, கொடி, பறவை, விலங்கு முதலியவற்றைப் பற்றிய அறிவும், கோள் இயக்கம், கணிதம், அகத்திணை முதலிய அறிவும் நமக்கு வேண்டும்.

4 இயல் தமிழ்

- இந்நாளில் அத்தகைய அறிவு தேவை. புற உலகு ஆராய்ச்சிக்கு அறிவியல் கொழுகொம்பு போன்றது.
- நம் முன்னோர் கண்ட பல உண்மைகள் அறிவியல் அரணின்றி, இந்நாளில் உறுதி பெறலரிது.
- இக்கால உலகத்தோடு உறவு கொள்வதற்கும் அறிவியல் தேவை.
- ஆகவே, அறிவியல் என்னும் அறிவுக்கலை இளைஞர்கள் உலகில் பரவ வேண்டும் என்று திரு. வி. க. கூறுகின்றார்.

**நெடுவினா.**

**1. காப்பியக் கல்வி குறித்துத் திரு. வி. க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

- வாழ்விற்கு உரிய இன்பத் துறைகளில் காவிய இன்பமும் ஒன்று. அதுவே முதன்மையானது என்றும் கூறலாம்.
- நாம் தமிழர்கள், நாம் பாட்டு இன்பத்தை நுகர வேண்டும். அதற்காகத் தமிழ் இலக்கியங்களுக்கு இடையே செல்ல வேண்டும். தமிழில் இலக்கியங்கள் பலப்பல இருக்கின்றன.
- இயற்கை ஓவியம் பத்துப்பாட்டு, இயற்கை இன்பக்கலம் கலித்தொகை, இயற்கை வாழ்வில்லம் திருக்குறள், இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும், இயற்கைத் தவம் சிந்தாமணி, இயற்கைப் பரிணாமம் கம்பராமாயணம், இயற்கை அன்பு பெரியபுராணம், இயற்கை இறையுறையுள் தேவார திருவாசக திருவாய் மொழிகள்.
- இத்தமிழ்க் கருவூலங்களை உன்ன உன்ன உள்ளத்திலும் வரும் இன்ப அன்பைச் சொல்லால் சொல்ல இயலாது.
- இளைஞர்களே! தமிழ் இளைஞர்களே! பெறற்கரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள். தமிழ் இன்பத்தில் சிறந்த இன்பம் இவ்வுலகில் உண்டோ? தமிழ்க் காவியங்களைப் படியுங்கள். இன்பம் நுகருங்கள் என்று திரு. வி. க. காப்பியக் கல்வி பற்றிக் கூறுகிறார்.

**சிந்தனை வினா.**

**1. திரு. வி. க குறிப்பிடும் பல்துறைக் கல்வியில் நீங்கள் எதனைக் கற்க விரும்புகிறீர்கள்?**

- திரு. வி. க. குறிப்பிடும் பல்துறைக் கல்வியில் நான் அறிவியல் கல்வியைக் கற்க விரும்புகிறேன்.
- காரணம் என்னவென்றால், தமிழ் மொழி அறிந்த எனக்கு அறிவியல் பற்றிய செய்திகளை மேலும் தெரிந்து கொள்ளவும், அறிவியலில் உள்ள பல புதுமையான செய்திகளைத் தமிழ்ப்படுத்தவும் அறிவியல் கல்வி கற்க விரும்புகிறேன்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **இளமையில் கல் என்பது ________.**
அ) முதுமொழி ஆ) புதுமொழி
இ) அறிவு மொழி ஈ) தமிழ்மொழி **விடை: அ) முதுமொழி**

2. **இயற்கை ஓவியம் ________.**
அ) பத்துப்பாட்டு ஆ) கலித்தொகை
இ) திருக்குறள் ஈ) சிலப்பதிகாரம் **விடை: அ) பத்துப்பாட்டு**

3. **இயற்கை இன்பக்கலம் ________.**
அ) பத்துப்பாட்டு ஆ) கலித்தொகை
இ) திருக்குறள் ஈ) மணிமேகலை **விடை: ஆ) கலித்தொகை**

4. **இயற்கை வாழ்வில்லம் ________.**
அ) பெரியபுராணம் ஆ) சிந்தாமணி
இ) திருக்குறள் ஈ) மணிமேகலை **விடை: இ) திருக்குறள்**

5. **இயற்கைத் தவம் ________.**
அ) சீவகசிந்தாமணி ஆ) பெரியபுராணம்
இ) கம்பராமாயணம் ஈ) மணிமேகலை **விடை: அ) சீவகசிந்தாமணி**

6. **இயற்கைப் பரிணாமம் ________.**
அ) கம்பராமாயணம் ஆ) பெரியபுராணம்
இ) திருவாசகம் ஈ) திருக்குறள் **விடை: அ) கம்பராமாயணம்**

7. **இயற்கை அன்பு ________.**
அ) கம்பராமாயணம் ஆ) பெரியபுராணம்
இ) சீவகசிந்தாமணி ஈ) பத்துப்பாட்டு **விடை: ஈ) பெரியபுராணம்**

**நிரப்புக.**

1. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது ________. **விடை: கல்வி**
2. ________ கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே. **விடை: தொழில்**
3. கல்வி என்பது ________ தேடும் வழிமுறை அன்று. **விடை: வருவாய்**
4. ________ வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும். **விடை: தாய்மொழி**
5. கலப்பில் வளர்ச்சி உண்டு என்பது ________ நுட்பம். **விடை: இயற்கை**
6. இயற்கை இன்ப வாழ்வு நிலையங்கள் ________ மற்றும் ________.
**விடை: சிலப்பதிகாரம், மணிமேகலை**

இயல் 4 தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

7. இயற்கை இறையுறையுள் __________, __________, __________.

**விடை: தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி**

8. உலக வாழ்விற்கு மிக மிக இன்றியமையாதது __________ என்னும் அறிவுக்கலை.

**விடை: அறிவியல்**

## குறுவினா

**1. திரு. வி. க வின் படைப்புகள் யாவை?**

- மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்.
- பெண்ணின் பெருமை.
- தமிழ்த்தென்றல்.
- பொதுமை வேட்டல்.
- முருகன் அல்லது அழகு.

**2. இயற்கை அன்னையின் எச்சரிக்கை என்று திரு. வி. க. கூறுவன யாவை?**

தொழில் நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டாம் என்றும், அறிவுலகின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும், இயற்கை அன்னை எச்சரிக்கை செய்த வண்ணமாய் இருக்கிறாள் என்று திரு. வி. க. கூறுகிறார்.

**3. இயற்கை முறையாகத் திரு. வி. க எடுத்துரைப்பது யாது?**

- நாம் தமிழ் மக்கள்! நாம் நமது தாய்மொழி வாயிலாக கல்வி பெறுதலே சிறப்பு.
- அதுவே, இயற்கை முறை என்று திரு. வி. க. கூறுகிறார்.

**4. கல்வி குறித்து விஜயலட்சுமி பண்டிட் கூறும் கருத்துகள் யாவை?**

“கல்வி என்பது வருவாய் தேடும் வழிமுறை அன்று. அது மெய்ம்மையைத் தேடவும், அறநெறியைப் பயிலவும் மனித ஆன்மாவுக்குப் பயிற்சி அளிக்கும் ஒரு நெறிமுறை ஆகும்'' என்று கல்வி குறித்து விஜயலட்சுமி பண்டிட் கூறுகிறார்.

**5. எது தமிழுக்கு இழுக்காகாது என்று திரு. வி. க. கூறுகிறார்?**

குறியீடுகளுக்குப் பல மொழிகளில் இருந்து கடன் வாங்குவது தமிழுக்கு இழுக்காகாது என்று திரு. வி. க. கூறுகிறார்.

**4. இளைஞர்களுக்குத் திரு. வி. க. விடுக்கும் வேண்டுகோள் யாது?**

- இளைஞர்களே! தமிழ் இளைஞர்களே! பெறற்கரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறு பெற்று இருக்கிறீர்கள். தமிழ் இன்பத்தில் சிறந்த இன்பம் இவ்வுலகில் உண்டோ?
- தமிழ்க் காவியங்களைப் படியுங்கள், இன்பம் நுகருங்கள் என்று திரு. வி. க. இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறார்.

## சிறுவினா

**1. ஏட்டுக்கல்வி குறித்துத் திரு. வி. க. கூறும் கருத்துகள் யாவை?**

- ஏட்டுக்கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை எங்கும் நிலவி வருகிறது. ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி ஆகாது.
- இந்நாளில் கல்வி என்பது பொருள் அற்றுக் கிடைக்கிறது. குறிப்பிட்ட பாடங்களை மனப்பாடம் செய்து தேர்வில் தேறி, பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.

இயல் 4 தமிழ்

- நாளடைவில், அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பு இல்லாமல் போகிறது என்கிறார் திரு. வி. க.

**2. திரு. வி. க. குறிப்பிடும் கல்வி குறித்த தலைப்புகளைப் பட்டியலிடுக.**

- ஏட்டுக் கல்வி
- தொழிற் கல்வி
- தாய்மொழிவழிக் கல்வி
- தமிழ்வழிக் கல்வி
- காப்பியக் கல்வி
- இயற்கைக் கல்வி
- இசைக் கல்வி
- நாடகக் கல்வி
- அறிவியல் கல்வி

**3. தாய்மொழிவழிக் கல்வி குறித்து திரு. வி. க. கூறுவன யாவை?**

- நாம் தமிழர், நம் தாய்மொழி வாயிலாகவே கல்வி பெறுவது சிறப்பு. அதுவே தான் இயற்கை முறை.
- போதிய ஓய்வு நேரமும் வாய்ப்பும் இருப்பின் வேறு பல மொழிகளையும் பயிலலாம்.
- ஆனால் தாய்மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும்.
- தாய்நாடு என்னும் பெயர் தாய்மொழியைக் கொண்டு பிறப்பது ஆகும்

– என்று தாய்மொழிவழிக் கல்வி குறித்து திரு. வி. க. கூறுகின்றார்.

## கற்பவை கற்றபின்

**1. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகிய தொகுப்புகளில் இடம்பெறும் நூல்களின் பெயர்களைத் திரட்டி எழுதுக.**

| எட்டுத்தொகை | பத்துப்பாட்டு | பதினெண்கீழ்க்கணக்கு | |
|---|---|---|---|
| 1. நற்றிணை | 1. திருமுருகாற்றுப்படை | 1. நாலடியார் | 11. கார்நாற்பது |
| 2. குறுந்தொகை | 2. பொருநராற்றுப்படை | 2. திருக்குறள் | 12. ஐந்திணை ஐம்பது |
| 3. பதிற்றுப்பத்து | 3. சிறுபாணாற்றுப்படை | 3. பழமொழி நானூறு | 13. சிறுபஞ்சமூலம் |
| 4. பரிபாடல் | 4. பெரும்பாணாற்றுப்படை | 4. ஆசாரக்கோவை | 14. திணைமொழி ஐம்பது |
| 5. கலித்தொகை | 5. கூத்தராற்றுப்படை | 5. முதுமொழிக்காஞ்சி | 14. ஐந்திணை எழுபது |
| 6. அகநானூறு | 6. மதுரைக்காஞ்சி | 6. இன்னாநாற்பது | 15. திணைமாலை நூற்றைம்பது |
| 7. புறநானூறு | 7. பட்டினப்பாலை | 7. இனியவை நாற்பது | 16. ஏலாதி |
| 8. ஐங்குறுநூறு | 8. குறிஞ்சிப்பாட்டு | 8. திரிகடுகம் | 17. கைந்நிலை |
| | 9. முல்லைப்பாட்டு | 9. நான்மணிக்கடிகை | 18. சிறுபஞ்சமூலம் |
| | 10. நெடுநல்வாடை | 10. களவழி நாற்பது | |

இயல் 4

விரிவானம்

# ஆன்ற குடிப்பிறத்தல்

பி.ச. குப்புசாமி

## பி.ச. குப்புசாமி

- சிறுகதை ஆசிரியர்.
- தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.
- 'ஜெயகாந்தனோடு பல்லாண்டு' என்னும் நூலை எழுதியுள்ளார்.

## பாடநூல் வினாக்கள்

**1. திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை :**

ஒரு மாணவனின் உள்ளத்தில் ஆசிரியர் விதைத்த விதை எவ்வாறு பயன் தந்தது என்பதை இக்கதை மூலம் காணலாம்.

**காணாமல் போன வேட்டி :**

ஒரு சிற்றூர் பள்ளியின் தலைமை ஆசிரியர் அவர். எளிய குடிசை வீடுதான் அவருடைய வீடு. ஒருநாள் காலை தனது எட்டு முழ வேட்டியைத் தும்பைப் பூவைப் போலத் துவைத்து கொடியில் காயப் போட்டு விட்டு, பள்ளிக்குச் சென்றிருந்தார். பள்ளி முடிந்து வந்து பார்க்கும்போது, அந்த வேட்டியைக் காணவில்லை.

**ஊர் மக்கள் கூற்று :**

கிணற்றில் பல முறை தண்ணீர் எடுப்பதற்குச் சிகாமணி தான் அந்தப் பக்கம் அடிக்கடி வந்தான். எல்லோரும் வேலைக்குப் போய் இருந்த நேரத்தில், அவன் அந்த வேட்டியை எடுத்து இருப்பான். சிகாமணியின் தந்தை பண்டுக் கிழவர். இவனும் ஒரு திருடன். இவன் மகனும் ஒரு திருடன் என்று ஊரார் கூறினார்கள்.

**திருக்குறள் வகுப்பு :**

சிகாமணியின் மகன் சகாதேவன். அவனும் அந்த ஆசிரியரின் பள்ளியில்தான் நான்காம் வகுப்பு படிக்கின்றான். வேட்டி விஷயத்தை அந்தப் பையனிடம் அவர் காட்டிக்கொள்ளவில்லை.

*'அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்*
*பண்புடைமை என்னும் வழக்கு'*

என்னும் குறளை ஆசிரியர் நடத்தத் தொடங்கினார். சிறந்த குடியில் பிறப்பது யார் கையில் உள்ளது? எனவே, திருவள்ளுவர் அப்படிக் கூறியிருக்க மாட்டார். அப்பன் திருடனாக இருக்கலாம், மகன் நல்லவனாக இருப்பான் என்று விளக்கம் தந்தார்.

**சகாதேவன் செயல் :**

மதிய உணவிற்காக ஆசிரியர் வீட்டுக்குச் சென்றிருந்தார். அப்போது கிருஷ்ணமூர்த்தி என்ற இளைஞன் ஆசிரியரின் வேட்டியைக் கொண்டு வந்தான். இதனைச் சகாதேவன் கொடுத்ததாகவும் தாங்கள் நடத்திய பாடத்தால், அப்பா திருடி வைத்திருந்த உங்களுடைய வேட்டியை அவன் கொடுக்கச் சொன்னான் என்றான். ஊரார் ஒன்று கூடி விட்டனர்.

**ஆசிரியரின் எண்ணம் :**

சிகாமணி தான் திருடன் என்பதை, அவன் மகன் சகாதேவன் சொல்லிவிட்டான். 'அவனுக்குத் தண்டனை வாங்கி கொடுக்கலாம் வாருங்கள்' என்று ஆசிரியரை ஊரார் அழைத்தனர். சிகாமணிக்குத் தண்டனை கிடைத்தால், சகாதேவனுக்கும் பாதிப்பு ஏற்படும் என்று ஆசிரியர் எண்ணினார். ஊரார் எவ்வளவு கூறியும் ஆசிரியர் ஏற்றுக் கொள்ளவில்லை. என் வீட்டில் திருடு போகவில்லை என்று நான் சாட்சியம் சொல்வேன் என்றார். மக்களுக்கு எல்லாம் புரிந்தது.

**முடிவுரை :**

"வள்ளுவரின் குறட்பாக்கள் ஒருவரின் மனதை மாற்றம் செய்யும் என்பதில் ஐயமில்லை" என்பதை இக்கதை வாயிலாக நாம் அறிய முடிகின்றது. உலகப் பொதுமறை கற்று, அதன் வழி நடப்போம்.

## கற்பவை கற்றபின்

**1. திருக்குறள் கருத்துகளை உணர்த்தும் கதைகளை அறிந்து வகுப்பில் பகிர்க.**

ஒருநாள் முயலும் ஆமையும் போட்டி ஒன்றை வைத்துக் கொண்டது. தொலைவில் தெரிந்த மலையுச்சியை யார் முதலில் அடைகிறார்களோ? அவர்கள் தான் வெற்றி பெற்றவர்கள் என்பது அப்போட்டியின் விதி. ஆமை மெதுவாகத்தான் செல்லும்; முயல் வேகமாகச் செல்லும். அதனால் முயல் ஆமையின் மீது அலட்சியம் கொண்டது.

முயல் ஒரு மரத்தடியில் தூங்கிவிட்டது. ஆனால், ஆமை மெதுவாக நகர்ந்து நகர்ந்து சென்று கொண்டே இருந்தது. ஆமையிடம் முயற்சி இருந்ததால், அது மலையுச்சியைப் போய் சேர்ந்தது.

முயல் முயற்சி செய்யாததால் கண்விழித்து பார்த்தது, தான் முயற்சி செய்யாததால் தோற்றுப் போனதை எண்ணி மிகவும் வருந்தியது. இதைத்தான் திருவள்ளுவர்,

*'முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை*
*இன்மை புகுத்தி விடும்'* என்கின்றார்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


கற்கண்டு

இயல் 4

# வேற்றுமை

## பாடநூல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது __________ ஆகும்.**
   அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள்
   இ) பயனிலை ஈ) வேற்றுமை **விடை: ஈ) வேற்றுமை**

2. **எட்டாம் வேற்றுமை __________ வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.**
   அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள்
   இ) விளி ஈ) பயனிலை **விடை: இ) விளி**

3. **உடனிகழ்ச்சிப் பொருளில் __________ வேற்றுமை வரும்.**
   அ) மூன்றாம் ஆ) நான்காம்
   இ) ஐந்தாம் ஈ) ஆறாம் **விடை: அ) மூன்றாம்**

4. **'அறத்தான் வருவதே இன்பம்' - இத்தொடரில் __________ வேற்றுமை பயின்று வந்துள்ளது.**
   அ) இரண்டாம் ஆ) மூன்றாம்
   இ) ஆறாம் ஈ) ஏழாம் **விடை: ஆ) மூன்றாம்**

5. **'மலர் பானையை வனைந்தாள்' - இத்தொடர் __________ பொருளைக் குறிக்கிறது.**
   அ) ஆக்கல் ஆ) அழித்தல்
   இ) கொடை ஈ) அடைதல் **விடை: அ) ஆக்கல்**

**பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | மூன்றாம் வேற்றுமை | - | அ) இராமனுக்குத் தம்பி இலக்குவன் |
| 2. | நான்காம் வேற்றுமை | - | ஆ) பாரியினது தேர் |
| 3. | ஐந்தாம் வேற்றுமை | - | இ) மண்ணால் குதிரை செய்தான் |
| 4. | ஆறாம் வேற்றுமை | - | ஈ) ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன் |

**விடை : 1.இ 2.அ 3.ஈ 4.ஆ**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**சிறுவினா.**

1. **எழுவாய் வேற்றுமையை விளக்குக.**
   - எழுவாயுடன் வேற்றுமை உருபுகள் எதுவும் இணையாமல், எழுவாய் தனித்து நின்று, இயல்பான பொருளைத் தருவது எழுவாய் வேற்றுமை என்பர்.
   - இதனை 'முதல் வேற்றுமை' என்றும் கூறுவர்.
   - **எடுத்துக்காட்டு:** பாவை வந்தாள்.

2. **நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?**

   கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை.

3. **உடனிகழ்ச்சிப் பொருளில் என்றால் என்ன?**
   - வினை கொண்டு முடிகிற பொருளைத் தன்னிடத்தும் உடன் நிகழ்கிறதாக உடையது உடனிகழ்ச்சி ஆகும்.
   - ஒடு, ஓடு ஆகிய மூன்றாம் வேற்றுமை உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்.

   **எடுத்துக்காட்டு :**
   - தாயோடு குழந்தை சென்றது.
   - அமைச்சரோடு அலுவலர்கள் சென்றனர்.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **வேற்றுமை வகை ________.**

   அ) ஆறு ஆ) ஏழு
   இ) எட்டு ஈ) மூன்று **விடை: இ) எட்டு**

2. **இரண்டாம் வேற்றுமை உருபு ________.**

   அ) கண் ஆ) ஐ
   இ) கண் ஈ) ஒடு **விடை: ஆ) ஐ**

3. **உடனிகழ்ச்சிப் பொருளில் வரும் வேற்றுமை ________.**

   அ) நான்காம் வேற்றுமை ஆ) ஐந்தாம் வேற்றுமை
   இ) மூன்றாம் வேற்றுமை ஈ) ஏழாம் வேற்றுமை
   **விடை: இ) மூன்றாம் வேற்றுமை**

4. **'முல்லைக்குத் தேர் கொடுத்தான்' இதில் இடம்பெறும் நான்காம் வேற்றுமைப் பொருள்**

   அ) தகுதி ஆ) நட்பு
   இ) பகை ஈ) கொடை **விடை: ஈ) கொடை**

5. **'புகை மனிதனுக்குப் பகை' - இதில் இடம்பெறும் நான்காம் வேற்றுமைப் பொருள் ____.**

   அ) தகுதி ஆ) நட்பு
   இ) பகை ஈ) முறை **விடை: இ) பகை**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

6. ‘செங்குட்டுவனுக்குத் தம்பி இளங்கோ’ இதில் இடம்பெறும் நான்காம் வேற்றுமைப் பொருள் ________.

அ) அதுவாதல் ஆ) பொருட்டு

இ) முறை ஈ) எல்லை **விடை: இ) முறை**

7. ‘தலையின் இழிந்த மயிர்’ – இதில் இடம்பெறும் ஐந்தாம் வேற்றுமைப் பொருள்

அ) நீங்கல் ஆ) ஒப்பு

இ) எல்லை ஈ) ஏது **விடை: அ) நீங்கல்**

8. உரிமைப் பொருளில் வரும் வேற்றுமை ________.

அ) முதல் வேற்றுமை ஆ) ஐந்தாம் வேற்றுமை

இ) ஆறாம் வேற்றுமை ஈ) ஏழாம் வேற்றுமை

**விடை: இ) ஆறாம் வேற்றுமை**

## குறுவினா.

1. வேற்றுமை என்றால் என்ன?

பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்தும் முறைமையை வேற்றுமை என்பர்.

2. வேற்றுமை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

வேற்றுமை எட்டு வகைப்படும்.

- முதல் வேற்றுமை
- இரண்டாம் வேற்றுமை
- மூன்றாம் வேற்றுமை
- நான்காம் வேற்றுமை
- ஐந்தாம் வேற்றுமை
- ஆறாம் வேற்றுமை
- ஏழாம் வேற்றுமை
- எட்டாம் வேற்றுமை

3. வேற்றுமை உருபுகள் என்றால் என்ன?

பெயர்ச்சொல்லுடன் இணைக்கப்படும் அசைகளை வேற்றுமை உருபுகள் என்பர்.

4. மூன்றாம் வேற்றுமைக்கு உரிய உருபுகள் யாவை?

ஆல், ஆன், ஒடு, ஓடு.

5. ஐந்தாம் வேற்றுமைக்குரிய உருபுகள் யாவை?

இல், இன்.

6. ஆறாம் வேற்றுமைக்கு உருபுகள் யாவை?

அது, ஆது, அ.

7. உருபு இல்லாத வேற்றுமைகள் எவை?

- முதலாம் வேற்றுமை
- எட்டாம் வேற்றுமை



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**8. மூன்றாம் வேற்றுமை உருபு எவ்வெவ் பொருள்களில் வரும்?**

கருப்பொருள், கருத்தா பொருள்.

**9. சொல்லுருபுகள் என்றால் என்ன?**

சில இடங்களில் உறுப்புகளுக்குப் பதிலாக முழு சொற்களே வருவதும் உண்டு. அவற்றைச் சொல்லுருபுகள் என்பர்.

**10. ஐந்தாம் வேற்றுமையிலும் ஏழாம் வேற்றுமையிலும் வரும் உருபு எது?**

இல்.

**11. முதல் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை ஆகியவற்றின் வேறு பெயர்கள் யாவை?**

- முதல் வேற்றுமையை எழுவாய் வேற்றுமை என்பர்.
- எட்டாம் வேற்றுமையை விளி வேற்றுமை என்பர்.

## கற்பவை கற்றபின்

**1. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள ஒரு பத்தியைத் தேர்ந்தெடுத்து, அதிலுள்ள வேற்றுமை உருபுகள் எடுத்து எழுதி வகைப்படுத்துக.**

இன்றைய கல்வி குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச் செய்து தேர்வில் தேதி பட்டம் பெற்று ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பு இல்லாமல் போகிறது.

- பாடங்களை - ஐ - இரண்டாம் வேற்றுமை உருபு
- தேர்வில் - இல் - ஏழாம் வேற்றுமை உருபு
- தொழிலில் - இல் - ஏழாம் வேற்றுமை உருபு
- நுழைவதற்கு - கு - நான்காம் வேற்றுமை உருபு

## மொழியை ஆள்வோம்

**கேட்க.**

**1. கல்வியின் சிறப்புகளை விளக்கும் கதைகளைக் கேட்டு மகிழ்க.**

ஒரு ஊரில் வயதான பெரியவர் ஒருவர் இருந்தார். அவருக்கு இரண்டு மகன்கள். மூத்த மகன் படிப்பதே கிடையாது. அந்தப் பெரியவர் எவ்வளவு சொல்லியும் இளமைப்பருவத்தில் அவன் கேட்கவில்லை.

ஆனால் இளைய மகனோ, தந்தையின் சொல்லை மீறாமல் நன்கு படித்தான். தந்தையின் விருப்பப்படி விவசாயத்தைச் செய்தான். ஆனால் பெரிய மகனோ படிக்காமல், வேலைக்கும் செல்லாமல் ஊதாரித்தனமாக சுற்றிக் கொண்டிருப்பான்.

முதியவர் இறக்கும்போது ஒரு உயிலை எழுதி வைத்துச் சென்றார். வீட்டைச் சுற்றி உள்ள காலி இடத்தில் புதையல் இருக்கிறது என அதில் எழுதப்பட்டிருந்தது. அந்த முதியவர் இறந்தவுடன் காலியிடத்தை ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொண்டனர்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

மூத்த மகன் தனக்குரிய பகுதியைத் தோண்டிப் பார்த்துவிட்டு புதையல் எதுவும் இல்லாததால், தன் தந்தை தன்னை ஏமாற்றி விட்டதாக சொல்லி குழிகளை மூடி விடுகிறான். ஆனால் இளையவனோ தோண்டிப் பார்த்துவிட்டு, அதனை மூட மனமில்லாமல் தென்னம் பிள்ளைகளை நட்டான்.

மூத்தவன் கல்வியறிவு இல்லாததால் சொத்தினை விற்று, பரம ஏழையாகப் போனான். இளையவனுக்கு, தென்னம் பிள்ளைகள் வளர்ந்து, பணத்தை அள்ளிக் கொடுத்தது.

## கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.

### கல்வியே அழியாச் செல்வம்

தாயே! தமிழே! வணக்கம்.

தாய் பிள்ளை உறவு அம்மா உனக்கும் எனக்கும். பெருமைமிகு சபைக்கு முதற்கண் வணக்கம்.

கல்வியே அழியாச் செல்வம் என்னும் தலைப்பில் சில நிமிடங்கள் உங்கள் முன் பேசுகின்றேன். "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு" என்பார் திருவள்ளுவர். ஆம்! படிக்கப் படிக்கத்தான் நம் அறிவும் பெருகும். அதுதான் அழியாத செல்வம். செல்வம் சேகரித்து வைத்திருந்தால் அது ஒருநாள் திருடு போகலாம். பொருட்கள் வாங்கி வைத்தால், அது ஒருநாள் வெள்ளத்தில் அடித்துச் செல்லலாம் அல்லது தீக்கு ஆளாகலாம். ஆனால் கல்விச் செல்வத்தைத் திருட முடியாது. எரிக்க முடியாது. வெள்ளத்தால் அடித்துச் செல்ல முடியாது.

மற்றவர் மனதில் அழியாமல் அது நிற்கும். அதனால் தான் அழியாத செல்வம் கல்விச் செல்வம் என்கின்றனர். எனவே அழியாத கல்விச் செல்வத்தை நாம் அனைவரும் கற்போம்.

நன்றி! வணக்கம்.

## சொல்லக்கேட்டு எழுதுக.

தமிழ் மொழிக்கு வளம் சேர்த்த ஒரு நூல்; தமிழுக்கு வாழ்வியல் உண்மைகளை உணர்த்தும் ஒரு நூல்; தன் தோற்றத்தால் தமிழ்நாட்டுக்கு உலகப் பெரும் புகழைப் பெற்றுத் தந்த சிறந்த நூல் திருவள்ளுவரின் திருக்குறள். திருக்குறள் பற்றிப் பேசாத புலவர் இலர்; எழுதாத அறிஞர், எழுத்தாளர் இலர். பள்ளிப் பருவத்திலும் திருக்குறள் படிக்கப்படுகின்றது. பருவம் வளரவளர அதுவும் நுட்பமாகக் கற்கப்படுகின்றது. திருக்குறளுக்குரிய சிறப்பே அதுதான். அஃது எல்லாப் பருவத்தாருக்கும் வேண்டிய விழுமிய நூல். எனவே திருக்குறளில்லாத வீடும் இருக்கக் கூடாது! திருக்குறள் படிக்காத தமிழரும் இருக்கக் கூடாது!


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**கீழ்க்காண்பவற்றுள் ஒரு சொல்லை எடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களுடன் இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

| | | |
|---|---|---|
| **மா** | - | மாவிலை, மாமரம், மாங்காய் |
| **தேன்** | - | மலர்த்தேன், தேன்சிட்டு, தேன்கூடு |
| **மலர்** | - | தேன்மலர் |
| **செம்மை** | - | சேயிலை, செங்குருவி, செந்தேன் |
| **சிட்டு** | - | சிட்டுக்குருவி, தேன்சிட்டு |
| **கனி** | - | மாங்கனி, கனிமரம், தேன்கனி |
| **குருவி** | - | சிட்டுக்குருவி, குருவிக்கூடு |
| **இலை** | - | மாவிலை |
| **காய்** | - | மாங்காய், காய்கனி |
| **கூடு** | - | தேன்கூடு, குருவிக்கூடு |
| **முட்டை** | - | குருவிமுட்டை |
| **மரம்** | - | மாமரம், செம்மரம் |

**பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.**

1. பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்.
2. திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது.
3. தமிழ்மொழி செம்மையானது, வலிமையானது, இளமையானது.
4. கபிலன், "தன் தந்தையிடம் இன்று மாலை விளையாடப் போகட்டுமா?" என்று கேட்டான்.
5. திரு. வி. க. எழுதிய 'பெண்ணின் பெருமை' என்னும் நூல் புகழ்பெற்றது.

**பின்வரும் பத்தியில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.**

'நூல் பல கல்' என்பர் பெரியோர். அறிவை வளர்க்கும் நூல்கள் அனைத்தையும் நம்மால் விலை கொடுத்து வாங்க முடியுமா? முடியாது. நூலகங்கள் இக்குறையை நீக்க உதவுகின்றன. பல்வேறு துறைகளைச் சேர்ந்த அனைத்து நூல்களும் நிறைந்த இடம் நூலகமாகும். நூலகத்தின் வகைகளாவன மைய நூலகம், மாவட்ட நூலகம், கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம். 'எனக்கு பிடித்த நூல்களுடன் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்தாலும் மகிழ்ச்சியடைவேன்' என்றார் நேரு. ஆகவே, நூலகத்தின் பயன் அறிவோம்! அறிவு வளம் பெறுவோம்!

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**




1. **எந்த நாளை முன்னிட்டுப் புத்தகக் கண்காட்சி நடத்தப்படுகிறது?**
   உலகப் புத்தக நாள்.
2. **புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?**
   இராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ மைதானம்.
3. **புத்தகக் கண்காட்சி எத்தனை நாள்கள் நடைபெறுகிறது?**
   11 நாட்கள். (ஏப்ரல் 13 முதல் ஏப்ரல் 23 வரை)
4. **புத்தகக் கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணம் எவ்வளவு?**
   நுழைவுக் கட்டணம் இல்லை.
5. **புத்தகம் வாங்குவோருக்கு வழங்கப்படும் சலுகை யாது?**
   10 சதவீதக் கழிவு.

**கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**முன்னுரை – நூலகத்தின் தேவை – வகைகள் – நூலகத்திலுள்ளவை – படிக்கும் முறை – முடிவுரை**

## நூலகம்

**முன்னுரை :**

*'நூலகம் அறிவின் ஊற்று'*
*'வீட்டிற்கு ஒரு நூலகம் அமைப்போம்'*

என்றார் பேரறிஞர் அண்ணா. ஊரில் உள்ள ஒரு நூலகத்தையாவது, நாம் பயன்படுத்த வேண்டாமா? நூலகத்தைப் பயன்படுத்தும் முன் நூலகத்தைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

**நூலகத்தின் தேவை :**

*'சாதாரண மாணவர்களையும்*
*சாதனையாளர்களாக உயர்த்துவது நூலகம்'*

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- ஏழை மாணவர்களும் இளைஞர்களும் படிப்பதற்குத் தேவையான நூல்களை விலை கொடுத்து வாங்க முடிவதில்லை. சில நூல்களின் விலை மிகவும் அதிகமாக உள்ளது.
- அன்றாடச் செய்தித்தாள்களைக் கூட அவர்களால் வாங்க இயலாத நிலை உள்ளது.
- ஆகவே, இலவசமாக நூல்களைப் படிக்க நூலகம் தேவைப்படுகின்றது.

**வகைகள் :**

மாவட்ட மைய நூலகம், மாவட்ட கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம், தனியார் நூலகம், கல்லூரி நூலகம், பல்கலைக்கழக நூலகம், நடமாடும் நூலகம், மின் நூலகம் எனப் பலவகை நூலகங்கள் உள்ளன.

**நூலகத்தில் உள்ளவை :**

*'அறிவுப் பசிக்கு உணவு நூலகம்'*

தமிழ் மற்றும் ஆங்கிலக் கதை, கவிதை, கட்டுரை, ஆய்வுநூல்கள், வரலாற்று நூல்கள், அறிவியல் நூல்கள், தொழில்நுட்ப நூல்கள், போட்டித் தேர்வு நூல்கள், நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள், அகராதிகள், களஞ்சியங்கள் ஆகியவை நூலகத்தில் உள்ளன.

**படிக்கும் முறை :**

நூலகத்தில் நூல்களை எடுத்து அமைதியாகப் படிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அமர்ந்து படிக்க வேண்டும். நூல்களைக் கிழிக்கவோ, சேதப்படுத்துவதோ கூடாது. படித்து முடித்தவுடன் மீண்டும் உரிய அலமாரியில் நூலை வைக்க வேண்டும்.

**முடிவுரை :**

*'நம் அகம்*
*நூல் அகம்'*

நாளும் நூல் பல கற்று சிறந்த மேதையாக வரவும், நூலகம் துணை செய்கிறது. நூலகம் தேடிச் சென்று, நூல்களைப் படிப்போம்! உயர்வோம்!!

*'நூலகம் அறிஞர்களின் வாழ்வில்லம்'*

## மொழியோடு விளையாடு

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைகளைக் கட்டத்தில் நிரப்புக. வட்டத்தில் சிக்கிய எழுத்துகளை எடுத்து எழுதுக. எழுத்துகளை முறைப்படுத்தி கல்வி பற்றிய பழமொழியைக் கண்டறிக.**

1. திரைப்படப் பாடலாசிரியர் சோமுவின் ஊர் __________.
2. கேடில் விழுச்செல்வம் __________.
3. குமரகுருபரர் எழுதிய நூல்களுள் ஒன்று __________.
4. 'கலன்' என்னும் சொல்லின் பொருள் __________.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


5. ஏட்டுக் கல்வியுடன் __________ கல்வியும் பயில வேண்டும்.
6. திரு. வி. க. எழுதிய நூல்களுள் ஒன்று __________.
7. மா + பழம் என்பது __________ விகாரம்.

**விடைகள்**

1.

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | ல | ங் | கு | டி |

2.

| | | |
|---|---|---|
| க | (ல்) | வி |

3.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நீ | தி | நெ | (றி) | வி | ள | க் | க | ம் |

4.

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | ணி | க | ல | ன் |

5.

| | | | |
|---|---|---|---|
| இ | ய | (ற்) | கை |

6.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ | ரி | மை | (வே) | ட் | கை |

7.

| | | | |
|---|---|---|---|
| தோ | ன் | (ற) | ல் |

**வட்டத்தில் சிக்கிய எழுத்துகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆ | ல் | றி | அ | ற் | வே | ற |

**பழமொழி – அறிவே ஆற்றல்**

## நிற்க அதற்குத் தக....

**என் பொறுப்புகள்:**

1. நாள்தோறும் ஒரு திருக்குறள் கற்பேன்.
2. அனைவரிடமும் அன்புகொண்டு வாழ்வேன்.

**கலைச்சொல் அறிவோம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ♦ நிறுத்தக்குறி | - | Punctuation | மொழிபெயர்ப்பு | - | Translation |
| ♦ அணிகலன் | - | Ornament | விழிப்புணர்வு | - | Awareness |
| ♦ திறமை | - | Talent | சீர்திருத்தம் | - | Reform |



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## இணையத்தில் காண்க

**திரு. வி. க. எழுதிய நூல்களின் விவரங்களை இணையத்தில் தேடி எழுதுக.**

- மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்
- முருகன் அல்லது அழகு
- தமிழ்த்தென்றல்
- உரிமை வேட்கை
- பெண்ணின்பெருமை
- பொதுமை வேட்டல்
- தேசபத்தாமிர்தம்
- என் கடன் பணி செய்து கிடப்பது
- தமிழ்நாட்டுச் செல்வம்
- இளமை விருந்து
- இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்
- சைவத்திறவு
- நினைப்பவர் மனம்
- முதுமை உளறல்
- இருளில் ஒளி
- யாழ்ப்பாணம் தந்த சிவஞான சீதம் நா. கதிரைவேற்பிள்ளை சரித்திரம்
- நாயன்மார் வரலாறு
- முடியா? காதலா? சீர்திருத்தமா?
- உள்ளொளி
- திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்-1
- திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்-2
- தமிழ்க்கலை
- இந்தியாவும் விடுதலையும்
- சைவ சமய சாரம்
- நாயன்மார் திறம்
- சைவத்தின் சமசரசம்
- இலங்கைச் செலவு
- கிறிஸ்து மொழிக்குறள்

இயல் 4

தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## அலகுத் தேர்வு

### இயல் - 4

நேரம்: 30 நிமிடம் மதிப்பெண்கள்: 20

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3)

1. **கற்றவருக்கு அழகு தருவது ________.**
   அ) தங்கம் ஆ) வெள்ளி
   இ) வைரம் ஈ) கல்வி
2. **'கலனல்லால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.**
   அ) கலன் + லல்லால் ஆ) கலம் + அல்லால்
   இ) கலன் + அல்லால் ஈ) கலன் + னல்லால்
3. **என் நண்பர் பெரும் புலவராக இருந்த போதும் ________ இன்றி வாழ்ந்தார்.**
   அ) சோம்பல் ஆ) அகம்பாவம்
   இ) வருத்தம் ஈ) வெகுளி

**ஆ. பொருத்துக.** (4)

| | | |
|---|---|---|
| 4. இயற்கை ஓவியம் | - | சிந்தாமணி |
| 5. இயற்கை தவம் | - | பெரியபுராணம் |
| 6. இயற்கை பரிணாமம் | - | பத்துப்பாட்டு |
| 7. இயற்கை அன்பு | - | கம்பராமாயணம் |

**இ. குறுவிடை தருக.** (4)

8. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?
9. வேற்றுமை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**ஈ. சிறு விடை தருக.** (6)

10. நீதிநெறி விளக்கப் பாடல் கூறும் கருத்துகளைத் தொகுக்க.
11. காப்பியக் கல்வி குறித்துத் திரு.வி.க. கூறுவன யாவை?

**உ. அடிபிறழாமல் எழுதுக.** (3)

12. கற்றோர்க்கு.... எனத் தொடங்கும் நீதிநெறி விளக்கப் பாடல்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

கவிதைப் பேழை

இயல் 5

# திருக்கேதாரம்

சுந்தரர்

## சுந்தரர்

- தேவாரம் பாடிய மூவருள் ஒருவர்.
- சிறப்புப் பெயர் – நம்பியாரூரர், தம்பிரான் தோழர்.
- இவர் இயற்றிய தேவாரப் பாடல்கள் பன்னிரு திருமுறைகளுள் ஏழாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளன.
- இவர் இயற்றிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகக் கொண்டு சேக்கிழார் பெரியபுராணத்தைப் படைத்தார்.

## சொல்லும் பொருளும்

- பண் – இசை
- கனகச்சுனை – பொன் வண்ண நீர்நிலை
- மதவேழங்கள் – மத யானைகள்
- முரலும் – முழங்கும்
- பழவெய் – முதிர்ந்த மூங்கில்

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. காட்டிலிருந்து வந்த __________ கரும்பைத் தின்றன.**

அ) முகில்கள் ஆ) முழவுகள்
இ) வேழங்கள் ஈ) வேய்கள்

**விடை: இ) வேழங்கள்**

**2. 'கனகச்சுனை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.**

அ) கனகச் + சுனை ஆ) கனக + சுனை
இ) கனகம் + சுனை ஈ) கனம் + சுனை

**விடை: இ) கனகம் + சுனை**

**3. முழவு + அதிர என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________.**

அ) முழவுதிர ஆ) முழவுதிரை
இ) முழவதிர ஈ) முழவுஅதிர

**விடை: இ) முழவதிர**

www.Padasalai.Net www.CBSEtips.in


## குறுவினா.

**1. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?**

புல்லாங்குழல் மற்றும் முழவு ஆகியவற்றைத் தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாகச் சுந்தரர் கூறுகின்றார்.

## சிறு வினா.

**1. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?**

- பண்ணோடு சேர்ந்த இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடும் போது, அதற்கு ஏற்றவாறு முதிர்ந்த மூங்கில்களால் ஆன புல்லாங்குழலும் முழவும் இணைந்து ஒலிக்கும்.
- கண்களுக்கு இனிய குளிர்ச்சிதரும் ஒளியை உடைய பொன் வண்ண நீர் நிலைகள் வைரங்களைப் போன்ற நீர்த் திவலைகளை வாரி இறைக்கும்.
- நிலத்தின் மீது நின்று கொண்டிருக்கும் மத யானைகள் மணிகளை வாரி வாரி வீசும். இவற்றால் இடையறாது தோன்றும் 'கிண்' என்னும் ஒலியானது இசையாக முழங்கும்.
- இத்தகைய சிறப்புகள் உடைய நகரம் திருக்கேதாரம் என்று சுந்தரர் வருணனை செய்கிறார்.

## சிந்தனை வினா

**விழாக்களின்போது இசைக்கருவிகளை இசைக்கும் வழக்கம் எவ்வாறு தோன்றியிருக்கும் என எழுதுக.**

திருவிழாக் கூட்டத்தில் இரைச்சலைக் குறைக்கவும், திருவிழா நிகழ்வு நடக்கப் போகிறது என்பதை அறிவிக்கவும், இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை. அந்த உயிர்களைப் படைத்த இறைவன் இசையை விரும்புவான். அதனால் விழாக்களின்போது இசைக்கருவிகள் இசைக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.இசைக்கருவிகளை இசைக்கும் போது உணர்ச்சிப் பெருக்கும், பக்திப்பெருக்கும் ஏற்படுவதாலும் விழாக்களின்போது இசைக் கருவிகளை இசைக்கும் வழக்கம் தோன்றியிருக்கும்.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. 'நம்பியாரூரர், தம்பிரான் தோழர்' என்னும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டவர்**

அ) சுந்தரர் ஆ) திருநாவுக்கரசர்
இ) மாணிக்கவாசகர் ஈ) திருஞானசம்பந்தர் **விடை: அ) சுந்தரர்**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. **தேவாரத்தைத் தொகுத்தவர் __________.**

அ) நம்பியாண்டார் நம்பி ஆ) திருநாவுக்கரசர்
இ) சுந்தரர் ஈ) திருஞானசம்பந்தர்

**விடை: அ) நம்பியாண்டார் நம்பி**

3. **பன்னிரு திருமுறைகளுள் ஏழாம் திருமுறையை இயற்றியவர் __________.**

அ) திருஞானசம்பந்தர் ஆ) சுந்தரர்
இ) சேக்கிழார் ஈ) நம்பியாண்டார் நம்பி **விடை: ஆ) சுந்தரர்**

4. **'திருக்கேதாரம்' எனும் தலைப்பில் அமைந்த கவிதைப் பேழை பாடலை இயற்றியவர்**

அ) நம்பியாண்டார் நம்பி ஆ) சேக்கிழார்
இ) சுந்தரர் ஈ) திருநாவுக்கரசர் **விடை: இ) சுந்தரர்**

5. **பதிகம் என்பது __________ பாடல்களைக் கொண்டது.**

அ) ஆறு ஆ) நூறு
இ) பத்து ஈ) இருபது **விடை: இ) பத்து**

6. **பொன் வண்ண நிறமாக இருந்தவையாகச் சுந்தரர் குறிப்பிடுவன __________.**

அ) நீர்த்திவலைகள் ஆ) நீர்நிலைகள்
இ) மணல் ஈ) புல்லாங்குழல் **விடை: ஆ) நீர்நிலைகள்**

7. **வைரங்களைப் போல இருந்தவையாகத் திருக்கேதாரம் குறிப்பிடுவன __________.**

அ) புல்லாங்குழல் ஆ) முழவு
இ) நீர்த்திவலைகள் ஈ) நீர்நிலைகள் **விடை: இ) நீர்த்திவலைகள்**

### குறுவினா.

1. **தேவாரம் பாடிய மூவர் யார்?**

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்.

2. **தேவாரம் பெயர்க்காரணம் கூறுக.**

- இறைவனுக்குச் சூட்டப்படும் மாலை (தே + ஆரம்)
- இனிய இசை பொருந்திய பாடல் (தே + வாரம்)

3. **கண்ணுக்குக் குளிர்ச்சி தருபவை என்று சுந்தரர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

பொன் வண்ண நீர்நிலைகள் கண்களுக்கு இனிய குளிர்ச்சி தரும் என்று சுந்தரர் குறிப்பிடுகிறார்.

4. **நீர் நிலைகள் மற்றும் நீர்த் திவலைகள் ஆகியவற்றிற்குக் கூறப்பட்ட உவமை யாது?**

- நீர் நிலைகள் - பொன்வண்ணம்
- நீர்த்திவலைகள் - வைரம்

5. **மத யானைகளின் செயல்களாகச் சுந்தரர் குறிப்பிடுவன யாவை?**

நிலத்தின் மீது நின்று கொண்டிருக்கும் மத யானைகள் மணிகளை வாரி வாரி வீசும் என்று சுந்தரர் குறிப்பிடுகிறார்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**சிறுவினா.**

1. **சுந்தரர் குறிப்பு வரைக.**

தேவாரம் பாடிய மூவரில் ஒருவர்.

சிறப்பு பெயர் : நம்பியாரூரர், தம்பிரான் தோழர்.

படைப்புகள் : பன்னிரு திருமுறைகளுள் ஏழாம் திருமுறை.

## கற்பவை கற்றபின்

**தேவாரம் பாடிய மூவர் பற்றிய செய்திகளைத் திரட்டுக.**

**திருஞானசம்பந்தர் :**

- இயற்பெயர் - ஆளுடைய பிள்ளை
- பெற்றோர் - சிவபாத இருதயர், பகவதி அம்மையார்.
- ஊர் - சீர்காழி

தேவாரத்தின் முதல் நூலைப் பாடியவர். பன்னிரு திருமுறைகளில் ஒன்று, இரண்டு மற்றும் மூன்றாம் திருமுறை இவர் பாடியவை.

சிறு வயதில் மூன்று வயதுவரை பேசாதிருந்தார். உமையம்மை கொடுத்த ஞானப்பாலை உண்ணும்போது தோடுடைய செவியன் எனும் முதல் பாடலைப் பாடினார்.

**திருநாவுக்கரசர் :**

- இயற்பெயர் - மருள்நீக்கியார்
- சிறப்புப் பெயர்கள் - திருநாவுக்கரசர், வாகீசர், அப்பர், ஆளுடைய அரசு, தாண்டக வேந்தர், தருமசேனர்
- பெற்றோர் - புகழனார், மாதினியார்.
- தமக்கை - திலகவதியார்
- பிறந்த ஊர் - திருவாமூர்

இவர் பாடிய பாடல்கள் பன்னிரு திருமுறைகளுள் 4, 5, 6 ஆம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

**சுந்தரர் :**

- பிறந்த ஊர் - திருநாவலூர்
- பெற்றோர் - சடையனார், இசைஞானியார்.
- இயற்பெயர் - நம்பியாரூரர்
- சிறப்புப் பெயர்கள் - வன்தொண்டர், தம்பிரான் தோழர்.

இவருடைய பாடல்கள் ஏழாம் திருமுறையாகப் பன்னிரு திருமுறைகளுள் வைக்கப் பட்டுள்ளன.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

கவிதைப் பேழை

இயல் 5

# பாடறிந்து ஒழுகல்

நல்லந்துவனார்

## நல்லந்துவனார்

- கலித்தொகையைத் தொகுத்தவர் நல்லந்துவனார்.
- சங்ககாலப் புலவர்களில் ஒருவர் நெய்தற்கலி பாடல்களை இயற்றியவரும் இவரே!

## மனப்பாடப் பாடல்

**"ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்**
**போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை**
**பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்**
**அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை**
**அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்**
**செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை**
**நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை**
**முறை எனப்படுவது கண்ஓடாது உயிர் வௌவல்**
**பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்"**

## சொல்லும் பொருளும்

- அலந்தவர் - வறியவர்
- செறாஅமை - வெறுக்காமை
- நோன்றல் - பொறுத்தல்
- போற்றார் - பகைவர்
- கிளை - உறவினர்
- பேதையார் - அறிவற்றவர்
- மறாஅமை - மறவாமை
- பொறை - பொறுமை

இயல் 5 தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பசியால் வாடும் ________ உணவளித்தல் நமது கடமை.
அ) பிரிந்தவர்க்கு ஆ) அலந்தவர்க்கு
இ) சிறந்தவர்க்கு ஈ) உயர்ந்தவருக்கு **விடை: ஆ) அலந்தவர்க்கு**

2. நம்மை ________ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.
அ) இகழ்வாரை ஆ) அகழ்வாரை
இ) புகழ்வாரை ஈ) மகிழ்வாரை **விடை: அ) இகழ்வாரை**

3. மறைபொருளைக் காத்தல் ________ எனப்படும்.
அ) சிறை ஆ) அறை
இ) கறை ஈ) நிறை **விடை: ஈ) நிறை**

4. 'பாடறிந்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) பாட் + அறிந்து ஆ) பா + அறிந்து
இ) பாடு + அறிந்து ஈ) பாட்டு + அறிந்து **விடை: இ) பாடு+அறிந்து**

5. முறை + எனப்படுவது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.
அ) முறையப்படுவது ஆ) முறையெனப்படுவது
இ) முறைஎனப்படுவது ஈ) முறைப்படுவது
**விடை: ஆ) முறையெனப்படுவது**

### குறுவினா.

1. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
   - பண்பு என்பது சான்றோர் காட்டிய வழியில் நடத்தல்.
   - அன்பு என்பது உறவினர்களோடு வெறுப்பின்றி வாழ்தல்.

2. முறை, பொறை என்பவற்றுக்குக் கலித்தொகை கூறும் விளக்கம் யாது?
   - முறை என்பது குற்றம் செய்தவருக்கு உரிய தண்டனை வழங்குதல்.
   - பொறை என்பது தம்மை இகழ்பவரையும் பொறுத்தல்.

### சிறுவினா.

1. நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.
   - இல்வாழ்வு என்பது ஏழைகளுக்கு உதவி செய்தல்.
   - பாதுகாத்தல் என்பது சான்றோர் காட்டிய வழியில் நடத்தல்.
   - அன்பு என்பது உறவினர்களோடு வெறுப்பின்றி வாழ்தல்.


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- அறிவு என்பது அறிவற்றவர்கள் கூறும் சொற்களைப் பொறுத்தல்.
- செறிவு என்பது முன் சொன்ன வாக்கை மறுக்காமல் காப்பாற்றுதல்.
- நிறை என்பது மறைபொருளை அழியாமல் காத்தல்.
- முறை என்பது குற்றம் செய்தவருக்கு உரிய தண்டனை வழங்குதல்
- பொறை என்பது தம்மை இகழ்பவரையும் பொறுத்தல்.

இத்தகைய பண்புகளைப் பின்பற்றி வாழவேண்டும் என்று கலித்தொகை குறிப்பிடுகிறது.

**சிந்தனை வினா.**

1. **வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்பு நலன்களாக நீங்கள் கருதுவன யாவை?**

உண்மை, உழைப்பு, நேர்மை, அன்பு, அறம், சினம் கொள்ளாமை, புறம் கூறாமை, தன்னம்பிக்கை, ஊக்கப்படுத்துதல், பொறாமை கொள்ளாமை, ஏழைகளுக்கு உதவுதல், பெரியோரை மதித்தல், மனிதநேயத்துடன் இருத்தல், பிறர் செய்யும் பிழையைப் பொறுத்துக் கொள்ளுதல் ஆகியன வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய பண்பு நலன்களாக நாங்கள் கருதுகின்றோம்.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **கலித்தொகை ________ நூல்களுள் ஒன்று.**

அ) பத்துப்பாட்டு ஆ) எட்டுத்தொகை
இ) பதினெண்கீழ்க்கணக்கு ஈ) காப்பியம் **விடை: ஆ) எட்டுத்தொகை**

2. **கலித்தொகையில் அமைந்துள்ள பாடல்களின் எண்ணிக்கை ________.**

அ) 400 ஆ) 401
இ) 100 ஈ) 150 **விடை: ஈ) 150**

3. **கலித்தொகையைத் தொகுத்தவர் ________.**

அ) ஓரம்போகியார் ஆ) அம்மூவனார்
இ) பெருங்கடுங்கோ ஈ) நல்லந்துவனார் **விடை: ஈ) நல்லந்துவனார்**

4. **கலித்தொகையில் நெய்தல் கலி பாடியவர் ________.**

அ) ஓரம்போகியார் ஆ) அம்மூவனார்
இ) பெருங்கடுங்கோ ஈ) நல்லந்துவனார் **விடை: ஈ) நல்லந்துவனார்**

5. **கிளை என்பதன் பொருள் ________.**

அ) அறிவற்றவர் ஆ) உறவினர்
இ) பகைவர் ஈ) வறியவர் **விடை: ஆ) உறவினர்**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## குறுவினா.

**1. ஆற்றுதல், போற்றுதல் குறித்து கலித்தொகை குறிப்பிடுவன யாவை?**

- ஆற்றுதல் - ஏழைகளுக்கு உதவிசெய்து போற்றுதல்.
- போற்றுதல் - அன்புடையோரைப் பிரியாமல் வாழ்தல்.

**2. அறிவு, செறிவு குறித்து நல்லந்துவனார் கூறுவன யாவை?**

- அறிவு என்பது அறிவற்றவர் கூறும் சொற்களைப் பொறுத்துக் கொள்ளுதல்.
- செறிவு என்பது முன் சொன்ன வாக்கை மறுக்காமல் காப்பாற்றுதல்.

## சிறு வினா.

**1. கலித்தொகை - குறிப்பு வரைக.**

- கலித்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- கலிப்பா என்னும் பாவகையால் ஆனது.
- 150 பாடல்களைக் கொண்டது.
- கற்றறிந்தார் ஏத்தும் (புகழும்) கலித்தொகை.
- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து பிரிவுகளை உடையது.
- தொகுத்தவர் - நல்லந்துவனார்.

## கற்பவை கற்றபின்

**அன்பு, வாய்மை, நேர்மை போன்ற நற்பண்புகளின் பெயர்களைத் தொகுத்து பட்டியல் ஒன்று உருவாக்குக.**

| அன்பு | வாய்மை | நேர்மை |
|---|---|---|
| நேயம் | உண்மை | நியாய முறை |
| பரிவு | மெய்ம்மை | நடுவு நிலைமை |
| பாசம் | வழுவாமை | புறங்கூறாமை |
| காதல் | தவறாமை | கூறியது மறவாமை |
| நட்பு | பொய்யாமை | இகழ்ந்து பேசாமை |

இயல் 5 தமிழ்

உரைநடை உலகம்

இயல் 5

# நாட்டுப்புறக் கைவினைக் கலைகள்

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ________.**

அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள்

இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்

**விடை: இ) பனையோலைகள்**

2. **பானை ________ ஒரு சிறந்த கலையாகும்.**

அ) செய்தல் ஆ) வனைதல்

இ) முடைதல் ஈ) சுடுதல் **விடை: ஆ) வனைதல்**

3. **'மட்டுமல்ல' எனும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.**

அ) மட்டு + மல்ல ஆ) மட்டம் + அல்ல

இ) மட்டு + அல்ல ஈ) மட்டும் + அல்ல **விடை: ஈ) மட்டும்+அல்ல**

4. **கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.**

அ) கயிற்றுக்கட்டில் ஆ) கயிர்க்கட்டில்

இ) கயிறுக்கட்டில் ஈ) கயிற்றுகட்டில் **விடை: அ) கயிற்றுக்கட்டில்**

### பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. **முழுவதும்** - பாடநூல் முழுவதும் வாசித்தால்தான் தெளிவு கிடைக்கும்.
2. **மட்டுமல்லாமல்** - ஏட்டுக் கல்வி மட்டுமல்லாமல் தொழில் கல்வியும் கற்க வேண்டும்.
3. **அழகுக்காக** - பல அரங்குகளில் சுடுமண் சிற்பங்களை அழகுக்காக வைத்திருப்பார்கள்.
4. **முன்பெல்லாம்** - முன்பெல்லாம் மண்பாண்டங்களை அதிகம் பயன்படுத்தினார்கள்.

### குறுவினா.

1. **எவற்றையெல்லாம் கைவினைக்கலைகள் எனக் கூறுகிறோம்?**

மண் பொம்மைகள் செய்தல், மரப்பொம்மைகள் செய்தல், காகிதப்பொம்மைகள் செய்தல், தஞ்சாவூர்த்தட்டு செய்தல், சந்தன மாலையும் ஏலக்காய் மாலையும் செய்தல், மாட்டுக்கொம்பினால் கலைப் பொருட்கள் செய்தல் ஆகியவற்றை எல்லாம் கைவினைக் கலைகள் எனக் கூறுகிறோம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**2. மண்பாண்டம், சுடுமண் சிற்பம் - ஒப்பிடுக.**

| மண்பாண்டம் | சுடுமண் சிற்பம் |
|---|---|
| களிமண்ணை ஒரு நாள் முழுவதும் ஊறவைத்து மெல்லிய மணல் மற்றும் சாம்பல் சேர்த்து சக்கரத்தால் செய்வது மண்பாண்டம். | களிமண்ணால் செய்யப்பட்டு சூளையில் சுட்டு எரித்து எடுக்கப் படுபவை சுடுமண் சிற்பங்கள். |

**3. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?**

குழந்தைகளுக்கான கிளுகிளுப்பை பொம்மைகள், பொருள்களை வைத்துக்கொள்ள உதவும் சிறிய கொட்டான், பெரிய கூடை, சுளகு, விசிறி, தொப்பி, ஓலைப்பாய், பனை மட்டை நாரிலிருந்து கயிறு, கட்டில், கூடை போன்றவை செய்யப்படுகின்றன.

## சிறுவினா.

**1. பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக.**

- பிரம்பு என்பது ஒரு தாவரம். முதலில் பிரம்புகளை நெருப்பில் காட்டிச் சூடுபடுத்த வேண்டும்.
- சூடான பிரம்பை நட்டு வைத்திருக்கும் இரண்டு பாறைகளுக்கு இடையே செலுத்தி வளைக்க வேண்டும். அது வேண்டிய வடிவத்தில் கம்பி போல வளையும்.
- பின்னர் அதனை தண்ணீரில் நனைத்து வைத்து விட்டால், அப்படியே நிலைத்து விடும். பிறகு அவற்றை இணைத்துச் சிறு ஆணிகளை அறைந்தும், சிறு பிரம்பு இழைகளைக் கொண்டும் தேவையான பொருட்களாக மாற்ற வேண்டும்.

**2. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.**

மட்டக்கூடை, தட்டுக்கூடை, கொட்டுக்கூடை, முறம், ஏணி, சதுரத்தட்டி, கூரைத்தட்டி, தெருக்கூட்டும் துடைப்பம், மாடுகளுக்கான மூஞ்சிப்பெட்டி, பழக்கூடை, பூக்கூடை, பூத்தட்டு, கட்டில், புல்லாங்குழல், புட்டுக்குழாய், கால்நடைகளுக்கு மருந்து புகட்டும் குழாய், தொட்டில், பாடை ஆகியவை அனைத்தும் மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் ஆகும்.

## நெடுவினா.

**1. தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**மண்பாண்டக் கலை :**

- குடம், தோண்டி, கலயம், கடம், மூடி, உழக்கு, அகல், உண்டியல், அடுப்பு, தொட்டி ஆகிய அனைத்துப் பொருட்களும் சுத்தமான களிமண்ணால் செய்யப்பட்டவை.
- பக்குவப்படுத்தப்பட்ட களிமண், மெல்லிய மணல் சாம்பல் ஆகியவற்றைக் கலந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.
- சக்கரத்தின் நடுவே வைத்து உரிய வடிவத்தால் அதைக் கொண்டு வர வேண்டும்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

பிறகு அடிப்பகுதியில் நூல் அல்லது ஊசியால் அறுத்து எடுத்து காயவைக்க வேண்டும். பிறகு உரிய மண்பாண்டம் தயாராகிவிடும்.

- மண்பாண்டங்களில் சமைத்த உணவு உடலுக்கு நல்லது.
- திருவிழாக் காலங்களிலும் சமயச் சடங்குகளிலும் மண்பானைகள் இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**மூங்கில் கலை :**

- மூங்கில் கொண்டு பல கைவினைப் பொருட்கள் செய்யப்படுகின்றன.
- மட்டக்கூடை, தட்டுக்கூடை, கொட்டுக்கூடை, முறம், ஏணி, சதுரத்தட்டி, கூரைத்தட்டி, தெருக்கூட்டும் துடைப்பம், மாடுகளுக்கான மூஞ்சிப்பெட்டி, பழக்கூடை, பூக்கூடை, பூத்தட்டு, கட்டில், புல்லாங்குழல், புட்டுக்குழாய், கால்நடைகளுக்கு மருந்து புகட்டும் குழாய், தொட்டில், பாடை ஆகிய அனைத்தும் மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் ஆகும்.
- முன்பு எல்லாம் திருமணத்தின் போது சீர்த்தட்டுகளாகப் பயன்படுத்தினர்

**பனையோலைக் கலை :**

- பனையோலையில் பல கைவினைப் பொருட்கள் உருவாக்கப்படுகின்றன.
- குழந்தைகளுக்கான கிளுகிளுப்பை பொம்மைகள், பொருள்களை வைத்துக் கொள்ள உதவும் சிறிய கொட்டான், பெரிய கூடை, சுளகு, விசிறி, தொப்பி, ஓலைப்பாய், பனை மட்டை நாரிலிருந்து கயிறு, கட்டில், கூடை போன்றவை செய்யப்படுகின்றன.

**பிரம்புக் கலை :**

- பிரம்பு என்பது ஒரு தாவரம்.
- முதலில் பிரம்புகளை நெருப்பில் காட்டி சூடுபடுத்த வேண்டும். சூடான பிரம்பை நட்டு வைத்திருக்கும் இரண்டு பாறைகளுக்கு இடையே செலுத்தி வளைக்க வேண்டும்.
- அது வேண்டிய வடிவத்தில் கம்பி போல வளையும். பின்னர் அதனைத் தண்ணீரில் நனைத்து வைத்து விட்டால்,அப்படியே நிலைத்து விடும். பிறகு அவற்றை இணைத்துச் சிறு ஆணிகளை அறைந்தும், சிறு பிரம்பு இழைகளைக் கொண்டு கூட்டியும் தேவையான பொருட்களாக மாற்ற வேண்டும்.
- பிரம்பு மிகவும் குளிர்ச்சியானது. எனவே அதில் அமர்வது உடல்நலத்துக்கு நல்லது.
- மேலும் பிரம்புப்பொருள் வீட்டுக்கு அழகையும் கொடுக்கும்.

**சிந்தனை வினா.**

**கைவினைக் கலைகளுக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் இடையேயுள்ள தொடர்பு குறித்து எழுதுக.**

- கைவினைப் பொருட்கள் அனைத்தும் இயற்கையான பொருளால் தயாரிக்கப் படுபவை.

இயல் 5 தமிழ்

- செயற்கையான பொருளோ தீங்கு விளைவிக்கும் இரசாயனமோ இதில் பயன்படுத்தப்படுவது இல்லை.
- இயற்கையாகக் கிடைக்கும் களிமண், பனை ஓலை, மூங்கில், பிரம்பு ஆகியவற்றை முதன்மைப் பொருளாகக் கொண்டு கைவினைப் பொருட்கள் செய்யப்படுகின்றன.
- கைவினைக் கலைகளுக்குப் பயன்படுத்தப்படக்கூடிய பொருட்களின் மீதத்தைப் பூமியில் புதைத்தாலும், அவை மக்கி விடும். இதனால் சுற்றுப்புறத்திற்கு எந்தத் தீங்கும் ஏற்படாது.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **பானை ஓடுகள் கிடைத்துள்ள இடம் __________.**
அ) சிந்துசமவெளி ஆ) ஆதிச்சநல்லூர்
இ) செம்பியன் கண்டியூர் ஈ) கீழடி **விடை: அ) சிந்துசமவெளி**

2. **முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ள தமிழக இடம் __________.**
அ) சிந்துசமவெளி ஆ) ஆதிச்சநல்லூர்
இ) செம்பியன் கண்டியூர் ஈ) கீழடி **விடை: ஆ) ஆதிச்சநல்லூர்**

3. **மிகவும் பழமையான கைவினைக் கலைகளில் ஒன்று __________.**
அ) பிரம்புக் கலை ஆ) மண்பாண்டக் கலை
இ) பனை ஓலைக்கலை ஈ) மூங்கில் கலை
**விடை: ஆ) மண்பாண்டக் கலை**

4. **குளங்கள், ஆற்றங்கரைகள், வயல்வெளிகள் ஆகிய இடங்களில் கிடைக்கும் __________.**
அ) செம்மண் ஆ) களிமண்
இ) வண்டல் மண் ஈ) உவர்மன் **விடை: ஆ) களிமண்**

5. **பானை செய்யும் சக்கரத்தின் வேறு பெயர் __________.**
அ) ஊசி ஆ) நூல்
இ) திருவை ஈ) சுழல் **விடை: இ) திருவை**

6. **குழந்தைகளைப் படுக்க வைக்க உதவும் பாய் __________.**
அ) பந்திப்பாய் ஆ) திண்ணைப் பாய்
இ) பட்டுப் பாய் ஈ) தடுக்குப் பாய் **விடை: ஈ) தடுக்குப் பாய்**

7. **உட்காரவும் படுக்கவும் உதவும் __________ பாய்.**
அ) பந்திப்பாய் ஆ) திண்ணைப் பாய்
இ) பட்டுப் பாய் ஈ) தடுக்குப் பாய் **விடை: ஆ) திண்ணைப் பாய்**

8. **“முற்காலத்தில் பாய்மரக் கப்பல்களில் பயன்படுத்தியது கூட பாய் தான்” என்பதைக் கூறும் நூல் __________.**
அ) அகநானூறு ஆ) பரிபாடல்
இ) புறநானூறு இ) பதிற்றுப்பத்து **விடை: இ) புறநானூறு**

9. **தமிழ்நாட்டின் மாநில மரம் ________.**

அ) தென்னை மரம் ஆ) மாமரம்

இ) பனை மரம் ஈ) மூங்கில் மரம் **விடை: இ) பனை மரம்**

10. **பிரம்பு என்பது ________ வகையைச் சேர்ந்த தாவரம்.**

அ) செடி ஆ) கொடி

இ) மரம் ஈ) நீர்நிலை **விடை: ஆ) கொடி**

11. **கலாமஸ் ரொடாங் என்னும் தாவரவியல் பெயர் கொண்டது ________.**

அ) பிரம்பு ஆ) மூங்கில்

இ) மண்பாண்டம் ஈ) பனையோலை **விடை: அ) பிரம்பு**

## குறுவினா.

1. **கைவினைக் கலைகள் என்றால் என்ன?**

அன்றாடப் பயன்பாட்டுக்காக அழகிய பொருள்களைத் தொழில் முறையில் உருவாக்கும் கலையைக் கைவினைக் கலை என்பர்.

2. **மூங்கில் வகைகள் யாவை?**

- கல் மூங்கில்
- மலை மூங்கில்
- கூட்டு மூங்கில்

என மூங்கில் மூன்று வகைப்படும்.

3. **கைவினைப் பொருட்கள் செய்யப் பயன்படும் மூங்கில் எவை?**

கூட்டு மூங்கிலே கைவினைப் பொருட்கள் செய்யப் பயன்படும் மூங்கில் ஆகும்.

4. **மண்பாண்டப் பொருட்கள் யாவை?**

பானை, சட்டி, குடம், தோண்டி, கலயம், கடம், மூடி, உழக்கு, அகல், உண்டியல், அடுப்பு, தொட்டி ஆகியன மண்பாண்டப் பொருட்கள் ஆகும்.

5. **களிமண் கிடைக்கும் இடங்கள் யாவை?**

குளங்கள், ஆற்றங்கரைகள் மற்றும் வயல்வெளிகள் ஆகியவற்றில் களிமண் கிடைக்கும்.

6. **திருவை என்றால் என்ன?**

மண் பானை செய்யும் சக்கரத்தையே திருவை என்பர்.

7. **மண்பாண்டங்களால் கிடைக்கும் நன்மைகள் யாவை?**

- மண்பாண்டங்களில் சமைத்த உணவு நல்ல சுவையுடன் இருக்கும்.
- மண்பாண்டத்தில் செய்யப்படும் உணவே உடல் நலத்திற்கும் நல்லது.
- மண் பானையில் வைத்த தண்ணீர் குளிர்ச்சியாக இருக்கும்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**8. சுடுமண் சிற்பங்கள் என்றால் என்ன?**

மண்பாண்டங்களைப் போன்றே களிமண்ணால் செய்யப்பட்டுச் சூளையில் சுட்டு எடுக்கப்படுபவை சுடுமண் சிற்பங்கள் ஆகும்.

**9. பாயின் வகைகள் யாவை?**

- படுக்கும் பாய்
- பந்திப் பாய்
- திண்ணைப் பாய்
- பட்டுப்பாய்
- தொழுகைப் பாய்

**10. பிரம்பு தருவிக்கப்படும் இடங்கள் யாவை?**

அஸ்ஸாம், அந்தமான், மலேசியா ஆகிய இடங்களில் இருந்து பிரம்பு தருவிக்கப் படுகிறது.

**11. பிரம்புப் பொருட்களால் கிடைக்கும் நன்மைகள் யாவை?**

- பிரம்பு மிகவும் குளிர்ச்சியானது. எனவே, அதில் அமர்வது உடல்நலத்துக்கு நல்லது.
- மேலும், பிரம்புப் பொருள் வீட்டுக்கு அழகையும் கொடுக்கும்.

## சிறுவினா.

**1. தமிழருக்கும் மண்பாண்டக் கலைக்கும் உள்ள தொடர்பைக் காட்டும் சான்றுகள் யாவை?**

- சிந்து சமவெளி அகழாய்வில் பானை ஓடுகள் கிடைத்துள்ளன.
- தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூரில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன.
- நாகை மாவட்டம் செம்பியன் கண்டியூரில் கலையழகு மிகுந்த மண்கலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் ஏராளமான சுடுமண் பொருட்கள் கிடைத்துள்ளன.

இவையெல்லாம் தமிழருக்கும் மண்பாண்டக் கலைக்கும் உள்ள தொடர்பைக் காட்டும் சான்றுகளாகும்.

**2. பாயின் வகைகளை விளக்குக.**

- குழந்தைகளைப் படுக்க வைப்பது தடுக்குப் பாய்.
- உட்கார்ந்து உண்ண உதவுவது பந்திப் பாய்.
- உட்காரவும் படிக்கவும் உதவுவது திண்ணைப் பாய்.
- திருமணத்துக்குப் பயன்படுவது பட்டுப் பாய்.
- இஸ்லாமியர் தொழுகைக்குப் பயன்படுத்துவது தொழுகைப் பாய்.

**3. பாய்களில் எவையெவை இடம்பெற்றிருந்தன?**

- திருமணத்திற்குப் பயன்படுத்தும் பாய்களில் மணமக்கள் பெயர்கள் இடம் பெற்றிருந்தன.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- குத்துவிளக்கு, மயில், பூக்கள், வழிபாட்டுச் சின்னங்கள் ஆகியவையும் பாய்களில் இடம்பெற்றிருந்தன.

**4. பிரம்பினால் செய்யப்பட்ட பலவகைப் பொருட்கள் யாவை?**

- கட்டில்
- ஊஞ்சல்
- நாற்காலி
- மேசை
- பூக்கூடை
- பழக்கூடை
- இடியாப்பத் தட்டு
- அர்ச்சனைத் தட்டு
- வெற்றிலைப் பெட்டி

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் பகுதியில் கிடைக்கும் களிமண், பனையோலை போன்ற பொருள்களைப் பயன்படுத்திக் கைவினைப் பொருள்களைச் செய்து காட்சிப்படுத்துக.**

| களிமண்ணாலான கைவினைப் பொருள்கள் | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
|  |  |  |  |
| பனை ஓலையால் ஆன கைவினைப் பொருள்கள் | | | |

**2. பனையோலையால் செய்யப்படும் பல்வேறு கைவினைப்பொருள்களின் படங்களைச் சேகரித்து படத்தொகுப்பு உருவாக்குக.**

| பனை ஓலையாலான கைவினைப் பொருள்கள் | | | |
|---|---|---|---|
|  |  |  |  |



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

விரிவானம்

இயல் 5

# தமிழர் இசைக்கருவிகள்

## பாடநூல் வினாக்கள்

**காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை :**

மக்களின் மனதிற்கு எழுச்சியைத் தருபவை இசைக்கருவிகள். கருவிகளில் தோல், நரம்பு, காற்று, கஞ்சக் கருவிகள் என பல வகை உள்ளன. அவற்றுள் காற்றுக் கருவிகள் குறித்துக் காண்போம்.

**காற்றுக் கருவிகள் :**

காற்றைப் பயன்படுத்திச் செய்யப்படுபவை காற்றுக்கருவிகளாகும். குழல், சங்கு, கொம்பு ஆகியவை காற்றுக் கருவிகளாகும்.

**குழல் :**

குழல் என்றால் புல்லாங்குழல் ஆகும். காடுகளில் மூங்கில் மரங்களை வண்டுகள் துளை இட்டதால் காற்று வழியாக இசை பிறந்தன. இதனைக் கேட்டும் பார்த்தும் முன்னோர்கள் புல்லாங்குழலை வடிவமைத்தனர். மூங்கில், சந்தனம் செங்காலி, கருங்காலி ஆகிய மரங்களாலும் புல்லாங்குழல் செய்யப்படுகின்றன. கொன்றைக் குழல், முல்லைக் குழல், ஆம்பல் குழல் எனப் பலவகையான குழல்கள் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. திருவள்ளுவரும், 'குழல் இனிது' என்கின்றார்.

**கொம்பு :**

கொம்பு இறந்த மாடுகளின் கொம்புகளைப் பயன்படுத்தி ஒலி எழுப்பினர். அதுவே, பின்னால் 'கொம்பு' என்னும் இசைக்கருவி தோன்றக் காரணமாயிற்று. பித்தளை மற்றும் வெண்கலத்தால் கொம்புகள் செய்யப்பட்டன. வேட்டையாடும்போது வேடர்கள் இதனை ஊதுவார்கள். கள்வர்களை விரட்டவும், விலங்குகளிடமிருந்து எச்சரிக்கை செய்யவும் இக்கொம்பினை ஊதுவார்கள். திருவிழாக் காலங்களில் கொம்பினை ஊதுவர். ஊதுகொம்பு, எக்காளம், சிங்கநாதம், துத்தரி ஆகிய கொம்புகள் இக்காலத் திருவிழாக்களில் இசைக்கப்படுகின்றது.

**சங்கு :**

சங்கு ஓர் இயற்கைக் கருவி. கடலிலிருந்து எடுக்கப்படும் வலமாகச் சுழிந்து இருக்கும் சங்கை, "வலம்புரிச் சங்கு என்று கூறுவர். சங்கின் ஒலியைச் சங்கநாதம் என்பர். இலக்கியங்கள் இதனைப் 'பணிலம்' என்கிறது. திருவிழாக்களிலும், சடங்குகளிலும் சங்கினை முழங்கும் வழக்கம் இருந்து வருகிறது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**முடிவுரை :**

அழிந்து வரும் இவ்வகைக் காற்று இசைக்கருவிகளைக் காப்பாற்ற, நாம் ஒவ்வொருவரும் காற்றுக்கருவிகள் ஏதேனும் ஒன்றினைக் கற்று, அதனைப் பயன்படுத்த வேண்டும்.

## கற்பவை கற்றபின்

1. **இசைக்கருவிகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.**



2. **இக்கால இசைக்கருவிகள் குறித்து கலைக்களஞ்சிய வடிவில் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**வயலின் :**

வில் போட்டு வாசிக்கப்படும் மரத்திலான தந்திக் கருவி ஆகும். இது பழங்காலத்தில் பிடில் எனப்பட்டது. இதுமேலைத் தேயம், கீழைத் தேயம் என இருவகைப் பிராந்திய இசைகளால் இசைக்கப்படும் கருவி. இது நான்கு தந்திகளைக் கொண்டுள்ளது.

**தம்புரா :**

கம்பி கட்டப்பட்ட இசைக்கருவி தம்புரா. இது ராகம் இசைக்கும் நேரம் முழுவதும் நிலையான தொனியில் இசைக்கப்படுகின்றது.

**நாதசுவரம் :**

நாகஸ்வரம், நாகசு, நாயனம் ஆகிய வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. திறந்த இடத்தில் இசைப்பதற்கு ஏற்றது. தென்னிந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் பெருமளவு இசைக்கப்படும் வாத்தியம் இவை. வட்ட வடிவமாக விரிந்து காணப்படும் உள் நீண்ட மரக்குழலால் ஆன உடல், உடல் மேல் பகுதியில் செப்புத் தகடு பொருத்தப்பட்டு இருக்கும்.

**தவில் :**

நாதஸ்வரத்திற்குத் துணையாக இசைக்கப்படும் கருவி ஆகும். விலங்கின் தோலால் இழுக்கப்பட்டு வளையத்தைக் கொண்டு ஒட்டில் கட்டப்பட்டு இருக்கும்.

கற்கண்டு

இயல் 5

# தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள்

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது ________.**

அ) வேற்றுமைத் தொகை ஆ) உம்மைத் தொகை
இ) உவமைத் தொகை ஈ) அன்மொழித் தொகை

**விடை: அ) வேற்றுமைத் தொகை**

2. **'செம்மரம்' என்னும் சொல் ________ த்தொகை.**

அ) வினை ஆ) பண்பு
இ) அன்மொழி ஈ) உம்மை **விடை: ஆ) பண்பு**

3. **'கண்ணா வா!' - என்பது ________ த் தொடர்.**

அ) எழுவாய் ஆ) விளி
இ) வினைமுற்று ஈ) வேற்றுமை **விடை: ஆ) விளி**

### பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. பெயரெச்சத் தொடர் | - | அ) | கார்குழலி படித்தாள். |
| 2. வினையெச்சத் தொடர் | - | ஆ) | புலவரே வருக. |
| 3. வினைமுற்றுத் தொடர் | - | இ) | பாடி முடித்தான். |
| 4. எழுவாய்த் தொடர் | - | ஈ) | எழுதிய பாடல். |
| 5. விளித் தொடர் | - | உ) | வென்றான் சோழன். |

**விடை: 1.ஈ 2.இ 3.உ 4.அ 5.ஆ**

### சிறுவினா.

1. **தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தொகைநிலைத் தொடர்கள் ஆறு வகைப்படும். அவையாவன:

- வேற்றுமைத்தொகை
- வினைத்தொகை
- பண்புத்தொகை
- உவமைத்தொகை
- உம்மைத்தொகை
- அன்மொழித்தொகை

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**2. இரவு பகல் என்பது எவ்வகைத் தொடர் என விளக்குக.**

- 'இரவு பகல்' இத்தொடர், 'இரவும் பகலும்' என விரிந்து பொருள் தருகின்றது.
- இதில் சொல்லின் இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச் சொல் மறைந்து நின்று பொருள் தருகிறது.
- இவ்வாறு சொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் 'உம்' என்னும் இடைச் சொல் மறைந்து நின்று பொருள் தருவதை உம்மைத்தொகை என்பர்.

**3. அன்மொழித்தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

- வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களில் அவை அல்லாத வேறு பிற சொற்களும் மறைந்து வருவது அன்மொழித்தொகை எனப்படும்.
- **சான்று :** பொற்றொடி வந்தாள்.
- இத்தொடர் 'பொன்னாலாகிய வளையலை அணிந்த பெண் வந்தாள்' என்னும் பொருள் தருகிறது. இதில் 'ஆல்' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபும் 'ஆகிய' என்னும் அதன் பயனும் மறைந்து வந்துள்ளது. 'வந்தாள்' என்னும் சொல்லால் பெண் என்பதையும் குறிப்பதால், இது மூன்றாம் வேற்றுமைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை ஆகும்.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. திருவாசகம் படித்தாள் - இதில் மறைந்து வரும் வேற்றுமை உருபு ________**

அ) இரண்டாம் வேற்றுமை உருபு ஆ) மூன்றாம் வேற்றுமை உருபு
இ) நான்காம் வேற்றுமை உருபு ஈ) ஐந்தாம் வேற்றுமை உருபு

**விடை: அ) இரண்டாம் வேற்றுமை உருபு**

**2. கம்பர் பாடல் - இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமையுருபு ________.**

அ) கு ஆ) இன்
இ) அது ஈ) கண்

**விடை: இ) அது**

**3. காலம் கரந்த பெயரெச்சம் ________.**

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) வேற்றுமைத்தொகை ஈ) உவமைத்தொகை

**விடை: அ) வினைத்தொகை**

**4. ஆடுகொடி, வளர்தமிழ் - ஆகியன ________க்குச் சான்றுகள்.**

அ) வேற்றுமைத்தொகை ஆ) உம்மைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை

**விடை: ஈ) வினைத்தொகை**

இயல் 5 தமிழ்

5. வெண்ணிலவு, கருங்குவளை ஆகியன ________ க்குச் சான்றுகளாகும்.

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

**விடை: ஆ) பண்புத்தொகை**

6. இருபெயரொட்டு பண்புத்தொகைக்குச் சான்றாக அமையும் ஒன்றினைத் தேர்வு செய்க.

அ) மலர்விழி ஆ) இரவுபகல்
இ) பொற்றொடி வந்தாள் ஈ) பனைமரம் **விடை: ஈ) பனைமரம்**

7. இரவுபகல், தாய்தந்தை ஆகியன ________க்குச் சான்றாகும்.

அ) அன்மொழித்தொகை ஆ) உவமைத்தொகை
இ) உம்மைத்தொகை ஈ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

**விடை: இ) உம்மைத்தொகை**

8. தொகாநிலைத் தொடர் வகைகள்

அ) 6 ஆ) 8
இ) 9 ஈ) 3 **விடை: இ) 9**

9. எழுவாய்த் தொடர் அமையும் சான்றினைத் தேர்ந்தெடுக்க.

அ) மல்லிகை மலர்ந்தது ஆ) நண்பா படி
இ) சென்றனர் வீரர் ஈ) வரைந்த ஓவியம்

**விடை: அ) மல்லிகை மலர்ந்தது**

10. 'நண்பா படி' என்பது ________.

அ) எழுவாய்த் தொடர் ஆ) விளித் தொடர்
இ) வினைமுற்றுத்தொடர் ஈ) பெயரெச்சத் தொடர்

**விடை: ஆ) விளித்தொடர்**

## குறுவினா.

1. வேற்றுமைத் தொகை என்றால் என்ன? சான்று தருக.

♦ இருசொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபு மறைந்துவந்து பொருள் தந்தால், அதனை வேற்றுமைத் தொகை என்பர்.
♦ **சான்று:** திருவாசகம்(ஐ)படித்தான். (இரண்டாம் வேற்றுமைத் தொகை)

2. உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை என்றால் என்ன? சான்று தருக.

♦ ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் சொல்லும் மறைந்து வருவது உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை எனப்படும்.
♦ **சான்று:** பால் குடம்.
♦ 'பாலைக் கொண்ட குடம்' இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை.

3. **வினைத்தொகையை சான்றுடன் விளக்குக.**

- காலம் காட்டும் இடைநிலையும் ,பெயரெச்ச விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சம் வினைத்தொகை என்பர்.
- **சான்று:** வளர்தமிழ். இதில் காலம் காட்டும் இடைநிலைகள் தொக்கி வந்துள்ளன. வளர்ந்த தமிழ், வளர்கின்ற தமிழ், வளரும் தமிழ் எனவும் முக்காலத்திற்கும் பொருந்தும் படியாகப் பொருள் தருகின்றன. எனவே, இது வினைத்தொகை ஆகும்.

4. **பண்புத்தொகை என்றால் என்ன? சான்று தருக.**

- பண்புப்பெயருக்கும் அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையே ‘ஆன’, ‘ஆகிய’ என்னும் பண்பு உருபுகள் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும்.
- **சான்று:** வெண்ணிலவு, கருங்குவளை.

5. **‘மலர்விழி’ என்னும் சான்று அமையும் தொகை யாது? விளக்கு.**

‘மலர்விழி’ என்பது உவமைத்தொகை. மலர் போன்ற விழி என்ற பொருளைத் தருகிறது. ‘மலர்’ என்பது உவமை. ‘விழி’ என்பது உவமேயம். ‘போன்ற’ என்பது உவம உருபு. உவமைக்கும் உவமேயத்துக்கும் இடையில் உவம உருபு மறைந்து வந்தால் அது உவமைத்தொகை எனப்படும்.

6. **எண்ணும்மை என்றால் என்ன? சான்று தருக.**

- ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களில் ‘உம்’ என்னும் உருபு வெளிப்பட வருவது எண்ணும்மை ஆகும். **சான்று:** இரவும் பகலும், பசுவும் கன்றும்.

### சிறு வினா.

1. **தொகாநிலைத் தொடர் என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக.**

- ஒரு தொடரில் இரு சொற்கள் வந்து அவற்றின் இடையில் சொல்லுருபு மறையாமல் நின்று பொருள் தந்தால் அதனை தொகாநிலைத்தொடர் என்பர்.
- தொகாநிலைத்தொடர் ஒன்பது வகைப்படும். எழுவாய்த்தொடர், விளித்தொடர், வினைமுற்றுத் தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், வேற்றுமைத் தொகாநிலைத் தொடர், இடைச்சொல் தொடர், உரிச்சொல் தொடர், அடுக்குத்தொடர்.

## கற்பவை கற்றபின்

**பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள தொகைநிலைத் தொடர், தொகாநிலைத் தொடர்களைக் கண்டறிந்து தனித்தனியே தொகுக்க.**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## தொகைநிலைத் தொடர்கள்

| வேற்றுமைத்தொகை | வினைத்தொகை | பண்புத்தொகை |
|---|---|---|
| செவிசாய்த்து | அணிகலன் | முதுமொழி |
| கடன் வாங்குவது | எழுங்காட்சி | நந்தமிழ் |
| இயற்கை நுட்பம் | அமருங்கோலம் | நன்னிலை |
| காவிய இன்பம் | உறைவிடம் | புத்துயிர் |
| இயற்கை ஓவியம் | சுடுமண் | நற்பண்பு |
| இயற்கைத் தவம் | திரைகடல் | தீஞ்சுவை |
| குயில் குரல் | | முதுமக்கள் |
| மயில் அகவல் | | பெருநீர் |
| வளர்ச்சி வாயில் | | பழந்தமிழர் |
| கோழி இயக்கம் | | |
| பானை ஓடுகள் | | |
| வயல்வெளி | | |
| பானை வனைதல் | | |

| இருபெயரொட்டுப் பண்புத்தொகை | உவமைத்தொகை | உம்மைத்தொகை |
|---|---|---|
| கடவுள்வாழ்த்து | முத்து மழை | செடிகொடி |
| தமிழ்மக்கள் | பேய் மழை | பூத பவுதிகம் |
| தாய்மொழி | கார்மேகக் கவிஞர் | ஒல்லியாக சிவப்பாக |
| தாய்நாடு | | பானை சட்டி |
| ஐந்தாம் வகுப்பு | | சேர சோழ பாண்டியர் |
| ஆரம்பப்பள்ளி | | |
| சந்திப்பாய் | | |
| திண்ணைப் பாய் | | |
| பட்டுப்பாய் | | |
| கொள்ளை மழை | | |
| மஞ்சள் சந்தை | | |



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## தொகா நிலைத்தொடர்கள்

| எழுவாய்த் தொடர் | விளித்தொடர் | வினைமுற்றுத் தொடர் |
|---|---|---|
| சகாதேவன் கொடுத்தான்<br>மூங்கிலால் செய்யப் படுகின்றன.<br>பாய்களைப் பாருங்கள்<br>சுப்பிரமணி தயங்கினான்<br>குழந்தை அமைதியானது | உள்ளனவே<br>சேரர்களே | வீட்டிற்குச் சென்றேன்<br>பொருள் கூறினேன்<br>உணவு பரிமாறினார்<br>பாடல் பாடுவார் |

| பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் |
|---|---|---|
| விதைத்த விதை<br>ஆன்ற குடிப்பிறத்தல்<br>பிசைய<br>ஆரம்பிக்கவில்லை<br>சொன்ன பாடம்<br>நல்ல களிமண்<br>எழுந்த உணர்ச்சி<br>செல்ல மழை | கண்டுமகிழுங்கள்<br>கூறி முடித்தேன்<br>கொண்டுவந்தான்<br>இணைந்து ஒலிக்கும்<br>வாரி வீசும்<br>வெறுப்பின்றி வாழ்தல்<br>சொல்வது மரபு<br>சிறந்து விளங்கியுள்ளார் | கத்தியைத் தீட்டாதே<br>அன்புக்குப் பாதை விடு<br>மனிதனின் உள்ளம்<br>கல்வி சீர்திருத்தங்களை அறிவோம்<br>பள்ளிக்குப் புறப்படு<br>சிகாமணியின் தந்தை |

| இடைச்சொல் தொடர் | அடுக்குத்தொடர் |
|---|---|
| யான் எனதென்று<br>பெரியோர் முயல்வாரராக<br>அன்று மாலைக்குள் | ஓடி ஓடி பார்க்கவேண்டும்<br>சிட்டு போல மின்னி மின்னி |

## மொழியை ஆள்வோம்

**கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

**1. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்**

பெருமை மிகுந்த சான்றோர் சபைக்கு என் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்பெருமைமிகு சபையில் நான் பேச எடுத்துக் கொண்ட தலைப்பு கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் என்பதாகும்.

‘ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது’ என்பார்கள். அதைப்போல ஏட்டுப் படிப்பு படித்தவர்களுக்கு எந்த வேலையும் கிடைப்பதாகத் தெரியவில்லை.

www.Padasalai.Net www.CBSEtips.in


படித்தாலும், படித்துப் பட்டம் பெற்றாலும் கைத்தொழில் ஒன்றையும் நாம் கூடவே, சேர்த்துக் கற்றுக்கொள்ள வேண்டும். படிப்புக்கேற்ற வேலை கிடைக்கும் வரை அந்த வேலைக்காகக் காத்திராமல் கற்ற கைத்தொழில் நமக்கு மிகவும் பயன்படும்.

தையல், ஓவியம், மரவேலை, மின்னணுச் சாதனங்கள் பழுதுபார்ப்பு, தட்டச்சு, கணிப்பொறி, கூடை பின்னுதல், அலங்காரப் பொருட்கள் செய்தல் இவற்றைப் பொழுதுபோக்கிற்காக நாம் பள்ளியில் கற்றாலும், அங்கு ஆழமாக ஆழ்ந்து கற்க வேண்டும். அதுவேதான், பிற்காலத்தில் படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்கும் வரையில் நமக்கு நல்ல சம்பாத்தியத்தைக் கொடுக்கும்.

ஏட்டுக்கல்வி கைவிட்டாலும், கைத்தொழில் கல்வி உன்னைக் கைவிடாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, இளைஞர்களாகிய நாம் கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி! வணக்கம்!!

## 2. இதயம் கவரும் இசை

என்னை ஈன்ற தாய் மொழிக்கும், இந்தச் சான்றோர் பேரவைக்கும் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, இதயம் கவரும் இசை என்ற நல்லதொரு தலைப்பில் சில நிமிடங்கள் பேசுகின்றேன். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. துன்பங்கள் நம்மைத் துரத்தும் போது மன அமைதி தானாக தேடி வருவதில்லை. இசையின் பக்கம் நாம் தான் ஓடி வர வேண்டும். புல்லாங்குழல் இசையும், வீணை இசையும், நாத முழக்கமும், மத்தளம் இசையும் மனதைப் பண்படுத்தும். இசைக்கச்சேரி கேட்கும்போது இதயமெல்லாம் மென்மையாகிவிடும்.

சங்க காலத்தில் தலைவன் ஒருவன் கள் உண்ட மயக்கத்தில் படுத்து கிடக்கின்றான். தொலைவில் தலைவி தினையைக் காயவைத்துக் கொண்டிருக்கின்றாள். தலைவன் படுத்து இருந்த இடத்தை நோக்கி மத யானை ஒன்று ஓடி வருகின்றது .ஐயோ! தலைவனுக்கு என்ன ஆகுமோ? என்று கவலைப்படாமல், தலைவி அருகிலிருந்த யாழை எடுத்து மீட்டினாள். மதம் பிடித்த யானை யாழ் இசையில் மயங்கி தலைவனை மிதிக்காமல் தெளிந்து சென்றதாம். இசை உயிரையும் காப்பாற்றும்.

குழந்தை பிறந்ததும் தாலாட்டி இசை செய்தான், அவன் வளர்ந்து திருமணம் ஆகும்போதும் மங்கள இசைதான். இப்படி இசை வாழ்வில் எத்தனையோ இடத்திலும் இடம் பெற்றிருக்கிறது. நம் வாழ்க்கையில் 'இதயம் கவரும் இசை அனைவரையும் கவரும் தசை' என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!!



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**சொல்லக் கேட்டு எழுதுக.**

முல்லை நில மக்களாகிய ஆயர்கள் குழல் ஊதுவதில் வல்லவர்கள். இதனைச் சம்பந்தர் திருப்பதிகத்தில் அமைந்த நிகழ்ச்சி ஒன்று விளக்குகிறது. திருவண்ணாமலைச் சாரலில் ஆயர் ஒருவர் ஆநிரைகளையும் எருமையினங்களையும் மேய்த்துக் கொண்டிருந்தார். மாலையில் அவற்றை எல்லாம் ஒன்று திரட்டினார். அப்போது எருமை ஒன்று காணாமல் போனதை அறிந்தார். தன் கையிலிருந்த குழலை எடுத்து இனிய இசையை எழுப்பினார். இன்னிசை கேட்ட எருமை அவரை வந்தடைந்தது. இவ்வாறு ஆயர்களின் இசைத் திறத்தைத் திருப்பதிகம் விளக்குகிறது.

**கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லுருபுகளை இட்டு நிரப்புக.**

**(கொண்டு, இருந்து, உடைய, காட்டிலும், ஆக, நின்று, உடன், விட, பொருட்டு)**

1. இடி ________ மழை வந்தது. **விடை: உடன்**
2. மலர்விழி தேர்வின் ________ ஆயத்தமானாள். **விடை: பொருட்டு**
3. அருவி மலையில் ________ வீழ்ந்தது. **விடை: இருந்து**
4. தமிழைக் ________ சுவையான மொழியுண்டோ! **விடை: காட்டிலும்**
5. யாழ், தமிழர் ________ இசைக் கருவிகளுள் ஒன்று. **விடை: உடைய**

**பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை அகர வரிசைப்படுத்துக.**

**படகம், தவில், கணப்பறை, பேரியாழ், உறுமி, உடுக்கை, தவண்டை, பிடில், நாகசுவரம், மகுடி.**

**விடை :** உடுக்கை, உறுமி, கணப்பறை, தவண்டை, தவில், நாகசுவரம், படகம், பிடில், பேரியாழ், மகுடி.

**பின்வரும் இணைச்சொற்களை வகைப்படுத்துக.**

**உற்றார்உறவினர், விருப்புவெறுப்பு, காலைமாலை, கன்னங்கரேல், ஆடல்பாடல், வாடிவதங்கி, பட்டிதொட்டி, உள்ளும்புறமும், மேடுபள்ளம், நட்ட நடுவில்.**

| | |
|---|---|
| **நேரிணை** | உற்றார் உறவினர், வாடி வதங்கி, நட்ட நடுவில், பட்டிதொட்டி. |
| **எதிரிணை** | விருப்புவெறுப்பு, காலைமாலை, உள்ளும்புறமும், மேடுபள்ளம், ஆடல்பாடல். |
| **செறியிணை** | கன்னங்கரேல். |

**சரியான இணைச்சொற்களை இட்டு நிரப்புக.**

**(மேடுபள்ளம், ஈடுஇணை, கல்விகேள்வி, போற்றிப்புகழப்பட, வாழ்வு தாழ்வு, ஆடிஅசைந்து)**

1. சான்றோர் எனப்படுபவர் ________களில் சிறந்தவர் ஆவார். **விடை: கல்விகேள்வி**
2. ஆற்று வெள்ளம் ________ பாராமல் ஓடியது. **விடை: மேடுபள்ளம்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. இசைக்கலைஞர்கள் __________ வேண்டியவர்கள். விடை: போற்றிப்புகழப்பட
4. தமிழ் இலக்கியங்களின் பெருமைக்கு __________ இல்லை. விடை: ஈடுஇணை
5. திருவிழாவில் யானை __________ வந்தது. விடை: ஆடிஅசைந்து

**கடிதம் எழுதுக.**

**இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.**

அனுப்புநர்

சா. சுந்தர்,
த/பெ. ஆ. சங்கர்
34, குறிஞ்சி நகர்,
ஈரோடு - 638 001.

பெறுநர்

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஈரோடு.

மதிப்புக்குரிய அய்யா,

பொருள் : இருப்பிடச் சான்றிதழ் வேண்டுதல் சார்பாக.

வணக்கம். ஈரோடு, அரசு உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கின்றேன். 34, குறிஞ்சி நகர், ஈரோடு - 638 001 என்ற முகவரியில் பத்து ஆண்டுகளாக நாங்கள் வசித்து வருகின்றோம். அரசின் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க இருப்பிடச் சான்றிதழ் தேவைப்படுகின்றது. இத்துடன் குடும்ப அட்டை நகலும் ஆதார் அட்டை நகலும் இணைத்துள்ளேன். ஆகவே, எனக்கு இருப்பிடச் சான்றிதழ் வழங்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!

இடம் : ஈரோடு
நாள் : 25.06.2020

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
சா. சுந்தர்.

உறைமேல் முகவரி:

பெறுநர்
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஈரோடு.

## மொழியோடு விளையாடு

### குறுக்கெழுத்துப்புதிர்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | த் | த | ள | ம் | | 2 வீ | ணை |
| க | | | டி | ண் | 3 க | 4 சே | 5 கு |
| ர | 6 தோ | | | | ஞ் | | டு |
| யா | ல் | சு | | ல் | 7 ச | ங் | கு |
| ழ் | | ர | | ழ | | | டு |
| | ழா | மு | ட | 8 கு | | | ப் |
| மு | | ண | | ர் | ண | 9 பா | ை |
| 10 ஏ | | 11 ம | | 12 கொ | ம் | பு | |

**இடமிருந்து வலம் :**

1. முதற்கருவி எனப் பெயர் பெற்றது.
2. யாழிலிருந்து உருவான பிற்காலக் கருவி
7. இயற்கைக் கருவி
12. விலங்கின் உறுப்பைப் பெயராகக் கொண்ட கருவி

**வலமிருந்து இடம் :**

4. வட்டமான மணி போன்ற கருவி
8. ஐந்து வாய்களைக் கொண்ட கருவி
9. இசைக்கருவிகளை இசைத்துப் பாடல் பாடுவோர்

**மேலிருந்து கீழ் :**

1. 19 நரம்புகளைக் கொண்ட யாழ்
3. ஒன்றோடு ஒன்று மோதி இசைக்கப்படுபவை __________க்கருவி.
5. சிறிய வகை உடுக்கை
6. பறை ஒரு __________ கருவி

**கீழிருந்து மேல் :**

8. மூங்கிலால் செய்யப்படும் காற்றுக்கருவி
10. வீணையில் உள்ள நரம்புகளின் எண்ணிக்கை
11. திருமணத்தின்போது கொட்டும் முரசு



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## நிற்க அதற்குத் தக

**என் பொறுப்புகள்:**

1. கைவினைக்கலைகளுள் ஒன்றைக் கற்றுக்கொள்வேன்.
2. இசைக் கலையை வளர்த்த சான்றோர்களைப் பற்றி அறிந்து போற்றுவேன்.

### கலைச்சொல் அறிவோம்

- கைவினைப் பொருள்கள் - Crafts
- புல்லாங்குழல் - Flute
- முரசு - Drum
- கூடைமுடைதல் - Basketry
- பின்னுதல் - Knitting
- கொம்பு - Horn
- கைவினைஞர் - Artisan
- சடங்கு - Rite

## இணையத்தில் காண்க

**இசையின் வகைப்பாடுகள் பற்றிய செய்திகளை இணையத்தில் தேடி எழுதுக.**

- ஆங்கில இசை
- ஆப்பிரிக்க அமெரிக்க இசை
- இந்துஸ்தானி இசை
- உலோக இசை
- ராக் இசை
- அரபு இசை
- இரைச்சல் இசை
- உரோமான்சா
- கருநாடக இசை
- சூபி இசை
- செம்மிசை
- தமிழிசை
- உள்ளுணர்வு இசை
- சீக்கிய இசை
- பரப்பிசை
- வன்கு இசை
- நாட்டார் இசை
- பரவலர் இசை
- மெட்டல் இசை
- ஜாஸ்
- புதுயுக இசை
- பிரித்தானிய இசை


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

வாழ்வியல்

இயல் 5

# திருக்குறள்

திருவள்ளுவர்

மனப்பாடப் பாடல்

1. **இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து**
   **அதனை அவன்கண் விடல்.**

2. **கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
   **வேட்ப மொழிவதாம் சொல்.**

3. **சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை**
   **வெல்லும்சொல் இன்மை அறிந்து.**

## சொல்லும் பொருளும்

- நாடி - நாடுதல்
- ஆய்ந்து - ஆராய்ந்து
- இறை - அரசர்
- வினையாடல் - செயல் செய்தல்
- ஒறுப்பது - தண்டிப்பது
- கடியன் - கடுமையானவர்
- வேந்தன் - அரசன்
- கடுகி - விரைந்து

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **அரசரை அவரது ________ காப்பாற்றும்.**

அ) செங்கோல் ஆ) வெண்கொற்றக்குடை
இ) குற்றமற்ற ஆட்சி ஈ) படை வலிமை **விடை: இ) குற்றமற்ற ஆட்சி**

2. **சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் ________ தகுதி அறிந்து பேசவேண்டும்.**

அ) சொல்லின் ஆ) அவையின்
இ) பொருளின் ஈ) பாடலின் **விடை: ஆ) அவையின்**

3. **'கண்ணோடாது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.**

அ) கண் + ஓடாது ஆ) கண் + ணோடாது

இ) க + ஓடாது ஈ) கண்ணோ + ஆடாது **விடை: அ) கண் + ஓடாது**

4. **'கசடற' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.**

அ) கச + டற ஆ) கசட + அற

இ) கசடு + உற ஈ) கசடு + அற **விடை: ஈ) கசடு + அற**

5. **'என்று + ஆய்ந்து' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.**

அ) என்றாய்ந்து ஆ) என்றுஆய்ந்து

இ) என்றய்ந்து ஈ) என்ஆய்ந்து **விடை: அ) என்றாய்ந்து**

## குறுவினா

1. **நன்மையைத் தரும் செயலை ஒருவரிடம் ஒப்படைக்கும் வழி யாது?**

ஒரு செயலை இந்த வகையால், இவர் செய்து முடிப்பார் என்று ஆராய்ந்து, அச்செயலை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

2. **சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது?**

எதையும் நன்கு ஆராய்ந்து, ஒருபக்கம் சாயாது நடுவு நிலையில் நின்று நடத்துவதே சிறந்த ஆட்சி ஆகும்.

3 **அரசன் தண்டிக்கும் முறை யாது?**

ஒருவர் செய்த குற்றத்தை முறையாக ஆராய்ந்து, அவர் மீண்டும் குற்றம் செய்யாதவாறு தண்டிப்பது, அரசன் தண்டிக்கும் முறையாகும்.

4 **சிறந்த சொல்லாற்றலின் இயல்பு என்ன?**

கேட்பவரைத் தன் வயப்படுத்துவதும் கேளாதவரைக் கேட்கத் தூண்டுவதும் சிறந்த சொல்லாற்றலின் இயல்பு ஆகும்.

## பின்வரும் நிகழ்வுக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

பள்ளி ஆண்டு விழா ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதில் கலைக்குழுத் தலைவராக யாரைத் தேர்ந்தெடுப்பது என்று பேசப்பட்டது. ஆசிரியர்கள் பள்ளி மாணவர் தலைவன் செழியனைப் பரிந்துரைத்தனர். தலைமை ஆசிரியர் 'செழியன் மாணவர் தலைவனாக இருக்கிறான். ஆனால், இது கலைக்குழுவிற்கான தலைவர், பதவி, நடனம், இசை, நாடகம் என அனைத்துத் துறைகளிலும் ஆர்வமுள்ள ஒருவரே இதற்குத் தகுதியானவர். எனவே என்னுடைய தேர்வு கலையரசன்' என்று நன்கு ஆராய்ந்து கூறினார். ஆசிரியர்கள் அனைவரும் 'சிறந்த தேர்வு' என்று மகிழ்ந்தனர்.

அ) அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்.

ஆ) இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இ) ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.

விடை:

**ஆ) இதனை இதனால் இவன் முடிக்கும் என்றுஆய்ந்து**
**அதனை அவன்கண் விடல்.**

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ________ நின்று நடத்துவதே சிறந்த ஆட்சியாகும்.

அ) காலம் ஆ) நடுவுநிலைமை
இ) முறையாக ஆராய்தல் ஈ) உயிர்கள் காப்பாற்று

**விடை: ஆ) நடுவுநிலைமை**

2. வையகம் என்பதன் பொருள் ________.

அ) கடல் ஆ) அரசன்
இ) நடுவுநிலைமை ஈ) உலகம் **விடை: ஈ) உலகம்**

3) 'இறை' என்னும் சொல்லின் பொருள் ________.

அ) அரசர் ஆ) குடிமக்கள்
இ) உலகம் ஈ) விரைந்து **விடை: அ) அரசர்**

### குறுவினா.

1. செயலை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும்?

செயலாற்றும் திறனுடையவரையும்,செய்ய வேண்டிய செயலையும், செய்வதற்குரிய காலத்தையும் ஆராய்ந்து, அச்செயலை நிறைவேற்ற வேண்டும்.

2. உலகத்து உயிர்களையெல்லாம் காப்பாற்றுபவர் யார்?

உலகத்து உயிர்களையெல்லாம் காப்பாற்றுபவர் அரசர் ஆவார்..

3. அரசரைக் காப்பாற்றுவது எது?

குற்றமற்ற ஆட்சியே அரசனைக் காப்பாற்றும்.

6. அவையின் தகுதி அறிந்து பேசவேண்டுபவர் யாவர்?

சொல் வளமும், நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் அவையின் தகுதியறிந்து பேசுதல் வேண்டும்.

7. கற்றவரின் கல்வி எப்போது பெருமை அடையும்?

சொற்களை ஆராயும் அறிஞர் நிறைந்த அவையில் பேசும்போதுதான் பல நூல்களைக் கற்றவரின் கல்வி பெருமை அடையும்.

இயல் 5 தமிழ்

## அலகுத் தேர்வு

### இயல் - 5

நேரம்: 30 நிமிடம் மதிப்பெண்கள்: 20

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (3)**

**1. காட்டிலிருந்து வந்த ________ தின்றன.**

அ) முகில்கள் ஆ) முழவுகள்

இ) வேழங்கள் ஈ) வேய்கள்

**2. நம்மை ________ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.**

அ) இகழ்வாரை ஆ) அகழ்வாரை

இ) புகழ்வாரை ஈ) மகிழ்வாரை

**3. 'மட்டுமல்ல' எனும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.**

அ) மட்டு + மல்ல ஆ) மட்டம் + அல்ல

இ) மட்டு + அல்ல ஈ) மட்டும் + அல்ல

**ஆ. பொருத்துக. (4)**

| | | | |
|---|---|---|---|
| 4. | பெயரெச்சத் தொடர் | - | காழ்குழலி படித்தாள். |
| 5. | வினையெச்சத் தொடர் | - | வென்றான் சோழன். |
| 6. | வினைமுற்றுத் தொடர் | - | பாடி முடித்தான். |
| 7. | எழுவாய்த் தொடர் | - | எழுதிய பாடல். |

**இ. குறு விடை தருக. (4)**

8. தேவாரம் பாடிய மூவர் யார்?

9. மண்பாண்டம் – சுடுமண் சிற்பங்கள் ஒப்பிடுக.

**ஈ. சிறு விடை தருக. (6)**

10. நல்லந்துவனார் கூறும் நமக்கு இருக்க வேண்டிய பண்புகளைக் கூறுக.

11. பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக.

**உ. அடிபிறழாமல் எழுதுக. (3)**

12. 'ஆற்றுதல்....' என்று தொடங்கி 'செறாமை' என முடியும் வரை உள்ள கலித்தொகைப் பாடலை எழுதுக.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 6

கவிதைப் பேழை

# வளம் பெருகுக

## நூல் வெளி

- இக்கவிதைப்பேழைப் பாடல் அமைந்த நூல் தகடூர் யாத்திரை.
- இதன் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை.
- தகடூர் இன்று தர்மபுரி என்று அழைக்கப்படுகிறது.
- இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை.
- இந்நூலின் சில பாடல்கள் புறத்திரட்டு என்னும் தொகுப்பு நூலில் கிடைக்கின்றன.

## சொல்லும் பொருளும்

- வாரி - வருவாய்
- எஞ்சாமை - குறைவின்றி
- முட்டாது - தட்டுப்பாடின்றி
- ஒட்டாது - வாட்டம் இன்றி
- வைகுக - தங்குக
- ஓதை - ஓசை
- வெரீஇ - அஞ்சி
- யாணர் - புது வருவாய்

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தோட்டத்தில் தம்பி ஊன்றிய __________ எல்லாம் முளைத்தன.

அ) சத்துகள் ஆ) பித்துகள்

இ) முத்துகள் ஈ) வித்துகள் **விடை: ஈ) வித்துகள்**

2 என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு __________ பெருகிற்று.

அ) காரி ஆ) ஓரி

இ) வாரி ஈ) பாரி **விடை: இ) வாரி**

3. 'அக்களத்து' என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) அ + களத்து ஆ) அக் + களத்து
இ) அக்க + அளத்து ஈ) அம் + களத்து **விடை: அ) அ + களத்து**

4 கதிர் + ஈன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) கதிரென ஆ) கதியீன
இ) கதிரீன ஈ) கதிரின்ன **விடை: இ) கதிரீன**

## குறுவினா.

1. பயிர்கள் வாட்டமின்றி கிளைத்து வளரத் தேவையானது யாது?

தகுந்த காலத்தில் பெய்யும் மழையே பயிர்கள் வாட்டமின்றி கிளைத்து வளரத் தேவையானது ஆகும்.

2. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?

நெற்போரினை அடித்து நெல்லினைக் கொள்ளும் (எடுக்கும்) காலத்தில் உழவர்கள் ஆரவார ஒலி எழுப்புவர்.

## சிறு வினா.

1. உழவுத் தொழில் பற்றித் தகடூர் யாத்திரை கூறுவன யாவை?

- சேரனின் நாட்டில் பெருகிய மழைநீரால் வருவாய் சிறந்து விளங்குகிறது.
- அகலமான நிலப்பகுதியில் விதைகள் குறைவின்றி முளை விடுகின்றன.
- முளைத்த விதைகள் செழிப்புடன் வளர தட்டுப்பாடின்றி மழை பொழிகின்றது.
- தகுந்த காலத்தில் மழை பொழிவதால் பயிர்கள் வாட்டம் இன்றி கிளைத்து வளர்கிறது. செழித்த பயிர்கள் பால் முற்றிக் கதிர்களைப் பெற்றிருக்கின்றன.
- அக்கதிர்கள் அறுவடை செய்யப் பெற்று ஏரினால் வளம் சிறக்கும் செல்வர்களின் களத்தில் நெற்போர் காவல் இல்லாமலே இருக்கின்றது.
- நெற்போரினை அடித்து நெல்லினைக் கொள்ளும் (எடுக்கும்) காலத்தில் உழவர்கள் எழுப்பும் ஆரவார ஒலியால் நாரை இனங்கள் அஞ்சித் தம் பெண் பறவைகளோடு பிரிந்து செல்லும் சிறப்புடைய, சேர மன்னரின் அகன்ற பெரிய நாடு புது வருவாயுடன் சிறந்து விளங்குகின்றது.

## சிந்தனை வினா

1. உழவுத் தொழில் சிறக்க இன்றியமையாதனவாக நீங்கள் கருதுவன யாவை?

### உழவுத் தொழில் உயிர் தொழில்

நாகரீகம் என்ற பெயரில் இன்று யாரும் உழவுத் தொழில் செய்ய முன்வருவதில்லை. ஒவ்வொரு வீட்டிலும் உள்ள ஒருவர் கட்டாயம் உழவுத் தொழில் செய்தல் வேண்டும். உழவுத் தொழில், அரசுப் பணிகளில் ஒன்றாகச் சேர்க்கப்பட வேண்டும் உழவுத் தொழிலில் சிறந்து விளங்கும் உழவர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகளும் பரிசுத் தொகையும் கொடுக்க வேண்டும். இன்றைய இளைஞர்கள் வேலை


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

விருப்பப் பட்டியலில் உழவுத்தொழிலைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தால் மட்டுமே உழவுத் தொழில் நிச்சயம் சிறக்கும்.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **மன்பதை காக்கும் மாபெரும் சிறப்பு ________க்கு உண்டு.**

அ) மழை ஆ) வயல்
இ) நிலம் ஈ) உழவர் **விடை: அ) மழை**

2. **தகடூர் யாத்திரை பாடல் பேசும் தொழில் ________.**

அ) உழவுத் தொழில் ஆ) நெய்தல் தொழில்
இ) மீன்பிடித் தொழில் ஈ) மண்பாண்டத் தொழில்

**விடை: அ) உழவுத் தொழில்**

3. **புது வருவாய் என்னும் பொருளினைக் குறிக்கும் சொல் ________.**

அ) வாரி ஆ) எஞ்சாமை
இ) ஒட்டாது ஈ) யாணர் **விடை: ஈ) யாணர்**

4. **வளம் பெருக பாடல் ________ மன்னர் பற்றியது.**

அ) சோழர் ஆ) சேரர்
இ) பாண்டியர் ஈ) பல்லவர் **விடை: ஆ) சேரர்**

5. **தர்மபுரியின் பழைய பெயர் ________.**

அ) மாமண்டூர் ஆ) வடுவூர்
இ) தகடூர் ஈ) குரும்பூர் **விடை: இ) தகடூர்**

### குறுவினா.

1. **சேரநாட்டில் வருவாய் சிறந்து விளங்கக் காரணம் யாது?**

பெருகிய மழை நீரால் சேர நாட்டின் வருவாய் சிறந்து விளங்குகிறது.

2. **அறுவடை செய்யப்பட்ட கதிர்கள் எங்கு நிறைகின்றன?**

அறுவடை செய்யப்பட்ட கதிர்கள் ஏறினால் வளம் சிறக்கும் செல்வர்களின் களத்தில் வந்து நிறைகின்றன.

3. **நாரை இனங்கள் பெண்பாற் பறவைகளோடு பிரிந்து செல்லக் காரணம் யாது?**

நெற்போரினை அடித்து நெல்லினைக் கொள்ளும் (எடுக்கும்) காலத்தில் உழவர்கள் எழுப்பும் ஆரவார ஒலியால், நாரை இனங்கள் தன் பெண்பாற் பறவைகளோடு பிரிந்து செல்கின்றன.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## கற்பவை கற்றபின்

**உமது பகுதியில் நடைபெறும் ஏதேனும் ஒரு தொழிலின் பல செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.**

**மண்பாண்டத் தொழில் :**

குளங்கள், ஆற்றங்கரைகள், வயல்வெளிகள் ஆகிய இடங்களிலிருந்து களிமண்ணை எடுத்து வருவர், பெரிய பள்ளம் தோண்டி அதில் களிமண்ணை நிரப்பி தண்ணீர் ஊற்றி ஒரு நாள் முழுவதும் ஊற வைப்பர். பிறகு அதனுடன் மெல்லிய மணல் சாம்பல் ஆகியவற்றைக் கலந்து பயன்படுத்துவார்கள். பிறகு பானை செய்யும் சக்கரத்தில் வைத்து வேண்டிய வடிவங்களில் அதை உருவாக்குவார்கள். உரிய வடிவம் வந்ததும் அடிப்பகுதியில் நூல் அல்லது ஊசியால் அறுத்து எடுத்து காய வைப்பர் .

ஓரளவு காய்ந்ததும், தட்டுப் பலகை கொண்டு தட்டி பானையின் அடிப்பகுதியில் இருக்கும் ஓட்டையை மூடி பானையை முழுமையாக்குகின்றனர். பிறகு உருட்டுக்கல் கொண்டு தேய்த்து பானையைப் பளபளபாக்குகின்றனர். பிறகு வண்ணங்களையும், ஓவியங்களையும் தகுந்தாற்போல வரைகின்றனர்.

கவிதைப் பேழை

இயல் 6

# மழைச்சோறு

### நூல்வெளி

- பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள் என்னும் நூலில் உள்ள கொங்கு நாட்டு மழைச் சோற்று வழிபாடு என்னும் கட்டுரையில் இருந்து இப்பாடல் எடுக்கப்பட்டுள்ளது.
- இந்நூலின் பதிப்பாசிரியர் அ.கௌரன்.

### சொல்லும் பொருளும்

- பாதை - வழி
- கனத்த - மிகுந்த
- பெண்டுகளே - பெண்களே
- சீமை - ஊர்

6 இயல் தமிழ்

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **கனத்த மழை என்னும் சொல்லின் பொருள் __________.**

அ) பெருமழை ஆ) சிறு மழை
இ) எடை மிகுந்த மழை ஈ) எடை குறைந்த மழை

**விடை: அ) பெருமழை**

2. **'வாசலெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.**

அ) வாசல் + எல்லாம் ஆ) வாசல் + எலாம்
இ) வாசம் + எல்லாம் ஈ) வாசு + எல்லாம் **விடை: அ) வாசல்+எல்லாம்**

3. **'பெற்றெடுத்தோம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________.**

அ) பெறு + எடுத்தோம் ஆ) பேறு + எடுத்தோம்
இ) பெற்ற + எடுத்தோம் ஈ) பெற்று + எடுத்தோம்

**விடை: ஈ) பெற்று + எடுத்தோம்**

4. **கால் + இறங்கி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________.**

அ) கால்லிறங்கி ஆ) காலிறங்கி
இ) கால் இறங்கி ஈ) கால்றங்கி **விடை: ஆ) காலிறங்கி**

### குறுவினா.

1. **மழைச்சோறு பாடலில் உழவர் படும் வேதனை எவ்வாறு கூறப்படுகிறது?**
   - கடலைச் செடி, முருங்கைச் செடி, கருவேலங்காடு, காட்டுமல்லி என அனைத்தும் மழையில்லாமல் வாடிப்போனது. பெற்றெடுத்த குழந்தைகளின் பசியைத் தீர்க்க முடியவில்லை.
   - கலப்பை பிடிப்பவரின் கை சோர்ந்து விட்டது, ஏற்றம் இறைப்பவரின் மனம் தவிக்கிறது என்றும் இதற்குக் காரணம் மழை இல்லாமையே இன்று உழவர் வேதனைப் படுகின்றனர்.

2. **மக்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் என்ன?**

மழை இல்லாததால் உழவுத் தொழில் செய்ய முடியவில்லை. எனவே மக்கள் ஊரை விட்டு வெளியேறுகின்றனர்.

### சிறுவினா.

1. **கோலம் கரையாத நிலையை மழைச்சோறு பாடல் எவ்வாறு விளக்குகிறது?**
   - வாளியில் கரைத்த மாவால் வாசலில் கோலம் போட்டனர்.
   - இந்தக் கோலத்தைக் கரைக்க மழை வரவில்லை!
   - பானையில் மாவைக் கரைத்து, பாதை எல்லாம் கோலம் போட்டனர்.
   - அந்தக் கோலம் கரைக்கவும் மழை வரவில்லை.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. **மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.**

- கல் இல்லாத காட்டில் கடலைச் செடி நட்டு வளர்த்தார்கள். அதற்கும் மழை பெய்யவில்லை.
- முள் இல்லாத காட்டில் முருங்கைச் செடி நட்டு வளர்த்தார்கள். அதற்கும் மழை வரவில்லை.
- கருவேலங்காடும் மழையில்லாமல் பூக்கவில்லை.
- மழை இல்லாததால் காட்டு மல்லியும் பூக்கவில்லை.

3 **மழைச்சோறு எடுத்தபின் எவ்வாறு மழை பெய்தது?**

- மழைச் சோறு எடுத்தபின், பேய் மழையாக ஊசி போல கால் இறங்கி உலகமெல்லாம் பெய்கிறது.
- சிட்டுப் போல மின்னி மின்னி ஊரெங்கும் பெய்கிறது.
- ஊரெங்கும் செல்ல மழை பெய்கிறது.

**சிந்தனை வினா.**

1. **மழைவளம் பெருக நாம் செய்ய வேண்டுவன யாவை?**

மழை வளம் பெருக அதிகப்படியான மரங்களை நட்டு வளர்க்க வேண்டும். மரங்களை நட்டால் மட்டும் போதாது. அதனை நன்கு பராமரிக்க வேண்டும். எங்காவது மரங்கள் வெட்டப்படும் போது, அதனைத் தடுக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர் சேமிப்புத் தொட்டி கட்டாயம் வைக்க வேண்டும். மழை பெய்யும் காலங்களுக்கு முன் குளங்கள் குட்டைகளை தூர்வார வேண்டும்.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **ஒரு நாட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்குவது ________.**

அ) மழை ஆ) உணவு
இ) உடை ஈ) பணம் **விடை: அ) மழை**

2. **கல் இல்லாக் காட்டில் ________ போட்டனர்.**

அ) முருங்கைச் செடி ஆ) கடலைச் செடி
இ) கருவேல மரம் ஈ) காட்டு மல்லி **விடை: ஆ) கடலைச் செடி**

3. **முள்ளில்லா காட்டில் ________ போட்டனர்.**

அ) முருங்கைச் செடி ஆ) கடலைச் செடி
இ) கருவேல மரம் ஈ) காட்டு மல்லி **விடை: அ) முருங்கைச் செடி**

4. **'வனவாசம் சென்று விடுவோம்' என்று கூறியவர் ________.**

அ) புலவர் ஆ) குறவர்
இ) உழவர் ஈ) மறவர் **விடை: இ) உழவர்**

இயல் 6 தமிழ்

**குறுவினா.**

1. **எங்கெல்லாம் கோலம் இடப்பட்டது?**

   வாசல் மற்றும் பாதைகளில் கோலம் இடப்பட்டது.

2. **கடலைச் செடி வாடக் காரணம் யாது?**

   மழை இல்லாததால் கடலைச் செடி வாடியது.

3. **எவற்றை உழவர்கள் தலையில் வைத்துச் செல்கின்றனர்?**

   மழைச் சோறு வாங்கிய பானை, அகப்பை, பழைய முறம் ஆகியவற்றை உழவர்கள் தலையில் வைத்துச் செல்கின்றனர்.

4. **சிட்டு போல மின்னியது எது?**

   சிட்டு போல மின்னியது மழை.

**சிறுவினா**

1. **மழைச் சோற்று நோன்பு பற்றிக் குறிப்பிடுக.**

   ♦ மழையில்லாமல் பஞ்சம் ஏற்படும் நேரங்களில் சிற்றூர் மக்கள் வீடு வீடாகச் சென்று உப்பில்லாத சோற்றை ஒரு பானையில் வாங்குவார்கள். ஊர்ப் பொது இடத்தில் வைத்து அனைவரும் பகிர்ந்து உண்பர்.

   ♦ கொடிய பஞ்சத்தைக் காட்டும் அடையாளமாக இது நிகழும். இதனைக் கண்டு மனம் இரங்கி மழை பெய்யும் என்பது மக்களின் நம்பிக்கை. இதனை மழைச்சோற்று நோன்பு என்று கூறுவார்கள்.

## கற்பவை கற்றபின்

**உங்கள் பகுதியில் பாடப்படும் மழை தொடர்பான நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்து எழுதுக.**

| பாடல் - 1 | பாடல் - 2 |
|---|---|
| ஆத்தா மகமாயி வந்திடம்மா<br>ஆத்தா மகமாயி வந்திடம்மா<br>உனக்கு எத்தனையோ பூச செஞ்சோம்<br>உனக்கு எத்தனையோ பூச செஞ்சோம்<br>வாம்மா வாம்மா வந்து மழைய குடும்மா<br>குடும்மா கருத்தம்மா<br>பசி வயிறு புடுங்கு தம்மா<br>மழை பெய்யச் சொல்லம்மா<br>மழை பெய்யச் சொல்லம்மா | மழையப்பா மழையப்பா<br>கொஞ்சம் வாப்பா<br>இத்தனை நாள் வயல்<br>காணாதது போதாதா?<br>என்னஅப்பா கோபம்<br>மகன்கள் பண்ண<br>தப்ப மன்னிக்க மாட்டியா?<br>மன்னிச்சு வாப்பா<br>மானங்காக்க வாப்பா<br>மனமிரங்கி வாப்பா<br>மழையப்பா மழையப்பா |

www.Padasalai.Net www.CBSEtips.in


உரைநடை உலகம்

இயல் 6

# கொங்குநாட்டு வணிகம்

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்று குறிப்பிடும் நூல் ________.**
   அ) தொல்காப்பியம் ஆ) அகநானூறு
   இ) புறநானூறு ஈ) சிலப்பதிகாரம் **விடை: அ) தொல்காப்பியம்**

2. **சேரர்களின் தலைநகரம் ________.**
   அ) காஞ்சி ஆ) வஞ்சி
   இ) தொண்டி ஈ) முசிறி **விடை: ஆ) வஞ்சி**

3. **பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது ________.**
   அ) புல் ஆ) நெல்
   இ) உப்பு ஈ) மிளகு **விடை: ஆ) நெல்**

4. **ஆன்பொருநை என்று அழைக்கப்படும் ஆறு ________.**
   அ) காவிரி ஆ) பவானி
   இ) நொய்யல் ஈ) அமராவதி **விடை: ஈ) அமராவதி**

5. **வீட்டு உபயோகப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம்**
   அ) நீலகிரி ஆ) கரூர்
   இ) கோயம்புத்தூர் ஈ) திண்டுக்கல் **விடை : இ) கோயம்புத்தூர்**

### கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. 'மாங்கனி நகரம்' என்று அழைக்கப்படும் நகரம் ________. **விடை: சேலம்**
2. சுங்குடிச் சேலைகளுக்குப் புகழ்பெற்ற ஊர் ________. **விடை: சின்னாளப்பட்டி (திண்டுக்கல்)**
3. சேரர்களின் நாடு ________ எனப்பட்டது. **விடை: குடநாடு**
4. பின்னலாடை நகரமாக ________ விளங்குகிறது. **விடை: திருப்பூர்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## குறுவினா.

1. **மூவேந்தர்களின் காலம் குறித்து எழுதுக.**
   - மூவேந்தர்களின் காலத்தை வரையறுத்துக் கூறமுடியவில்லை.
   - வால்மீகி இராமாயணம், மகாபாரதம், அர்த்தசாத்திரம், அசோகர் கல்வெட்டு ஆகியவற்றில் மூவேந்தர்கள் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.
   - இதனால் இவர்கள் பல நெடுங்காலத்திற்கு முற்பட்டவர்கள் என்பதை அறியலாம்.
2. **கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?**

   காவிரி, பவானி, நொய்யல், ஆன்பொருநை (அமராவதி).
3. **'தமிழ்நாட்டின் ஹாலந்து' என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?**
   - 'தமிழ்நாட்டின் ஹாலந்து' என்று அழைக்கப்படும் ஊர் திண்டுக்கல்.
   - மலர் உற்பத்தியில் முதலிடம் வகிப்பதால், தமிழ்நாட்டின் ஹாலந்து என்று திண்டுக்கல் நகரம் போற்றப்படுகிறது.

## சிறுவினா.

1. **கொங்கு மண்டலச் சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் யாவை?**

   வடக்கே பெரும்பாலை தெற்கே பழனி மலை, மேற்கே வெள்ளிமலை, கிழக்கே மதிற்கரை என இந்நான்கு எல்லைக்கு உட்பட்ட பகுதியாகக் கொங்கு மண்டலம் விளங்கியதாகக் கொங்கு மண்டலச் சதகம் கூறுகிறது.
2. **கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.**
   - கரூர் நகரத்திற்கு, 'வஞ்சிமா நகரம்' என்ற பெயரும் உண்டு. கிரேக்க அறிஞர் தாலமி கரூரைத் தமிழகத்தின் முதன்மை உள்நாட்டு வணிக மையமாகக் குறிப்பிட்டுள்ளார்.
   - நெல், சோளம், கேழ்வரகு, கம்பு, கரும்பு போன்றவை இங்குப் பயிரிடப்படுகின்றன. கல்குவாரித் தொழிற்சாலைகள் இங்கு உள்ளன.
   - கைத்தறி நெசவு ஆடைகளுக்குப் பெயர் பெற்ற மாவட்டமாகக் கரூர் விளங்குகிறது.
   - தோல் பதனிடுதல், சாயம் ஏற்றுதல், சிற்ப வேலைகள் போன்ற தொழில்களும் நடைபெறுகின்றன.
   - பேருந்துக் கட்டுமானத் தொழிலின் சிகரமாகக் கரூர் விளங்குகிறது.

## நெடுவினா.

1. **கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.**

   உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்தில் தமிழர்கள் சிறந்து விளங்கி உள்ளனர். கடல் வணிகத்தில் சேர நாடு சிறப்புற்றிருந்தது.

   **உள்நாட்டு வணிகம் :**

   சேர நாட்டில் உள்நாட்டு வணிகமும் நன்கு வளர்ச்சியுற்று இருந்தது. மக்கள் தத்தம் பொருள்களைத் தந்து தமக்குத் தேவையான பொருளைப் பெற்றனர். நெல்லின் விலையைக் கணக்கிட அடிப்படையாக இருந்தது என்பர். உப்பும் நெல்லும் ஒரே



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

மதிப்புடையனவாக இருந்தன என்பதை அகநானூற்றின் 390வது பாடல் மூலம் அறியலாம்.

**வெளிநாட்டு வணிகம் :**

முசிறி சேரர்களின் சிறந்த துறைமுகங்களில் ஒன்றாக விளங்கியது. இங்கிருந்து தான் மற்ற நாடுகளுக்கு மிளகு, முத்து, யானை, தந்தங்கள், மணி போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. பொன்மணிமிக்க புடவைகள், சித்திர வேலைப்பாடுகள் அமைந்த ஆடைகள், பவளம், செம்பு, கோதுமை ஆகியன இறக்குமதி செய்யப்பட்டன.

**சிந்தனை வினா.**

**1. நாட்டு மக்களின் நாகரிக நல்வாழ்விற்கு வணிகம் தவிர்த்து வேறு எவையெல்லாம் உதவும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

நாட்டு மக்களின் நாகரிக நல்வாழ்விற்கு வணிகம் தவிர்த்து கலைகள் பலவும், அறிவியல் கோட்பாடுகளும், பண்டைய தமிழறிஞர்களின் சிந்தனைகளை மீட்டுக் கொணர்வதும்,பொதுமைப் பண்பு, புத்தாக்க சிந்தனைகளும், பழைய நாகரிகங்களை வெளிக்கொணரும் அகழாய்வுகளும், பழந்தமிழ் இலக்கியங்களும் உதவும் என்று நான் கருதுகிறேன்.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மூவேந்தர்களில் பழமையானவர்கள் ________.**

அ) சேரர் ஆ) சோழர்
இ) பாண்டியர் ஈ) பல்லவர் **விடை: அ) சேரர்**

**2. சேரர்களின் கொடி ________.**

அ) புலி ஆ) மீன்
இ)வில் ஈ) முரசு **விடை: இ) வில்**

**3. சேரனுக்கு உரிய பூ ________.**

அ) பனம்பூ ஆ) வேப்பம்பூ
இ) அத்திப்பூ ஈ) தாழம்பூ **விடை: அ) பனம்பூ**

**4. 'கொங்கு மண்டலச் சதகம்' என்னும் நூலை இயற்றியவர் ________.**

அ) காளமேகப்புலவர் ஆ) கார்மேகக் கவிஞர்
இ) கண்ணதாசன் ஈ) வாணிதாசன் **விடை: ஆ) கார்மேகக் கவிஞர்**

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கடற்போர் வெற்றிகண்ட சேரன் ________. **விடை: செங்குட்டுவன்**
2. ________ என்னும் பெயரே கோயம்புத்தூர் என்று மருவி வழங்கப்பட்டு வருகிறது. **விடை: கோவன்புத்தூர்**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. பரப்பளவில் தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரம் ________.

விடை: ஈரோடு

4. தமிழகத்திலேயே மஞ்சள் சந்தை இடம்பெறும் ஒரே ஊர் ________.

விடை: ஈரோடு

5. இந்தியாவின் முதல் ஆயத்த ஆடைப் பூங்கா ________.

விடை: நேதாஜி ஆயத்த ஆடைப் பூங்கா

6. ஆயத்த ஆடை பூங்கா அமைந்துள்ள மாவட்டம் ________.

விடை: திருப்பூர்

7. முட்டைக் கோழி வளர்ப்பிலும், முட்டை உற்பத்தியிலும் இந்தியாவிலேயே முதன்மை வகிக்கும் மாவட்டம் ________. விடை: நாமக்கல்

8. ஏழைகளின் ஊட்டி ________. விடை: ஏற்காடு

9. கிரேக்க அறிஞர் ________. விடை: தாலமி

10. முத்து நகரம் ________. விடை: தூத்துக்குடி

11. குட்டி ஜப்பான் ________. விடை: சிவகாசி

12. தூங்கா நகரம் ________. விடை: மதுரை

13. தீப நகரம் ________. விடை: திருவண்ணாமலை

## குறுவினா.

**1. மூவேந்தர்கள் யாவர்?**

சேரர், சோழர், பாண்டியர்.

**2. சேர நாட்டின் துறைமுகப்பட்டினங்கள் யாவை?**

தொண்டி, முசிறி, காந்தளூர்.

**3. கொங்கு நாட்டுப் பகுதிகள் யாவை?**

சேலம் மற்றும் கோவைப் பகுதிகள் கொங்குநாட்டுப் பகுதிகள் ஆகும்.

**4. ஒரு நாட்டு மக்களின் நாகரிக நல்வாழ்விற்கு அடிப்படை எவை?**

உழவு, கைத்தொழில் வணிகம்.

**5. நீலகிரி மாவட்டத்தில் பெருமளவு பயிரிடப்படும் பயிர்கள் யாவை?**

காப்பி, தேயிலை, உருளைக்கிழங்கு, கேரட், முட்டைகோஸ்.

**6. கோவை மாவட்டத்தில் பெருமளவு பயிரிடப்படும் பயிர்கள் யாவை?**

நெல், வாழை, கரும்பு, காய்கறிகள், பூக்கள்.

**7. திண்டுக்கல்லில் விளைவிக்கப்படும் பயிர் வகைகள் யாவை?**

நெல், சோளம், தினை வகைகள், வாழைப்பழம், காய்கறிகள், மலர்கள்.

**8. ஈரோட்டில் விளைவிக்கப்படும் பயிர்கள் யாவை?**

நெல், நிலக்கடலை, மஞ்சள், கரும்பு, பருத்தி.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

9. **திருப்பூரில் விளைவிக்கப்படும் முதன்மைப் பயிர்கள் யாவை?**

நெல், கரும்பு, பருத்தி, வாழை.

10. **நாமக்கல் மாவட்டத்தில் பயிரிடப்படுவது யாவை?**

நெல், கரும்பு, சோளம், நிலக்கடலை, பருத்தி, திராட்சை, ஆரஞ்சு, காப்பி, பாக்கு, ஏலம்.

11. **சேலம் மாவட்டத்தில் பயிரிடப்படும் பயிர் வகைகள் யாவை?**

நெல், பருப்புவகைகள், பருத்தி, கரும்பு, மாம்பழம், காப்பி, பாக்கு.

12. **கரூர் மாவட்டத்தில் பயிரிடப்படும் பயிர்கள் யாவை?**

நெல், சோளம், கேழ்வரகு, கம்பு, கரும்பு.

## சிறுவினா.

1. **சேரர்களைப் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.**

- மூவேந்தர்களில் பழமையானவர்கள் சேரர்கள்.
- சேரர்களின் நாடு குடநாடு எனப்பட்டது.
- சேரர்களின் தலைநகரம் வஞ்சி.
- தொண்டி, முசிறி, காந்தளூர் ஆகியன சேரநாட்டின் துறைமுகப் பட்டினங்களாக விளங்கின.
- சேரர்களின் கொடி விற்கொடி ஆகும்.

2 **நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் யாவை?**

- தேயிலைத் தொழிற்சாலை
- புகைப்படச் சுருள் தயாரிப்பு தொழிற்சாலை
- துப்பாக்கி வெடிமருந்து தொழிற்சாலை
- தைல மர எண்ணெய் தொழிற்சாலை

3. **கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் யாவை?**

- பஞ்சாலைகள்
- நூற்பாலைகள்
- மின்சாரப் பொருட்கள்
- எந்திரங்கள்
- வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆகியன கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிறைந்துள்ளன.

4. **ஈரோடு மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.**

- தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரம் ஈரோடு.
- இங்கு நெல், நிலக்கடலை, மஞ்சள், கரும்பு, பருத்தி, எள் போன்றவை பயிரிடப்படுகின்றன.
- தமிழகத்திலேயே மஞ்சள் சந்தை உள்ள ஒரே மாவட்டம் ஈரோடு தான்.

இயல் 6

தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- துணி நூற்பாலைகள், எண்ணெய் ஆலைகள், சர்க்கரை ஆலைகள் பெருமளவில் இங்கு உள்ளன.
- நூல் நூற்பு, துணிகளுக்குச் சாயம் ஏற்றுதல், அச்சிடுதல், தோல் பதனிடுதல் முதலான தொழில்களும் ஈரோடு மாவட்டத்தில் நடைபெறுகின்றன.

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் மாவட்டம் பற்றிய செய்திகளைத் திரட்டி எழுதுக.**

எங்களுடைய மாவட்டம் ஈரோடு மாவட்டம் ஆகும். கணிதமேதை ராமானுஜம், புலவர் குழந்தை, தீரன் சின்னமலை ஆகிய சான்றோர்கள் பிறந்து வளர்ந்த மாவட்டம் ஈரோடு மாவட்டம். அந்தியூர் குருநாதசாமி திருக்கோயில், பாரியூர் அம்மன் கோயில், பண்ணாரி அம்மன் கோயில், கொடுமுடி மகுடேஸ்வரர் கோயில் ஆகிய சிறப்புமிக்க கோயில்கள் அமைந்துள்ளன. பழமையான பிரப் தேவாலயம், மிட்டுமியா பாபா தர்கா, அலாவுதீன் பாட்சா தர்கா ஆகியவை அமைந்துள்ளன. வெள்ளோடு பறவைகள் சரணாலயம் ஈரோட்டில் தான் உள்ளது.

**2. பல்வகைத் தொழில்கள் என்னும் தலைப்பில் படத்தொகுப்பு உருவாக்குக.**











விரிவானம்

இயல் 6

# காலம் உடன் வரும்

*கன்னிவாடி சீரங்கராயன் சிவக்குமார்*

**கன்னிவாடி சீரங்கராயன் சிவக்குமார்**

- திருப்பூர் மாவட்டம் கன்னிவாடியில் பிறந்தவர்.
- சிறந்த சிறுகதை எழுத்தாளர். 150க்கும் மேற்பட்ட சிறுகதை எழுதி உள்ளார்.
- சிறந்த சிறுகதைகளுக்கான இலக்கியச் சிந்தனை விருது பெற்றவர்.
- கன்னிவாடி, குணச்சித்திரங்கள், உப்புக்கடலைக் குடிக்கும் பூனை முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

## பாடநூல் வினாக்கள்

**1. 'காலம் உடன் வரும்' – கதையைச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை :**

காலம் உடன் வரும் எனும் சிறுகதையை எழுதியவர் கன்னிவாடி சீரங்கராயன் சிவக்குமார் ஆவார். நெசவுத் தொழிலில் ஏற்படும் இன்னல்களையும் நெசவாளர்களின் ஏழ்மை நிலையினையும் காட்டுவதாக இக்கதை அமைகிறது.

**சுப்ரமணியத்தின் கவலை :**

அனந்திகா நிறுவனத்திற்கு வழக்கமாக வெள்ளக்கோயில் தினேஷ் துணியகத்திலிருந்து ஏற்றுமதிக்காகத் துணிகளை அனுப்பி வைப்பார்கள். ஒருநாள் துணி அனுப்புவது தாமதமாகிறது. தறி நெய்ய ஆள் கிடைப்பதில்லை. அதனால் துணி நெய்ய தாமதமாகிறது என்று எவ்வளவு சொல்லியும் அனந்திகா நிறுவனம் நாளைக்குள் கட்டாயம் துணிகளை அனுப்பி வைக்க வேண்டும் என்கிறது. வழக்கமாகப் பாவு இணைக்கும் ரங்கன் ஊருக்குச் சென்று விட்டதால், அங்கு யாரும் இல்லை. மாணிக்கம் ஓட்டும் ஒரே ஒரு தறியில்தான் பாவு இருக்கிறது. அந்தப் பாவும் சற்று நேரத்தில் தீர்ந்து விடும். என்ன செய்வது என்று தெரியாமல் சுப்ரமணியம் மிகவும் கலங்கிப் போனார்.

**நண்பன் ரகுவின் உதவி :**

நண்பர் ரகு துணியகத்தில் கட்டாயமாகப் பாவு இணைப்பவர் யாராவது இருப்பார்கள். அங்கே போய் பார்க்கலாம் என்று ரகுவினுடைய தறிப்பட்டறைக்குச் செல்கிறார். பதற்றத்துடன் வந்த சுப்பிரமணியத்தை ரகு நெருங்கினார். அதற்குள் சுப்பிரமணியன் பாவு இணைக்க ஆள் வேண்டும். உடனடியாக யாரையாவது அனுப்பி உதவுங்கள் என்றார். அதற்கு ரகு மாயழகுவின் மனைவி ஒச்சம்மா பாவு இணைக்கும் வேலையை நன்கு செய்வாள். ஆனால் இந்த இரவில் அவன் எப்படி அனுப்புவான்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

என்கிறார். இரட்டைச் சம்பளம் தருகிறேன் என்றார். ரகு தான் சொன்னதாகச் சொல்லி ஒச்சம்மாவை அழைத்துச் செல் என்கிறார். சுப்பிரமணி மாயழகு வீட்டிற்குச் செல்கிறார்.

**மாயழகும் ஒச்சம்மாவும் :**

ஒச்சம்மா உசிலம்பட்டி பக்கம் கிருஷ்ணாபுரம் மாயழகு வெள்ளி மலை அடிவாரத்தில் கோம்பைத் தொழுவு. திருமணமான பிறகு நிலையாக ஓரிடத்தில் வாழ வேண்டும் என்பதற்காக வெள்ளகோவில் வந்தனர். தன் குழந்தைகளைப் படிக்க வைக்க,தறி ஓட்டுவதைத் தவிர பிற தறி வேலைகள் அனைத்தையும் கற்றாள்.

**பாவு பிணைத்தல் :**

ரகுஅனுப்பியதாகவும்தன்பிரச்சனையையும்சுப்பிரமணியம்எடுத்துரைக்கிறார். மாயழகு தன் மனைவி ஒச்சம்மாவை அவருடன் அனுப்புகிறார். தூங்கிக்கொண்டு இருக்கும் தன் கைக்குழந்தையுடன் செல்கிறாள். ஒச்சம்மா வர மாணிக்கத்தின் பாவு தீர்ந்து விடுகிறது. அங்கிருந்த பாவினைச் சரிசெய்து இருக்கும் வேளையில் குழந்தை விழித்துக் கொள்கிறது. குழந்தையைத் தூங்க வைத்தபடியே பாவை இணைக்கிறாள். வேலை முடிந்ததும் இரட்டைச் சம்பளத்தோடு சுப்பிரமணியம் அவளின் வீட்டிற்குக் கொண்டுபோய் சேர்க்கிறார்.

**முடிவுரை :**

இரவு பகல் பார்க்காமல் தன் வறுமையின் காரணமாகத் தறி பட்டறையில் வேலை செய்பவர்கள் வேலை செய்கின்றனர் என்பதை கதை மூலம் அறிய முடிகிறது.

## கற்பவை கற்றபின்

1. **காலம் உடன் வரும் – கதையை வகுப்பில் நாடகமாக நடித்துக்காட்டுக.**

மாணவர் செயல்பாடு.

2. **காலம் உடன் வரும் கதையில் இடம்பெற்றுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.**

| ஆங்கிலச் சொற்கள் | | தமிழ்ச்சொற்கள் |
|---|---|---|
| ♦ டெக்ஸ் | - | ஜவுளியகம் அல்லது துணியகம் |
| ♦ போன் | - | தொலைபேசி |
| ♦ லாரி | - | சரக்குந்து |
| ♦ டெம்போ | - | விசை வேக உந்து |
| ♦ கார் | - | மகிழுந்து |
| ♦ ஷிப்ட் | - | முறை |
| ♦ பீம் | - | தறிக்கட்கடை |
| ♦ டிசைன் | - | வடிவமைப்பு |
| ♦ ஜக் கார்டுகள் | - | சித்திர நெசவு |
| ♦ பெட்ஷீட் | - | படுக்கை விரிப்பு |
| ♦ டீ | - | தேநீர் |
| ♦ டேப் | - | ஒலிப்பேழை |
| ♦ டாட்டா | - | போய் வருக |

கற்கண்டு

இயல் 6

# புணர்ச்சி

## பாடநூல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **விகாரப் புணர்ச்சி ________ வகைப்படும்.**

   அ) ஐந்து ஆ) நான்கு
   இ) மூன்று ஈ) இரண்டு **விடை: இ) மூன்று**

2. **'பாலாடை' - இச்சொல்லுக்குரிய புணர்ச்சி ________.**

   அ) இயல்பு ஆ) தோன்றல்
   இ) திரிதல் ஈ) கெடுதல் **விடை: அ) இயல்பு**

**பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. மட்பாண்டம் | - | அ) | தோன்றல் விகாரம் |
| 2. மரவேர் | - | ஆ) | இயல்புப் புணர்ச்சி |
| 3. மணிமுடி | - | இ) | கெடுதல் விகாரம் |
| 4. கடைத்தெரு | - | ஈ) | திரிதல் விகாரம் |

**விடை: 1.ஈ 2.இ 3.ஆ 4.அ**

**சிறுவினா.**

1. **இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

   நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இன்றி இணைவது இயல்பு புணர்ச்சி ஆகும்.

   **சான்று:** தாய் மொழி

   தாய்+மொழி = தாய்மொழி இரு சொற்களிலும் எந்த மாற்றமும் நிகழவில்லை. எனவே இது இயல்பு புணர்ச்சி.

2. **மரக்கட்டில் - இச்சொல்லைப் பிரித்து எழுதிப் புணர்ச்சியை விளக்குக.**

   மரம் + கட்டில் - திரிதல் விகாரப்புணர்ச்சியின் படி 'ம்' என்பது 'க்' ஆகத் திரிந்து மரக்கட்டில் எனப் புணர்ந்தது. இரண்டு சொற்கள் இணையும்போது ஒன்றுக்கு மேற்பட்ட விகாரங்கள் நிகழ்வது உண்டு. கெடுதல் விகாரத்தின்படி நிலைமொழி ஈற்றில் உள்ள மகர மெய் மறைந்தது தோன்றல் விகாரத்தின் படி 'க்' என்ற மெய்யெழுத்து தோன்றியது.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. தமிழ் அமுதம் என்பதில் தமிழ் ________ மொழி.
அ) நிலை ஆ) வரு
இ) தனி ஈ) தொடர் **விடை: அ) நிலை**

2. தமிழ் அமுதம் என்பதில் அமுதம் ________ மொழி.
அ) நிலை ஆ) வரு
இ) தனி ஈ) தொடர் **விடை: ஆ) வரு**

3. சிலை அழகு என்பது ________ புணர்ச்சிக்குச் சான்றாகும்.
அ) உயிரீற்று ஆ) மெய்யீற்று
இ) உயிர்முதல் ஈ) மெய் முதல் **விடை: அ) உயிரீற்று**

4. மண்ணழகு என்பது ________ புணர்ச்சிக்குச் சான்றாகும்.
அ) உயிரீற்று ஆ) மெய்யீற்று
இ) உயிர்முதல் ஈ) மெய் முதல் **விடை: ஆ) மெய்யீற்று**

5. பொன்னுண்டு என்பது ________ புணர்ச்சிக்குச் சான்றாகும்.
அ) உயிரீற்று ஆ) மெய்யீற்று
இ) உயிர்முதல் ஈ) மெய் முதல் **விடை: இ) உயிர்முதல்**

6. பொற்சிலை என்பது ________ புணர்ச்சிக்குச் சான்றாகும்.
அ) உயிரீற்று ஆ) மெய்யீற்று
இ) உயிர்முதல் ஈ) மெய் முதல் **விடை: ஈ) மெய்முதல்**

7. தமிழ்த்தாய் என்பது ________ புணர்ச்சிக்குச் சான்றாகும்.
அ) இயல்பு ஆ) திரிதல் விகாரம்
இ) தோன்றல் விகாரம் ஈ) கெடுதல் விகாரம்
**விடை: இ) தோன்றல் விகாரம்**

8. விற்கொடி என்பது ________ புணர்ச்சிக்குச் சான்றாகும்.
அ) இயல்பு ஆ) திரிதல் விகாரம்
இ) தோன்றல் விகாரம் ஈ) கெடுதல் விகாரம்
**விடை: ஆ) திரிதல் விகாரம்**

9. மன மகிழ்ச்சி என்பது ________ புணர்ச்சிக்குச் சான்றாகும்.
அ) இயல்பு ஆ) திரிதல் விகாரம்
இ) தோன்றல் விகாரம் ஈ) கெடுதல் விகாரம்
**விடை: ஈ) கெடுதல் விகாரம்**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## குறுவினா.

1. **புணர்ச்சி என்றால் என்ன?**

நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் இணைவது புணர்ச்சி ஆகும்.

2. **விகாரப் புணர்ச்சி என்றால் என்ன?**

நிலைமொழியும், வருமொழியும் இணையும் போது நிலை மொழியிலோ அல்லது வருமொழியிலோ அல்லது இரண்டுமோ மாற்றம் நிகழ்ந்தால் அது விகாரப் புணர்ச்சி எனப்படும்.

3. **விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும். அவை: தோன்றல், திரிதல், கெடுதல் ஆகியனவாகும்.

4. **உயிர்ரீற்றுப் புணர்ச்சி என்றால் என்ன? சான்று தருக.**

நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால், அஃது உயிரீற்றுப் புணர்ச்சி எனப்படும்.

**சான்று:** சிலை + அழகு = சிலையழகு

5. **மெய்யீற்றுப் புணர்ச்சி என்றால் என்ன? சான்று தருக.**

நிலைமொழியின் இறுதி எழுத்து மெய் எழுத்தாக இருந்தால், அது மெய்யீற்றுப் புணர்ச்சி எனப்படும்.

**சான்று:** மண் + அழகு = மண்ணழகு

6. **உயிர் முதல் புணர்ச்சி என்றால் என்ன? சான்று தருக**

வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால், அது உயிர்முதல் புணர்ச்சி எனப்படும்.

**சான்று:** பொன் + உண்டு + பொன்னுண்டு

7. **மெய் முதல் புணர்ச்சி என்றால் என்ன? சான்று தருக.**

வருமொழியின் முதல் எழுத்து மெய் எழுத்தாக இருந்தால், அது மெய் முதல் புணர்ச்சி எனப்படும்.

**சான்று:** பொன் + சிலை = பொற்சிலை

## கற்பவை கற்றபின்

**இயல்பு, தோன்றல், திரிதல், கெடுதல் ஆகிய புணர்ச்சிகளுக்குரிய எடுத்துக்காட்டுகளைக் கொண்டு பட்டியல் ஒன்று உருவாக்குக.**

| | |
|---|---|
| **இயல்புப் புணர்ச்சி சான்றுகள்** | படம் பார்த்தான், கூடை பிண்ணினாள், படம் வரைந்தான், தமிழ்மணி, அண்ணன் தம்பி, பழம் தின், பயணம் சென்றான், தெருவிளக்கு, நீதிமன்றம், கடைவீதி, தலைவலி. |



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

| | |
|---|---|
| **தோன்றல் விகாரப் புணர்ச்சி சான்றுகள்** | மாங்கனி, தைத்திங்கள், வாழைப்பூ, சாரைப்பாம்பு, படித்துறை, குதிரைக் கால், மழைச்சாரல், பனித்துளி, கொடிச்சீலை. |
| **திரிதல் புணர்ச்சி சான்றுகள்** | மட்குடம், பொற்சிலை, கற்சிலை, பெண்பாற்புலவர், முட்செடி, கட்செவி, மரத்தடி, மரப்பலகை, சதுரக் கல். |
| **கெடுதல் விகாரப் புணர்ச்சி சான்றுகள்** | சிறு படை, பெருவெள்ளம், வெண்குடை, முதுமலை, செம்பனி, சிறு மகன், செம்மொழி. |

## மொழியை ஆள்வோம்

**கேட்க.**

**நெசவுத்தொழில் குறித்த நாட்டுப்புறப் பாடல்களைக் கேட்டு மகிழ்க.**

| | |
|---|---|
| பருத்திப்பஞ்ச நூலாக்குவோம்<br>நல்ல நூலாக்குவோம்<br>நல்ல நூலை காடா துணியாக்குவோம்<br>நல்ல காடா துணியாக்குவோம்<br>நல்ல துணிய சாயமேத்துவோம்<br>நல்ல சாய மேத்துவோம்<br>பளபளப் பாக்குவோம்<br>துணிய பளப்பளப்பாக்குவோம் | ஒரு சாண் வயித்துக்கு<br>பல இரவு கண்விழிச்சு<br>ராட்டை நெஞ்சேன்<br>ராட்டை நெஞ்சேன்<br>என் பிள்ளைக்குப் பால்வாங்கி<br>கட்டுத் தறி நெஞ்சேன்<br>கட்டுத் தறி நெஞ்சேன்<br>இரவு பகலா தறி நெஞ்சு<br>வறுமை ஒன்றும் போகலையே?<br>கட்டுத் தறியாட்டம்<br>மனசு ஆடுதம்மா! |

**கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்று பற்றி இரண்டு நிமிடம் பேசுக.**

### 1. உழவும் நெசவும்

என் உயிர் கொடுத்து இன்னுயிர் பேசவைத்த இறைவனுக்கும் என் தமிழ் தாய்க்கு முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். உழவும் நெசவும் எனும் நல்லதொரு தலைப்பில் சில மணித்துளிகள் உங்களுடன் பேசுகின்றேன்.

'உண்பது நாழி உடுப்பவை இரண்டே' என்கிறது புறநானூறு. அதாவது ஒரு மனிதனுக்கு உணவும் உடையும் அவசியம் தேவை என்பதை அழகாகச் சொல்லி இருக்கிறது. அந்தப் புறநானூற்று வரிகள் உண்ணும் உணவும் உடுத்தும் உடையும் இல்லை என்றால் என்ன ஆகும்? என்று சற்று சிந்தித்துப் பாருங்கள்.

உணவு இல்லாமல் வறுமையில் வாடி மண்ணின் வாய்க்கு உணவாக நாம் போய் இருப்போம். ஆடை இல்லாமல் போனால் மானம் அழிந்து மண்ணுக்கு இறையாய் இருப்போம். எனவே உழவும் நெசவும் இரு கண்களாக நாம் நினைக்க வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

உணவுத்தொழிலுக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அதே அளவிற்கு நெசவுத் தொழிலுக்கு முக்கியத்துவத்தினை நாம் கொடுக்க வேண்டும்.

எதிர்கால பாரதத்தை உருவாக்கக்கூடிய இளைஞர்களாகிய நாம் உழவுத் தொழிலையும் நெசவுத் தொழிலையும் கற்று அவை மேன்மையடைய நாம் உழைக்க வேண்டும் என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்.

## 2. தொழில்கள் பலவிதம்

ஆண்டவனுக்கும், அன்னைத் தமிழுக்கும், என் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு தொழில்கள் பலவிதம் என்னும் தலைப்பில் சில நிமிடங்கள் பேசுகின்றேன்.

உழவுத் தொழில், நெசவுத் தொழில், சிறு தொழில், குறுந்தொழில், பெருந்தொழில் என தொழில்கள் பல உள்ளன. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனம் செய்வோம்' என்றான் பாரதி. தொழில்களிலேயே முதன்மையான தொழில் உழவுத் தொழில் மற்றும் நெசவுத் தொழிலாகும். பிற தொழில்கள் அனைத்தும் இந்த இரு தொழில்கள் இடமிருந்து தான் தோன்றின.

சிறு முதலீடுகள் கொண்டு செய்யப்படும் தொழில்கள் சிறுதொழில் எனப்பட்டன. குறு முதலீடுகளைக் கொண்டு செய்யப்பட்ட தொழில்கள் குறுந்தொழில் எனப்பட்டன. ஏழை எளிய மக்கள் குடிசைத் தொழிலை மேற்கொண்டனர். ஏதாவது ஒரு தொழில் கற்றுப் பிழைக்க வேண்டும் என்பதுதான் இன்றைய காலத்தின் நிபந்தனை. எனவே தொழில் வகைகளை அறிந்து ஏதேனும் ஒரு தொழிலைக் கற்று நாம் வாழ்வில் உயர வேண்டும் என்றுச் சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்.

### சொல்லக் கேட்டு எழுதுக.

பூமிக்குள் புதைந்த தாவர இனங்களும் விலங்கினங்களும் அழுகி, மட்கிப் பழுப்பு நிலக்கரியாக மாறுகின்றன. இது மின் உலைகளிலும் ஊது உலைகளிலும் எரிபொருளாகப் பயன்படுகிறது. உலோக உருக்குத் தொழிலிலும் பயன்படுகிறது. தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டம் நெய்வேலியிலும் புதுச்சேரியின் சில பகுதிகளிலும் பழுப்பு நிலக்கரி கிடைக்கிறது. இது தஞ்சை, பெரம்பலூர், சிவகங்கை, நீலகிரி, திண்டுக்கல், திருவள்ளூர், கன்னியாகுமரி மாவட்டங்களிலும் குறைந்த அளவு காணப்படுகிறது. நெய்வேலியில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் உள்ளது. இங்குக் கிடைக்கும் நிலக்கரி அனல் மின்சாரம் தயாரிக்க உதவுகிறது.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

### பின்வரும் மரபுத்தொடர்களைப் பொருளோடு பொருத்துக.

1. ஆயிரங்காலத்துப் பயிர் - அ) இயலாத செயல்
2. கல்லில் நார் உரித்தல் - ஆ) ஆராய்ந்து பாராமல்
3. கம்பி நீட்டுதல் - இ) இருப்பதுபோல் தோன்றும் ஆனால் இருக்காது
4. கானல்நீர் - ஈ) நீண்டகாலமாக இருப்பது
5. கண்ணை மூடிக்கொண்டு - உ) விரைந்து வெளியேறுதல்

விடை: 1.ஈ 2.அ 3.உ 4.இ 5.ஆ

### பின்வரும் மரபுத்தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. **வாழையடி வாழையாக**

முகலாய மன்னர்கள் **வாழையடி வாழையாக** இந்தியாவை ஆட்சி செய்தனர்.

2. **முதலைக்கண்ணீர்**

காவலரிடம் மாட்டிக்கொண்ட திருடன் தான் திருடவில்லை என்று **முதலைக் கண்ணீர்** வடித்தான்.

3. **எடுப்பார் கைப்பிள்ளை**

ரகு சுயமாக யோசிக்காமல் **எடுப்பார் கைப்பிள்ளை போலச்** செயல்படுகிறான்.

### கட்டுரை எழுதுக.

**கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்**

**முன்னுரை :**

பெற்ற பிள்ளை உன்னைக் கைவிட்டாலும், கற்ற கல்வி உன்னை கைவிட்டாலும், நீ பழகிய கைத்தொழில் உன்னைக் கைவிடாமல் காப்பாற்றும் என்பது ஆன்றோர் வாக்கு. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை இக்கட்டுரை வலியுறுத்தி நிற்கிறது.

**கைத்தொழிலின் அவசியம் :**

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பார்கள். புள்ளிக் கணக்கு வாழ்க்கைக்கு உதவாது என்பார்கள். அது உண்மையே நாம் கற்கும் கல்வியும் நம் எதிர்காலத்திற்கு ஒரு தொழில் கற்றுக் கொடுக்கிறதா என்றால் இல்லை. படித்து முடித்து பட்டம் பெற்று பின்னர் வேலை தேடும் போது தான் தெரியும். ஏதாவது ஒரு கைத்தொழிலாவது கற்று இருக்கலாமே என்று யோசிப்போம்.

**கைத்தொழில் வகைகள் :**

பாய் பின்னுதல், கூடை பின்னுதல், அலங்கார பொம்மைகள் செய்தல், கைவினைப் பொருட்கள் செய்தல், மின்னணு சாதனங்கள் பழுதுபார்த்தல், கைபேசி பழுது பார்த்தல் என பலவகைத் தொழில்கள் கைத்தொழிலில் உள்ளன.


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**கைத்தொழிலின் பயன்கள் :**

கைத்தொழில் கற்றால் படித்து வேலை கிடைக்கவில்லையே என்று ஏங்கித் தவிக்கத் தேவையில்லை. கைத்தொழில் கற்ற உடன் வேலை தரும். வீட்டில் உள்ள பொருட்களை நாமே சரி செய்யலாம். கைத்தொழில்களை நாம் கற்றும் அதன் மூலம் பிறருக்கு அதனைக் கற்றுக் கொடுத்தும் பொருள் ஈட்டலாம். குறைந்த முதலீட்டில் அதிக லாபம் பெறலாம்.

**கைத்தொழிலால் தோன்றிய கல்வி :**

தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, சிறுதொழில் கல்வி ஆகியவை எல்லாம் கைத்தொழில்களை அடிப்படையாகக் கொண்டே தொடங்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறுதொழில் பயிற்சி குறுந்தொழில் பயிற்சிக்காகக் கைத்தொழில்கள் பலவற்றை இன்று தொழிற்கல்வி நிலையங்களில் கற்றுக் கொடுக்கின்றனர்.

**முடிவுரை :**

வறுமையினால் பசி என்று வரக்கூடிய ஒருவனுக்கு ஒரு மீனைக் கொடுப்பதைவிட, மீன் பிடிக்கக் கற்றுக் கொடுத்து, ஒரு தூண்டிலை வாங்கிக் கொடுக்கலாம். அதுதான் அவருடைய வறுமையை நீண்டகாலம் போக்கும். இதுதான் கைத்தொழிலின் சிறப்பாகும்.

கைத்தொழில் கற்போம்! கவலை இல்லாமல் வாழ்வோம்!!

## மொழியோடு விளையாடு

**ஊர்களையும் அவற்றின் சிறப்பு பெயர்களையும் அறிவோம்.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. ப | ட் | டா | சு | | | 2. மா | | | |
| ட் | | கை | லி | ல் | 3. ம | ம் | பு | | |
| டு | | | | ம் | ழ | ப | ப் | லா | 4. ப |
| ப் | 5. அ | ரி | வா | ள் | | ழ | 6. உ | | ஞ் |
| பு | | | கோ | | | ம் | | | சா |
| ட | | 7. அ | ல் | வா | | | | | மி |
| வை | | | 8. பா | | | டு | | | ர் |
| | | மை | ம் | பொ | டி | ட் | யா | லை | 9. த |
| கு | க் | று | 10. மு | | | 11. பூ | | | ம் |
| 12. க | ட | லை | மி | ட் | டா | ய் | | | |

6 இயல்

தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

| இடமிருந்து வலம் | வலமிருந்து இடம் | மேலிருந்து கீழ் | கீழிருந்து மேல் |
|---|---|---|---|
| 1. சிவகாசி<br>5. திருபாச்சி<br>7. திருநெல்வேலி<br>12. கோவில்பட்டி | 3. மதுரை<br>4. பண்ருட்டி<br>9. தஞ்சாவூர்<br>10. மணப்பாறை | 1. காஞ்சிபுரம்<br>2, சேலம்<br>4. பழனி | 6. தூத்துக்குடி<br>8. ஸ்ரீவில்லிப்புத்தூர்<br>11. திண்டுக்கல் |

## நிற்க அதற்குத் தக

**என் பொறுப்புகள் :**

கைத்தொழில் ஒன்றைக் கற்றுத் தெளிவேன்.

நெசவுத் தொழிலின் சிறப்பை அறிந்து போற்றுவேன்.

### கலைச்சொல் அறிவோம்

- நூல் - Thread
- தறி - Loom
- பால்பண்ணை - Dairy farm
- தோல் பதனிடுதல் - Tanning
- தையல் - Stitch
- ஆலை - Factory
- சாயம் ஏற்றுதல் - Dying
- ஆயத்த ஆடை - Ready made

## இணையத்தில் காண்க

**குடிசைத் தொழில்களின் பட்டியல் இணையத்தில் தேடி எழுதுக.**

- மூலிகை குளியல் பொடி தயாரிப்பு
- நெல்லி மிட்டாய் தயாரிப்பு
- பிரட் தயாரிப்பு
- கற்பூரம் தயாரிப்பு
- சர்பத் தயாரிப்பு
- மெழுகுவர்த்தி தயாரிப்பு
- குளியல் சோப்பு தயாரிப்பு
- மலர்க்கொத்து தயாரிப்பு
- பனை இலை தட்டு தயாரிப்பு
- மாற்றுச் சாவி தயாரிப்பு
- பினாயில் தயாரிப்பு
- காகித கவர் தயாரிப்பு
- விபூதி தயாரிப்பு
- பாக்குமட்டை தட்டு தயாரிப்பு
- காகிதத் தட்டு தயாரிப்பு
- கம்ப்யூட்டர் சாம்பிராணி தயாரிப்பு
- ஊதுவத்தி தயாரிப்பு
- சத்து மாவு தயாரிப்பு
- பொம்மை தயாரிப்பு
- கிறிஸ்டல் கல் தயாரிப்பு



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## அலகுத் தேர்வு

### இயல் - 6

நேரம்: 30 நிமிடம் மதிப்பெண்கள்: 20

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (3)**

1. **தோட்டத்தில் தம்பி ஊன்றிய ________ எல்லாம் முளைத்தன.**
அ) சத்துகள் ஆ) பித்துகள்
இ) முத்துகள் ஈ) வித்துகள்

2. **சேரர்களின் தலைநகரம் ________.**
அ) காஞ்சி ஆ) வஞ்சி
இ) தொண்டி ஈ) முசிறி

3. **விகாரப்புணர்ச்சி ________ வகைப்படும்.**
அ) ஐந்து ஆ) நான்கு
இ) திரிதல் ஈ) இரண்டு

**ஆ. பொருத்துக. (4)**

| | | |
|---|---|---|
| 4. மட்பாண்டம் | - | தோன்றல் விகாரம். |
| 5. மரவேர் | - | இயல்புப்புணர்ச்சி. |
| 6. மணிமுடி | - | கெடுதல் விகாரம். |
| 7. கடைத்தெரு | - | திரிதல் விகாரம். |

**இ. குறு விடை தருக. (4)**

8. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?
9. இயல்புப் புணர்ச்சியை விளக்குக.

**ஈ. சிறு விடை தருக. (6)**

10. உழவுத் தொழில் குறித்து தகடூர் யாத்திரை கூறுவன யாவை?
11. கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைக் குறிப்பிடுக.

**உ. மரபுத்தொடர்களைத் தொடர்களில் அமைத்து எழுதுக. (3)**

12. வாழையடி வாழையாக
13. முதலைக்கண்ணீர்
14. எடுப்பார் கைப்பிள்ளை

கவிதைப் பேழை

இயல் 7

# படைவேழம்

செயங்கொண்டார்

## செயங்கொண்டார்

- தீபங்குடி என்னும் ஊரைச் சார்ந்தவர்.
- முதல் குலோத்துங்கச் சோழனின் அவைக்களப் புலவர்.
- ‘பரணிக்கோர் செயங்கொண்டார்’ என்று பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் இவரைப் புகழ்ந்துள்ளார்.

## மனப்பாடப் பாடல்

**வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி**
**மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்**
**இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்**
**இருவர் ஒருவழி போகல் இன்றியே**
**ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்**
**உடலின் நிழலினை வெருவி அஞ்சினர்**
**அருவர் வருவர் எனா இறைஞ்சினர்**
**அபயம் அபயம் எனநடுங்கியே**

*ஆசிரியர் : செயங்கொண்டார்*

## சொல்லும் பொருளும்

- மறலி - காலன்
- கரி - யானை
- தூறு - புதர்
- அருவர் - தமிழர்
- உடன்றன - சினந்து எழுந்தன
- வழிவர் - நழுவி ஓடுவர்
- பிலம் - மலைக்குகை
- மண்டுதல் - நெருங்குதல்
- இறைஞ்சினர் - வணங்கினர்
- முழை - மலைக்குகை

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சிங்கம் ________ யில் வாழும்.
   அ) மாயை  ஆ) ஊழி
   இ) முழை  ஈ) அலை  **விடை: இ) முழை**

2. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு ________.
   அ) வீரம்  ஆ) அச்சம்
   இ) நாணம்  ஈ) மகிழ்ச்சி  **விடை: ஆ) அச்சம்**

3. 'வெங்கரி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
   அ) வெம் + கரி  ஆ) வெம்மை + கரி
   இ) வெண் + கரி  ஈ) வெங் + கரி  **விடை: ஆ) வெம்மை + கரி**

4. 'என்றிருள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
   அ) என் + இருள்  ஆ) எட்டு + இருள்
   இ) என்ற + இருள்  ஈ) என்று + இருள்  **விடை: ஈ) என்று + இருள்**

5. 'போல் + உடன்றன' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.
   அ) போன்றன  ஆ) போலன்றன
   இ) போலுடன்றன  ஈ) போல்உடன்றன  **விடை: இ) போலுடன்றன**

### குறுவினா

1. **சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர் எவ்வாறு நடுங்கினர்?**
   தங்கள் உயிரைப் பறிக்க வந்த எமனோ என்று சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர் நடுங்கினர்.

2. **கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர்?**
   கலிங்க வீரர்கள் தம்மை அழிக்க வந்த தீயோ என்று அஞ்சி ஓடினர்.

3. **சோழனின் யானைப் படையைக் கண்ட வீரர்களின் செயல்கள் யாவை?**
   - படைக்கூட்டத்திலிருந்து விலகி ஓடினர்.
   - கடலில் தாவிக் குதித்துத் தப்பினர்.
   - யானைகளின் பின்னே மறைந்து கொண்டனர்.
   - எந்தத் திசையில் செல்வது என்று தெரியாமல் மலைக் குகை மற்றும் புதருக்குள் தப்பி ஒளிந்து கொண்டனர்.

### சிறுவினா

**சோழ வீரர்களைக் கண்ட கலிங்கப் படைவீரர்களின் செயல்களாகக் கலிங்கத்துப்பரணி கூறுவன யாவை?**

- கலிங்க வீரர்கள் "இது என்ன மாய வித்தையா" என்று வியந்தனர். தம்மை அழிக்க வந்த தீயோ? உயிரைப் பறிக்க வந்த எமனோ? என்று அஞ்சினர்.

- படைக் கூட்டத்திலிருந்து விலகி ஓடினர். கடலில் தாவிக் குதித்துத் தப்பினர். யானைகள் பின்னே மறைந்து கொண்டனர்.
- எந்தத் திசையில் செல்வது எனத் தெரியாமல், மலைக் குகை மற்றும் புதர்களில் ஓடி ஒளிந்தனர்.
- ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு ஓடினர். தன்னுடைய நிழலைக் கூட எதிரிகள் துரத்தி வருவதாக எண்ணிப் பயந்தனர்.
- யானை பிளிறியதைக்கேட்டு பயந்த வீரர்கள் குகைக்குள் சென்று மறைந்தனர். புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தனர்.

### சிந்தனை வினா

**ஒரு நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவையானவை எவை எனக் கருதுகிறீர்கள்?**

- ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு இயற்கையாக அமைந்த அரண்களும்,
- நான்கு திசைகளின் எல்லைகளில் பாதுகாப்புப் படை வீரர்களும்,
- வேறுபட்ட சிந்தனை கொண்ட படைத் தலைவர்களும்,
- திறமையான படை வீரர்களும் தேவை எனக் கருதுகிறேன்.

7 இயல் தமிழ்

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **செயங்கொண்டார் பிறந்த ஊர் ________.**

அ) ஆலங்குடி ஆ) தீபங்குடி
இ) மால்குடி ஈ) லால்குடி **விடை: ஆ) தீபங்குடி**

2. **கலிங்கத்துபரணி ________ வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.**

அ) 96 ஆ) 24
இ) 95 ஈ) 18 **விடை: அ) 96**

3. **தமிழில் முதன் முதலில் தோன்றிய பரணி நூல் ________.**

அ) தக்கயாகப்பரணி ஆ) கலிங்கத்துப் பரணி
இ) இரணிய வதைப் பரணி ஈ) பாசவதைப் பரணி
**விடை: ஆ) கலிங்கத்துப் பரணி**

4. **'தென்தமிழ்த் தெய்வப்பரணி' – என்று கலிங்கத்துப் பரணியைப் புகழ்ந்தவர் ________.**

அ) புகழேந்திப் புலவர் ஆ) பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்
இ) ஒட்டக்கூத்தர் ஈ) முதலாம் குலோத்துங்கச் சோழன்
**விடை: இ) ஒட்டக்கூத்தர்**

5. **கலிங்கத்துப் பரணியில் அமைந்துள்ள தாழிசைகளின் எண்ணிக்கை ________.**

அ) 599 ஆ) 598
இ) 590 ஈ) 595 **விடை: அ) 599**

## குறுவினா

**1. பரணி இலக்கியம் எதனைப் பற்றியது?**

போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கண்ட வீரரைப் புகழ்ந்து பாடுவது பரணி இலக்கியமாகும்.

**2. செயங்கொண்டார் - குறிப்பு வரைக.**

- முதல் குலோத்துங்கச் சோழனின் அவைக்களப் புலவர்.
- பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் "பரணிக்கோர் செயங்கொண்டார்" என்று புகழ்ந்துள்ளார்.
- செயங்கொண்டார் "தீபங்குடி" என்னும் ஊரைச் சார்ந்தவர்.
- கலிங்கத்துப் பரணியை இயற்றியவர் இவர்.

**3. இஃது என்ன மாய வித்தையோ என கலிங்கத்துப் படை வியக்கக் காரணம் யாது?**

சோழர் படையின் தாக்குதலைக் கண்ட கலிங்க வீரர்கள் இஃது என்ன மாய வித்தையோ என்று வியந்தனர்.

**4. சோழப் படையின் யானைகள் எவ்வாறு பிளிறின?**

- சோழப் படையின் யானைகள் சினமுற்று இடியைப் போல பிளிறின.
- இதனைக் கண்டு தமிழர்கள் துரத்தி வருவதாகக் கலிங்க வீரர்கள் அஞ்சினர்.
- கலிங்க வீரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு ஓடும்போது தங்களுடைய நிழலையும் மற்றவர் நிழலையும் பார்த்து தமிழர்கள் துரத்தி வருவதாக எண்ணி ஓடினர்.

## சிறுவினா

**1. கலிங்கத்துப்பரணி - குறிப்பு வரைக.**

- கலிங்கத்துப்பரணி 96 வகையான சிற்றிலக்கியங்களில் ஒன்று.
- பரணி இலக்கிய வகையைச் சார்ந்தது.
- தமிழில் பாடப்பட்ட முதல் பரணி நூல் இதுவே ஆகும்.
- கலிங்கத்துப் போர் வெற்றியை இந்நூல் பேசுகிறது.
- இந்நூலை இயற்றியவர் செயங்கொண்டார்.
- கலித்தாழிசையால் பாடப்பட்ட நூல் இது.
- 599 தாழிசைகள் கொண்டது.

## கற்பவை கற்றபின்

**1. உங்களுக்குத் தெரிந்த சிற்றிலக்கிய வகைகளின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

- பரணி
- பள்ளு
- பிள்ளைத்தமிழ்
- உலா
- கலம்பகம்
- மாலை
- சதகம்
- தூது
- அந்தாதி
- கோவை
- குறவஞ்சி

இயல் 7

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. போர்க் கருவிகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.



இயல் 7

கவிதைப் பேழை

# விடுதலைத் திருநாள்

கவிஞர் மீரா

**கவிஞர் மீரா**

- இயற்பெயர் மீ. இராசேந்திரன்
- கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.
- நடத்திய இதழ்: அன்னம் விடு தூது.
- படைப்புகள்: குக்கூ, மூன்றும் ஆறும், வா இந்தப் பக்கம், ஊசிகள் முதலியவை.

## சொல்லும் பொருளும்

- சீவன் - உயிர்
- சத்தியம் - உண்மை
- ஆனந்த தரிசனம் - மகிழ்வான காட்சி
- வையம் - உலகம்
- சபதம் - சூளுரை
- மோகித்து - விரும்பி

## பாடநூல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வானில் முழுநிலவு அழகாகத் ________ அளித்தது.

அ) தயவு ஆ) தரிசனம்
இ) துணிவு ஈ) தயக்கம் **விடை: ஆ) தரிசனம்**

2. இந்த ________ முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு.
அ) வையம் ஆ) வானம்
இ) ஆழி ஈ) கானகம் **விடை: அ) வையம்**

3. 'சீவனில்லாமல்' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) சீவ + நில்லாமல் ஆ) சீவன் + நில்லாமல்
இ) சீவன் + இல்லாமல் ஈ) சீவ + இல்லாமல் **விடை: இ) சீவன்+இல்லாமல்**

4. 'விலங்கொடித்து' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) விலம் + கொடித்து ஆ) விலம் + ஒடித்து
இ) விலன் + ஒடித்து ஈ) விலங்கு + ஒடித்து **விடை: ஈ) விலங்கு+ஒடித்து**

5. காட்டை + எரித்து – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.
அ) காட்டைஎரித்து ஆ) காட்டையெரித்து
இ) காடுஎரித்து ஈ) காடுயெரித்து **விடை: ஆ) காட்டையெரித்து**

6. இதம் + தரும் – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.
அ) இதந்தரும் ஆ) இதம்தரும்
இ) இதத்தரும் ஈ) இதைத்தரும் **விடை: அ) இதந்தரும்**

## குறுவினா

1. **பகத்சிங் கண்ட கனவு யாது?**
இன்று இந்தியாவின் விடியல் தோன்றிய நாள் என்று பகத்சிங் கனவு கண்டார்.

2. **இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?**
300 ஆண்டுகள் நம்மை அடிமைப்படுத்திய அந்நியரின் ஆட்சியை இருண்ட ஆட்சி என்று மீரா குறிப்பிடுகிறார்.

## சிறுவினா

**இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?**

♦ அடிமையாய்த் தவித்துக்கொண்டிருந்த இந்தியத்தாய் சினத்துடன் எழுந்து,
♦ தன்னுடைய கை விலங்கை உடைத்து,
♦ பகைவரை அழித்து,
♦ தன்னுடைய அவிழ்ந்த கூந்தலை முடித்து,
♦ தன் நெற்றியில் திலகமிட்டுக் காட்சியளிக்கிறாள்.

## சிந்தனை வினா

**நாட்டுப்பற்றை வளர்க்கும் வகையில் விடுதலை நாளை எவ்வாறு கொண்டாடலாம்?**

♦ விடுதலைப் போராட்ட நிகழ்வு காட்சிகளை நாடகமாக நடத்தலாம்.
♦ விடுதலை வீரர்களைப் போல வேடமிட்டு அவர் தம் செயல்களை எடுத்துக் கூறலாம்.
♦ விடுதலைப் போராட்டங்கள் குறித்த செய்திகளை உணர்த்தும் வகையில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளை வைக்கலாம்.

7 இயல் தமிழ்

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **அன்னம் விடு தூது என்னும் இதழை நடத்தியவர் ________.**
   அ) மேத்தா ஆ) மீரா
   இ) வைரமுத்து ஈ) ஈரோடு தமிழன்பன் **விடை: ஆ) மீரா**

2. **'விடுதலைத் திருநாள்' என்னும் கவிதைப்பேழை பகுதி இடம்பெறும் நூல் ________.**
   அ) கோடையும் வசந்தமும் ஆ) ஊசிகள்
   இ) குக்கூ ஈ) மூன்றும் ஆறும் **விடை: அ) கோடையும் வசந்தமும்**

3. **மீரா ஒரு ________.**
   அ) பள்ளி ஆசிரியர் ஆ) கல்லூரிப் பேராசிரியர்
   இ) ஆராய்ச்சியாளர் ஈ) தத்துவ நெறியாளர்
   **விடை: ஆ) கல்லூரிப் பேராசிரியர்**

4. **விடுதலைத் திருநாள் கவிதையில் இடம்பெறும் விடுதலை வீரர் ________.**
   அ) மகாத்மா காந்தி ஆ) தந்தை பெரியார்
   இ) பகத்சிங் ஈ) நேதாஜி **விடை: இ) பகத்சிங்**

5. **வையம் என்பதன் பொருள் ________.**
   அ) உயிர் ஆ) உண்மை
   இ) உலகம் ஈ) சூளுரை **விடை: இ) உலகம்**

**குறுவினா**

1. **கவிஞர் மீரா இயற்றிய நூல்கள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.**
   - ஊசிகள்
   - வா இந்தப் பக்கம்
   - குக்கூ
   - கோடையும் வசந்தமும்
   - மூன்றும் ஆறும்

2. **விடுதலைத் திருநாள் குறித்து கவிஞர் மீரா குறிப்பிடுவது யாது?**
   உயிரற்ற பிணங்களைப் போல் கிடந்த நாட்டு மக்கள் அனைவரையும் பிடித்திருந்த அறியாமை என்னும் உறக்கத்தை ஓட ஓட விரட்டிய நாள் இன்று என்று கவிஞர் மீரா கூறுகிறார்.

3. **தாய்நாட்டைத் தமிழால் வணங்குவோம் என்று கவிஞர் மீரா கூறக் காரணம் யாது?**
   இன்பம் தரும் இந்த விடுதலைத் திருநாளைக் கொண்டாட வாய்ப்பளித்த, நம் தாய்நாட்டைத் தமிழால் வணங்குவோம் என்று கவிஞர் மீரா கூறுகிறார்.

4. **சதி வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர் யார்?**
   பகத்சிங்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**சிறுவினா**

**1. கவிஞர் மீரா பற்றி நீவீர் அறிந்த செய்திகளை எழுதுக.**

- இயற்பெயர் - மீ. இராசேந்திரன்
- பணி - கல்லூரிப் பேராசிரியர்
- நடத்திய இதழ் - அன்னம் விடு தூது
- படைப்புகள் - ஊசிகள், மூன்றும் ஆறும், வா இந்தப் பக்கம், கோடையும் வசந்தமும்.

**2. எவ்வாறு பூபாள இசை பாடப்படுவதாகக் கவிஞர் மீரா கூறுகிறார்?**

- பகைமை என்னும் முள் காட்டினை அழித்து,
- அங்கு விளைந்த மூங்கிலைப் புரட்சி என்னும் புல்லாங்குழலாக்கி மூச்சுக்காற்றால் பூபாள இசை பாடுவதாகக் கவிஞர் மீரா தெரிவிக்கிறார்.

## கற்பவை கற்றபின்

**நீங்கள் விரும்பும் விழா ஒன்றனைப் பற்றி ஒரு பத்தி அளவில் எழுதுக.**

நான் விரும்பும் விழா ஆசிரியர் தின விழா ஆகும். இந்தியத் திருநாட்டின் மிகச் சிறந்த ஆசிரியர் டாக்டர். ராதாகிருஷ்ணன் அவர்களைப் போற்றும் வகையிலும் நமக்கு கற்றுக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்களைப் போற்றும் வகையிலும் ஆசிரியர் தின விழா கொண்டாடப்படுகிறது. அறிவுக்கண் திறந்த மேதைகளையும், அறிவுக்கண் தந்து கொண்டிருக்கும் மேதைகளையும் போற்றுவதே இவ்விழாவின் நோக்கமாகும். கல்விக்கண் தந்தவர்களைக் கண்ணீரால் நான் போற்றும் விழா ஆசிரியர் தின விழா ஆகும். இவ்விழா வருடந்தோறும் செப்டம்பர் மாதம் 5ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.





Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

இயல் 7

உரைநடை உலகம்

# பாரத ரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன்

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. எம்.ஜி.ஆர் ________ என்னும் ஊரில் கல்வி பயின்றார்.

அ) கண்டி ஆ) கும்பகோணம்
இ) சென்னை ஈ) மதுரை

**விடை: ஆ) கும்பகோணம்**

2. எம்.ஜி.ஆர். படிப்பைத் தொடர முடியாமைக்குக் காரணம் ________.

அ) நடிப்பு ஆர்வம் ஆ) பள்ளி இல்லாமை
இ) குடும்ப வறுமை ஈ) படிப்பில் ஆர்வமில்லாமை

**விடை: இ) குடும்ப வறுமை**

3. இந்திய அரசு சிறந்த நடிகருக்கான ________ எனும் பட்டத்தை எம்.ஜி.ஆருக்கு வழங்கியது.

அ) புரட்சித் தலைவர் ஆ) பாரத்
இ) பாரத மாமணி ஈ) புரட்சி நடிகர்

**விடை: ஆ) பாரத்**

4. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் ________.

அ) திருச்சி ஆ) சென்னை
இ) மதுரை ஈ) கோவை

**விடை: இ) மதுரை**

5. எம்.ஜி.ஆருக்கு அழியாத புகழைத் தேடித் தந்த திட்டம் ________.

அ) மதிய உணவுத் திட்டம் ஆ) வீட்டுவசதித் திட்டம்
இ) மகளிர் நலன் திட்டம் ஈ) இலவசக் காலணித் திட்டம்

**விடை: அ) மதிய உணவுத் திட்டம்**

### குறுவினா

1. எம்.ஜி.ஆர். நாடகத் துறையில் ஈடுபடக் காரணம் என்ன?

எம்.ஜி.ஆர். தன் குடும்ப வறுமை காரணமாக நாடகத்துறையில் ஈடுபட்டார்.

2. திரைத்துறையில் எம்.ஜி.ஆரின் பன்முகத் திறமைகள் யாவை?

திரைத்துறையில், நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர் எனப் பன்முகத் திறமைகளை எம்.ஜி.ஆர். பெற்றிருந்தார்.

**3. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கனை எழுதுக.**

- ஏழைகளுக்கான வீட்டுவசதித் திட்டம்.
- ஆதரவற்ற மகளிருக்குத் திருமண உதவித் திட்டம்.
- தாய் சேய் நல இல்லங்கள்.
- பற்பொடி வழங்கும் திட்டம்.

## சிறு வினா

**1. பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணி வழங்கும் திட்டத்துக்கு அடிப்படையாக அமைந்த நிகழ்வை எழுதுக.**

- எம்.ஜி.ஆரும் அவரது மனைவியும் ஒரு முறை வெளியூரிலிருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்தனர்.
- அப்போது மூதாட்டி ஒருவரும், பத்து வயதுச் சிறுமி ஒருத்தியும் காலில் காலணி இல்லாமல் தலையில் புல் கட்டுகளைச் சுமந்தவாறு சென்று கொண்டிருந்தனர்.
- சாலையின் சூடு தாங்காமல் மரநிழலில் நிற்பதும், ஓடுவதுமாக இருந்தனர்.
- உடனே எம்.ஜி.ஆர் தமது மனைவியாரின் காலணியையும் உறவினப் பெண்ணின் காலணியையும் அவர்களுக்குக் கொடுத்துப் பணம் கொடுத்தார்.
- இந்த நிகழ்ச்சி அவரது மனதில் ஆழமாகப் பதிந்தது.
- அதனால், பின்னர் பள்ளிக்குழந்தைகளுக்குக் காலணிகள் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

**2. தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர் ஆற்றிய பணிகள் யாவை?**

- தந்தைப் பெரியார் உருவாக்கிய எழுத்துச் சீர்திருத்தங்கள் சிலவற்றை நடைமுறைப் படுத்தி தமிழ் எழுத்து முறையை எளிமைப்படுத்தினார்.
- மதுரையில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார்.
- தஞ்சையில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை நிறுவினார்.

## நெடுவினா

**எம்.ஜி.ஆரின் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.**

- திரைப்படத்துறையில் நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர் எனப் பன்முகத் திறமை கொண்டவர் எம்.ஜி.ஆர்.
- தாம் நடித்த திரைப்படங்களின் பாடல்கள் மூலம் உயரிய கருத்துக்களை மக்களிடம் விதைத்தார்.
- வாழ்வின் உயர்நிலையை அடைந்த பின்னரும் எளிமையாக வாழ வேண்டும் என்பதைத் தன் பாடல்களில் கூறினார். அப்பாடலுக்கு ஏற்ப தாமும் வாழ்ந்தார்.
- ஏழை மக்கள் காலில் காலணி கூட இல்லாமல் நடந்து செல்லும் நிகழ்ச்சி அவரது மனதை ஆழமாகப் பாதித்தது. அதனால் பின்னர் பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்கு இலவச காலணிகள் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- எம்.ஜி.ஆர் தமிழக முதலமைச்சராக இருந்தபோது ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர அரும்பாடுபட்டார்.
- உழவர்களின் கடன் தள்ளுபடி, ஏழைகளுக்கான வீட்டுவசதித் திட்டம், ஆதரவற்ற மகளிருக்குத் திருமண உதவித் திட்டம், முதியோர் உதவித்தொகை வழங்கும் திட்டம் முதலிய எண்ணற்ற திட்டங்களை ஏழைகளுக்காகக் கொண்டு வந்தார்.

**சிந்தனை வினா.**

**சிறந்த அரசியல் தலைவருக்கு இருக்க வேண்டிய பண்புகளாக நீங்கள் கருதுவன யாவை?**

உண்மை, உழைப்பு, நேர்மை, மனிதநேயம், இரக்கம், ஏழைகளுக்கு உதவுதல், தன்னலமில்லாமை, ஒருமைப்பாட்டு உணர்வு, சமயச் சார்பின்மை, கூர் சிந்தனை, எளிமை ஆகிய பண்புகள் சிறந்த அரசியல் தலைவருக்கு இருக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன்.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. எம்.ஜி.ஆரின் பெற்றோர் ________ மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்.
அ) தமிழ்நாடு ஆ) கேரளா
இ) கர்நாடகா ஈ) ஆந்திரா **விடை: ஆ) கேரளா**

2. எம்.ஜி.ஆரின் பெற்றோர் குடும்பத்துடன் குடிபெயர்ந்த நாடு ________.
அ) சீனா ஆ) இலங்கை
இ) ரஷ்யா ஈ) மலேசியா **விடை: ஆ) இலங்கை**

3. எம்.ஜி. இராமச்சந்திரன் பிறந்த ஆண்டு ________.
அ) கி.பி 1917 ஆ) கி.பி 1919
இ) கி.பி 1971 ஈ) கி.பி 1920 **விடை: அ) கி.பி1917**

4. எம்.ஜி.ஆரின் தாயார் குழந்தைகளுடன் தமிழ்நாட்டில் வந்து குடியேறிய ஊர்
அ) திருச்சி ஆ) தஞ்சாவூர்
இ) கும்பகோணம் ஈ) சென்னை **விடை: இ) கும்பகோணம்**

5. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட மதிய உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தியவர்
அ) அண்ணா ஆ) எம்.ஜி.ஆர்
இ) கலைஞர் ஈ) ஜெயலலிதா **விடை: ஆ) எம்.ஜி.ஆர்**

6. சத்துணவுத் திட்டம் கொண்டு வந்தவர் ________.
அ) அண்ணா ஆ) எம்.ஜி.ஆர்
இ) கலைஞர் ஈ) ஜெயலலிதா **விடை: ஆ) எம்.ஜி.ஆர்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

7. புரட்சி நடிகர், மக்கள் திலகம் என்றெல்லாம் போற்றப்பட்டவர் ________.
அ) எம்.ஜி.ஆர் ஆ) சிவாஜி கணேசன்
இ) என் எஸ். கிருஷ்ணன் ஈ) சந்திரபாபு
**விடை: அ) எம்.ஜி.ஆர்**

8. எம்.ஜி.ஆருக்கு டாக்டர் பட்டம் வழங்கிய பல்கலைக்கழகம் ________.
அ) பெரியார் பல்கலைக்கழகம் ஆ) சென்னைப் பல்கலைக்கழகம்
இ) பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஈ) பாரதியார் பல்கலைக்கழகம்
**விடை ஆ) சென்னைப் பல்கலைக்கழகம்**

9. எம்.ஜி.ஆருக்குப் 'பாரத ரத்னா' (இந்திய மாமணி) விருது வழங்கப்பட்ட ஆண்டு
அ) 1988 ஆ) 1898
இ) 1980 ஈ) 1981
**விடை: அ) 1988**

10. தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம் ________.
அ) திருச்சி ஆ) தஞ்சாவூர்
இ) கும்பகோணம் ஈ) மதுரை
**விடை: ஆ) தஞ்சாவூர்**

11. எம்.ஜி.ஆர். தோற்றுவித்த பல்கலைக்கழகம் ________.
அ) பெரியார் பல்கலைக்கழகம் ஆ) சென்னைப் பல்கலைக்கழகம்
இ) பாரதியார் பல்கலைக்கழகம் ஈ) தமிழ்ப் பல்கலைக்கழகம்
**விடை: ஈ) தமிழ்ப் பல்கலைக்கழகம்**

12. எம்.ஜி.ஆர். பெயர் சூட்டப்பட்டுள்ள பேருந்து நிலையங்கள் ________.
அ) சென்னை, மதுரை, நெல்லை ஆ) திருச்சி, தஞ்சாவூர்
இ) சேலம், ஈரோடு ஈ) கரூர், நாமக்கல்
**விடை: அ) சென்னை, மதுரை, நெல்லை**

## குறுவினா

1. எம்.ஜி.ஆர் எங்கு எப்போது பிறந்தார்?
எம்.ஜி.ஆர். இலங்கையிலுள்ள கண்டியில் 17.1.1917 இல் பிறந்தார்.

2. எம்.ஜி.ஆரின் பெற்றோர் யாவர்?
- தாய் - சத்தியபாமா
- தந்தை - கோபாலன்

3. யார் யாருடைய முன்னேற்றத்திற்காக எம்.ஜி.ஆர் தமிழ்த் திரைப்படம் வாயிலாக உயரிய கருத்துகளை எடுத்துரைத்தார்?
ஏழை, எளியோர், உழவர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் முன்னேற்றத்திற்காக உயரிய கருத்துக்களைத் திரைப்படங்கள் மூலம் எம்.ஜி.ஆர் எடுத்துரைத்தார்.

7 இயல் தமிழ்

4. **எம்.ஜி.ஆரின் நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசு செய்துள்ள நடவடிக்கைகள் யாவை?**

- தமிழக அரசு எம்.ஜி.ஆர் நினைவைப் போற்றும் வகையில் எம்.ஜி.ஆர் பெயரில் மருத்துவப் பல்கலைக்கழகத்தினை நிறுவியுள்ளது.
- சென்னை கடற்கரையில் அவருக்கு அழகான நினைவிடம் ஒன்றை அமைத்துள்ளது.

5. **எம்.ஜி.ஆருக்கு இந்திய அரசு செய்த சிறப்பு யாது?**

எம்.ஜி.ஆருக்கு இந்திய அரசு மிக உயரிய விருதான பாரத ரத்னா (இந்திய மாமணி) விருதினை 1988 இல் வழங்கியது.

6. **எம்.ஜி.ஆர். பெயர் சூட்டப்பட்டுள்ள பேருந்து நிலையங்கள் யாவை?**

- சென்னை
- மதுரை
- திருநெல்வேலி

7. **எம்.ஜி.ஆர் பெற்ற சிறப்புப் பெயர்கள் யாவை?**

- புரட்சி நடிகர்
- மக்கள் திலகம்
- பொன்மனச்செம்மல்
- புரட்சித்தலைவர்

## சிறுவினா

1. **எம்.ஜி.ஆரின் இளமைப்பருவம் குறித்து எழுதுக.**

- இலங்கையில் உள்ள கண்டியில் 17. 1. 1917 இல் பிறந்தார்.
- பெற்றோர் கோபாலன், சத்தியபாமா.
- எம்.ஜி.ஆர் குழந்தையாக இருக்கும்போதே தந்தையை இழந்தார்.
- தாயாருடன் தமிழ்நாட்டில் கும்பகோணம் பகுதியில் குடியேறினார்.
- குடும்ப வறுமை காரணமாக எம்.ஜி.ஆரும் அவரது அண்ணனும் படிப்பைத் தொடர முடியவில்லை.
- இளம் வயதிலேயே நாடகத்துறையில் இணைந்தார்.

2. **'பொன்மனச்செம்மல்' எம்.ஜி.ஆர் என்று அழைக்கப்படுவதற்கான சான்று ஒன்று தருக.**

- எம்.ஜி.ஆர் ஒரு முறை படப்பிடிப்பிற்காக காஷ்மீருக்குச் சென்றிருந்தார்.
- இந்திய படை வீரர் நலச்சங்கத்தினர் சங்க விழாவிற்கு எம்.ஜி.ஆரை வருகை தர கேட்டுக் கொண்டனர்.
- அச்சங்கத்திற்கு நன்கொடைதர எம்.ஜி.ஆர் விரும்பினார். ஆனால், அவரிடம் பணம் இல்லை. அங்குத் தங்கியிருந்த தமிழ்நாட்டுத் தொழிலதிபர் ஒருவரிடம் பெருந்தொகையைக் கடனாகப் பெற்று நன்கொடை கொடுத்தார்.
- சென்னை திரும்பியதும் முதல் வேலையாக அந்தத் தொகையைத் திருப்பிக் கொடுத்தார்.


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- இவ்வாறு பிறர் வியக்கத்தக்க வகையில் தம் செல்வத்தை வாரி வழங்கியதால் அவரைப் பொன்மனச்செம்மல் என்று மக்கள் அழைக்கின்றனர்.

**3. எளிமையாக வாழ வேண்டும் என்பதற்காக எம்.ஜி.ஆர் கூறிய பாடல் வரிகள் யாவை?**

''பதவி வரும்போது பணிவு வர வேண்டும்
துணிவும் வரவேண்டும் தோழா''

என்னும் பாடல் வரிகள் மூலம் வாழ்வில் உயர்நிலையை அடைந்த பின்னரும் எளிமையாக வாழ வேண்டும் என்பதை எம்.ஜி.ஆர் வலியுறுத்தினார்.

**4. எம்.ஜி.ஆர் நடித்த திரைப்படப் பாடல்களில் இருந்து உன்னைக் கவர்ந்த பாடலில் நான்கு வரிகளை எழுதுக.**

''மாபெரும் சபைதனில் நீ நடந்தால்
உனக்கு மாலைகள் விழவேண்டும்.
ஒரு மாற்றுக் குறையாத மன்னவன்
இவன் என்று
போற்றிப் புகழ வேண்டும்''

## கற்பவை கற்றபின்

**1. தமிழக முதலமைச்சர்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**

- ஏ. சுப்பராயலு
- பனகல் ராஜா
- பி. சுப்பராயன்
- பி. முனுசுவாமி நாயுடு
- ராமகிருஷ்ண ரங்காராவ்
- பி.டி. இராஜன்
- கூர்மா வெங்கட ரெட்டி நாயிடு
- சி. இராஜகோபாலாச்சாரி
- த. பிரகாசம்
- ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்
- பூ.ச. குமாரசுவாமிராஜா
- கே. காமராஜ்
- எம். பக்தவத்சலம்
- சி. என். அண்ணாதுரை
- இரா. நெடுஞ்செழியன்
- மு. கருணாநிதி
- எம்.ஜி.ஆர்
- ஜானகி இராமச்சந்திரன்
- ஜெ. ஜெயலலிதா
- ஓ. பன்னீர் செல்வம்
- எடப்பாடி கே. பழனிச்சாமி

**2. எம்.ஜி.ஆர் நடித்த திரைப்படங்களில் உள்ள சமூக நலன் சார்ந்த பாடல்களைத் தொகுத்து எழுதுக.**

- ''அதோ அந்த பறவை போல வாழ வேண்டும்
இதோ இந்த அலைகள் போல ஆட வேண்டும்''
- ''தாயில்லாமல் நானில்லை
தானே எவரும் பிறப்பதில்லை''



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

விரிவானம்

இயல் 7

# அறிவுசால் ஔவையார்

## பாடநூல் வினாக்கள்

**அறிவுசால் ஔவையார் – என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.**

**முன்னுரை:**

அறிவுசால் ஔவையார் நாடகம் வழியாக அதியமான், தொண்டைமான் ஆகியோரின் போரினை எவ்வாறு தடுத்து நிறுத்தினார் என்பதைக் காண்போம்.

**நெல்லிக்கனி:**

அதியமான் காட்டு வளத்தைக் கண்டு இரசித்து விட்டு அங்கிருந்து, அதிசய நெல்லிக்கனி ஒன்றைப் பறித்து வந்தார். ஔவையாரை உண்ணச் செய்தார். நெல்லிக்கனி உண்ட ஔவையார், ''இவ்வளவு சுவையான கனியைத் தான் உண்டதில்லை. இது என்ன கனி?'' என்று கேட்கிறார். அதற்கு அமைச்சர் கிடைப்பதற்கு அரிய நெல்லிக்கனி இது. நீண்ட நாட்களுக்கு ஒரு முறையே பழுக்கும் இக்கனியை உண்டவர்கள் நோய் நொடியின்றி நீண்ட காலம் வாழ்வார்கள் என்று அமைச்சர் கூறினார்.

**ஔவையாரின் வருத்தம்:**

அதியமானே! நாட்டைக் காக்கும் நீ இதை உண்ணாமல், எனக்குக் கொடுத்து விட்டாயே! இந்த அதிசய நெல்லிக்கனிப் பற்றி முன்னரே தெரிந்திருந்தால் உன்னைச் சாப்பிட வைத்திருப்பேன் என்றார். அதற்கு அதியமான் என்னைப் போன்ற அரசன் இறந்தால் வேறு ஒருவர் அரசர் வருவார். ஆனால், உங்களைப் போன்ற அறிவில் சிறந்த புலவர் ஒருவர் மறைந்தால், அதை யாராலும் ஈடு செய்ய முடியாது. அதனால்தான் எதுவும் கூறாமல் நெல்லிக்கனியை உங்களை உண்ணச் செய்தேன் என்றார்.

**அதியமானின் கவலை:**

அதியமான் கவலையாக இருப்பதைப் பார்த்து, ஔவையார் கவலைக்குரிய காரணத்தைக் கேட்கிறார். தொண்டைமான் நம் நாட்டுடன் போர் செய்யப் போகிறான் என்றார். அதியமானே! வீரம் கொண்ட நீ போருக்குத் தயங்கலாமா? என்றார் ஔவையார். அதற்கு அதியமான் நான் போருக்குப் பயந்தவன் இல்லை. போரினால் எத்தனை உயிரிழப்பு! எத்தனை அழிவு! 'தந்தையை இழந்த பிள்ளைகள், கணவனை இழந்த பெண்கள், மகனை இழந்த தாய்மார்கள், அண்ணனை இழந்த தம்பி தங்கைகள்' என எத்தனை பேரின் கண்ணீர். ஒவ்வொரு போர் வெற்றிக்குப் பின்னாலும் இது மறைந்து இருக்கிறது. எனவே, இந்தப் போரைத் தவிர்த்தால் என்ன? என்றார் அதியமான்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**தொண்டைமானுக்கு அறிவுரை:**

ஔவையார் தொண்டைமானைப் பார்க்கச் செல்கிறார். அப்போது தொண்டைமான் அவரைப் போர்க்கருவிகள் வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு அழைத்துச் சென்று, புதிய போர்க் கருவிகளின் பெருமைகளைப் பற்றி பேசுகிறார். அதற்கு ஔவையார் அதியமானின் போர்க்கருவிகள் இவ்வளவு அழகாக இல்லை. அடிக்கடி போர்புரிந்து படைக்கருவிகள் எல்லாம் இரத்தக்கறை படிந்தும், நுனி ஒடிந்தும், கூர்மை மழுங்கியும் கொல்லனின் உலைக்களத்தில் கிடக்கின்றன என்றார். ஔவையார் கூறியதைக் கேட்டு அதியமானின் போர்த் திறமையை உணர்ந்து போரைத் தவிர்த்து விட்டான் தொண்டைமான்.

**முடிவுரை:**

கற்றோரால் போரைக் கூட தடுத்து நிறுத்த முடியும் என்பதை இந்நாடகம் உணர்த்தியுள்ளது.

## கற்பவை கற்றபின்

1. **அறிவுசால் ஔவையார் – என்னும் நாடகத்தை வகுப்பில் நடித்துக் காட்டுக..**

மாணவர் செயல்பாடு.

2. **சங்ககாலப் பெண் புலவர்களின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

- அஞ்சல் அஞ்சியார்
- அள்ளூர் நன்முல்லையார்
- ஊண் பித்தை
- ஒக்கூர் மாசாத்தியார்
- ஔவையார்
- கச்சிப்பேட்டு நன்னாகையார்
- கழார்க்கீரன் எயிற்றியார்
- காக்கைப் பாடினியார்
- காமக்கண்ணிப் பசலையார்
- காவற்பெண்டு
- குளம்பாதாயனார்
- குறமகள் இளவெயினி
- குறமகள் குறியெயினியார்
- குன்றியனார்
- தாயங்கண்ணனார்
- நக்கண்ணையார்
- நல்வெள்ளியார்
- நன்னாகையார்
- பாரிமகளிர்
- பொன்முடியார்
- பொன்மணியார்
- மாறோக்கத்து நப்பசலையார்
- வெண்ணிக் குயத்தியார்



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

கற்கண்டு

இயல் 7

# வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும்

## பாடநூல் வினாக்கள்

### பின்வரும் தொடர்களை வல்லினம் மிகும், மிகா இடங்கள் என வகைப்படுத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | சுட்டுத் திரிபு | - | வல்லினம் மிகும் |
| 2. | திசைப் பெயர்கள் | - | வல்லினம் மிகும் |
| 3. | பெயரெச்சம் | - | வல்லினம் மிகாது |
| 4. | உவமைத்தொகை | - | வல்லினம் மிகும் |
| 5. | நான்காம் வேற்றுமை விரி | - | வல்லினம் மிகும் |
| 6. | இரண்டாம் வேற்றுமை தொகை | - | வல்லினம் மிகாது |
| 7. | வினைத்தொகை | - | வல்லினம் மிகாது |
| 8. | உருவகம் | - | வல்லினம் மிகும் |
| 9. | எழுவாய்த் தொடர் | - | வல்லினம் மிகாது |
| 10. | எதிர்மறைப் பெயரெச்சம் | - | வல்லினம் மிகாது |

### சிறு வினா.

**1. சந்திப்பிழை என்றால் என்ன?**

♦ வல்லினம் மிக வேண்டிய இடத்தில் மிகாமல் எழுதுவதும் மிகக் கூடாத இடத்தில் வல்லின மெய்யிட்டு எழுதுவதும் தவறாகும்.

♦ இதனைச் சந்திப்பிழை அல்லது ஒற்றுப்பிழை என்று கூறுவர்.

**2. வேற்றுமைகளில் வல்லினம் மிகும் இடங்களை எழுதுக.**

இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படையாக வரும் இடத்திலும், நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படையாக வரும் இடத்திலும் வல்லினம் மிகும்.

**சான்று:**

♦ தலையைக் காட்டு.

♦ எனக்குத் தெரியும்.

7 இயல்

தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. வல்லினம் மிகாத் தொடர்கள் ஐந்தனை எழுதுக.

- அது சென்றது.
- காய் தின்றேன்.
- இலை பறித்தேன்.
- எழுதாத பாடல்.
- எழுதும்படி சொன்னேன்.

## மொழியை ஆள்வோம்

**கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

### நான் விரும்பும் தலைவர்

தாயே! தமிழே! வணக்கம்.

நான் விரும்பும் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களே! ஏழைக் குடும்பத்தில் பிறந்து, ஏழ்மையான சூழலில் வளர்ந்து, நன்கு கல்வி கற்று, ஒழுக்கத்தில் சிறந்து, பேராசிரியராகி, அறிவியல் மேதையாகி, குடியரசுத் தலைவராக உயர்ந்தார். தேவைக்காக தலைவர் ஆவோர் மத்தியில் சேவைக்காகத் தலைவராகிய ஒரு உன்னத தலைவர். உத்தம தலைவர் அப்துல் கலாம் அவர்கள். கனவு காணாதே என்று சொன்னவர் மத்தியில் கனவுகளைக் காண் என்று ஊக்கப்படுத்திய ஒரு தலைவர். "தூங்கும் போது வருவது கனவல்ல, உன்னைத் தூங்க விடாமல் செய்வது தான் கனவு" என்று இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கையை ஊட்டியவர் நம் கலாம் அவர்கள். புத்தகங்கள் கனவுகள் வளர்க்கும் என்று அடிக்கடி கலாம் அவர்கள் கூறிக் கொண்டே இருப்பார். புத்தகங்கள்தான் ஒருவரைச் சிறக்க வைக்கும் என்பது அவருடைய திண்ணிய எண்ணம். அப்துல்கலாம் வழியில் நாமும் கனவுகளைக் காண்போம். எண்ணற்ற புத்தகங்களைப் படிப்போம். அவரைப்போல உயர்வோம் என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

### நான் முதலமைச்சர் ஆனால்...

அனைவருக்கும் வணக்கம்.

நான் முதலமைச்சர் ஆனால் என்னும் தலைப்பில் சில நிமிடங்கள் உங்கள் முன் என்னுடைய கருத்துக்களைப் பதிவு செய்கின்றேன். மருத்துவர், பொறியாளர், வழக்கறிஞர் என்பதையெல்லாம் நான் விரும்பாமல் முதலமைச்சராக வேண்டும் என்பதையே இலட்சியமாகக் கொண்டுள்ளேன். எதிர்காலத்தில் நான் முதலமைச்சரானால் வேளாண்மையை முன்னேற்ற செய்வேன். விவசாயிகள் அனைவரையும் அரசு ஊழியர் ஆக்குவேன். கல்வி என்பது பணம் இல்லாமல் கிடைக்கும் நிலையை உருவாக்குவேன். தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படித்தவர்களுக்கு மட்டுமே அரசுக் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் சேரும் வகையில் சட்டம் கொண்டு வருவேன். தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவேன் என்று சொல்லி நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

1. **அதைச் செய்தது நான் அன்று.**
   விடை: அதைச் செய்தது நான் அல்லேன்.
2. **பானையை உடைத்தது கண்ணன் அல்ல.**
   விடை: பானையை உடைத்தது கண்ணன் அல்லன்.
3. **மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்லை.**
   விடை: மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அன்று.
4. **சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் அல்லோம்.**
   விடை: சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் அல்லர்.
5. **பகைவர் நீவீர் அல்லர்.**
   விடை: பகைவர் நீவீர் அல்லீர்.

**சரியான எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக.**

1. தாங்கள் படிக்க வேண்டிய புத்தகங்கள் இவை ________. **விடை: அல்ல**
2. உங்களோடு வருவோர் ________ அல்லோம். **விடை: நாம்**
3. மணிமேகலை செல்வ வாழ்வை விரும்பியவள் ________. **விடை: அல்லள்**
4. ஈ மொய்த்த பண்டங்கள் உடலுக்கு நன்மை செய்வன ________. **விடை: அல்ல**
5. இந்த நிலத்துக்கு உரிமையாளர் ________ அல்லை. **விடை: நீ**

**கட்டுரை எழுதுக.**

## நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு

**முன்னுரை:**

இனிவரும் காலம் இளைஞர்கள் காலம். எனவேதான் இளைஞர்கள் நம் நாட்டின் வளர்ச்சிக்காகத் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள ஆயத்தமாகி வருகின்றனர்.

**இளைஞர்களின் சிறப்புகள்:**

இன்றைய இளைஞர்கள் திறமையிலும் அறிவிலும் சிறப்பு வாய்ந்தவர்களாக இருக்கின்றனர். எனவே தான் அன்று விவேகானந்தர் என்னிடம் நூறு இளைஞர்களைக் கொடுங்கள், இந்த நாட்டையே மாற்றிக் காட்டுகிறேன் என்றார் டாக்டர் அப்துல் கலாம் அவர்களும் நம் நாட்டு இளைஞர்களின் கையில்தான் நம் நாட்டின் எதிர்காலம் உள்ளது என்று கூறினார்.

**நாட்டு வளர்ச்சி:**

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது கல்வி, பொருளாதாரம், தொழில்துறை முன்னேற்றம் ஆகியவற்றைச் சார்ந்து அமைகிறது. ஒரு நாட்டினுடைய வளர்ச்சி என்பது அந்த நாட்டு இளைஞர்களின் வளர்ச்சி என்றே கூறலாம்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

### இளைஞர்களின் பங்கு:

நன்கு கல்வி கற்ற இளைஞர்களால் தான் ஒருநாடு வளர்ச்சியில் மேலோங்கும். அத்தகைய வகையில் நன்கு கல்விகற்று இளைஞர்கள் பலர் நம் நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளம் இட்டுள்ளனர். எண்ணற்ற தொழில்துறைகளில் நம் இளைஞர்கள் சிறந்து விளங்கி வருகின்றனர். தகவல் தொழில்நுட்பத் துறையில் நம் நாட்டின் இளைஞர்கள் எண்ணற்ற புரட்சியினை ஏற்படுத்தி வருகின்றனர். இதன் மூலம் பொருளாதார முன்னேற்றம் அடைந்து நாட்டின் வளர்ச்சி மேலோங்கி நிற்கிறது.

### உழவுத்தொழிலின் புதுமைகள்:

நம் நாட்டின் முதன்மையான தொழில் உழவுத்தொழில் ஆகும். நலிந்து வரும் உழவர்களைக் காப்பாற்றுவதற்காக நவீன செயல்பாடுகளை நம்நாட்டு வேளாண்மைத் துறை மாணவர்கள் செய்துள்ளனர். வேளாண் பெருக்கத்திற்கு உரிய வழிவகைகளை நம் இளைஞர்கள் தங்கள் ஆய்வின் மூலம் செய்துகாட்டி அதிக வளர்ச்சி ஏற்படுத்தியுள்ளனர்.

### முடிவுரை:

‘‘ஒரு நாட்டின் முதுகெலும்பு அந்த நாட்டு இளைஞர்கள்‘‘ என்றார் மகாத்மா காந்தி. அது முற்றிலும் உண்மையே! நாட்டின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக செயல்பட்டு வருபவர்கள் இளைஞர்களே! என்பதை கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

## மொழியோடு விளையாடு

**வட்டத்தில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.**




| | | |
|---|---|---|
| கருமை | கடுமை | பல் |
| கரும்பு | கடமை | வேல் |
| நாடு | பழமை | புல் |
| களை | கடம் | நாற்று |
| வித்து | வேற்றுமை | நாடகம் |
| வேழம் | கல் | நாம் |
| கற்பு | புதுமை | வேம்பு |

**கதை நிகழ்வுக்கேற்ப சொற்றொடரை முறையாக வரிசைப்படுத்துக.**

1. தொண்டைமானிடம் ஔவை தூது போதல்.
2. தொண்டைமான் படையெடுத்து வரும் செய்தியை அதியமான் ஔவைக்குத் தெரிவித்தல்.
3. ஔவைக்குத் தொண்டைமான் தன் படைக்கருவிகளைக் காட்டுதல்.
4. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி வழங்குதல்.
5. தொண்டைமான் போர் வேண்டாம் என்று முடிவு செய்தல்.
6. தொண்டைமானிடம் ஔவை அதியமானின் படைச்சிறப்பைக் குறிப்பால் உணர்த்துதல்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**விடை**

1. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி வழங்குதல்.
2. தொண்டைமான் படையெடுத்து வரும் செய்தியை அதியமான் ஔவைக்குத் தெரிவித்தல்.
3. தொண்டைமானிடம் ஔவை தூது போதல்.
4. ஔவைக்குத் தொண்டைமான் தன் படைக்கருவிகளைக் காட்டுதல்.
5. தொண்டைமானிடம் ஔவை அதியமானின் படைச்சிறப்பைக் குறிப்பால் உணர்த்துதல்.
6. தொண்டைமான் போர் வேண்டாம் என்று முடிவு செய்தல்.

## நிற்க அதற்குத் தக....

### கலைச்சொல் அறிவோம்

- குதிரையேற்றம் - Equestrian
- கதாநாயகன் - The Hero
- முதலமைச்சர் - Chief Minister
- தலைமைப் பண்பு - Leadership
- ஆதரவு - Support
- வரி - Tax
- வெற்றி - Victory
- சட்டமன்ற உறுப்பினர் - Member of Legislative Assembly

## இணையத்தில் காண்க

**இந்தியப் பிரதமர்களின் பெயர்ப்பட்டியலை இணையத்தில் தேடி எடுத்து எழுதுக.**

- ஜவஹர்லால் நேரு
- குல்ஜாரிலால் நந்தா
- லால் பகதூர் சாஸ்திரி
- இந்திரா காந்தி
- மொரார்ஜி தேசாய்
- சரண் சிங்
- ராஜீவ் காந்தி
- வி.பி. சிங்
- சந்திரசேகர்
- பி.வி. நரசிம்மராவ்
- அடல் பிகாரி வாஜ்பாய்
- தேவே கௌடா
- ஐ.கே. குஜ்ரால்
- மன்மோகன் சிங்
- நரேந்திர மோடி

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## அலகுத் தேர்வு

### இயல் – 7

நேரம்: 30 நிமிடம் மதிப்பெண்கள்: 20

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (6)**

1. **சிங்கம் __________யில் வாழும்.**
   அ) மாயை ஆ) ஊழி இ) முழை ஈ) அலை
2. **இந்த __________ முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு.**
   அ) வையம் ஆ) வானம் இ) ஆழி ஈ) கானகம்
3. **இந்திய அரசு சிறந்த நடிகருக்கான __________ எனும் பட்டத்தை எம்.ஜி.ஆருக்கு வழங்கியது.**
   அ) புரட்சித்தலைவர் ஆ) பாரத் இ) பாரத மாமணி ஈ) புரட்சி நடிகர்
4. **புரட்சி நடிகர், மக்கள் திலகம் என்றெல்லாம் போற்றப்பட்டவர் __________.**
   அ) எம்.ஜி.ஆர் ஆ) சிவாஜி கணேசன்
   இ) என் எஸ். கிருஷ்ணன் ஈ) சந்திரபாபு
5. **எம்.ஜி.ஆர் தோற்றுவித்த பல்கலைக்கழகம் __________.**
   அ) பெரியார் பல்கலைக்கழகம் ஆ) சென்னைப் பல்கலைக்கழகம்
   இ) பாரதியார் பல்கலைக்கழகம் ஈ) தமிழ்ப் பல்கலைக்கழகம்
6. **வையம் என்பதன் பொருள் __________.**
   அ) உயிர் ஆ) உண்மை இ) உலகம் ஈ) சூளுரை

**ஆ. குறுவிடை தருக. (8)**

7. இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?
8. சோழனின் யானைப் படையை கண்ட வீரர்களின் செயல்கள் யாவை?
9. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்கள் நான்கினை எழுதுக.
10. வேற்றுமைகளில் வல்லினம் மிகும் இடங்களை எழுதுக.

**இ. சிறுவிடை தருக. (6)**

11. சோழ வீரர்களைக் கண்ட கலிங்கப் படைவீரர்களின் செயல்களாகக் கலிங்கத்துப்பரணி கூறுவன யாவை?
12. பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணி வழங்கும் திட்டத்துக்கு அடிப்படையாக அமைந்த நிகழ்வை எழுதுக.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

கவிதைப் பேழை

இயல் 8

# ஒன்றே குலம்

திருமூலர்

## திருமூலர்

- 63 நாயன்மார்களில் ஒருவர்.
- பதினெண் சித்தர்களில் ஒருவர்.
- படைப்பு - திருமந்திரம்.

## மனப்பாடப் பாடல்

**ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
**சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து**
**நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே**

**படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்**
**படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே**

*ஆசிரியர் : திருமூலர்*

## சொல்லும் பொருளும்

- நமன் - எமன்
- நாணாமே - கூசாமல்
- சித்தம் - உள்ளம்
- உய்ம்மின் - ஈடேறுங்கள்
- ஈயில் - வழங்கினால்
- நம்பர் - அடியார்
- படமாடக் கோயில் - படங்கள் அமைந்த மாடங்களையுடைய உள்ள கோயில்.

8 இயல் தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும் ________க் கண்டு அஞ்சமாட்டார்கள்.**

அ) புலனை ஆ) அறனை
இ) நமனை ஈ) பலனை **விடை: இ) நமனை**

2. **ஒன்றே ________ என்று கருதி வாழ்வதே மனிதப் பண்பாகும்.**

அ) குலம் ஆ) குளம்
இ) குணம் ஈ) குடம் **விடை: அ) குலம்**

3. **'நமனில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.**

அ) நம் + இல்லை ஆ) நமது + இல்லை
இ) நமன் + நில்லை ஈ) நமன் + இல்லை **விடை: ஈ) நமன்+இல்லை**

4. **நம்பர்க்கு+அங்கு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.**

அ) நம்பரங்கு ஆ) நம்மார்க்கு
இ) நம்பர்க்கங்கு ஈ) நம்பங்கு **விடை: இ) நம்பர்க்கங்கு**

### குறுவினா.

1. **யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை?**

♦ மனிதர் அனைவரும் ஒரே இனம்.

♦ உலகைக் காக்கும் இறைவனும் ஒருவனே என்பதை மனதில் நிறுத்துபவர்களுக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை.

2. **மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர் செய்யவேண்டியது யாது?**

மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர்,

♦ மனிதர் அனைவரும் ஒரே இனம்,

♦ இறைவன் ஒருவனே என்பதை ஏற்றல்,

♦ அடியவர்களாகிய மக்களுக்குக் காணிக்கை கொடுத்தல்

ஆகியவற்றைச் செய்ய வேண்டும்.

### சிறுவினா.

**மக்களுக்குச் செய்யவேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவது யாது?**

♦ படங்கள் அமைந்த கோயிலில் இருக்கக்கூடிய இறைவனுக்கு ஒரு பொருளைக் காணிக்கையாகச் செலுத்தினால், அப்பொருள் நடமாடும் கோயில் ஆகிய உடம்பை உடைய அடியார்களுக்குச் சேராது.

♦ ஆகையால் அடியார்களாகிய மக்களுக்குக் கொடுப்பது கோயிலில் இருக்கும் இறைவனுக்குக் கொடுப்பதைப் போன்றதாகும்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**சிந்தனை வினா.**

**அன்றாட வாழ்வில் நாம் பிறருக்கு எத்தகைய உதவிகளைச் செய்யலாம்?**

- வீட்டு வேலைகளில் பெற்றோருக்கு உதவி செய்யலாம்.
- பேருந்தில் செல்லும்போது பெரியவர்களுக்கு நம் இடத்தை விட்டுக் கொடுக்கலாம்.
- முதியவர்கள் சாலையைக் கடக்கும் போது அவர்களுக்கு உதவலாம்.
- வகுப்பில் பின்தங்கிய மாணவர்களுக்குப் பாடம் சொல்லித் தரலாம்.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **நாயன்மார்கள் __________ பேர்.**
   அ) 63 ஆ) 18
   இ) 96 ஈ) 10 **விடை: அ) 63**

2. **'தமிழ் மூவாயிரம்' என்று அழைக்கப்படும் நூல் __________.**
   அ) திருக்குறள் ஆ) திருமந்திரம்
   இ) திருப்பாவை ஈ) திருவெம்பாவை **விடை: ஆ) திருமந்திரம்**

3. **ஒன்றே குலம் எனும் கவிதைப்பாடல் அமைந்த நூல் __________.**
   அ) திருக்குறள் ஆ) திருமந்திரம்
   இ) திருப்பாவை ஈ) திருவெம்பாவை **விடை: ஆ) திருமந்திரம்**

4. **எமன் என்னும் பொருள் தரும் சொல் __________.**
   அ) சித்தம் ஆ) நம்பர்
   இ) நமன் ஈ) கோயில் **விடை: இ) நமன்**

5. **'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று கூறியவர் __________.**
   அ) பட்டினத்தார் ஆ) திருமூலர்
   இ) திருவள்ளுவர் ஈ) குணங்குடி மஸ்தான் **விடை: ஆ) திருமூலர்**

6. **நம்பர் என்னும் சொல்லின் பொருள் __________.**
   அ) எமன் ஆ) உள்ளம்
   இ) அடியார் ஈ) கோயில் **விடை: இ) அடியார்**

**குறுவினா.**

1. **திருமூலர் பற்றி நீவீர் அறிந்த செய்திகளை எழுதுக.**
   - திருமூலர் 63 நாயன்மார்களில் ஒருவர்.
   - பதினெண் சித்தர்களில் ஒருவர்.
   - திருமந்திரம் என்னும் நூலை எழுதியுள்ளார்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**2. திருமந்திரம் குறிப்பு வரைக.**

- திருமந்திரத்தை இயற்றியவர் திருமூலர்.
- 3000 பாடல்களைக் கொண்ட நூல் இது.
- பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறை நூல்.

**3. நடமாடும் கோயில் என்று திருமூலர் யாரைக் கூறுகிறார்?**

நடமாடும் கோயில் என்று திருமூலர் அடியார்களாகிய மக்களைக் கூறுகிறார்.

## கற்பவை கற்றபின்

**பிறர் துன்பம் கண்டு வருந்தி அவர்களுக்குத் தொண்டு செய்த சான்றோர்களின் பெயர்களைத் திரட்டுக.**

- மானுக்குப் பிணையாக வேடனிடம் நின்றவர் முகமதுநபி.
- முல்லைக்கொடி வளர தேர் கொடுத்தவர் பாரிவள்ளல்.
- பசுங் கன்றுக்காக தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்றவர் மனுநீதிச்சோழன்.
- புறாவுக்காகத் தன் சதையை அறிந்து கொடுத்தவன் சிபிச்சக்கரவர்த்தி.
- வாடிய பயிரைக் கண்டு வாடியவர் வள்ளலார்.
- தாழ்த்தப்பட்டோரின் கஷ்டத்தைப் போக்க உதவியவர் தந்தை பெரியார்.

கவிதைப் பேழை

இயல் 8

# மெய்ஞ்ஞான ஒளி

குணங்குடி மஸ்தான் சாகிபு

### குணங்குடி மஸ்தான் சாகிபு

- இயற்பெயர் சுல்தான் அப்துல் காதர்.
- இளம் வயதிலேயே முற்றும் துறந்தவர்.
- சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைப்பகுதிகளில் தவம் இருந்து ஞானம் பெற்றார்.
- படைப்புகள்: எக்காளக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி, நந்தீசுவரக் கண்ணி.

### சொல்லும் பொருளும்

| | | |
|---|---|---|
| ♦ பகராய் | - | தருவாய் |
| ♦ ஆனந்த வெள்ளம் | - | இன்பப்பெருக்கு |
| ♦ பராபரம் | - | மேலான பொருள் |
| ♦ அறுத்தவருக்கு | - | நீக்கியவர்க்கு |


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மனிதர்கள் தம் ________ தீய வழியில் செல்ல விடாமல் காக்க வேண்டும்.
   அ) ஐந்திணைகளை ஆ) அறுசுவைகளை
   இ) நாற்றிசைகளை ஈ) ஐம்பொறிகளை **விடை: ஈ) ஐம்பொறிகளை**

2. ஞானியர் சிறந்த கருத்துகளை மக்களிடம் ________.
   அ) பகர்ந்தனர் ஆ) நுகர்ந்தனர்
   இ) சிறந்தனர் ஈ) துறந்தனர் **விடை: அ) பகர்ந்தனர்**

3. 'ஆனந்தவெள்ளம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
   அ) ஆனந்த + வெள்ளம் ஆ) ஆனந்தன் + வெள்ளம்
   இ) ஆனந்தம் + வெள்ளம் ஈ) ஆனந்தர் + வெள்ளம்
   **விடை: இ) ஆனந்தம் + வெள்ளம்**

4. உள் + இருக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.
   அ) உள்ளேயிருக்கும் ஆ) உள்ளிருக்கும்
   இ) உளிருக்கும் ஈ) உளருக்கும் **விடை: ஆ) உள்ளிருக்கும்**

### குறுவினா.

1. **உண்மை அறிவை உணர்ந்தோர் உள்ளத்தில் நிகழ்வது யாது?**
   உண்மை அறிவை உணர்ந்தோர் உள்ளத்தில் இன்பப் பெருக்காய்க் கரை கடந்து பொங்கிடும் கடலாக, மேலான பரம்பொருள் விளங்கின்றது.

2. **மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?**
   மேலான பொருளின் மீது பற்று வைக்காமல் பணத்தின் மீது ஆசை வைத்தால் மனிதனின் மனம் கலங்கும்.

### சிறுவினா.

**குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை?**

- மேலான பொருளையும் தம் தீய எண்ணங்களை அடியோடு அழித்தவர்கள், மனதில் உள்ளே இருக்கும் உண்மையான அறிவு ஒளி ஆனவனே!
- உன் திருவடிகளின் மேல் பற்று வைக்காமல் பணத்தின் மீது ஆசை வைத்ததால் நான் மனம் கலங்கி அலைகின்றேன்.
- நீ உண்மை அறிவினை உணர்ந்தவர்களின் உள்ளத்திற்குள் இன்பப்பெருக்காய், கரை கடந்து பொங்கும் கடலாக விளங்கி நிற்கின்றாய்!
- மேலான பொருளே! ஐம்பொறிகளை அடக்கி ஆள்வது மிக அரிய செயலாகும். அப்பொறிகளின் இயல்பை உணர்ந்து நல்வழிப்படுத்தும் அறிவினை எனக்குத் தந்து, அருள் செய்வாயாக!

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**சிந்தனை வினா.**

**ஐம்பொறிகளைக் கொண்டு நாம் செய்யவேண்டிய நற்செயல்கள் யாவை?**

கண், செவி, வாய், மூக்கு, மெய் ஆகியன ஐம்பொறிகள் ஆகும்.

- கண்கள் மூலம் உயிர் இரக்கம் காட்டுதல் வேண்டும்.
- செவி மூலம் பெரியோர்களின் நற்சொல் கேட்டல் வேண்டும்.
- வாய்மூலம் துன்பத்தில் இருப்பவருக்கு ஆறுதல் கூறியும் இரக்கமான சொற்களையும் கூறுதல் வேண்டும்.
- மூக்கின் மூலம் எரிவாயு கசிவு உள்ளிட்டவற்றை உணர்ந்து, விபத்திலிருந்து தடுக்க உதவுதல் வேண்டும்.
- நம் உடல் மூலம் ஏழை எளியவர்களுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் முதியோர்களுக்கும் உதவுதல் வேண்டும்.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **சுல்தான் அப்துல்காதர் என்னும் இயற்பெயர் கொண்டவர் ________.**

அ) பட்டினத்தார் ஆ) வள்ளலார்
இ) குணங்குடி மஸ்தான் சாகிபு ஈ) மச்சரேகை சித்தன்

**விடை: இ) குணங்குடி மஸ்தான் சாகிபு**

2. **இளம் வயதிலேயே முற்றும் துறந்தவராக வாழ்ந்தவர் ________.**

அ) பட்டினத்தார் ஆ) வள்ளலார்
இ) குணங்குடி மஸ்தான் சாகிபு ஈ) மச்சரேகை சித்தன்

**விடை: இ) குணங்குடி மஸ்தான் சாகிபு**

3. **சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைப்பகுதிகளில் தவமியற்றி ஞானம் பெற்றவர் ________.**

அ) பட்டினத்தார் ஆ) வள்ளலார்
இ) குணங்குடி மஸ்தான் சாகிபு ஈ) மச்சரேகை சித்தன்

**விடை: இ) குணங்குடி மஸ்தான் சாகிபு**

**குறுவினா.**

1. **குணங்குடி மஸ்தான் சாகிபு குறிப்பு வரைக.**

- இயற்பெயர்: சுல்தான் அப்துல் காதர்.
- இளம்வயதிலேயே முற்றும் துறந்தவர்.
- சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைப்பகுதிகளில் தவம் இருந்து ஞானம் பெற்றார்.
- படைப்புகள்: எக்காளக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி, நந்தீசுவரக் கண்ணி.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. ஐம்பொறிகள் யாவை?

மெய், வாய், மூக்கு, கண், செவி.

## கற்பவை கற்றபின்

கண்ணி வகையில் பாடப்பட்ட வேறு பாடல்களைத் தொகுத்து எழுதுக.

1. ஆதி முதலே யகண்டபரி பூரணமென்று
ஒதுங் குணங்குடி கொண்டோனே நிராமயமே!
தேசிகனா னென்றே திருநடன மாடுகின்ற
வாசாம கோசரமே வாழி நிராமயமே!" – **நிராமயக்கண்ணி**

2. மெய்தொழவு மேலும் மேலும் நந்திகேஸ்வரனைக்
கைதொழு வுங்கனவு கண்டேன் மனோன்மணியே!
கோப்பாக வும் உனையான் கொண்டாடிப் பாடவும் நீ
காப்பாக வுங்கனவு கண்டேன் மனோன்மணியே – **மனோன்மணிக்கண்ணி**

உரைநடை உலகம்

இயல் 8

# அயோத்திதாசர் சிந்தனைகள்

## பாடநூல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அயோத்திதாசர் __________ சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார்.
அ) தமிழக ஆ) இந்திய
இ) தென்னிந்திய ஈ) ஆசிய **விடை: இ) தென்னிந்திய**

2. அயோத்திதாசர் நடத்திய இதழ் __________.
அ) ஒருபைசாத் தமிழன் ஆ) காலணாத் தமிழன்
இ) அரைப்பைசாத் தமிழன் ஈ) அரையணாத் தமிழன்
**விடை: அ) ஒருபைசாத் தமிழன்**

3. கல்வியோடு __________ கற்க வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து.
அ) சிலம்பமும் ஆ) கைத்தொழிலும்
இ) கணிப்பொறியும் ஈ) போர்த்தொழிலும் **விடை: ஆ) கைத்தொழிலும்**

www.Padasalai.Net www.CBSEtips.in


**4. அயோத்திதாசரின் புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது அவரது ________.**

அ) ஆழ்ந்த படிப்பு ஆ) வெளிநாட்டுப்பயணம்
இ) இதழியல் பட்டறிவு ஈ) மொழிப்புலமை **விடை: அ) ஆழ்ந்த படிப்பு**

**5. மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது ________.**

அ) வானம் ஆ) கடல்
இ) மழை ஈ) கதிரவன் **விடை: இ) மழை**

## குறுவினா.

**1. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?**

- நல்ல சிந்தனை
- உவப்பான எழுத்து
- சிறப்பான செயல்
- பாராட்டத்தக்க உழைப்பு
- உயர்வான பேச்சு

**2. ஒரு சிறந்த வழிகாட்டி எவ்வாறு இருக்க வேண்டும் என அயோத்திதாசர் கூறுகிறார்?**

- ஒரு சிறந்த வழிகாட்டி மக்களுள் மாமனிதராக,
- அறிவாற்றல் பெற்றவராக,
- நன்னெறியைக் கடைப்பிடிப்பவராக இருக்க வேண்டும்.

**3. திராவிட மகாஜன சங்கம் எவற்றுக்காகப் போராடியது?**

- அயோத்திதாசரின் கொள்கைகளை வலியுறுத்தவும்,
- ஒடுக்கப்பட்டோர் நலன் பாதுகாக்கவும்,
- சாலைகள் அமைத்தல்,
- கால்வாய்கள் பராமரித்தல்,
- குடிகளின் பாதுகாப்புக்குக் காவல்துறையினரை நியமித்தல்,
- பொது மருத்துவமனைகள் அமைத்தல்,
- சிற்றூர்கள் தோறும் கல்விக்கூடங்கள் ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்காகத் திராவிட மகாஜன சங்கம் போராடியது.

## சிறு வினா.

**1. அயோத்திதாசரின் இதழ்ப்பணி பற்றி எழுதுக.**

- அயோத்திதாசர் 1907ஆம் ஆண்டு சென்னையில், ‘ஒரு பைசாத்தமிழன்’ என்னும் வார இதழைக் காலணா விலையில் தொடங்கினார்.
- ஓராண்டிற்குப் பிறகு அதன் பெயரைத் ‘தமிழன்’ என மாற்றினார்.
- மக்களுக்கு நீதி, நேர்மை, சரியான பாதை ஆகியவற்றைத் தெளிவு படுத்துவதே, இந்த இதழின் நோக்கம் என்று அயோத்திதாசர் குறிப்பிட்டார்.
- தமிழன் இதழ் தமிழ்நாடு மட்டுமின்றி மைசூர், கோலார், ஐதராபாத், இரங்கூன், மலேசியா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழர்களுக்கும் பகுத்தறிவுச் சிந்தனை, இன உணர்வு, சமூகச் சிந்தனை ஆகியவற்றை ஊட்டினார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. **அரசியல் விடுதலை பற்றிய அயோத்திதாசரின் கருத்துகள் யாவை?**

- விடுதலை என்பது வெறும் ஆட்சி மாற்றம் மட்டும் அன்று. அது மக்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதாக அமைய வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து. சுய ராஜ்ஜியத்தின் நோக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக மட்டுமே இருக்கக் கூடாது.
- மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியையும் உள்ளடக்கியதாக அது அமைய வேண்டும்.
- மக்களின் வாழ்க்கையில் மாற்றம் உண்டானால் ஒழிய, நாடு முன்னேற முடியாது என்று ஆணித்தரமாகக் கூறினார் அயோத்திதாசர்.

## நெடுவினா.

**வாழும் முறை, சமத்துவம் ஆகியன பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக.**

**வாழும் முறை**

- அன்பு கொண்டு வாழ வேண்டும். கோபம், பொறாமை, பொய், களவு போன்றவற்றை நீக்கி வாழ வேண்டும். பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யக்கூடாது. அறிவை அழிக்கும் போதைப் பொருள்களைப் பயன்படுத்தக் கூடாது.

**சமத்துவம்**

- அயோத்திதாசர் மக்கள் அனைவரும் சம உரிமை பெற்று சமத்துவமாக வாழ வேண்டும் என்று விரும்பினார். கல்வி, வேளாண்மை, காவல்துறை போன்ற அனைத்துத் துறைகளிலும் மக்கள் அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்க வேண்டும்.
- ஊராட்சி, நகராட்சி, சட்டமன்றம், நாடாளுமன்றம் ஆகியவற்றில் எல்லா வகுப்பினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.
- இந்து, பௌத்தம், கிறித்துவர், இஸ்லாமியர், ஆங்கிலோ இந்தியர், ஐரோப்பியர் போன்ற அனைவருக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர் அயோத்திதாசர்.

## சிந்தனை வினா.

**ஒரு சமூகம் உயர்வடைய வேண்டுமானால் மக்களிடம் இருக்க வேண்டிய உயர் பண்புகள் யாவை?**

ஒரு சமூகம் உயர்வடைய வேண்டுமானால், மக்களிடம் அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மை, ஒருமைப்பாட்டு உணர்வு, மனிதநேயம், இரக்கம், கொடை, உணர்வு, சமத்துவம், பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல், உதவும் மனப்பான்மை ஆகிய உயர் பண்புகள் இடம் பெற்றிருக்க வேண்டும்.


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அயோத்திதாசர் பிறந்த ஆண்டு ________.
அ) 1845 ஆ) 1854
இ) 1945 ஈ) 1954 **விடை : அ) 1845**

2. அயோத்திதாசர் பிறந்த ஊர் ________.
அ) சேலம் ஆ) சென்னை
இ) ஈரோடு ஈ) மதுரை **விடை : ஈ) சென்னை**

3. அயோத்திதாசரின் இயற்பெயர் ________.
அ) காத்தவராயன் ஆ) ராமசாமி
இ) பீமாராவ் ஈ) அயோத்திதாசர் **விடை: அ) காத்தவராயன்**

4. அயோத்திதாசர் என்பவர் காத்தவராயனின் ________.
அ) நண்பர் ஆ) சகோதரர்
இ) ஆசிரியர் ஈ) மருத்துவர் **விடை : இ) ஆசிரியர்**

5. 'ஒரு பைசாத்தமிழன்' என்னும் வார இதழின் ஆசிரியர் ________.
அ) அயோத்திதாசர் ஆ) மகாத்மா காந்தி
இ) பாரதியார் ஈ) தந்தை பெரியார் **விடை: அ) அயோத்திதாசர்**

6. ஒரு பைசாத்தமிழன் வார இதழ் தொடங்கப்பட்ட ஆண்டு.
அ) 1905 ஆ) 1907
இ) 1908 ஈ) 1910 **விடை : ஆ) 1907**

7. ஒரு பைசாத்தமிழன் இதழ் ஓராண்டிற்குப் பிறகு அடைந்த பெயர் மாற்றம் ________.
அ) திராவிடன் அ) தேசபக்தன்
இ) ஒரு பைசா ஈ) தமிழன் **விடை : ஈ) தமிழன்**

### குறுவினா.

1. **அயோத்திதாசர் எங்கு, எப்போது பிறந்தார்?**
அயோத்திதாசர் 20.5.1845 இல் சென்னையில் பிறந்தார்.

2. **அயோத்திதாசரின் இயற்பெயர் யாது?**
அயோத்திதாசரின் இயற்பெயர் காத்தவராயன்.

3. **காத்தவராயன் அயோத்திதாசர் என தன் பெயரை மாற்றிக் கொள்ள காரணம் யாது?**
   - காத்தவராயன் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்தவர் என்பதால் பள்ளிப் பருவத்தில் பல இன்னல்களுக்கு உள்ளானார்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- அயோத்திதாச பண்டிதர் என்பவரிடம் கல்வியும், சித்த மருத்துவமும் பயின்றார்.
- தம்மீது அன்பு காட்டிய அந்த ஆசிரியரது பெயரையே தனது பெயராக வைத்துக் கொண்டார்.

**4. அயோத்திதாசர் பதிப்பித்த நூல்கள் யாவை?**

- போகர் எழுநூறு
- அகத்தியர் இருநூறு
- சிமிட்டு இரத்திரனச் சுருக்கம்
- பால வாகடம்

**5. அயோத்திதாசர் எழுதிய நூல்கள் யாவை?**

- புத்தரது ஆதிவேதம்
- இந்திரர் தேச சரித்திரம்
- விவாக விளக்கம்
- புத்தர் சரித்திரப்பா

**6. அயோத்திதாசர் பற்றி தந்தை பெரியாரின் கருத்து யாது?**

“என் பகுத்தறிவு பிரச்சாரத்திற்கும் சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் பண்டிதமணி அயோத்திதாசரும் தங்கவயல் அப்பாதுரையாரும் ஆவார்கள்” என்றார் தந்தை பெரியார்.

**7. கல்வியோடு கற்க வேண்டியவையாக அயோத்திதாசர் கூறுவன யாவை?**

- கைத்தொழில்
- வேளாண்மை
- தையல்
- மரம் வளர்த்தல்

## சிறுவினா.

**1. சிந்தனைகளின் அடித்தளம் அயோத்திதாசர் என்பதை விளக்குக.**

- அயோத்திதாசர் தமிழ் மட்டுமின்றி பாலி, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.
- இலக்கியம், இலக்கணம், கணிதம், மருத்துவம், சமயத் தத்துவம் உள்ளிட்ட பல்துறை நூல்களையும் ஆழ்ந்து கற்றார்.
- இத்தகைய ஆழ்ந்த படிப்பு அவரது புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது.


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


**2. அயோத்திதாசரின் கல்வி சிந்தனைகள் யாவை?**

- ஒரு மனிதனின் அறிவு வளர்ச்சி பெற வேண்டுமானால், கல்வி அறிவு அவசியம் என்று அயோத்திதாசர் கருதினார்.
- நிலவு நாளும் வளர்ந்து முழு நிலவாக ஒளி வீசுவது போல் கல்வி நிறுவனங்களில் அறிவை வளர்க்கும் நூல்கள் கற்பிக்கப்பட வேண்டும்.
- கல்வியோடு கைத்தொழில், வேளாண்மை, தையல், மரம் வளர்த்தல் போன்றவற்றையும் கற்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.
- பெண்களும் கல்வி கற்று தன் வாழ்க்கையைத் தானே அமைத்துக் கொள்ளும் உரிமையைப் பெற வேண்டும் என்றார்.

**3. தனித்தன்மையுடைய சிந்தனையாளர் அயோத்திதாசர் என்பதை விளக்குக.**

- அயோத்திதாசர் காலத்தில் பண்டிதர், புலவர், நாவலர், பேச்சாளர், எழுத்தாளர் எனப் பலர் இருந்தனர்.
- ஆயினும் பகுத்தறிவு, இலக்கியம், சமூகம், சமயம், அரசியல், வரலாறு, தொழில் முன்னேற்றம் ஆகியவற்றில் அக்கறை கொண்டு புதிய சிந்தனைகள் விதைத்தவர் அயோத்திதாசர் மட்டுமே!
- எனவே, அவரை அன்றைய தமிழர்கள் தனித்தன்மை உடைய சிந்தனையாளராக மதித்தனர்.

## கற்பவை கற்றபின்

**சமூகச் சீர்திருத்தத்திற்குப் பாடுபட்ட சான்றோர்களின் பெயர்களைத் திரட்டுக.**

- அரிஸ்டாட்டில்
- சாக்ரடீஸ்
- லெனின்
- அயோத்திதாச பண்டிதர்
- காந்தியடிகள்
- அம்பேத்கர்
- பெரியார்
- பாரதியார்
- பாரதிதாசன்
- திரு.வி.க
- உ.வே. சாமிநாதர்
- டாக்டர். ராதாகிருஷ்ணன்
- டாக்டர். அப்துல் கலாம்

இயல் 8 தமிழ்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

விரிவானம்

இயல் 8

# மனித யந்திரம்

புதுமைப்பித்தன்

## பாடநூல் வினாக்கள்

**மனித யந்திரம் கதையை மீனாட்சிசுந்தரம் கூறுவதாக மாற்றி எழுதுக.**

**முன்னுரை:**

'சிறுகதை மன்னன்' என்று போற்றப்படும் புதுமைப்பித்தன் எழுதிய கதை மனித யந்திரம் ஆகும். அதனை இனிக் காண்போம்.

**மீனாட்சி சுந்தரம்:**

மீனாட்சி சுந்தரம் ஒரு கடையில் எழுத்தர் வேலை செய்பவர். 45 வருடங்களாக ஒரே கடையில் வேலை செய்கிறார். சம்பளம் மாதத்திற்கு 20 ரூபாய். அவர் மிகவும் சாது. அவரைப் பார்த்தாலே அனைவருக்கும் பழுதுபடாத எந்திரம் தான் ஞாபகத்திற்கு வரும். இவரை ஊரார் அப்பாவிப் பிராணி என்றுதான் கூறுவார்கள்.

**மீனாட்சி சுந்தரத்தின் ஆசை:**

சாதுவாக இருந்த மீனாட்சி சுந்தரத்தின் மனதில் ஆசைகள் முளைவிடத் தொடங்கின. மாடும் கன்றும் வாங்க வேண்டும். நிலத்தைத் திருப்ப வேண்டும். ஒருமுறை கொழும்புக்குப் போய் விட்டு தங்க அரைஞாண், கடிகாரச் சங்கிலி, கையில் பணம் போன்றவற்றுடன் மீண்டும் ஊருக்கு திரும்ப வேண்டும். தெருவில் எதிரிலே வருகிறவர்கள் எல்லாரும் துண்டை இடுப்பில் கட்டி அண்ணாச்சி சவுக்கியமா? என்று கேட்க வேண்டும். இதுதான் மீனாட்சி சுந்தரத்தின் ஆசை.

**மீனாட்சி சுந்தரத்தின் செயல்:**

கணக்கு வழக்கைப் பார்த்துவிட்டுக் கடையைப் பூட்டிவிட்டுப் பணத்தை முதலாளி வீட்டில் ஒப்படைத்து வருவதுதான் வழக்கம். மீனாட்சி சுந்தரம் தன்னுடைய ஆசைகளுக்கு வடிவம் கொடுக்க நினைத்தார். பெட்டியில் உள்ள பணத்தைத் திருடிச் சென்று விட முடிவு செய்தார். நாற்பது ரூபாயும் சில்லறையும் இருந்ததை எடுத்துக் கொண்டு கடையைப் பூட்டிவிட்டு சென்றார் மீனாட்சி சுந்தரம்.

**மனமாற்றம்:**

மீனாட்சிசுந்தரம் கடையில் திருடிய பணத்தையும் சில்லறையும் எடுத்துக்கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து தூத்துக்குடி வண்டியில் ஏறி அமர்ந்தார். திருடிய பயத்தில்

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

வியர்வை பூத்தது. அந்த நேரத்தில் மீனாட்சிசுந்தரம் என்று ரயில்வே போலீஸ் நண்பர் கல்யாணசுந்தரம் மீனாட்சி சுந்தரத்தைக் கூப்பிட்டார். திருடிய பயத்தில் தூத்துக்குடி செல்வதாகக் கூறினார். காலை விடிந்தவுடன் எல்லா விஷயமும் ஊராருக்குத் தெரிந்துவிடும். கல்யாண சுந்தரமும் நான் தூத்துக்குடி சென்றுள்ளதைச் சொல்லிவிடுவான். எனவே, பயத்தில் மனமாற்றம் அடைந்தான். மீண்டும் கடையை நோக்கி நடந்து தனக்குரிய பதினொண்ணே காலணா சம்பளத்தை எடுத்துக்கொண்டு, முதலாளி ஐயா வீட்டிற்குச் சென்று சம்பளம் எடுத்துக் கொண்டதைச் சொல்லி விட்டுச் சென்றார்.

**முடிவுரை:**

குற்றவுணர்வு மனதில் அழுத்திக்கொண்டே இருந்து, அது நம்மைத் தீயவை பக்கத்தில் விடாமல் காப்பாற்றும் என்பதை அறியலாம்.

## கற்பவை கற்றபின்

**வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த யாரேனும் ஒருவரைப் பற்றிய செய்தியை அறிந்து வந்து வகுப்பறையில் பகிர்க.**

**மிகவும் வறுமையில் வாழ்ந்த தமிழறிஞர் திரு. வி. க.**

- எத்தனையோ வசதி படைத்த தமிழறிஞர்கள் இவரது நண்பராக இருந்த போதும், அவர் யாரிடமும் இவர் கையேந்தியது கிடையாது.
- பெண்ணின் பெருமை, முருகன் அல்லது அழகு, பொதுமை வேட்டல், தமிழ்த்தென்றல், மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ஆகிய எண்ணற்ற நூல்களை எழுதியவர்.
- இவர் தாம் எழுதிய நூல்களை இவரே அச்சடித்து தெருத்தெருவாகக் கொண்டு சென்று விற்பாராம்.
- இவருடைய மாணவர் கல்கி ஆவர். அவர் சிறந்த புதின எழுத்தாளர்.
- கல்கி தன் ஆசிரியருக்கு உதவ முன்வந்த போதும், மாணவாரின் பண உதவியை ஏற்கக் கூடாது என்று, மறுத்துவிட்டு வறுமையில் உழன்றார்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

கற்கண்டு

இயல் 8

# யாப்பு இலக்கணம்

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அசை __________ வகைப்படும்.
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **விடை: அ) இரண்டு**

2. விடும் என்பது __________ சீர்.
அ) நேரசை ஆ) நிரையசை
இ) மூவசை ஈ) நாலசை **விடை: ஆ) நிரையசை**

3. அடி __________ வகைப்படும்.
அ) இரண்டு ஆ) நான்கு
இ) எட்டு ஈ) ஐந்து **விடை: ஈ) ஐந்து**

4. முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது __________.
அ) எதுகை ஆ) இயைபு
இ) அந்தாதி ஈ) மோனை **விடை: ஈ) மோனை**

### பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | வெண்பா | - | அ) துள்ளல் ஓசை |
| 2. | ஆசிரியப்பா | - | ஆ) செப்பலோசை |
| 3. | கலிப்பா | - | இ) தூங்கலோசை |
| 4. | வஞ்சிப்பா | - | ஈ) அகவலோசை |

விடை: 1.ஆ 2.ஈ 3.அ 4.இ

### சிறுவினா.

1. இருவகை அசைகளையும் விளக்குக.

**நேரசை**

குறில் அல்லது நெடில் எழுத்து தனித்து வந்தாலும், உடன் சேர்ந்து வந்தாலும் நேரசை ஆகும்.

**எ.கா.** ந, நம், நா, நாம்.

**நிரையசை**

இரண்டு குறில் எழுத்துகள் அல்லது குறில், நெடில் எழுத்துகள் இணைந்து வந்தாலும் அவற்றுடன் ஒற்றெழுத்து சேர்ந்து வந்தாலும் நிரையசை ஆகும்.

**எ.கா.** கட, கடல், கடா, கடாம்.

**2. தளை என்பது யாது?**

சீர்கள் ஒன்றோடு ஒன்று பொருந்துவதைத் தளை என்பர்.

**3. அந்தாதி என்றால் என்ன?**

ஒரு பாடலின் இறுதியில் அல்லது அடியின் இறுதிப்பகுதி அடுத்த பாடலின் முதல் சீர் அல்லது அடியின் முதலில் வருமாறு பாடப்படுவது அந்தாதித் தொடை ஆகும்.

**4. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

பா நான்கு வகைப்படும். அவை:
வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. யாப்பு இலக்கணத்தின்படி செய்யுளுக்குரிய உறுப்புகள் ________.**

அ) 6 ஆ) 7
இ) 8 ஈ) 9 **விடை: அ) 6**

**2. யாப்பிலக்கணத்தின்படி எழுத்துகளின் வகை ________.**

அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **விடை: ஆ) மூன்று**

**3. ஓர் அசையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அசைகள் சேர்ந்து அமைவது ________.**

அ) அசை ஆ) சீர்
இ) தளை ஈ) அடி **விடை: ஆ) சீர்**

**4. தளை ________ வகைப்படும்.**

அ) 6 ஆ) 8
இ) 9 ஈ) 7 **விடை: ஈ) 7**

**5. முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ________.**

அ) எதுகை ஆ) மோனை
இ) இயைபு ஈ) அந்தாதி **விடை: ஆ) மோனை**

**6. அற நூல்கள் பல அமைந்த பா ________.**

அ) ஆசிரியப்பா ஆ) கலிப்பா
இ) வஞ்சிப்பா ஈ) வெண்பா **விடை: ஈ) வெண்பா**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

7. சங்க இலக்கியங்கள் பலவும் அமைந்த பா ________.

அ) ஆசிரியப்பா ஆ) கலிப்பா

இ) வஞ்சிப்பா ஈ) வெண்பா **விடை: அ) ஆசிரியப்பா**

**குறுவினா**

1. **செய்யுளுக்குரிய உறுப்புகள் யாவை?**
செய்யுளுக்கு உரிய உறுப்புகள் ஆறு. அவை:
எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை.

2. **யாப்பிலக்கணத்தின் படி எழுத்துகள் எவை?**
குறில், நெடில், ஒற்று.

3. **அசை என்றால் என்ன?**
எழுத்துகள் ஒன்றோ சிலவோ சேர்ந்து அமைவது அசை எனப்படும்.

4. **சீர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
நான்கு வகைப்படும். அவை:
ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர்.

5. **தளை எத்தனை வகைப்படும்?**
தளை ஏழு வகைப்படும்.

6. **அடி என்றால் என்ன?அது எத்தனை வகைப்படும்?**
இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டு அமைவது அடி ஆகும். அது ஐந்து வகைப்படும்.

7. **மோனை, எதுகை விளக்குக.**
- முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனையாகும்.
- இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை ஆகும்.

8. **இயைபு என்றால் என்ன?**
இறுதி எழுத்து அல்லது இறுதி ஓசை ஒன்றி வரத் தொடுப்பது இயைபு ஆகும்.

## கற்பவை கற்றபின்

1. **எழுத்து இலக்கணத்தின்படியும் யாப்பு இலக்கணத்தின்படியும் எழுத்துகளின் வகைகளை வேறுபடுத்தி ஒரு அட்டவணை உருவாக்குக.**

**எழுத்து இலக்கணத்தின் படி,**
- எழுத்து இரண்டு வகைப்படும். அது முதலெழுத்து, சார்பெழுத்து ஆகும்.
- உயிர் எழுத்துகள் 12, மெய் எழுத்துக்கள் 18.
- முதலெழுத்துகளைச் சார்ந்து தோன்றும் எழுத்துகள் சார்பு எழுத்துகள் ஆகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- சார்பெழுத்துகள் பத்து வகைப்படும். அவை: உயிர்மெய், உயிரளபெடை, ஒற்றளபெடை, ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம்.

**யாப்பு இலக்கணத்தின் படி,**

எழுத்துகள் மூன்று வகைப்படும். அவை குறில், நெடில், ஒற்று ஆகியனவாகும்.

**குறில் எழுத்து**

உயிர்க் குறில், உயிர்மெய்க் குறில்.

**நெடில் எழுத்து**

உயிர் நெடில், உயிர்மெய் நெடில்.

**ஒற்று எழுத்து**

மெய்யெழுத்து, ஆய்த எழுத்து.

**2. வெண்பாக்களால் அமைந்த நூல்களின் பெயர்களைத் திரட்டுக.**

- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- இன்னா நாற்பது
- கார் நாற்பது
- ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது
- திணைமொழி ஐம்பது
- திணைமாலை நூற்றைம்பது
- திருக்குறள்
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- பழமொழி நானூறு
- சிறுபஞ்சமூலம்
- ஏலாதி
- கைந்நிலை

## மொழியை ஆள்வோம்

**கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

**மக்கள் பணியே மகத்தான பணி**

சான்றோர் சபைக்கு முதற்கண் வணக்கம். மக்கள் பணியே மகத்தான பணி என்பதைப் பற்றிப் பேச வந்துள்ளேன். மக்களுக்குச் செய்யும் பணி இறைவனுக்குச் செய்யும் பணியாகும். இறைவனுக்குக் கொடுப்பதாக எண்ணி உண்டியலில் ஆயிரமாயிரமாய் லட்சம் லட்சமாய் போடுவதும் தங்கங்களைக் கொண்டு கொட்டுவதும் எவ்வளவு வேதனையான செயல். இது யாருக்கு பயன்படப் போகிறது. ஒரு வேளை உண்ண உணவும் உடுத்த உடையும் இல்லாத எத்தனையோ ஏழை மக்கள் நம் நாட்டில் வாழ்கிறார்கள். உண்டியலில் கொட்டும் பணத்தை இல்லாத ஏழைகளுக்குக் கொஞ்சம் கொடுங்கள். ஏழையின் சிரிப்பில் தான் இறைவன் வாழ்கிறான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஏழைகளுக்குப் பணம் கொடுக்க முடியாதவர்கள் தயங்க தேவையில்லை. மனம் இருந்தால் போதும் எத்தனையோ பணிகளை மக்களுக்காகச் செய்யலாம். மக்கள் பணி மகத்தான பணி என்று சொல்லி நிறைவு செய்கிறேன். நன்றி! வணக்கம்!

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக.**

**எ.கா:** முத்து நன்கு படித்தான். முத்து வாழ்வில் உயர்ந்தான்.
முத்து நன்கு படித்ததால் வாழ்வில் உயர்ந்தான்.

1. **மழை நன்கு பெய்தது. எங்களால் விளையாட முடியவில்லை.**
   **விடை**: மழை நன்கு பெய்ததால் விளையாட முடியவில்லை.

2. **எனக்குப் பால் வேண்டும். எனக்குப் பழம் வேண்டும்.**
   **விடை**: எனக்கு பாலும் பழமும் வேண்டும்.

3. **திருமூலர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகக் கருதப்படுபவர். அவர் பதினெண் சித்தர்களில் ஒருவராக கருதப்படுபவர்.**
   **விடை**: திருமூலர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகவும் பதினெண் சித்தர்களில் ஒருவராகவும் கருதப்படுபவர்.

4. **அறநெறிகளைக் கூறும் நூல்களைக் கற்க வேண்டும். அவை கூறும் கருத்துகளைப் பின்பற்ற வேண்டும்.**
   **விடை**: அறநெறிகளைக் கூறும் நூல்களைக் கற்று பின்பற்ற வேண்டும்.

5. **குணங்குடி மஸ்தான் சாகிபு எக்காளக்கண்ணி நூலை இயற்றியுள்ளார். நந்தீசுவரக்கண்ணி நூலை இயற்றியுள்ளார்.**
   **விடை**: குணங்குடி மஸ்தான் சாகிபு எக்காளக்கண்ணி, நந்தீசுவரக்கண்ணி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

## அறிந்து பயன்படுத்துவோம்

**பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### விபத்தில்லா வாகனப் பயணம்

- சாலைவிதிகளுக்கு உட்பட்டு வாகனம் ஓட்டும் முறைகளை அறிந்து, வாகனங்களை இயக்கினால் விபத்துகளைத் தவிர்க்கலாம்.
- ஓட்டுநர் வாகனத்தைச் சாலையின் இடப்புறத்தில் செலுத்துவதுடன், எதிரே வரும் வாகனத்திற்கு வலப்புறமாகக் கடந்து செல்ல போதிய இடம்விட வேண்டும்.
- சந்திப்புச் சாலைகள், பயணிகள் கடக்கும் இடங்கள், திரும்பும் இடங்கள் ஆகியவற்றை நெருங்கும்போது வாகனத்தின் வேகத்தைக் குறைக்க வேண்டும். அவ்விடங்களில் இருப்பவர்களுக்கு எவ்வித ஆபத்தும் நேராது என்று உறுதி செய்த பிறகே கடந்து செல்ல வேண்டும்.
- சாலைச்சந்திப்பில் நுழையும் போது, அந்தச் சாலையில் ஏற்கெனவே செல்லும் வாகனங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.
- தீயணைப்பு வாகனம், அவசரச் சிகிச்சை ஊர்தி ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளித்து, அவை தடையின்றிச் செல்வதற்குக் கண்டிப்பாக வழிவிட வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- எல்லா ஓட்டுநர்களும் தேவையான இடங்களில் கை சைகை அல்லது வாகன எச்சரிக்கை விளக்குகளைத் தவறாமல் பயன்படுத்த வேண்டும்.
- மலைச்சாலைகள், மிகவும் சரிவான சாலைகள் ஆகியவற்றில் கீழ்நோக்கிச் செல்லும் வாகனங்கள், மேல்நோக்கி வரும் வாகனங்கள் பாதுகாப்பாகக் கடந்து செல்ல முன்னுரிமை தரவேண்டும்.

**1. விபத்துகளை எவ்வாறு தவிர்க்கலாம்?**

சாலை விதிகளுக்கு உட்பட்டு வாகனம் ஓட்டும் முறைகளை அறிந்து வாகனங்களை இயக்கினால் விபத்துகளைத் தவிர்க்கலாம்.

**2. கண்டிப்பாக வழிவிட வேண்டிய வாகனங்கள் யாவை?**

- தீயணைப்பு வாகனம்
- அவசர சிகிச்சை ஊர்தி

**3. சாலைச் சந்திப்புகளில் எவற்றுக்கு முதலிடம் தர வேண்டும்?**

சாலைச் சந்திப்பில் நுழையும்போது அந்தச் சாலையில் ஏற்கனவே செல்லும் வாகனங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

**4. மலைச்சாலைகளில் பின்பற்ற வேண்டிய விதிமுறை யாது?**

கீழ்நோக்கிச் செல்லும் வாகனங்கள் மேல் நோக்கி வரும் வாகனங்கள் பாதுகாப்பாக கடந்து செல்ல முன்னுரிமை தர வேண்டும்.

**5. வாகனம் செலுத்தும் முறையை எழுதுக.**

வாகனத்தைச் சாலையின் இடது புறத்தில் செலுத்துவதுடன் எதிரே வரும் வாகனத்துக்கு வலப்புறமாகக் கடந்து செல்ல போதிய இடம் விட வேண்டும்.

## கடிதம் எழுதுக.

**புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.**

**உறவுமுறை கடிதம்**

14 பாரதிநகர்,
ஈரோடு,
நாள்: 25.07.2020

**அன்புள்ள அத்தைக்கு,**

அண்ணன் மகன் ராம் எழுதும் கடிதம். நானும் என் குடும்பத்தில் உள்ள அனைவரும் நலமாக இருக்கின்றோம். அதுபோல தங்கள் நலத்தையும் மாமாவின் நலத்தையும் அறிய விரும்புகிறேன். எங்கள் ஆசிரியர் கவிஞர் மு. மேத்தா எழுதிய கண்ணீர்ப் பூக்கள் என்ற நூல் பற்றிக் கூறினார். அந்நூலில் அவர் சொன்ன சில கவிதைகள் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அந்த நூல் முழுமையும் நான் வாசித்துப் பார்க்க ஆசைப்படுகிறேன். ஈரோட்டில் அந்நூல் கிடைக்கவில்லை. எனவே, கோவையிலுள்ள புத்தக அங்காடிகளில் கிடைக்கும். அந்நூலை வாங்கி எனக்கு அனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

8 இயல் தமிழ்

இப்படிக்கு அன்புள்ள,

ராம்.

உறைமேல் முகவரி:

பெறுநர்
சா. தமிழ்ச்செல்வி,
24, செந்தமிழ் நகர்,
கோவை - 3.

## மொழியோடு விளையாடு

**படத்தைப் பார்த்து எழுதுக.**





| | | |
|---|---|---|
| ஓரெழுத்துச் சொல் | **ஆ** | **பூ** |
| இரண்டு எழுத்துச் சொல் | **பால்** | **வாழை** |
| மூன்று எழுத்துச் சொல் | **கன்று** | **பழம்** |
| நான்கு எழுத்துச் சொல் | **புல்வெளி** | **வாழைஇலை** |
| ஐந்து எழுத்துச் சொல் | **தாய்பசு** | **கன்றுகள்** |

## நிற்க அதற்குத் தக....

### கலைச்சொல் அறிவோம்

- தொண்டு - Charity
- ஞானி - Saint
- தத்துவம் - Philosophy
- நேர்மை - Integrity
- பகுத்தறிவு - Rational
- சீர்திருத்தம் - Reform

இயல் 8

வாழ்வியல்

# திருக்குறள்

திருவள்ளுவர்

மனப்பாடப் பாடல்

**கான முயல்எய்த அம்பினில் யானை**
**பிழைத்தவேல் ஏந்தல் இனிது.**

**நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு.**

**பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்.**

## சொல்லும் பொருளும்

- கான - காடு
- நகுதல் - சிரித்தல்
- நட்டல் - தவறு செய்தல்
- பிடித்தல் - திருத்துதல்
- ஆய்ந்து - ஆராய்ந்து
- கேண்மை - நட்பு
- கடை - இறுதி
- மண்புக்கு - மண்ணுக்கு
- மாய்வது - அறிவது
- களம் - பாத்திரம்

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஆண்மையின் கூர்மை ________.

அ) வறியவருக்கு உதவுதல் ஆ) பகைவருக்கு உதவுதல்

இ) நண்பனுக்கு உதவுதல் ஈ) உறவினருக்கு உதவுதல்

**விடை: ஆ) பகைவருக்கு உதவுதல்**

2. வறுமை வந்த காலத்தில் ________ குறையாமல் வாழ வேண்டும்.

அ) இன்பம் ஆ) தூக்கம்

இ) ஊக்கம் ஈ) ஏக்கம் **விடை: இ) ஊக்கம்**

3. 'பெருஞ்செல்வம் 'என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) பெரிய + செல்வம் ஆ) பெருஞ் + செல்வம்

இ) பெரு + செல்வம் ஈ) பெருமை + செல்வம்

**விடை: ஈ) பெருமை + செல்வம்**

4. 'ஊராண்மை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) ஊர் + ஆண்மை ஆ) ஊராண் + மை

இ) ஊ + ஆண்மை ஈ) ஊரு + ஆண்மை

**விடை: அ) ஊர் + ஆண்மை**

5. திரிந்து + அற்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) திரிந்ததுஅற்று ஆ) திரிந்தற்று

இ) திரிந்துற்று ஈ) திரிவுற்று **விடை: ஆ) திரிந்தற்று**

## பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. இன்பம் தருவது | - | அ) | நற்பண்பில்லாதவன் பெற்ற பெருஞ்செல்வம் |
| 2. நட்பு என்பது | - | ஆ) | குன்றிமணியளவு தவறு |
| 3. பெருமையை அழிப்பது | - | இ) | செல்வம் மிகுந்த காலம் |
| 4. பணிவு கொள்ளும் காலம் | - | ஈ) | சிரித்து மகிழ மட்டுமன்று |
| 5. பயனின்றி அழிவது | - | உ) | பண்புடையவர் நட்பு |

விடை: 1.உ 2.ஈ 3.ஆ 4.இ 5.அ

## குறுவினா.

1. எது பெருமையைத் தரும்?

காட்டு முயலை வீழ்த்திய அம்பினை ஏந்துவதை விட, யானைக்குக் குறிவைத்து தவறிய வேலை ஏந்துதல் பெருமை தரும்.

2. நண்பர்களின் இயல்பை அளந்து காட்டும் அளவுகோல் எது?

துன்பமே நமது நண்பர்களின் உண்மையான இயல்பை அளந்து காட்டும் அளவுகோலாகும்.

3. இவ்வுலகம் யாரால் இயங்குவதாகத் திருக்குறள் கூறுகிறது?

பண்புடைய சான்றோர்களால், இந்த உலகம் இயங்குவதாகத் திருக்குறள் கூறுகிறது.

4. நட்பு எதற்கு உரியது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

- நட்பு என்பது சிரித்துப் பேசி மகிழ்வதற்கு மட்டும் உரியதன்று.
- நண்பர் தவறு செய்தால் அவரைக் கண்டித்து திருத்துவதற்கும் உரியது.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## கூடுதல் வினாக்கள்

**1. எதனை ஆண்மை என்று கூறுவர்?**

பகைவரை எதிர்த்து நிற்கும் வீரத்தை ஆண்மை என்று கூறுவர்.

**2. ஆண்மையின் கூர்மை என்று எதனைக் கூறுவர்?**

பகைவருக்கும் துன்பம் வரும்போது உதவி செய்தல் ஆண்மையின் கூர்மை என்று கூறுவர்.

**3. பண்புடையாளர் தொடர்பு எதனைப் போன்றது?**

பண்புடையாளர் தொடர்பு நல்ல நூல்களைப் படிக்கப் படிக்க இன்பம் தருவதைப் போன்றது.

**4. பெருமை எப்போது அழியும்?**

மலையளவு பெருமை உடையவராக இருந்தாலும், குன்றிமணி அளவு தவறு செய்தால் அவரது பெருமை அழிந்துவிடும்.

### சிறுவினா.

**1. ‘‘கான முயல்எய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது’’ – இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.**

பயின்று வரும் அணி: பிறிது மொழிதல் அணி

**இலக்கணம்:**

உவமையை மட்டும் கூறி பொருளைப் பெற வைப்பது பிறிதுமொழிதல் அணி ஆகும்.

**விளக்கம்:**

மேற்குறித்த திருக்குறளில் உள்ள உவமை, ‘விடா முயற்சியே பெருமை தரும்‘ என்னும் பொருளைப் பெற வைத்ததால் பிறிதுமொழிதல் அணி ஆயிற்று.

**2. ‘‘நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடை யாளர் தொடர்பு’’ – இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.**

பயின்றுவந்துள்ள அணி: உவமையணி

**இலக்கணம்:**

உவமை, பொருள், உவம உருபு ஆகியவற்றை வெளிப்படையாகக் கூறுவது உவமையணி ஆகும்.

**விளக்கம்:**

“நூல் படிக்க இன்பம் தரும்” என்பது உவமை.

“போல” என்பது உவம உருபு.

“பண்புடையவர் நட்பு இனிக்கும்” என்பது பொருள்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

உவமை, பொருள், உவம உருபு இம்மூன்றும் வெளிப்படையாக வந்ததால் இக்குறள் உவமையணி ஆயிற்று.

3. ''பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலம்தீமை யால்திரிந்து அற்று''
– இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

பயின்று வந்துள்ள அணி: உவமையணி

**இலக்கணம்:**

உவமை, பொருள், உவம உருபு ஆகியவற்றை வெளிப்படையாகக் கூறுவது உவமையணி ஆகும்.

**விளக்கம்:**

"தூய்மையற்ற பாத்திரத்தில் வைக்கும் பால் திரிதல்" என்பது உவமை.

"அற்று" என்பது உவம உருபு.

"நற்பண்பு இல்லாதவன் பெற்ற செல்வம் பயன்படாது அழியும்" என்பது பொருள்.

உவமை, பொருள், உவம உருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாக வந்ததால் இக்குறள் உவமையணி ஆயிற்று.

**படத்திற்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.**



**விடை:**

கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## அலகுத் தேர்வு

### இயல் – 8

நேரம்: 30 நிமிடம் மதிப்பெண்கள்: 20

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (6)

1. **ஒன்றே ________ என்று கருதி வாழ்வதே மனிதப் பண்பாகும்.**
   அ) குலம் ஆ) குளம்
   இ) குணம் ஈ) குனம்
2. **'நமனில்லை' என்னும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது ________.**
   அ) நம் + இல்லை ஆ) நமது + இல்லை
   இ) நமன் + நில்லை ஈ) நமன் + இல்லை
3. **ஞானியர் சிறந்த கருத்துகளை மக்களிடம் ________.**
   அ) பகர்ந்தனர் ஆ) பகர்ந்தனர்
   இ) சிறந்தன ஈ) துறந்தனர்
4. **அயோத்திதாசரின் புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது அவரது ________.**
   அ) ஆழ்ந்த படிப்பு ஆ) வெளிநாட்டுப் பயணம்
   இ) இதழியல் பட்டறிவு ஈ) மொழிப்புலமை
5. **அயோத்திதாசரின் இயற்பெயர் ________.**
   அ) காத்தவராயன் ஆ) ராமசாமி
   இ) பீமாராவ் ஈ) அயோத்திதாசர்
6. **முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ________.**
   அ) எதுகை ஆ) இயைபு
   இ) அந்தாதி ஈ) மோனை

**ஆ. குறுவிடை தருக.** (8)

7. யாருக்கு எமனைப் பற்றி அச்சமில்லை?
8. மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?
9. தளை என்பது யாது?
10. அயோத்திதாசர் பதிப்பித்த நூல்கள் யாவை?

**இ. சிறுவிடை தருக.** (6)

11. குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை?
12. அரசியல் விடுதலை பற்றிய அயோத்திதாசரின் கருத்துகள் யாவை?



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

கவிதைப் பேழை

இயல் 9

# உயிர்க்குணங்கள்

இறையரசன்

## இறையரசன்

- இயற்பெயர் - சே, சேசுராசா
- பணி - தமிழ்ப்பேராசிரியர்
- படைப்பு - கன்னிப்பாவை

## சொல்லும் பொருளும்

- நிறை - மேன்மை
- பொறை - பொறுமை
- பொச்சாப்பு - சோர்வு
- மையல் - விருப்பம்
- ஓர்ப்பு - ஆராய்ந்து தெளிதல்
- அழுக்காறு - பொறாமை
- மதம் - கொள்கை
- இகல் - பகை
- மன்னும் - நிலைபெற்ற

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. அடுத்தவர் வாழ்வைக் கண்டு ________ கொள்ளக்கூடாது.
   அ) உவகை ஆ) நிறை
   இ) அழுக்காறு ஈ) இன்பம் **விடை: இ) அழுக்காறு**

2. நாம் நீக்க வேண்டியவற்றுள் ஒன்று ________.
   அ) பொச்சாப்பு ஆ) துணிவு
   இ) மானம் ஈ) எளிமை **விடை: ஆ) பொச்சாப்பு**

3. 'இன்பதுன்பம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
   அ) இன்பம் + துன்பு ஆ) இன்பம் + துன்பம்
   இ) இன்ப + அன்பம் ஈ) இன்ப + அன்பு **விடை: ஆ) இன்பம்+துன்பம்**

4. 'குணங்கள் + எல்லாம்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்__________.

அ) குணங்கள்எல்லாம் ஆ) குணமெல்லாம்

இ) குணங்களில்லாம் ஈ) குணங்களெல்லாம்

விடை: ஈ) குணங்களெல்லாம்

## பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. நிறை | - | அ) | பொறுமை |
| 2. பொறை | - | ஆ) | விருப்பம் |
| 3. மதம் | - | இ) | மேன்மை |
| 4. மையல் | - | ஈ) | கொள்கை |

விடை: 1.இ 2.அ 3.ஈ 4.ஆ

## குறுவினா

1. மனிதர்களின் பொது இயல்பாகக் கன்னிப்பாவை நூல் கூறுவது யாது?

- அறிவு
- கருணை
- ஆசை
- அச்சம்
- அன்பு
- இரக்கம்
- சினம்
- நாணம்
- மேன்மை
- பொறாமை
- எளிமை
- நினைவு
- துணிவு
- இன்பம்
- துன்பம்
- பொறுமை
- கொள்கையைப் பின்பற்றுதல்
- சோர்வு
- மானம்
- அறம்
- வெறுப்பு
- மகிழ்ச்சி
- ஊக்கம்
- விருப்பம்
- வெற்றி
- பகை
- இளமை
- முதுமை
- மறதி
- ஆராய்ந்து தெளிதல்

ஆகியவை மனிதர்களின் பொது இயல்புகள் ஆகும்.

2. மனிதர்களிடம் உள்ள பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவனவற்றுள் நற்பண்புகள் யாவை?

- அறிவு
- மேன்மை
- வெற்றி
- கருணை
- எளிமை
- ஆராய்ந்து தெளிதல்
- அன்பு
- பொறுமை
- இரக்கம்
- அறம்

ஆகியனவாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net · www.CBSEtips.in

## சிறுவினா

**1. மனிதர்களிடம் குவிந்திருக்கும் பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவன யாவை?**

- அறிவு
- கருணை
- ஆசை
- அச்சம்
- அன்பு
- இரக்கம்
- சினம்
- நாணம்
- மேன்மை
- பொறாமை
- எளிமை
- நினைவு
- துணிவு
- இன்பம்
- துன்பம்
- பொறுமை
- கொள்கையைப் பின்பற்றுதல்
- சோர்வு
- மானம்
- அறம்
- வெறுப்பு
- மகிழ்ச்சி
- ஊக்கம்
- விருப்பம்
- வெற்றி
- பகை
- இளமை
- முதுமை
- மறதி
- ஆராய்ந்து தெளிதல்

ஆகியன மனிதர்களிடம் குவிந்திருக்கும் பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுகின்றது.

## சிந்தனை வினா

**மனிதர்கள் வளர்க்க வேண்டிய பண்புகளாகவும் விலக்க வேண்டிய பண்புகளாகவும் நீங்கள் கருதுவன யாவை?**

**வளர்க்க வேண்டிய பண்புகள்:**

- உண்மை
- சினம் கொள்ளாமை
- இரக்கம் கொள்ளுதல்
- நேர்மை
- தன்னம்பிக்கை
- சான்றோர்களைப் பின்பற்றுதல்
- கருணை
- முயற்சி
- மூத்தோரை மதித்தல்
- அறம்
- கடின உழைப்பு
- அறிவு
- ஏழைக்கு உதவுதல்

**விலக்க வேண்டிய பண்புகள்:**

- பொய்
- மறதி
- அச்சம்
- களவு
- சோம்பல்
- ஆசை
- சினம்
- ஆடம்பரம்
- புறம் கூறுதல்
- பொறாமை

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. திருப்பாவை என்னும் நூலைப் பாடியவர் ________.**

அ) ஆண்டாள் ஆ) சேசுராசா

இ) மாணிக்கவாசகர் ஈ) இறையரசன்

**விடை: அ) ஆண்டாள்**

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. திருவெம்பாவை நூலை இயற்றியவர் ________.

அ) ஆண்டாள் ஆ) சேகுராசா
இ) மாணிக்கவாசகர் ஈ) இறையரசன் **விடை: இ) மாணிக்கவாசகர்**

3. 'பெண்ணரசி' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைக்கும் சொல் ________.

அ) பெண் + அரசி ஆ) பெண்மை + அரசி
இ) பெண்ண + அரசி ஈ) பெண் + ணரசி **விடை: அ) பெண் + அரசி**

4. 'பொறாமை' என்னும் பொருள் தரும் சொல் ________.

அ) மதம் ஆ) கல்
இ) அழுக்காறு ஈ) நிறை **விடை: இ) அழுக்காறு**

5. 'இகல்' என்னும் சொல்லின் பொருள் ________.

அ) பொறாமை ஆ) கொள்கை
இ) பகை ஈ) நிலைபெற்ற **விடை: இ) பகை**

## குறுவினா

1. பாவை நூல்கள் யாவை?
   - திருப்பாவை
   - திருவெம்பாவை
   - கன்னிப்பாவை

2. பாவை நோன்பு என்றால் என்ன?
   - மார்கழி மாதம் பொழுது விடியும் முன்பே,
   - பெண்கள் தூக்கத்திலிருந்து எழுந்து பிற பெண்களையும் எழுப்பிக்கொண்டு,
   - ஆற்றுக்குச் சென்று நீராடி இறைவனை வழிபடும் வழக்கம் 'பாவை நோன்பு' ஆகும்.

3. திருப்பாவை - நூல் பற்றி குறிப்பிடுக.
   - திருமாலை வழிபடச் செல்லும் பெண்கள் பிற பெண்களை எழுப்புவதாக ஆண்டாள் பாடியநூல் திருப்பாவை ஆகும்.
   - ஆண்டாள் இந்நூலைப் பாடியுள்ளார்.

4. திருவெம்பாவை - பற்றிக் குறிப்பிடுக.
   - சிவபெருமானை வழிபடச் செல்லும் பெண்கள் பிற பெண்களை எழுப்புவதாகப் பாடப்பட்ட நூல் திருவெம்பாவை ஆகும்.
   - இந்நூலைப் பாடியவர் மாணிக்கவாசகர்.

5. எந்நூலைத் தழுவிக் 'கன்னிப்பாவை' நூலை இறையரசன் எழுதினார்?

திருப்பாவை நூலைத் தழுவிக் 'கன்னிப்பாவை' என்ற நூலை இறையரசன் எழுதினார்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## கவிதைப் பேழை

இயல் 9

# இளைய தோழனுக்கு

மு.மேத்தா

### கவிஞர் மீரா

- வானம்பாடி இயக்கக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்.
- புதுக்கவிதையைப் பரவலாக்கிய முன்னோடி.
- படைப்புகள்: கண்ணீர்ப் பூக்கள், ஊர்வலம், சோழநிலா, மகுடநிலா உள்ளிட்ட பல நூல்கள்.
- பணி: கல்லூரிப் பேராசிரியர்
- சிறப்பு: இவரின் ‘ஆகாயத்துக்கு அடுத்த வீடு’ என்னும் புதுக்கவிதை நூல் சாகித்திய அகாதெமி விருது பெற்றது.

### மனப்பாடப் பாடல்

**ஓடிவந்து கைகுலுக்க
ஒருவருமில்லையா?
உன்னுடன் நீயே
கைகுலுக்கிக் கொள்!**

**தூங்கி விழுந்தால்
பூமி உனக்குப்
படுக்கையாகிறது
விழித்து நடந்தால்
அதுவே உனக்குப்
பாதையாகிறது!**

**நீ
விழித்தெழும் திசையே
பூமிக்குக் கிழக்கு!
உன்
விரல்களில் ஒளிரும்
சூரியவிளக்கு!**

**நட!
நாளைமட்டுமல்ல
இன்றும்
நம்முடையதுதான்
நட!**

*ஆசிரியர் : மு.மேத்தா*

9 இயல் தமிழ்

## பாடநூல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **உன்னுடன் நீயே _________ கொள்.**
   அ) சேர்ந்து ஆ) பகை
   இ) கைகுலுக்கிக் ஈ) நட்பு **விடை: இ) கைகுலுக்கிக்**

2. **கவலைகள் _________ அல்ல.**
   அ) சுமைகள் ஆ) சுவைகள்
   இ) துன்பங்கள் ஈ) கைக்குழந்தைகள்
   **விடை: ஈ) கைக்குழந்தைகள்**

3. **'விழித்தெழும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.**
   அ) விழி + எழும் ஆ) விழித்து + எழும்
   இ) விழி + தெழும் ஈ) விழித் + தெழும்
   **விடை: ஆ) விழித்து + எழும்**

4. **'போவதில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.**
   அ) போவது + இல்லை ஆ) போ + இல்லை
   இ) போவது + தில்லை ஈ) போவது + தில்லை
   **விடை: அ) போவது + இல்லை**

5. **'படுக்கையாகிறது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________**
   அ) படுக்கை + யாகிறது ஆ) படுக்கையா + ஆகிறது
   இ) படுக்கையா + கிறது ஈ) படுக்கை + ஆகிறது
   **விடை: ஈ) படுக்கை + ஆகிறது**

6. **'தூக்கி + கொண்டு' என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _________**
   அ) தூக்கிகொண்டு ஆ) தூக்குக்கொண்டு
   இ) தூக்கிக்கொண்டு ஈ) தூக்குகொண்டு
   **விடை: இ) தூக்கிக்கொண்டு**

7. **'விழித்து + எழும்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்**
   அ) விழியெழும் ஆ) விழித்தெழும்
   இ) விழித்தமும் ஈ) விழித்துஎழும் **விடை: ஆ) விழித்தெழும்**

### குறுவினா

1. **கவலைகளைக் கவிஞர் எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?**
   கவலைகளைக் கவிஞர் கைக்குழந்தைகளாக உருவகப்படுத்துகிறார்.

2. **தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?**
   நெய்யாகவும் திரியாகவும் நீ மாறினால் தோல்வியும் உனக்குத் தூண்டுகோலாகும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## சிறுவினா

**பூமி எப்போது பாதையாகும்?**

- நீ சோர்ந்து தளர்ந்தால் பூமி உன் நோய்ப்படுக்கையாகும்.
- நீ பிடித்து நடந்தால் அந்த பூமியே உனக்குப் பாதையாகும்.

## சிந்தனை வினா

**வாழ்வில் உயர நம்பிக்கையைப் போன்று வேறு என்னென்ன பண்புகள் தேவை என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

வாழ்வில் உயர

- ஊக்கம்
- தன்னம்பிக்கை
- தளராத முயற்சி
- காலம் அறிந்து செயல்படுதல்
- செய்யும் செயலில் நேர்மை
- சொல்லும் சொல்லில் உண்மை
- நடுவுநிலைமை
- ஒருமைப்பாடு
- இரக்கம்
- அன்பு

ஆகிய பண்புகள் இருக்க வேண்டும் என்று நான் கருதுகின்றேன்.

# கூடுதல் வினாக்கள்

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **வானம்பாடி இயக்கக் கவிஞர்களில் ஒருவர் ________.**
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
   இ) மு.மேத்தா ஈ) கவிமணி **விடை: இ) மு.மேத்தா**

2. **சாகித்திய அகாதெமி விருது பெற்ற மேத்தாவின் நூல் ________.**
   அ) ஆகாயத்துக்கு அடுத்தவீடு ஆ) கண்ணீர்ப்பூக்கள்
   இ) ஊர்வலம் ஈ) மகுட நிலா
   **விடை: அ) ஆகாயத்துக்கு அடுத்தவீடு**

3. **நீ செல்லும் ________ உன்னை எதிர்க்கப் போவதில்லை.**
   அ) நாள் ஆ) பாதைகள்
   இ) கவலைகள் ஈ) திசை **விடை: ஆ) பாதைகள்**

4. **உன் விரல்களில் ________ விளக்காக ஒளி வீசும்.**
   அ) கதிரவன் ஆ) நிலா
   இ) வானவில் ஈ) விண்மீன் **விடை: அ) கதிரவன்**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## குறுவினா

1. **‘பாதைகள் உன்னை எதிர்க்கப் போவதில்லை’ என்று கவிஞர் மேத்தா கூறக் காரணம் யாது?**
   - செயல்படத் தொடங்கும் நாளை மட்டுமல்ல, இன்றும் நமது நாள்தான்.
   - உனது பாதங்கள் நடக்கத் தயாராக இருந்தால், நீ செல்லும் பாதைகள் உன்னை எதிர்க்கப் போவதில்லை என்கிறார் மேத்தா.

2. **எதனை உள்ளத்தில் தேங்க விட வேண்டாம் என கவிஞர் கூறுகிறார்?**
   கவலைகளை உள்ளத்தில் தேங்க விட வேண்டாமென்று கவிஞர் மேத்தா கூறுகிறார்.

3. **புத்துணர்வு ஊட்டுபவர் யார்?**
   - உன்னைப் பாராட்டி புத்துணர்வு ஊட்ட ஒருவரும் இல்லை என்று வருந்தாதே!
   - உன்னைவிட ஒருவரும் உன்னைப் பாராட்டி புத்துணர்வு ஊட்ட முடியாது.

4. **பூமியின் கிழக்கு என்று மு.மேத்தா எதனைக் குறிப்பிடுகிறார்?**
   நீ செயல்பட புறப்படும் திசை தான், இனி இந்தப் பூமிக்குக் கிழக்கு என்று மு.மேத்தா குறிப்பிடுகிறார்.

## சிறுவினா

**கவிஞர் மு.மேத்தா பற்றி நீவீர் அறிந்தவற்றை எழுதுக.**
- வானம்பாடி இயக்கக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்.
- புதுக்கவிதையைப் பரவலாக்கிய முன்னோடி.
- படைப்புகள் : கண்ணீர்ப்பூக்கள், ஊர்வலம், சோழ நிலா, மகுடநிலா.
- பணி : கல்லூரிப் பேராசிரியர்
- சிறப்பு : இவரின் ‘ஆகாயத்துக்கு அடுத்த வீடு’ என்னும் புதுக்கவிதை நூல் சாகித்ய அகாடமி விருது பெற்றது.

## கற்பவை கற்றபின்

1. **தன்னம்பிக்கை என்னும் தலைப்பில் கவிதை ஒன்றை எழுதி வகுப்பில் பகிர்க.**

சிப்பியின் தன்னம்பிக்கையால்
விளைந்தது முத்து
விதையின் தன்னம்பிக்கையால்
உயர்ந்தது விருட்சம்
ஆமையின் தன்னம்பிக்கையால்
விளைந்தது வெற்றி

மேகத்தின் தன்னம்பிக்கையால்
விளைந்தது மழை
உழவனின் தன்னம்பிக்கையால்
விளைந்தது நெற்பயிர்
மேதைகளின் தன்னம்பிக்கையால்
விளைந்தது கண்டுபிடிப்புகள்



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. 'நம்பிக்கையே வெற்றி' என்பதை உணர்த்தும் கதை ஒன்றனைத் தேடி எழுதி வருக.

நல்லூர் என்ற சிற்றூரில் கணபதி என்ற ஏழை விவசாயி வாழ்ந்து வந்தார். அவர் மிகவும் ஏழை. அக்கம் பக்கம் உள்ள வயல்களில் விவசாயக் கூலியாகச் செல்வான். ஆறு மாதங்களாக மழையில்லாததால் அக்கம் பக்கம் உள்ள வயல்களில் கணபதிக்கு வேலை இல்லை.

வீட்டில் உள்ள பொருட்களை ஒவ்வொன்றாக விற்று சில மாதம், அவரது குடும்பம் உணவு உண்டது. இனி வீட்டில் விற்பதற்குப் பொருள் இல்லை. வறுமையை நினைத்து கணபதி மனம் தளரவில்லை. வெற்று நிலத்தை உற்று நோக்கிய அவனுக்கு, நிலமே அவனை வாழவைக்கும் என்ற எண்ணம் தோன்றியது.

மண்ணைக் கையில் எடுத்தான். அவற்றிற்கு உருவம் கொடுத்து, வண்ணம் தீட்டினான். அதை அருகில் உள்ள நகரத்திற்கு கொண்டுபோய் சாலையோரமாக வைத்து விற்றான்.

வருமானம் பெருகியது. பெரிய மண்பொம்மை தயாரிக்கும் தொழிற்சாலையை ஆரம்பித்தான். இணையத்தில் தன் பொருட்களை விளம்பரப் படுத்தினான். அவனது வணிகம் இணையத்தில் பெருகியது. நம்பிக்கையால் கணபதி உயர்ந்து மகா கணபதி ஆனான்.

இயல் 9

உரைநடை உலகம்

# சட்டமேதை அம்பேத்கர்

## பாடநூல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் ________.

அ) இராதாகிருட்டிணன் ஆ) அம்பேத்கர்

இ) நெளரோஜி ஈ) ஜவஹர்லால் நேரு

**விடை: ஆ) அம்பேத்கர்**

2. பூனா ஒப்பந்தம்________ மாற்ற ஏற்படுத்தப்பட்டது.

அ) சொத்துரிமையை ஆ) பேச்சுரிமையை

இ) எழுத்துரிமையை ஈ) இரட்டை வாக்குரிமையை

**விடை: ஈ) இரட்டை வாக்குரிமையை**

**3. சமத்துவச் சமுதாயம் அமைய அம்பேத்கர் ஏற்படுத்திய இயக்கம் ______.**

அ) சமாஜ் சமாத சங்கம் ஆ) சமாத சமாஜ பேரவை

இ) தீண்டாமை ஒழிப்புப் பேரவை ஈ) மக்கள் நல இயக்கம்

**விடை: அ) சமாஜ் சமாத சங்கம்**

**4. அம்பேத்கரின் சமூகப் பணிகளைப் பாராட்டி இந்திய அரசு ______ விருது வழங்கியது.**

அ) பத்மஸ்ரீ ஆ) பாரத ரத்னா

இ) பத்மவிபூசண் ஈ) பத்மபூசன் **விடை: ஆ) பாரத ரத்னா**

## கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. புத்த சமயம் தொடர்பாக அம்பேத்கர் எழுதிய நூல் ______.

**விடை: புத்தரும் அவரின் தம்மமும்**

2. அம்பேத்கர் நிறுவிய அரசியல் கட்சியின் பெயர் ______.

**விடை: சுதந்திர தொழிலாளர் கட்சி**

3. பொருளாதாரப் படிப்பிற்காக அம்பேத்கர் ______ சென்றார். **விடை: இலண்டன்**

## குறுவினா.

**1. அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக்கொண்டார்?**

- பீமாராவ் ராம்ஜி படித்த பள்ளியில் மகாதேவ் அம்பேத்கர் என்ற ஆசிரியர் பீமாராவ் மீது அன்பும் அக்கறையும் கொண்டவராக விளங்கினார்.
- இதனால் பீமாராவ் என்னும் தம் பெயரை அம்பேத்கர் என்று மாற்றிக்கொண்டார்.

**2. தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர் மேற்கொண்ட பணிகள் இரண்டினை எழுதுக.**

- தீண்டாமைக்கு எதிராக, 'ஒடுக்கப்பட்ட பாரதம்' என்னும் இதழை 1927ஆம் ஆண்டு தொடங்கினார்.
- மேலும் 1930ஆம் ஆண்டு நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தை நடத்தி வெற்றி கண்டார்.

**3. வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளும் முன் அம்பேத்கர் கூறியது யாது?**

வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளும் முன்னர், "என் மக்களுக்காக நியாயமாக என்ன கிடைக்க வேண்டுமோ, அதற்காகப் போராடுவேன், அதே சமயத்தில் சுயராஜ்ஜிய கோரிக்கைகளை முழு மனதுடன் ஆதரிப்பேன்" என்று கூறினார்.

## சிறு வினா

**1. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?**

- மக்கள் ஆட்சி நடைபெற்ற நாடுகள் பலவற்றில் இருந்து இந்திய நடைமுறைக்குப் பொருந்தும் சட்டக் கூறுகளையும்,
- இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா, அயர்லாந்து முதலிய நாடுகளின் சட்டங்களையும் ஆராய்ந்து இந்திய நாட்டிற்கான சட்டத்தை அம்பேத்கர் உருவாக்கினார்.


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

2. அம்பேத்கரின் முதல் தேர்தல் வெற்றி குறித்து எழுதுக.

- 1935 ஆம் ஆண்டில் மாநில சுயாட்சி வழங்குவதற்கான இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
- ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோர் நலனைப் பாதுகாக்க தேர்தலில் போட்டியிட அம்பேத்கர் விரும்பினார்.
- சுதந்திர தொழிலாளர் கட்சியைத் தொடங்கி தேர்தலில் போட்டியிட்டார்.
- அவர் வெற்றி பெற்றதுடன் அவரின் கட்சி வேட்பாளர்கள் 15 பேரையும் வெற்றி பெறச் செய்தார்.

## நெடுவினா

பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக.

- "ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமையும் விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் வழங்கப்பட வேண்டும்" என்று இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் வலியுறுத்தினார்.
- இதன் விளைவாக, ஒரு தொகுதியில் பொது வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும், ஒடுக்கப்பட்ட சமூக வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும் அளிக்கும் இரட்டை வாக்குரிமை வழங்கப்பட்டது.
- ஆனால் இதை ஏற்க மறுத்த காந்தியடிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.
- இதன் விளைவாக 24.9.1931 இல் காந்தியடிகளும், அம்பேத்கரும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர்.
- அதன்படி, ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமை என்பதற்குப் பதிலாக பொது வாக்கெடுப்பில் தனித்தொகுதி வழங்குவது என முடிவு செய்யப்பட்டது.
- இந்த ஒப்பந்தமே பூனா ஒப்பந்தம் எனப்பட்டது.

## சிந்தனை வினா.

பாகுபாடில்லாத மக்கள் சமூகம் உருவாக நமது கடமைகளாக நீங்கள் கருதுவன யாவை?

- மதம், ஜாதி ஆகியவற்றை நினைக்காமல் அனைவரிடமும் சமத்துவமாக பழக வேண்டும்.
- நான் இந்த மதத்திற்கு உரியவன், இன்ன சாதிக்குரியவன் என்ற எண்ணத்தை முற்றிலும் தவிர்த்து, நான் ஒரு இந்தியன் என்றும் நினைப்பை உருவாக்க வேண்டும்.
- சமத்துவம், ஒருமைப்பாட்டு உணர்வு, சகிப்புத்தன்மை ஆகியவை ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இந்திய அரசியல் சாசனத்தின் தந்தை ________.
அ) மகாத்மா காந்தி ஆ) ஜவஹர்லால் நேரு
இ) அம்பேத்கர் ஈ) தந்தை பெரியார் **விடை: இ) அம்பேத்கர்**

2. அம்பேத்கர் பிறந்த ஆண்டு ________.
அ) 1891 ஆ) 1981
இ) 1918 ஈ) 1198 **விடை: அ) 1891**

3. ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வு பேரவை எனும் அமைப்பை நிறுவியவர் ________.
அ) மகாத்மா காந்தி ஆ) ஜவஹர்லால் நேரு
இ) அம்பேத்கர் ஈ) தந்தை பெரியார் **விடை: இ) அம்பேத்கர்**

4. ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வு பேரவை தொடங்கப்பட்ட ஆண்டு ________.
அ) 1920 ஆ) 1924
இ) 1981 ஈ) 1891 **விடை: ஆ) 1924**

5. முதலாவது வட்டமேசை மாநாடு நடைபெற்ற இடம் ________.
அ) அமெரிக்கா ஆ) இங்கிலாந்து
இ) இந்தியா ஈ) சீனா **விடை: ஆ) இங்கிலாந்து**

6. முதலாவது வட்டமேசை மாநாடு நடைபெற்ற ஆண்டு ________.
அ) 1930 ஆ) 1947
இ) 1935 ஈ) 1950 **விடை: அ) 1930**

7. ஒடுக்கப்பட்ட பாரதம் என்னும் இதழ் தொடங்கப்பட்ட ஆண்டு ________.
அ) 1920 ஆ) 1924
இ) 1927 ஈ) 1891 **விடை: இ) 1927**

8. அம்பேத்கர் மறைந்த ஆண்டு ________.
அ) 1956 ஆ) 1965
இ) 1957 ஈ) 1981 **விடை: அ) 1956**

9. அம்பேத்கருக்குப் ''பாரத ரத்னா விருது'' வழங்கப்பட்ட ஆண்டு ________.
அ) 1992 ஆ) 1990
இ) 1997 ஈ) 2010 **விடை: ஆ) 1990**

### கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ________ பீமாராவ் ராம்ஜியின் ஆசிரியர். **விடை: மகாதேவ் அம்பேத்கர்**

2. அம்பேத்கர் தமது பள்ளிக் கல்வியைத் தொடங்கிய இடம் ________.
**விடை: சதாரா**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

3. ____________ பரோடா மன்னர். **விடை: சாயாஜிராவ்**

4. அம்பேத்கரின் முதல் நூல் ____________.

**விடை: இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்**

5. அம்பேத்கருக்கு முனைவர் பட்டம் வழங்கிய பல்கலைக்கழகம் ____________.

**விடை: கொலம்பியா பல்கலைக்கழகம்**

## குறுவினா

**1. அம்பேத்கர் எங்கு எப்போது பிறந்தார்?**

அம்பேத்கர் 14.4.1891 இல் மகாராட்டிர மாநிலத்திலுள்ள இரத்தினகிரி மாவட்டத்தில் அம்பவாதே என்னும் ஊரில் பிறந்தார்.

**2. அம்பேத்கரின் பெற்றோர் யாவர்?**

- தந்தை - ராம்ஜி சக்பால்
- தாய் - பீமாபாய்

**3. அம்பேத்கர் நூலகத்தை எவ்வாறு பயன்படுத்தினார்?**

- அம்பேத்கர் இலண்டனில் இருந்த நூலகங்களில் தமது பெயரைப் பதிவு செய்து கொண்டார்.
- நூலகம் திறக்கும் போது முதல் ஆளாக நுழைந்து, மூடும்போது கடைசி ஆளாக வெளியேறுவார்.

**4. அம்பேத்கரின் பொன்மொழி யாது?**

நான் வணங்கும் தெய்வங்கள் மூன்று.

- முதல் தெய்வம் அறிவு.
- இரண்டாவது தெய்வம் சுயமரியாதை.
- மூன்றாவது தெய்வம் நன்னடத்தை.

**5. எந்தெந்த நாட்டின் சட்டங்களை ஆராய்ந்து இந்திய நாட்டின் சட்டம் இயற்றப்பட்டது?**

- இங்கிலாந்து
- ஐக்கிய அமெரிக்கா
- அயர்லாந்து
- ஆஸ்திரேலியா
- கனடா
- சோவியத் யூனியன்
- ஜெர்மனி
- தென் ஆப்பிரிக்கா

## சிறுவினா

**1. இந்திய அரசியலமைப்புச் சட்ட வரைவுக் குழுவின் உறுப்பினர்கள் யாவர்?**

**தலைவர்**:

அம்பேத்கர்



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**உறுப்பினார்கள்:**

- கோபால்சாமி
- அல்லாடி கிருஷ்ணமூர்த்தி
- கே. எம்.முன்ஷி
- சையது முகமது சாதுல்லா
- மாதவராவ்
- டி.பி.கைதான்

**2. இரட்டைமலை சீனிவாசன் என்பவர் யார்? (அல்லது) முதலாவது வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொண்ட இந்தியர்கள் யாவர்?**

- இந்தியர்களுக்கு அரசியல் உரிமை வழுங்குவது பற்றி முடிவு செய்ய 1930 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இங்கிலாந்தில் முதலாவது வட்டமேசை மாநாடு நடைபெற்றது.
- ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாக அம்பேத்கருடன் தமிழகத்தைச் சேர்ந்த ராவ் பகதூர் இரட்டைமலை சீனிவாசனும் கலந்து கொண்டார்.

## கற்பவை கற்றபின்

**1. சமூகச் சீர்திருத்தத்திற்கு உழைத்த பிற தலைவர்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**

- அயோத்திதாச பண்டிதர்
- மகாத்மா காந்தி
- தந்தை பெரியார்
- நெல்சன் மண்டேலா
- லெனின்
- சௌந்தர பாண்டியன்
- ராஜாராம் மோகன்ராய்
- அன்னா ஹசாரே
- காமராசர்
- சிங்காரவேலார்
- பா.ஜீவானந்தம்

**2. அம்பேத்கரின் பண்புகளாக நீங்கள் உணர்ந்தவற்றை எழுதுக.**

- நூல்களைப் படிப்பதில் அம்பேத்கர் மிகுந்த விருப்பமுடையவர். நூலகத்திற்கு முதல் ஆளாகச் சென்று இறுதியாக வருவார்.
- கல்வி ஆர்வம் மிக்கவர். பட்டங்கள் பல பெற்றவர்.
- ஒடுக்கப்பட்டோர் நலனுக்காகப் போராடியவர்.
- ஒடுக்கப்பட்ட மக்கள் மீது கருணை உள்ளம் கொண்டவர்.
- சாதி என்னும் கொடிய வழக்கத்தை ஒழிக்க நினைத்த சீர்திருத்தவாதி.

விரிவானம்

இயல் 9

# பால் மனம்

-கோமகள் (இராஜலட்சுமி)

## பாடநூல் வினாக்கள்

**குழந்தை கிருஷ்ணாவின் பண்புநலன்களைப் பற்றித் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

'பால் மனம்' எனும் இக்கதை அ. வெண்ணிலா என்பவர் தொகுத்த 'மீதமிருக்கும் சொற்கள்' என்னும் நூலில் இடம் பெறுகின்றது. குழந்தை கிருஷ்ணாவின் பண்புகளை இனி காண்போம்.

**கிருஷ்ணாவின் செயல்கள்:**

ராமுவின் அண்ணன் மகள் கிருஷ்ணா. அவள் அனைவரின் மீதும் அன்பும் இரக்கமும் உள்ளவள். ஒருநாள் தெரு நாயைப் பார்த்து பரிதாபப்படுகின்றாள்.அம்மா அதைத் தொடக்கூடாது, அப்பா திட்டுவார்கள் என்றாள். அப்பா சொன்னால் தொடலாமா? என்றாள் கிருஷ்ணா. தெருவில் கீரை கொண்டு வரும் பாட்டியைக் கண்டதும், அவளைத் தொடப் போகிறாள், அவள் உடம்பு சரியில்லாததால் அவளைத் தொடக்கூடாது என்றாள் அம்மா. சித்தப்பா, அப்பாவுக்கு உடம்பு சரியில்லாத போது நீங்கள் மட்டும் தொடலாமா? என்றாள். கிருஷ்ணா அடுத்து கைவண்டி இழுத்து வரும் ஒருவரைப் பார்த்து, அவரிடம் செருப்பு இல்லை உங்கள் செருப்பைக் கொடுங்கள் சித்தப்பா என்றாள். தன் தம்பிக்காக வைத்திருந்த பாலை எடுத்து கிருஷ்ணா ஆட்டுக்குட்டிக்குப் புகட்டுகிறாள். அம்மா என்ன மகள்? இப்படி இருக்கிறாளே! என்று புலம்புகிறார். ராமு, கிருஷ்ணாவின் மனிதநேயத்தைக் கண்டு வியக்கிறார்.

**மனமாற்றம்:**

ராமு படித்து முடித்துவிட்டு வேலைக்கு சென்று, ஐந்து ஆண்டுகள் கழித்து மீண்டும் திரும்புகிறார். இப்போது கிருஷ்ணாவிற்கு எட்டு வயது. அண்ணன் அண்ணியால் கிருஷ்ணா முற்றிலுமாக மாறி விட்டாள். சித்தப்பா, தம்பி தெரு நாய்க்குப் பால் சாதத்தைப் போடுகிறான் பாருங்க, டாமிக்கு தான் போடனும் என்கிறது. பிறகு ஆட்டுக்குட்டி மீது கல்லெடுத்து வீசுகிறாள். சாலை வேலை செய்யும் கூலியாள் தண்ணீர் கேட்டவுடன் கொடுக்க மறுக்கிறாள். கிருஷ்ணாவின் மன மாற்றத்தை ராமு உணர்கிறார்.

**ஏமாற்றம்:**

குழந்தைகளின் மனதை அவர்கள் வளர வளர இந்தச் சமுதாயமும் அவர்களின் பெற்றோரும் மாற்றுகின்றனர். இரக்க குணம் இல்லாமல் அவர்களை வளர்க்கும் செயல் ராமுவுக்கு ஏமாற்றத்தைத் தந்தது. நான் பார்த்த இரக்கமான கிருஷ்ணா இப்போது முற்றிலும் மாறி விட்டாள் என்று நொந்து கொண்டார்.

**முடிவுரை:**

கடவுளின் உறுப்பினராக குழந்தை பூமியில் பிறக்கிறது. ஆனால் மனித நேயம் இல்லாத மனிதனின் உறுப்பினனாக உலகத்தை விட்டு நீங்குகிறது.

## கற்பவை கற்றபின்

**குழந்தைகளின் நற்பண்புகளாகப் 'பால் மனம்' கதையின் வழி நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.**

- அஃறிணை உயிர்கள் மீது அன்பு காட்ட வேண்டும்.
- உடல் நலக் குறைவாக இருப்பவரிடம் நலம் விசாரிக்க வேண்டும்.
- துன்பப்படும் ஏழைகளுக்கு உதவ வேண்டும்.
- பசியில் வாடி இருப்பவர்களுக்கு உணவு தரவேண்டும்.

## இயல் 9

### கற்கண்டு

# அணி இலக்கணம்

## பாடநூல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **பிறிது மொழிதல் அணியில் ________ மட்டும் இடம்பெறும்.**

அ) உவமை ஆ) உவமேயம்
இ) தொடை ஈ) சந்தம்

**விடை: அ) உவமை**

2. **இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையையும் வேற்றுமையையும் கூறுவது ________ அணி.**

அ) ஒற்றுமை ஆ) வேற்றுமை
இ) சிலேடை ஈ) இரட்டுற மொழிதல்

**விடை: ஆ) வேற்றுமை**

3. **ஒரே செய்யுளை இரு பொருள்படும்படி பாடுவது ________ அணி.**

அ) பிறிதுமொழிதல் ஆ) இரட்டுறமொழிதல்
இ) இயல்பு நவிற்சி ஈ) உயர்வு நவிற்சி

**விடை: ஆ) இரட்டுறமொழிதல்**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

4. இரட்டுறமொழிதல் அணியின் வேறு பெயர் __________ அணி.

அ) பிறிதுமொழிதல் ஆ) வேற்றுமை

இ) உவமை ஈ) சிலேடை **விடை: ஈ) சிலேடை**

**சிறு வினா.**

1. பிறிதுமொழிதல் அணியை விளக்கி எடுத்துக்காட்டு தருக.

**இலக்கணம்:**

உவமையை மட்டும் கூறி, பொருளைப் பெற வைப்பது பிறிதுமொழிதல் அணி ஆகும்.

**சான்று:**

"கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து"

**விளக்கம்:**

தேர் கடலில் ஓடாது, கப்பல் நிலத்தில் ஓடாது என்ற உவமையை மட்டும் கூறி, எதுவும் தமக்குரிய இடத்தில் இருப்பதே நல்லது என்ற பொருளைப் பெற வைத்ததால், இது பிறிதுமொழிதல் அணி ஆயிற்று.

2. வேற்றுமை அணி என்றால் என்ன?

இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி, பிறகு அவற்றுள் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணி எனப்படும்.

3. இரட்டுறமொழிதல் அணி எவ்வாறு பொருள் தரும்?

ஒரு சொல் அல்லது தொடர் இரு பொருள் தருமாறு அமைவது இரட்டுறமொழிதல் ஆகும்.

**சான்று:**

தாமரை

**விளக்கம்:**

தாமரை - ஒரு வகை மலர், தாவும்மான்.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வேற்றுமையணியைச் சான்றுடன் விளக்குக.

**இலக்கணம்:**

இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி பிறகு அவற்றுள் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணி எனப்படும்.



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**சான்று:**

தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

**விளக்கம்:**

தீயும் நாவும் சுடும் தன்மையில் ஒப்புமையாகக் கூறப்பட்ட பொருள்கள்.

அவற்றுள் 'ஆறாதே நாவினால் சுட்ட வடு' என வேறுபடுத்தி கூறியிருப்பதால், இது வேற்றுமை அணி ஆயிற்று.

**2. இரட்டுற மொழிதல் அணியை விளக்குக.**

**இலக்கணம்:**

ஒரு சொல் அல்லது தொடர் இரு பொருள் தருமாறு அமைவது இரட்டுறமொழிதல் அணி ஆகும்.

**சான்று:**

"குளத்திலும் காட்டிலும் தாமரை உள்ளது."

**விளக்கம்:**

குளத்திலும் காட்டிலும் தாமரைமலர் உள்ளது.
குளத்திலும் காட்டிலும் தாவும் மான் உள்ளது.
இவ்வாறு இரு பொருள்பட வருவதால் இரட்டுறமொழிதல் ஆகியது.

## கற்பவை கற்றபின்

**திருக்குறளில் அணிகள் இடம்பெற்றுள்ள குறட்பாக்களுள் ஐந்தனைக் கண்டறிந்து அவற்றில் இடம்பெற்றுள்ள அணிகளின் பெயர்களை எழுதுக.**

1. கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.
**பயின்று வரும் அணி: பிறிது மொழிதல் அணி**

2. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.
**பயின்று வரும் அணி: உவமை அணி**

3. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலம்தீமை யால்திரிந் தற்று.
**பயின்றுவரும் அணி: உவமை அணி**

4. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு
பொய்யா விளக்கே விளக்கு.
**பயின்று வரும் அணி: சொற்பொருள் பின்வருநிலையணி**

5. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.
**பயின்று வரும் அணி: வஞ்சப்புகழ்ச்சி அணி**

## மொழியை ஆள்வோம்

**2. கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

**நம்பிக்கையே உயர்வு**

அனைவருக்கும் இனிய வணக்கம். நம்பிக்கையே உயர்வு என்னும் தலைப்பில் சில நிமிடங்கள் உங்கள் முன் பேசுகின்றேன். கை இல்லாதவன் கூட நம்பிக்கையோடு இருந்தால், இந்த உலகை ஆளலாம். தன்னம்பிக்கை கொண்ட ஒரு சிலரின் வரலாறு தான் நாளைய சரித்திரம் என்று விவேகானந்தர் கூட கூறியுள்ளார். தன்னம்பிக்கை கொண்ட 100 இளைஞர்களைக் கொடுங்கள். இந்த நாட்டையே மாற்றிக் காட்டுகிறேன் என்றார் சுவாமி விவேகானந்தர்.

ஆம்! தன்னம்பிக்கைக்கு அவ்வளவு சக்தி உள்ளது. விதை நம்பிக்கைதான் விருட்சம் ஆனது. மேகத்தின் நம்பிக்கைதான் மழையானது. ஆபிரகாம் லிங்கன் பலமுறை தோல்வி அடைந்த போதும் நம்பிக்கையை விடாமல் தேர்தலைச் சந்தித்துக் கொண்டே இருந்தார். ஒருநாள் அவருடைய நம்பிக்கைக்கு வெற்றி கிடைத்தது. அதிபராக உயர்ந்தார்.

நம்பிக்கையே ஒருவரை உயர்வடையச் செய்யும் என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி! வணக்கம்!

### நல்வாழ்விற்குத் தேவையான நற்பண்புகள்

வணக்கம். நல்வாழ்விற்குத் தேவையான நற்பண்புகள் என்பதைப் பற்றி சில நிமிடங்கள் உங்கள் முன் பேசுகின்றேன்.

அன்பு, தியாகம், பொறுமை, சினம் கொள்ளாமை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, ஒருமைப்பாட்டு உணர்வு, உண்மை பேசுதல், விடாமுயற்சி முதலிய நற்பண்புகள் ஒவ்வொரு மனிதனிடமும் இருக்க வேண்டும். அதுதான் நல்வாழ்வைத் தரும்.

உண்மை காந்தியடிகளை உயர்த்தியது. அப்துல் கலாமின் குணம் அவரைக் குடியரசுத் தலைவராக உயர்த்தியது. எனவே நாம் ஒவ்வொருவரும் நல்ல பண்புகளை நிச்சயம் கற்றுக்கொள்ள வேண்டும். நற்பண்புகள் வழியே நாம் நடந்தால் நம் வாழ்வு நல்வாழ்வாக மாறும். இல்லை என்றால் நம் வாழ்வு சோதனைக்கு உள்ளாகும்.

எனவே நற்பண்புகள் கொண்டு நல்வாழ்வு வாழ்வோம் என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி! வணக்கம்!


Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


## கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.

1. சிறுமி __________ (தனது/தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள். **விடை: தனது**
2. அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகத் __________ (தனது / தமது) உழைப்பை நல்கினார். **விடை: தனது**
3. உயர்ந்தோர் __________ (தம்மைத்தாமே / தன்னைத்தானே) புகழ்ந்து கொள்ள மாட்டார்கள். **விடை: தம்மைத்தாமே**
4. இவை __________ (தான்/தாம்) எனக்குப் பிடித்த நூல்கள். **விடை: தாம்**
5. குழந்தைகள் __________ (தன்னால் / தம்மால்) இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்கின்றனர். **விடை: தம்மால்**

## தொடரில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக

முதியவர் ஒருவர் தனது கால்களில் செருப்பில்லாமல் தன்னால் இழுக்க முடியாத வண்டியை இழுத்துச் சென்றார். அதனைக் கண்ட கிருஷ்ணா தம்முடைய சித்தப்பாவிடம் அவருடைய காலணிகளைக் கொடுக்குமாறு கூறினாள். அவரிடம் விலையுயர்ந்த காலணிகள்தான் இருந்தன. எனவே, தனது வேறு காலணிகளைப் பிறகு தருவதாகச் சித்தப்பா கூறினார்.

**விடை:**

முதியவர் ஒருவர் தனது கால்களில் செருப்பில்லாமல் தன்னால் இழுக்க முடியாத வண்டியை இழுத்துச் சென்றார். அதனைக் கண்ட கிருஷ்ணா **தன்னுடைய** சித்தப்பாவிடம் அவருடைய காலணிகளைக் கொடுக்குமாறு **கூறினான்**. அவரிடம் விலையுயர்ந்த காலணிகள்தான் இருந்தன. எனவே, **தமது** வேறு காலணிகளைப் பிறகு தருவதாகச் சித்தப்பா கூறினார்.

## கட்டுரை எழுதுக.

### உழைப்பே உயர்வு

**முன்னுரை:**

ஒருவரை வாழ்வில் உயர்த்துவது அவரது உழைப்பு தான். உழைப்பு தன்னையும் தன் நாட்டையும் உயர்த்தும். உழைப்பின் சிறப்பினைக் காண்போம்.

**உழைப்பின் பயன்:**

நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் மிகுந்த ஈடுபாட்டுடன் செய்தால் மட்டுமே வாழ்வில் முன்னேற முடியும். இறைவனால் முடியாத காரியம் கூட உழைப்பாலும் முயற்சியாலும் செய்ய முடியும் என்கிறது திருக்குறள். உழைப்பால் உடலும் உள்ளமும் வலுப்பெறுகிறது.

**உழைப்பின் சிறப்பு:**

உழைப்பே உயர்வு தரும் என்பது பழமொழி. உழைப்பால் வரும் பொருளே என்றும் நிலைத்து நிற்கும். விலங்குகளும் பறவைகளும் தமக்குத் தேவையான உணவைத் தாமே உழைத்து தேடிப் பெற்றுக் கொள்கின்றன. உழைப்பில்லாமல் வரும் செல்வத்தை விட்டுவிட்டு உண்மையான உழைப்பால் வரும் செல்வத்தை நாம் அனுபவிக்க வேண்டும்.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**உழைப்பால் உயர்ந்தவர்கள்:**

தாமஸ் ஆல்வா எடிசன், ஐன்ஸ்டின், ஜி.டி. நாயுடு, டாக்டர் அப்துல் கலாம் ஆகிய எண்ணற்ற அறிஞர்கள் தம்முடைய கடின உழைப்பால் வாழ்வில் முன்னேறி இருக்கிறார்கள் என்பதை அவர்களின் வாழ்க்கை வரலாறு நமக்கு உணர்த்துகிறது.

**முடிவுரை:**

உழைப்பின் உயர்வினை உணர்ந்து, நாம் அனைவரும் நல்வழியில் கடின உழைப்பு செய்து வாழ்வில் முன்னேற வேண்டும்.

## மொழியோடு விளையாடு

**பின்வரும் வினாக்களைப் படித்து இருவினாக்களுக்கு ஒரு விடை தருக**

**எ.கா:** குழம்பும் கூட்டும் மணப்பது ஏன்?
குருதி மிகுதியாய்க் கொட்டுவது ஏன்?
**விடை: பெருங்காயத்தால்**

1. ஆடை நெய்வது எதனாலே? அறிவைப் பெறுவது எதனாலே?
   **விடை: நூல்**
2. மாடுகள் வைக்கோல் தின்பது எங்கே? மன்னர்கள் பலரும் இறந்தது எங்கே?
   **விடை: போர்**
3. கதிரவன் மறையும் நேரம் எது? கழுத்தில் அழகாய்ச் சூடுவது எது?
   **விடை: மாலை**
4. வானில் தேய்ந்து வளர்வது எது? வாரம் நான்கு கொண்டது எது?
   **விடை: திங்கள்**

## நிற்க அதற்குத் தக....

### கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| குறிக்கோள் | Objective | அரசியலமைப்பு | Constitution |
| பல்கலைக்கழகம் | University | வட்ட மேசை மாநாடு | Round Table Conference |
| நம்பிக்கை | Confidence | | |
| ஒப்பந்தம் | Agreement | இரட்டை வாக்குரிமை | Double Voting |
| முனைவர் பட்டம் | Doctorate | | |

## இணையத்தில் காண்க

**இந்திய அரசியலமைப்பின் சிறப்புகள் குறித்து இணையத்தில் தேடி எடுத்து எழுதுக.**

- பாராளுமன்ற முறை.
- தனித்தன்மையுடன் நெகிழ்வற்ற மற்றும் நெகிழ்ச்சியுடைமை கொண்ட அரசியலமைப்பு.

Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

- அரசை நெறிமுறைப்படுத்தும் கொள்கைகள்.
- சக்தி வாய்ந்த மைய அமைப்புடன் கூடிய கூட்டாட்சி.
- அனைவருக்கும் வாக்குரிமை.
- சுதந்திரமான நீதித்துறை.
- சமயச்சார்பற்ற அரசு.
- ஒற்றைக் குடியுரிமை.
- அடிப்படை உரிமைகள் கடமைகள்.
- நீதித்துறையின் ஆய்வு அதிகாரம்.
- உலகிலேயே எழுதப்பெற்ற மிகவும் நீளமான அரசியலமைப்பு

ஆகிய சிறப்புகள் கொண்டது நம் அரசியல் அமைப்பாகும்.

## அலகுத் தேர்வு

### இயல் – 9

நேரம்: 30 நிமிடம் மதிப்பெண்கள்: 20

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (2)

1. **திருப்பாவை என்னும் நூலைப் பாடியவர் _________.**

   அ) ஆண்டாள் ஆ) சேசுராசா இ) மாணிக்கவாசகர் ஈ) இறையரசன்

2. **கவலைகள் _________ அல்ல.**

   அ) சுமைகள் ஆ) சுவைகள் இ) துன்பங்கள் ஈ) கைக்குழந்தைகள்

**ஆ. பொருத்துக.** (4)

3. நிறை – பொறுமை
4. பொறை – விருப்பம்
5. மதம் – மேன்மை
6. மையல் – கொள்கை

**இ. குறுவிடை தருக.** (8)

7. பாவை நூல்கள் யாவை?
8. கவலைகளைக் கவிஞர் எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
9. அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக் கொண்டார்?
10. வேற்றுமை அணி என்றால் என்ன?

**ஈ. சிறுவிடை தருக.** (6)

11. பூமி எப்போது பாதையாகும்?
12. அம்பேத்கரின் முதல் தேர்தல் வெற்றி குறித்து எழுதுக.

## தொகுத்தறித் மதிப்பீடு - 1

### எட்டாம் வகுப்பு - தமிழ் (இயல் 1 - 3)

நேரம்: 2.00 மணி மதிப்பெண்கள்: 60

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 8×1=8

1. **இயற்கையைப் போற்றுதல் தமிழர் ________ .**

அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

2. **ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ________ .**

அ) மார்பு ஆ) கழுத்து இ) தலை ஈ) மூக்கு

3. **செஞ்சொல் மாதரின் வள்ளைப் பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது ________ .**

அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு

4. **பருத்தி + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.**

அ) பருத்திஎல்லாம் ஆ) பத்தியெல்லாம்
இ) பருத்தெல்லாம் ஈ) பருத்திதெல்லாம்

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.** 2×1=2

5. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ________.

6. விலங்கொடு ________ அனையர் ________ கற்றோரோடு ஏனை யவர்.

**இ) பொருத்துக.** 4×1=4

7. நடந்தது - முற்றெச்சம்
8. பேசிய - குறிப்புப் பெயரெச்சம்
9. எடுத்தனன் உண்டான் - பெயரெச்சம்
10. பெரிய - வினையெச்சம்

**ஈ) மனப்பாடப்பகுதி. (செய்யுள் வடிவில் எழுதுக)** 4+2=6

11. ‘வாழ்க நிரந்தரம்‘ எனத் தொடங்கி ‘என்றென்றும் வாழியவே‘ வரையுள்ள தமிழ்மொழி வாழ்த்துப்பாடலை எழுதுக.

12 ‘கொளல்‘ – என முடியும் திருக்குறளை எழுதுக.

**உ) கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 8×1=8

13. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) கோழி ________ (கூவும் / கொக்கரிக்கும்)
ஆ) சோறு ________ (தின் / உண்)

14. வண்ணமிடப்பட்டுள்ள எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக.

அ) உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16 ________
ஆ) உலக இயற்கைச் சீரழிவுத் தடுப்பு நாள் அக்டோபர் 5 ________

15. உவமைத் தொடரைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.

குன்றின் மேலிட்ட விளக்கைப் போல ________

தொகுத்தறி வினாத்தாள்கள்
தமிழ்

16. கீழ்க்காண்பவற்றுள் ஒரு சொல்லை எழுத்து ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களுடன் இணைத்துப் புதிய சொற்கள் நான்கினை உருவாக்குக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா | தேன் | மலர் | செம்மை | சிட்டு | கனி |
| குருவி | இலை | காய் | கூடு | முட்டை | மரம் |

17. கலைச்சொல் தருக.
Ornament

**ஊ) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.** 2×1=2

உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய முயற்சியினால் வெவ்வேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன.

18. எதன் முயற்சியினால் எழுத்துகள் வெவ்வேறு ஒலிகளாகின்றன?
19. எழுத்துப்பிறப்பின் முதல் முயற்சி யாது?

**எ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடையளிக்க.** 6×2=12

20. பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?
21. நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?
22. பகைவர்களிடத்தில் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறை யாது?
23. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.
24. தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றில் நான்கினை எழுதுக.
25. எதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்?
26. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
27. இன்றைய கல்வியின் நிலைபற்றி திரு.வி.க. கூறுவன யாவை?
28. எழுவாய் வேற்றுமையை விளக்குக.
29. உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன?

**ஏ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க.** 3×3=9

29. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?
30. உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
31. நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
32. நீர்நிலைகள் குறித்து சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.
33. நோய் பெருகக் காரணங்கள் யாவை?
34. தமிழ்வழிக் கல்வி பற்றி திரு.வி.க. கூறுவனவற்றை எழுதுக.

**ஐ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.** 3×5=15

35. அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

**(அல்லது)**



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

ஆ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

36. அ) தமிழில் ஒரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.

37. அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை ஒன்று எழுதுக.

முன்னுரை-நோய் வரக்காரணங்கள்-நோய் தீர்க்கும் வழிமுறைகள்-வருமுன் காத்தல்-உணவும் மருந்தும்-உடற்பயிற்சியின் தேவை - முடிவுரை.

## தொகுத்தறித் மதிப்பீடு - 2

### எட்டாம் வகுப்பு - தமிழ் (இயல் 1 - 6)

நேரம்: 2.00 மணி | மதிப்பெண்கள்: 60

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **4×1=4**

1. **மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ________.**
   அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) அழி
2. **'நீளுழைப்பு' - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.**
   அ) நீளு + உழைப்பு ஆ) நீண் + உழைப்பு
   ஈ) நீள் + அழைப்பு ஈ) நீள் + உழைப்பு
3. **'மலர் பானையை வனைந்தாள்' - இத்தொடர் ________ பொருளைக் குறிக்கிறது.**
   அ) ஆக்கல் ஆ) அழித்தல் இ) கொடை ஈ) அடைதல்
4. **பசியால் வாடும் ________ உணவளித்தல் நமது கடமை.**
   அ) பிரிந்தவர்க்கு ஆ) அலந்தவர்க்கு
   இ) சிறந்தவர்க்கு ஈ) உயர்ந்தவருக்கு

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.** **2×1=2**

5. புற உலக ஆராய்ச்சிக்கு ________ கொழுக்கொம்பு போன்றது.
6. சுங்குடிச் சேலைகளுக்குப் புகழ்பெற்ற ஊர் ________.

**இ) பொருத்துக.** 4×1=4

7. மட்பாண்டம் - தோன்றல் விகாரம்
8. மரவேர் - இயல்புப் புணர்ச்சி
9. மணிமுடி - கெடுதல் விகாரம்
10. கடைத்தெரு - திரிதல் விகாரம்

**ஈ) மனப்பாடப்பகுதி. (செய்யுள் வடிவில் எழுதுக)** 4+2=6

11. 'ஒன்றே குலம்' எனத்தொடங்கி 'பகவற்குஅது ஆமே' வரையுள்ள ஒன்றே குலப்பாடலை எழுதுக.
12. 'விடல்' – என முடியும் திருக்குறளை எழுதுக.

**உ) கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 6×1=6

13. கொடுக்கப்பட்டுள்ள தொடரின் வகையைக் கண்டறிந்து எழுதுக.
    கடமையைச் செய்.
14. பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை அகர வரிசைப்படுத்துக.
    படகம், தவில், கணப்பறை, பேரியாழ், உறுமி, உடுக்கை, தவண்டை, பிடில், நாகசுரம், மகுடி.
15. பின்வரும் மரபுத் தொடரைத் தொடரில் அமைத்து எழுதுக.
    ஆயிரங்காலத்துப் பயிர்
16. சரியான எதிர்மறைச் சொற்களைக்கொண்டு நிரப்புக.
    மணிமேகலை செல்வ வாழ்வை விரும்பியவள் ________.
17. கலைச்சொல் தருக.
    அ) Punctuation ஆ) Integrity
18. தமிழ் எண் எழுதுக.
    அ) முப்பத்தாறு ஆ) அறுபத்துநான்கு

**ஊ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடையளிக்க.** 6×2=12

19. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
20. மழைச்சோறு பாடலில் உழவர் படும் வேதனை எவ்வாறு கூறப்படுகிறது?
21. இவ்வுலகம் யாரால் இயங்குவதாகத் திருக்குறள் கூறுகிறது?
22. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?
23. நோயின்றி வாழ நாம் என்னென்ன வழிகளைக் கையாளலாம்?
24. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
25. மூவேந்தர்களின் காலம் குறித்து எழுதுக.
26. திரைத்துறையில் எம்.ஜி.ஆரின் பன்முகத் திறமைகள் யாவை?
27. வல்லினம் மிகாத் தொடர்கள் ஐந்தனை எழுதுக.
28. தளை என்பது யாது?



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com

**ஏ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க.** 3×3=9

29. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?
30. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
31. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறார்?
32. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.
33. கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.
34. பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணி வழங்கும் திட்டத்துக்கு அடிப்படையாக அமைந்த நிகழ்வை எழுதுக.

**ஏ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.** 3×5=15

35. அ) காப்பியக் கல்வி குறித்துத் திரு.வி.க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) வாழும் முறை, சமத்துவம் ஆகியன பற்றி அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக.

36. அ) ‘வெட்டுக்கிளியும் சருகுமானும்‘, கதையைச் சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) அறிவுசார் ஔவையார் – என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

37. அ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) கொடுக்கப்பட்ட தலைப்புக்கு கட்டுரை ஒன்று எழுதுக.
‘நான் விரும்பும் கவிஞர்’.

## அரசு மாதிரி வினாத்தாள் - 2019

### எட்டாம் வகுப்பு - தமிழ்

காலம் அளவு: 15 நிமிடங்கள் + 2 மணி — மொத்த மதிப்பெண்கள்: 60

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 4×1=4

1. **மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் _______.**

அ) வைப்பு ஆ) கடல்
இ) பரவை ஈ) ஆழி

தொகுத்தறி வினாத்தாள்கள் தமிழ்

2. கயிறு + கட்டில் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.
அ) கயிற்றுக்கட்டில் ஆ) கயிர்க்கட்டில்
இ) கயிறுக்கட்டில் ஈ) கயிற்றுகட்டில்

3. 'பெருஞ்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) பெரிய + செல்வம் ஆ) பெருஞ் + செல்வம்
இ) பெரு + செல்வம் ஈ) பெருமை + செல்வம்

4. ஒரே செய்யுளை இருபொருள்படும்படி பாடுவது ________ அணி.
அ) பிறிது மொழிதல் ஆ) இரட்டுற மொழிதல்
இ) இயல்பு நவிற்சி ஈ) உயர்வு நவிற்சி

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.** 2×1=2

5. கடைச்சங்ககாலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ________ என அழைக்கப்பட்டன.
6. 'மாங்கனி நகரம்' என்று அழைக்கப்படும் நகரம் ________.

**இ) பொருத்துக.** 4×1=4

7. இயற்கை ஓவியம் - வினையெச்சம்
8. நடந்து - பெரியபுராணம்
9. படித்த - பத்துப்பாட்டு
10. இயற்கை அன்பு - பெயரெச்சம்

**ஈ) அடிபிறழாமல் எழுதுக:**

11. 'ஒன்றே குலமும்...' எனத் தொடங்கும் திருமூலர் பாடல். 1×4=4
12. 'படும்' என முடியும் திருக்குறள். 1×2=2

**உ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 6×1=6

13. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.
சுவர் (எழுப்பினான், கட்டினான்)
14. மல்லிகைப்பூ மணம் மிக்கது. (உணர்ச்சித் தொடராக மாற்றுக).
15. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பழமொழி
(சரியான நிறுத்தக்குறி இடுக).
16. நான் நாளை ஊருக்குச் செல்கிறேன். (பிழையைத் திருத்தி எழுதுக).
17. தமிழ் எண்களை எழுதுக.
அ) முப்பது ஐந்து - ஆ) ஐம்பது -
18. பின்வரும் தொடரில் உள்ள சந்திப்பிழைகளைத் திருத்தி எழுதுக.
இராமன் வீட்டை கட்டி தன் தம்பிக்கு தந்தான்.

**ஊ) உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.** 2×1=2

சங்கு ஓர் இயற்கைக் கருவி. இது கடலில் இருந்து எடுக்கப்படுகிறது. வலமாகச் சுழிந்து இருக்கும் சங்கை வலம்புரிச் சங்கு என்பர். சங்கின் ஒலியைச் சங்கநாதம் என்பர். இலக்கியங்களில் இதனைப் பணிலம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

19. வலமாகச் சுழிந்திருக்கும் சங்கு எவ்வாறு அழைக்கப் படுகிறது?
20. இலக்கியங்களில் பணிலம் என்று குறிப்பிடப்படுவது எது?

**எ) எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.** 6×2=12

21. உலகம் எவற்றால் ஆனது?
22. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள தொடர்பு யாது?
23. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?
24. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
25. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக.
26. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
27. மழைச்சோறு பாடலில் உழவர் படும் வேதனை எவ்வாறு கூறப்படுகிறது?
28. நட்பு எதற்கு உரியது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?
29. அயோத்திதாசரிடமிருந்த ஐந்து பண்புகள் யாவை?
30. அம்பேத்கர் தம் பெயரை ஏன் மாற்றிக்கொண்டார்?

**ஏ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.** 3×3=9

31. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?
32. மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவது யாது?
33. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.
34. மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.
35. வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.
36. அந்தாதி என்றால் என்ன?

**ஐ) பின்வருவனவற்றிற்கு விடை எழுதுக.** 3×5=15

37. தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக. (ப)

**(அல்லது)**

எம்.ஜி.ஆரின் பண்புநலன்களை விளக்கி எழுதுக. (ப)

38. 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக. (தி)

**(அல்லது)**

காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.(ப)

39. விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.(ப)

**(அல்லது)**

'உழைப்பே உயர்வு' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.(ப)



Please Send Your Study Materials to our Email Id: padasalai.net@gmail.com